Follow us:
வாரவெளியீடு
# தமிழன்
THAMILAN
තමිලන්
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ் : 02 சோபகிருது வருடம், ஆனி மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
(09.07.2023) ஹிஜ்ரி-1444, துல்ஹஜ் - 20, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8
விலை ரூ.130

## நக்கல் நமசிவாயம்

எல்லா எம்.பிமாருக்கும் பதவிகளை கொடுத்து விட்டா அரசாங்கத்துக்கு எதிரா ஒருத்தன்கூட வாய் திறக்கமாட்டான் பாருங்கோ...




## எகிறும் முட்டை விலை




இலங்கையில் கட்டுப்பாட்டு விலையை மீறி சந்தையில் முட்டை விற்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த கட்டுப்பாட்டு விலைக்கு முட்டையை விற்பனை செய்வதனை உறுதிசெய்ய...

02 ஆம் பக்கம்

# மாகாண நிர்வாகத்தில் அதிரடி மாற்றங்கள்!

## அமைச்சர்களின் வகிபாகத்தை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கத் தயாராகிறார் ஜனாதிபதி ரணில்

■ நமது விசேட நிருபர்

மாகாண சபைகளின் கீழிருந்த அமைச்சுப் பொறுப்புகளை அதே அதிகாரத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


கலைந்துள்ள மாகாண சபைகளின் அதிகாரங்கள் இப்போது மாகாண ஆளுநர்களின் கீழ் இருக்கின்றன.

ஆனால், மாகாணத்தில் அபிவிருத்தி செயற்பாடுகள் பின்னடைவில் இருப்பதாக பல தரப்பிலும் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து மாகாண அதிகாரங்களைப் பகிர ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இதன்படி முதலமைச்சர் தவிர்ந்த 4 அமைச்சுப் பொறுப்புகளைக் கொண்டிருக்கும் மாகாண சபையின் அதிகாரங்களை ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண அமைச்சரின் அதே அதிகாரம் இந்த எம்.பிக்களுக்கு...

02 ஆம் பக்கம்

## 'வெடி'மணியம்



முல்லைத்தீவில் மனிதப் புதைகுழி கண்டுபிடிச்சிருக்கினம். அந்த புதைகுழியைப்போல பல நூறு மனிதப் புதைகுழிகள் வடக்கு, கிழக்கில் இருக்கின்றன.

அத்தனை புதைகுழிக்குள்ளும் பல ஆயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் அடையாளம் காணப்படமுடியாத அனாதைப் பிணங்களாக கிடக்கின்றார்கள்.

மிருசுவிலில் தோண்டப்பட்ட மனிதப் புதைகுழிக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட்டார்களா?

அல்லது;

செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட்டார்களா?

இல்லையே!

அதுபோல மன்னார், முல்லைத்தீவில் கண்டுபிடிக்கப்படும் புதைகுழிக்குள்ளும் பல ஆயிரம் பேர் இறந்து கிடக்கலாம்.

குடும்பம் குடும்பமாக குஞ்சு குருமன்களையெல்லாம் சுட்டும் வெட்டியும் கோரமாக கொலைசெய்து போட்டிருப்பார்கள்.

அதை யார் செய்தது என்று எல்லோருக்கும் தெரியும். மனித உரிமை என்று வாய் கிழிய கத்தும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் தெரியும்.

13 ஆம் பக்கம்





யாழ்ப்பாணம், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய நவகுண்ட பக்ஷ சம்புரோக்ஷண புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் வெள்ளிக்கிழமை (07.07.2023) காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.
(யாழ்.நிருபர்)

## இலங்கைக் கடனை திருப்பிச் செலுத்த இந்தியா 12 வருட கால அவகாசம்

### பாரத கடன் உத்தரவாத கூட்டுத்தாபனத்தின் தலைவர் தகவல்




இலங்கை தன்னிடம் பெற்ற கடன்களை மீள செலுத்துவதற்கு 12 வருடகால அவகாசத்தை இந்தியா வழங்கவுள்ளது.

இலங்கையின் கடன்சுமையை குறைப்பதற்காக இலங்கை தன்னிடம் பெற்ற கடன்களை மீள திருப்பிச் செலுத்துவதற்கு 12 வருடகால அவகாசத்தை வழங்கக்கூடுமென இந்தியாவின் ஏற்றுமதி கடன் உத்தரவாத கூட்டுத்தாபனத்தின் தலைவர் எம்.செந்தில்நாதன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. அதன்பின்னர் மறுசீரமைப்பு தொடர்பான திட்டம் வெளியாகும். நாங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் எங்கள் ...

02 ஆம் பக்கம்

## கிராமசேவகர்கள் சமாதான நீதவான்களாகினர்!




நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, நிரந்தர மற்றும் பதில் கடமையிலுள்ள ஒவ்வொரு கிராம சேவகர்களையும் இலங்கை குடியரசின் சமாதான நீதவான்களாக்கும் விசேட வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஜூன் 30ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

## விலங்குகளைக் கொள்வனவு செய்யும்போது சரியான மதிப்பீட்டைத் தயாரிப்பது அவசியம்

### தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்துக்கு கோபா குழுவில் வலியுறுத்து



2018ஆம் ஆண்டுமுதல் 2020ஆம் ஆண்டு வரை வெளிநாட்டுப் பறவைகளைக் கொள்வனவு செய்யும்போது ஒருசில பறவைகளுக்கு மதிப்பிடப்பட்ட தொகை 50,000 ரூபாவாக இருந்தபோதிலும், சுமார் 1.5 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அண்மையில் இடம்பெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா) புலப்பட்டது. அதற்கமைய மதிப்பிடப்பட்ட தொகையை விட, கொள்வனவு செய்யப்பட்ட விலை 3000 வீதம் அதிகளவானது எனத் தெரிய வந்தது.

இந்தக் கொள்வனவில் விநியோகஸ்தரால் 32 வகையான பறவைகளை விநியோகிக்க வேண்டும் என்ற நிபந்தனை காரணமாக அதிக விலையில் பறவைகளைக் கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டதால் சுமார் 17 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

02 ஆம் பக்கம்

## படுகொலைசெய்து புதைக்கப்பட்ட 60இற்கும் மேற்பட்ட இளைஞர்கள்

### சிறீதரன் எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவிப்பு



மண்டைதீவிலுள்ள காணிகளை வெலிசுமண என்ற கடற்படை முகாமுக்கு சுவீகரிக்க முயற்சி எடுக்கப்படுகிறது. கொக்குத்தொடுவாய் பிரதேசத்தைப்போன்று மண்டைதீவு, தோமையார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள கிணற்றை தோண்டினால் படுகொலைசெய்து புதைக்கப்பட்ட 60இற்கும் மேற்பட்ட இளைஞர்களின் உடலங்களை எடுக்கமுடியும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல் திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மற்றும் மீள ஒப்படைத்தல் சட்டத்தின்கீழ் கட்டளை என்பவற்றின் மீதான...

02 ஆம் பக்கம்

## வடமாகாண உதைபந்தாட்ட அணி தேசிய சம்பியன் பட்டத்தை வென்றது!



■ அகீல் சிஹாப்

2023ஆம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விழாவின் உதைபந்தாட்ட சுற்றுத்தொடரில் வடமாகாண அணி சம்பியன் பட்டத்தை வென்று தங்கப்பதக்கத்தையும் சுவீகரித்துக்கொண்டது.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில்...

02 ஆம் பக்கம்

## கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை கிழக்கில் நடத்துவது பொருத்தமல்ல!

### முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் தெரிவிப்பு



தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு நூற்றாண்டு விழா நடத்த கிழக்கு மாகாணம் பொருத்தமில்லை - என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்நாடு முதல்வர் அமரர் கலைஞர் மு.கருணாநிதியின் நூற்றாண்டு விழா இந்தியாவில் தமிழ்நாடு முழுவதும் தற்போது இடம்பெறுவதற்கான முன்னாயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன. அவர் பிறந்த நாட்டில் அவர் ஆட்சிசெய்த தமிழ்நாட்டில் கட்டாயம் அந்த மக்கள் செய்வது நல்லது.

அவர் ஐந்து முறை...

02 ஆம் பக்கம்



# இலங்கை – வியட்நாம் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவராக வீரசுமன வீரசிங்க எம்.பி. நியமனம்







இலங்கை - வியட்நாம் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க அண்மையில் (05) தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை - வியட்நாம் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கான செயற்குழு உறுப்பினர்களை தெரிவுசெய்யும் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஹோ தி தான் ட்ரூக் (H.E. (Ms.) Ho Thi Thanh Truc) இந்நிகழ்வில் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டிருந்ததுடன், பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டனர்.

நட்புறவுச் சங்கத்தின் உப தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான நாலக கொடஹேவா, எம். உதயகுமார் மற்றும் காமினி வலெபொட ஆகியோரும், பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் செயலாளராகவும், பாராளுமன்ற உறுப்பினர் கருணாதாச கொடித்துவக்கு பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இலங்கை மற்றும் வியட்நாமுக்கு இடையிலான ஆழமாக வேரூன்றிய வரலாற்று உறவு பௌத்த மதத்திலிருந்தும் காலனித்துவ காலத்தில் வியட்நாம் போராட்டத்தின்போது இலங்கை வெளிப்படுத்திய ஒருமைப்பாட்டிலிருந்தும் ஏற்பட்டதென இதன்போது உரையாற்றிய சபாநாயகர் தெரிவித்தார். பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை நிறுவுவது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை புதுப்பிக்கப்பட்ட கடப்பாடுகளுடன் வலுப்படுத்தும் எனவும் சபாநாயகர் மேலும் குறிப்பிட்டார்.

இதன்போது உரையாற்றிய இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஹோ தி தான் ட்ரூக், பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை நிறுவுவதன் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான சிறந்த பாரம்பரிய உறவுகளையும் பலதரப்பட்ட ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வழங்கிய வலுவான ஆதரவுக்கும் வழிகாட்டலுக்கும் நன்றி தெரிவித்தார். அத்துடன், பாராளுமன்ற நட்புறவுச் சங்கம் பாராளுமன்ற ஒத்துழைப்புக்கான பாலமாக செயல்படும் எனவும் வர்த்தகம், முதலீடு, கலாசாரம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்தும் என நம்பிக்கை வெளியிட்டார்.

இங்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிடுகையில், தொழில்நுட்ப மேம்பாடு, கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை ஊக்குவித்த நாடாக வியட்நாமுடன் நட்புறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் சம்பந்தப்பட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மை பயக்கும் உறவுகளை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை வழங்கும் எனத் தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றிய நட்புறவுச் சங்கத்தின் புதிய தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க, நட்புறவுச் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்ததுடன், இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் செயற்பட எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்

# மட்டக்களப்பில் ‘தராக்கி’ ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூல் வெளியீடு

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் - இலங்கை, சிவராம் ஞாபகார்த்த மன்றம் - சுவிஸ் ஆகியன இணைந்து தொகுத்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராம் தொடர்பான கட்டுரைகள் அடங்கிய ‘தராக்கி’ ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூலின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இத்தொகுப்பில் ஊடகத்துறை ஆளுமைகள், நண்பர்கள், உறவுகள் என 41 பேர் எழுதிய கட்டுரைகள் உள்ளடங்குகின்றன.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல்.தேவஅதிரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஊடகவியலாளர் சபீனா சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார். நூல் அறிமுகத்தை மகுடம் ஆசிரியர் மைக்கல் கொலின் நிகழ்த்துவார்.


நூல் வெளியீட்டைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், செல்வராசா கஜேந்திரன், இராசபுத்திரன் சாணக்கியன் ஆகியோரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சேனாதிராஜா ஜெயானந்தமூர்த்தி, பாக்கிய செல்வம் அரியநேத்திரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

அத்துடன், காத்தான்குடி நகர சபை நூலகர் திருமதி க.ருத்ரகுமார், தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ஆர்.பாரதி, ‘ஆகவே’ ஜபார், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் போர்ட்டி கமகே ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

நிகழ்வின் நிறைவாக கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் வ.சக்திவேல் நன்றியுரையாற்றுவார்.




# பத்திரிகையாளரின் தந்தையார் மறைவு



பத்திரிகையாளர் தனபாலசிங்கத்தின் தந்தையார் ஓய்வுபெற்ற தபால் திணைக்கள அலுவலர் ஆழ்வார் வீரகத்தி (வயது 91) சிறிதுகால சுகவீனத்தின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரின் சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டியில் நடைபெறும்.

## இலங்கையின்...

பணத்தை மீட்டெடுப்போம் என அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று நான்கு வருடங்களில் இவற்றை பெறவேண்டும் ஆனால் அதனை 10 - 12 வருடங்களுக்கு நீடிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## எகிறும்...

முடியாத நிலைமை உருவாகியுள்ளது.

***அதிகாரசபை சுற்றிவளைப்புகள்***

வெள்ளை முட்டை ஒன்று 44 ரூபா எனவும் சிவப்பு முட்டை ஒன்று 48 ரூபா எனவும் வர்த்தக அமைச்சால் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. எனினும், கடந்த வியாழன் சந்தையில் முட்டை ஒன்றின் விலை 60 ரூபாவுக்கு அதிகமாக காணப்பட்டதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து நுகர்வோர் விவகார அதிகாரசபை தொடர்ச்சியாக சுற்றிவளைப்புகளை மேற்கொண்டபோது சந்தையில் முட்டைக்கு தட்டுப்பாடு நிலவியது.

***உள்நாட்டு சந்தையிலும் முட்டை நிரம்பல்***

தற்போது இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் உள்நாட்டு சந்தையிலும் முட்டை நிரம்பல் செய்யப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் முட்டை வகைகளை பேக்கரி உற்பத்திகளுக்கு மட்டும் வழங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் தற்பொழுது முட்டைக்கு அதிக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விலை நிர்ணயம் செய்யப்பட்டு சில மாதங்கள் கடந்துள்ள நிலையில் மீண்டும் முட்டைக்கான விலை உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறெனினும் முட்டை விலை அதிகரிப்பு தொடர்பில் வர்த்தக விவகார அமைச்சு அதிகாரப்பூர்வ தகவல்கள் எதையும் இதுவரையில் வெளியிடவில்லை.

## படுகொலை...

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பிரதேச நிலஅளவை அலுவலகத்தின் நில அளவையாளர் மண்டைதீவிலுள்ள காணிகளை வெலிசுமன என்கின்ற கடற்படை முகாமுக்காக அளவீடு செய்யவுள்ளதாக அறிவித்திருக்கிறார். எதிர்வரும் 12ஆம் திகதிமுதல் இந்த அளவைப் பணிகள் இடம்பெறவுள்ளன. இந்த காணிகளுக்குச் சொந்தமான 29 பேருக்கும் கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் அங்கிருந்த மக்கள் அந்த பகுதியிலிருந்து வலுக்கட்டாயமாக கலைக்கப்பட்டதன் பின்னரே இந்த கடற்படை முகாம் அமைக்கப்பட்டது. மண்கும்பான், அல்லைப்பிட்டி, வேலணை ஆகிய பிரதேசங்களிலிருந்து அழைத்துவரப்பட்ட 60இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் அங்கிருக்கின்ற தோமையார் ஆலயத்துக்கு முன்பாக கொலை செய்யப்பட்டு அவர்களின் எலும்புக்கூடுகள் இன்னும் அங்கு இருக்கின்றன.

கொக்குத்தொடுவாயில் பெண் போராளிகளின் உடலங்களும் எடுக்கப்பட்டிருந்தன. இந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் தமிழ் போராளிகள், தமிழ் பிள்ளைகளின் உடலங்கள் எடுப்பதுபோல் இந்த மண்டைதீவு தோமையார் ஆலயத்துக்கு முன்பாக இருக்கின்றன கிணற்றையும் தோண்டி ஆய்வு செய்தால் 60இற்கும் மேற்பட்ட இளைஞர்களின் உடலங்களை எடுக்கலாம்.

அவ்வாறான காணியையே தற்போது அந்த மக்களிடமிருந்து பறிக்க முயற்சிக்கிறார்கள். கடற்படையினரால் இந்த நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த மக்கள் உள்நாட்டிலேயே வேறு இடங்களில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

மண்டைதீவிலுள்ள சொந்த காணியில் வாழ முடியாமல் வேறு இடங்களில் உறவினர்களின் வீடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, இந்த செயற்பாடு அந்த மக்களை ஏமாற்றும் வகையிலான செயற்பாடாகும். நாங்கள் இந்த உலகத்தை ஏமாற்றுவதாக கூறுகிறார்கள். இனவாதம் இல்லை என்கிறார்கள். எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கி பிரச்சினைகளுக்கு வெற்றி காணப்பட்டுள்ளதாக கூறுகிறார்கள். மக்கள் எதையும் கோரவில்லை என்கிறார்கள். ஆனால், மக்களின் இந்த காணி அளவீட்டு நடவடிக்கைகள் அரசாங்கத்தின் கட்டளைக்கமையவே முன்னெடுக்கப்படவுள்ளது. எனவே, இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்தவேண்டிய கால தேவையும் இருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில், காரைநகர், ஆனைக்கோட்டை, புங்குடுதீவு, நெடுந்தீவு உள்ளிட்ட தீவு பகுதிகளின் பல்வேறு பகுதிகள், கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலுள்ள காணிகள் சுவீகரிக்கப்பட்டு இராணுவத்துக்கும் அரச படைகளுக்கும் வழங்குவதற்காக முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட வேண்டும் - என்றார்.

## வடமாகாண...

எஸ்.ஜுட் சுபன் தலைமையிலான வட மாகாண அணி 2-1 கோல்கள் கணக்கில் தென் மாகாண அணியை வீழ்த்தியது.

வடமாகாண அணி சார்பாக இரு கோல்களை விளாசிய வீ.கீதன் சிறந்த வீரராக தெரிவானார். அவர் யாழ்ப்பாணம், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்தவர்.

வடமாகாண அணியின் பிரதான பயிற்றுவிப்பாளராக பி.முகுந்தன், உதவி பயிற்றுவிப்பாளராக கே.மயூரன், அணி முகாமையாளராக கே. விஜிதரன் ஆகியோர் செயற்படுகின்றனர்.

2019 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் வடமாகாண அணி தேசிய ரீதியில் சம்பியன் பட்டம் வென்றிருந்தது.

## மாகாண...

வழங்கப்படுவதுடன் மாகாண ரீதியாக செய்யப்படும் வேலைத் திட்டங்களை இவர்கள் ஆளுநரின் ஒப்புதலுடன் மத்திய அரசுடன் இணைந்து அமுல்படுத்த அனுமதி வழங்கப்படவுள்ளது.

மாகாண மேற்பார்வை குழு என்ற கட்டமைப்பின் கீழ் அமுலாகவுள்ள இந்த செயற்றிட்டம் தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையை ஜனாதிபதி கோரியுள்ளதாக தெரியவருகிறது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வியாழக்கிழமை 2023.07.06
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5167
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,087,324.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 0 6 4 4 9 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3409
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,233,586.00
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 06 48 52 76

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1197
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,334,888.00
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 09 13 16 26
விசேட எழுத்து N

ராசிசுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 476
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,758,985.80
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 09 47 49 58
விசேட இலக்கினம் கும்பம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1515
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 400,088,400.00
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 23
வெற்றி இலக்கங்கள் 25 52 58 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## விலங்குகளைக்...

தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் விசாரணை செய்வதற்கு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா) 2023.07.05ஆம் திகதி கூடிய போது இந்த விடயங்கள் புலப்பட்டன.

இந்தக் கொள்வனவில் மதிப்பிடப்பட்ட விலைக்கும் உண்மை விலைக்கும் இடையில் இவ்வளவு பாரிய வித்தியாசம் இருப்பது சிக்கலுக்குரியது என்று குழு வலியுறுத்தியது. சம்பந்தப்பட்ட துறை மற்றும் சந்தை பற்றிய புரிதல் இந்தத் திணைக்களத்திடம் இருப்பதால் மதிப்பிடப்பட்ட தொகைக்கும் உண்மையான செலவுக்கும் இடையில் இவ்வளவு அதிகமான பெறுமதி காணப்படுவது குறித்து குழு நீண்டநேரம் வினவியது. அதனால் இது தொடர்பில் அறிக்கையொன்றை வழங்குமாறும், சரியான மதிப்பீடு மதிப்பீட்டின் அவசியத்தை வலியுறுத்தி எதிர்காலத்தில் உள்ளக சுற்றுநிருபமொன்றை வெளியிடுமாறும் கோபா குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட மிருகக்காட்சி சாலைகள் உள்ளிட்ட விடயங்கள் விரைவாக சட்டத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதால் சட்டத்தை விரைவாகத் திருத்துவதன் அவசியத்தையும் குழு வலியுறுத்தியது. அதற்கமைய சட்டவரைஞர் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பில் அடுத்த ஒரு மாதத்தில் அந்த நடவடிக்கையை நிறைவுசெய்யுமாறும், இது தொடர்பான அறிக்கையை 2023 ஒகஸ்ட் 5ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறும் கோபா குழுவின் தலைவர் ஆலோசனை வழங்கினார்.

விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் வருமானத்தை சரியான முறையில் வகைப்படுத்தும் அவசியம் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கமைய நுழைவுச் சீட்டுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் மூலம் கிடைக்கும் வருமானத்தை வேறு வேறாக முன்வைக்குமாறு கணக்காய்வாளர் நாயகம் ஆலோசனை வழங்கினார்.

தற்பொழுது அருகிவரும் அவதானத்துக்குட்பட்டுள்ள விலங்குகளைப் பாதுகாப்பதற்கான முறையான வேலைத்திட்டமொன்று இல்லையென கண்காணிக்கப்பட்டுள்ளதால் வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம் என்பன ஒன்றிணைந்து குழுவொன்றை நியமித்து வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு குழுவின் தலைவர் அறிவித்தார். IUCN சிவப்புத் தரவுப் புத்தகத்துக்கு அமையக் குறிப்பிடப்பட்டுள்ள இந்நாட்டில் அருகிவரும் அவதானத்துக்குட்பட்டுள்ள விலங்குகள் தொடர்பான தகவல்களை தொடர்ந்து இற்றைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியமும் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கமைய, இது தொடர்பில் விரிவான தேசிய கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

பின்னவலை யானைகள் சரணாலயம், பின்னவலை வாகொல்ல மிருகக்காட்சிசாலை மற்றும் ரிதியகம சபாரி பூங்கா என்பவற்றின் சிக்கல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. ரிதியகம சபாரி பூங்காவிலுள்ள 900 விலங்குகளில் 485 விலங்குகளின் பால்நிலை தொடர்பில் இனங்காணப்படாமை பற்றி இதன்போது வினவப்பட்டது. இனத்தால் விலங்குகளில் 300க்கும் அதிகமானவை இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட நட்சத்திர ஆமைகள் எனவும் சட்ட நடவடிக்கை நிறைவடையும் வரை பூங்காவின் பொறுப்பில் உள்ளமை இதன்போது புலப்பட்டது. அத்துடன், இந்த சபாரி பூங்காவில் கால்நடை மருத்துவர் ஒருவர் மாத்திரம் உள்ளதால் விரைவாக வெற்றிடங்களை நிரப்புமாறு குழுவின் தலைவர் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன், நிறுவனத்தின் முறையான மூலோபாயத் திட்டம் இல்லை என்பதால் 2024 - 2030 ஆண்டுக்கு புதிய திட்டமொன்றை தயாரித்து இவ்வாண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்குள் அந்த நடவடிக்கைகளை நிறைவு செய்யுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

குழுவின் அனுமதிக்கமைய, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டதுடன், இராஜாங்க அமைச்சர்களான டயனா கமகே, சாமர சம்பத் தசநாயக்க, காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான அசோக் அபேசிங்க, விமலவீர திசாநாயக்க, நிரோஷன் பெரேரா, ஜே.சி. அலவதுவல, ஹெக்டர் அப்புஹாமி, ஜயந்த கெடகொட, இசுறு தொடங்கொட, மேஜர் பிரதீப் உந்துகொட, வீரசுமன வீரசிங்க மற்றும் (கலாநிதி) ஹரிணி அமரசூரிய ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## கருணாநிதியின்...

தமிழகத்தின் முதல்வராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றிபெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழகத்தின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் கருணாநிதியின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழகத்தின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் கருணாநிதியின் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் ஜூன் 2023 முதல் ஜூன் 2024 வரை தமிழக அரசால் கொண்டாட முடிவு செய்யப்பட்டது நல்ல விடயம்.

ஆனால் இலங்கையில் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் விரைவில் கிழக்கு மாகாணத்தில் கருணாநிதியின் நூற்றாண்டு விழா செய்யவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஊடகங்களில் 05/07/2023 அன்று கருத்து வெளியிட்டிருந்தார்.

உண்மையில் கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா கிழக்கு மாகாணத்தில் நடத்துவது பொருத்தமான ஒன்றாக தற்போது இல்லை. வடக்கு கிழக்கு மக்கள் கடந்த பல சகாப்தங்களாக இனப்படுகொலைகளை சந்தித்தபோதெல்லாம் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் அழுத்தம் கொடுத்தாலும் ஆக்கபூர்வமாக அவர் எதையும் செய்யவில்லை என்ற ஒரு கருத்து வடக்கு, கிழக்கு தமிழ்மக்கள் மத்தியில் உண்டு.

2006இல் திருகோணமலை மாவிலையாற்றில் ஆரம்பித்த போர் 2009, மே 18இல் முள்ளிவாய்க்காலில் முடிவுற்றபோது வடக்கு, கிழக்கு தமிழர்கள் பல இலட்சம் மக்கள் மாண்டபோதும் முதலமைச்சர் கருணாநிதியால் போரை நிறுத்தவோ, தமிழ்மக்களை காப்பாற்றவோ இந்திய அரசுடன் தொடர்புகொண்டு எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் செய்யவில்லை என்ற ஒரு மனவேதனை தமிழ்மக்கள் மத்தியில் உண்டு.

இவ்வாறான நிலையில் கருணாநிதியின் நூற்றாண்டு விழா கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றாலும் மக்கள் அதனை விரும்பி கலந்துகொள்ளும் நிலை ஏற்படாது என்பதே எனது தனிப்பட்ட கருத்து.

கலைஞர் கருணாநிதி போற்றுதற்குரியவர் பாராட்டுதற்க்குரியவர் என்பதெல்லாம் உண்மை. ஆனால் அவர் தொடர்பாக விழா எடுக்கக்கூடிய இடமாக கிழக்கு மாகாணம் பொருத்தமானது இல்லை என்பதே எனது தாழ்மையான கருத்து.

இது யாரையும் புண்படுத்துவதற்காக நான் கூறவில்லை எனது மனதில் பட்ட உண்மையை கூறியுள்ளேன் எனவும் மேலும் கூறினார்.

# முத்து ராஜா!

## கோயில் பணிக்கு வந்தவனை கொத்தடிமையாக்கிய கதை



கே.சுபானி

அவன் அழவில்லை. வருத்தத்தில் இருக்கிறான். அவனது வலது கண்ணில் கண்புரை ஏற்பட்டுள்ளதால் பார்வைக்கு பங்கம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தில் இருக்கிறான்.

அவனது முன் இடதுகால் மடக்க முடியாத வேதனையை கொடுத்துக்கொண்டிருக்கிறது. உள்ளங் கால்கள் மற்றும் நகங்களிலும் ஏற்பட்டுள்ள உபாதையால் அவன் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கிறான். காட்டை அதிரவைத்து - வீதியை அலங்கரித்த அவனது சிங்காரக் காலங்கள் தற்போது ஓரிடத்தில் ஓய்ந்து ஓய்வெடுத்துக்கொண்டிருக்கின்றன. எனினும், தலையை அசைத்து, உணவை ரசித்து புசித்துக்கொண்டிருக்கிறான். இருந்தும் முதுகில் ஏற்பட்டுள்ள காயம் தன்னை ஓரிடத்திலேயே முடக்கி விடுமோ என்ற அச்சம் அவனை அவ்வப்போது ஆட்கொண்டுவிடுகிறது... அதனால்தான் அவன் தளர்வாக இருக்கிறான் முத்து ராஜா....

'முத்து ராஜா' என்பது அவனது இயற்பெயர் அல்ல. தா(ய்)யகம் அவனுக்கு சூட்டிய பெயர் 'சக் சுரின்'. அவனது தாயகம் தாய்லாந்து.

தாய்லாந்து என்றதும் நமக்கு முதலில் நினைவுக்கு



> விசேட நாட்களில் அலங்கார அணிகளுடன் உலா வந்தவன் விழா முடிந்ததும் வீதியில் விடப்பட்டான். அதுமட்டுமன்றி மரம் வெட்டும் குழுவினருடன் இணைந்து பணிபுரிய நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் கால் மற்றும் உடலில் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டன. உரிய சிகிச்சையளிக்காது உதாசீனப்படுத்தப்பட்டான்.

வருவது 'தாய் மசாஜ்'. பிறகு பௌத்த விகாரைகள், புன்னகை அரசிகள்... இதுமட்டுமல்ல, இன்னும் பல சுவாரஸ்யங்களை தன்னகத்தேகொண்ட நாடுதான் தாய்லாந்து.

தாய்லாந்து மக்கள் இரண்டு விடயங்களை எப்போதும் சகித்துக்கொள்ள மாட்டார்களாம். முதலாவது தங்கள் மன்னரை பற்றி அவதூறு பேசுவது. இரண்டாவது அரிசியைப் பழிப்பது.

ஒரு குழந்தை அரிசி உணவு சாப்பிட்டுவிட்டு அதன் மூலம் வயிறு வலி என்று சொல்வது கூட அரிசியைப் பழிப்பதாம். அப்படிக் கூறினால் அந்த மக்களுக்கு மிகுந்த கோபம் வந்துவிடுமாம். அரிசியை உணவாகப் பார்க்காமல் கடவுளாகவே பார்க்கிறார்கள் தாய் மக்கள்.

தாய்லாந்து அரிசி புகழ்பெற்றது. உலகில் 30 வகையான அரிசிகள் இங்குதான் உற்பத்தியாகின்றன. உலகில் அதிக அரிசி ஏற்றுமதிசெய்யும் நாளில் ஒன்றாகவும் தாய்லாந்து விளங்குகின்றது.

ஆண்டுதோறும் 'விதை வழங்கும் விழா' மன்னர் முன்னிலையில் பிரம்மாண்டமாக நடைபெறும். இவ்விழாவில் மன்னர் தன் கையால் வழங்கும் விதை நெல்களை விவசாயிகள் தங்கள் விதை நெல்லோடு சேர்த்து விதைக்கின்றனர். இதனால், விளைச்சல் அதிகரிக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை. அபின் என்ற போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படும் ஓபியெம் என்ற அபினிச் செடியும் இங்கு அதிகமாக வளர்க்கப்படுகிறது என்பது கூடுதல் தகவல்.

இது இவ்வாறிருக்க, வியாபார நோக்கோடு தாய்லாந்துக்குச் சென்ற இந்தியர்கள் கூடவே இராமாயணத்தை போன்ற காப்பியங்களை தங்களுடன் காவிச் செல்லவே தாய்லாந்திலும் இராமாயணம் வேரூன்றிவிட்டது. இதன் தாக்கத்தால் அந்நாட்டு மன்னர்கள் 'ராமா' என்று அழைக்கப்பட்டனர். தாய்லாந்தில் 'அயோத்தி' என்ற நகரமும் கூட இருக்கின்றது. அதுமட்டுமா?

நம்நாட்டின் ஆதி தேவதையாக நாம் வணங்கும் மாரியம்மாளும் அங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றாள். இதுவல்லவோ ஆச்சரியம். அங்குள்ள பழமையான மாரியம்மன் கோயில் மிகவும் பிரபலம்.

நாம் என்ன ராமர், மாரியம்மன் என்றாலும் தாய்லாந்து என்பது ஒரு புத்தபூமி. சுமார் 30 ஆயிரம் பௌத்த மடாலயங்கள் அங்கு வீறுகொண்டெழுந்துள்ளன. உலகத்தின் மிகப்பெரிய புத்தர் சிலைகளில் பல தாய்லாந்திலேயே வானோக்கி எழுந்து நின்று தம்மை பிரமிக்க வைக்கின்றன. சுமார் 7 கோடி மக்கள் வாழும் தாய்லாந்தில் 95 வீதமானோர் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் என்றால் யோசித்துக் கொள்ளுங்கள். தாய்லாந்தின் எல்லா வீதிகளிலும் பௌத்த சாயல்தான். கிட்டத்தட்ட நம் தாய்நாட்டை போன்றதே...

அத்தகைய பாரம்பரிய, கலாசார விழுமியங்கள் செறிந்த தாய்லாந்தில் 1994ஆம் ஆண்டு பிறந்தவன் தாய் 'சன் சுரின்' என்ற இயற்பெயர் கொண்ட முத்து ராஜா...

அன்பையும், அஹிம்சையையும் போதித்த புத்தனின் பெருமைபோற்றும் தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய இரு தாயகங்களும் தங்களுக்கிடையிலான நட்புறவை நீடிக்க எண்ணி 2001ஆம் ஆண்டு அப்போதைய இலங்கை ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு பரிசாக 7 வயதான சக் சுரினை தத்துக்கொடுத்தது தாய்லாந்து அரசு.

தனது ஏழு வயதில் கடந்த 2001ஆம் ஆண்டு இலங்கை அழைத்துவரப்பட்ட சக் சுரினுக்கு இலங்கை அரசு 'முத்து ராஜா' என நாமம் சூட்டியது. தனது அழகிய நீண்ட வெண்தந்தங்களால் அனைவரையும் ஈர்த்த முத்து ராஜா அப்போதே அலுத்தகம, கந்தே விகாரைக்கு வழங்கப்பட்டது.

அன்றிலிருந்து விகாரைகளின் புனித கடமைகளை நிறைவேற்றும் ஒரு தூதனாக நியமிக்கப்பட்டான் முத்து ராஜா. அத்துடன், ஆண்டுக்கொருமுறை நடைபெறும் ஆன்மீக ஊர்வலங்களும் அவனுக்கு விசேட கௌரவிப்புகளும் வழங்கப்பட்டன.

விசேட நாட்களில் மட்டுமே விதவிதமாக உணவு, ஆடை, அணிகலன்களுடன் கம்பீரமாக புனித வஸ்துவாக வீதிகளில் உலாவரும் முத்து ராஜா ஊர்வலம் வருவான். அவனை காண கண்கோடி போதாது என்றே சொல்லவேண்டும்.

அது நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை.

விசேட நாட்களில் அலங்கார அணிகளுடன் உலா வந்தவன் விழா முடிந்ததும் வீதியில் விடப்பட்டான். அதுமட்டுமன்றி மரம் வெட்டும் குழுவினருடன் இணைந்து பணிபுரிய நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் கால் மற்றும் உடலில் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டன. உரிய சிகிச்சையளிக்காது உதாசீனப்படுத்தப்பட்டான் முத்து ராஜா.

கோயில் பணிக்கு வந்தவனை கொத்தடிமையாக்கி அழகுபார்த்த செய்தி விலங்கு உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கான ஆர்வலர் குழுவுக்குச் செல்லவே, அந்த அமைப்பு முத்து ராஜா தவறாகப் பயன்படுத்தப்படுகின்றான்.

சித்திரவதை செய்யப்படுவதுடன், புறக்கணிக்கப்படுகிறான் என பல தடவைகள் குற்றஞ்சாட்டியது.

அத்துடன், முத்து ராஜாவின் விடயத்தில் தாய்லாந்து அரசு தலையிட வேண்டும் என கடந்த ஆண்டு தாய்லாந்து அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தது. இதேநேரம் முத்து ராஜா கந்தே விகாரையிலேயே இருந்தான்.

இதனையடுத்து முத்து ராஜாவை இலங்கை தேசிய விலங்கியல் பூங்காவுக்கு மாற்ற கந்தே விகாரை தேவஸ்தானம் ஒப்புக்கொண்டது.

முத்து ராஜா உடல்நலக்குறைவால் அவதியுற்ற நிலையில், அதன் சிகிச்சை தொடர்பில் ஆராய்ந்தவேளை முத்து ராஜாவை பராமரித்துவந்த பாகனின் கவனக்குறைவால் அவனுக்கு உடல்நிலை ஏற்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர், முத்து ராஜாவை கந்தே விகாரையிலிருந்து அழைத்துச் சென்று மருத்துவ சிகிச்சைக்காக தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் ஒப்படைத்தார்.

எனினும், தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் போதுமான மருத்துவ வசதிகள் இல்லாததன் காரணத்தால், போதுமான சிகிச்சையை அவர்களால் வழங்க முடியவில்லை. இறுதியாக முத்து ராஜாவுக்கு சரியாக நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் மருத்துவ சிகிச்சைக்காக முத்து ராஜாவை மீண்டும் தாய்லாந்திற்கு அழைத்துச் செல்ல தாய்லாந்து அதிகாரிகள் முடிவு செய்தனர்.

இந்நிலையில், முத்து ராஜாவை பராமரிப்பதற்கு சிறப்பு பயிற்சிகள் வழங்குவதற்காகவும் மருத்துவ குழுவொன்று தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு வரவழைக்கப்பட்டது.

சுமார் மூன்று மாதகால சிறப்பு கவனிப்பிலிருந்த முத்து ராஜாவை கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) தாயகத்துக்கு அழைத்துச் சென்றது தாய்லாந்து அரசு.

முத்து ராஜா பயணிப்பதற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பெட்டியொன்றையும் விசேட சரக்கு விமானமொன்றையும் இலங்கைக்கு அனுப்பியது தாய்லாந்து அரசு.

குறித்த அந்த பயணப்பெட்டிக்குள் முத்து ராஜா ஏறுவதற்கும் இருப்பதற்கும் மூன்று மாதகாலம் தாய்லாந்திலிருந்து வருகை தந்த கால்நடை நிபுணர்களால் விசேட பயிற்சியளிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை நம்நாட்டின் புனித வஸ்துவாக கருதப்பட்ட முத்து ராஜா என்ற 4 ஆயிரம் கிலோகிராம் எடைகொண்ட அந்த பொக்கிஷத்தை 7,00,000 டொலர்கள் செலவில் அழைத்துச்சென்றது தாய்லாந்து.

அந்த சரக்கு விமானம் கடந்த ஞாயிறன்று காலை 7.40 மணிக்கு தாய்லாந்து நோக்கி புறப்பட்டது. முத்து ராஜா என்ற நட்புறவின் அடையாளத்தை 22ஆண்டுகளுக்குப் பின்னர் திரும்பப் பெற்றது தாய்லாந்து.

அஹிம்சையை போதித்த புத்தனின் மண்ணில் புனித கடமையாற்ற வந்தவனுக்கு ஏற்படுத்திய இம்சைகளை எண்ணி வெட்கித் தலைகுனிகிறது இலங்கை இன்று.

இதேவேளை, தாய்லாந்து சென்ற முத்து ராஜா என்ற சக் சுரின் இப்போது தாய்லாந்து மன்னரின் ஆதரவில் உள்ளான். தற்போது லம்பாங் மாகாணத்தின் ஹாங் சாட் மாவட்டத்திலுள்ள யானைகள் பாதுகாப்பு மையத்தில் 30 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளான்.

அவன் நல்ல மனநிலையில், தலையை அசைத்து, உணவை இரசித்து புசித்துக்கொண்டிருக்கிறான். தனிமைப்படுத்தப்பட்ட காலத்துக்குப் பின்னர் முத்து ராஜா கால்நடை மருத்துவர்களின் முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவான் என தாய்லாந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், முத்து ராஜாவை திரும்பவும் எங்களிடம் கையளித்துவிடுங்கள் என்ற செய்தி தாய்லாந்து வசம் எட்டியதோ என்னவோ அந்நாட்டு இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் வரவுட் சில்பா-ஆர்ச்சா, ''தற்போது தாய்லாந்து மன்னரின் பாதுகாப்பிலுள்ள முத்து ராஜாவை மீளவும் இலங்கைக்கு அனுப்பப்போவதில்லை'' என தெரிவித்துள்ளார்.

அத்தோடு தாய்லாந்து அரசால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஸ்ரீ நரோங் மற்றும் பிரதுபா ஆகிய யானைகளையும் மக்கள் விரும்பினால் திரும்பப் பெற்றுக்கொள்வோம் என தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ நரோங் மற்றும் பிரதுபா ஆகிய இருவரில் ஒருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளபோதிலும், இலங்கை அவற்றை கவனித்துக்கொள்ளும் திறன் கொண்டுள்ளதாகத் தெரிகிறது, அவை நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகத் தெரிகிறது.

முத்து ராஜா போன்று இன்னும் எத்தனையோ சொந்தங்கள் இம் மண்ணில் கவனிப்பாரற்று இருப்பதுடன், மனித சுதந்திரத்திற்காக அவற்றின் வாழ்விடத்தை அழித்து, வெடிவைத்து, அடித்து துன்புறுத்தப்பட்டுகொண்டிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் தக்க பாடம் புகட்டியுள்ளது தாய்லாந்து அரசு.

இந்தியாவிலிருந்து வாழ வழியின்றி அன்று இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட ஓர் இனம் இன்று மத்திய மலைநாட்டு பகுதியில் அன்று ஆங்கிலேயன் அவனது குதிரைகளை பராமரிக்க அமைத்திருந்த 'லயன்' அறைகளில் சிறைவைக்கப்பட்டு கொத்தடிமைகளாக்கப்பட்டது.

அன்று அந்த லயன் அறைகளில் சிறைவைக்கப் பட்டவர்கள் இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கும் மேலாக சிறை மீளமுடியாமல் நாட்டின் பொருளாதார மீட்சிக்காக வளமாக்கிய மண்ணுக்கு உரமாகிக் கொண்டிருக்கின்றனர்.

வழியனுப்பியவனும் (இந்தியா) வலிகொடுத்தவனும் (இலங்கை) வாயடைத்து நிற்கின்றனர்.

விழிபிதுங்கி நிற்கின்றான் மலைமகன் இன்று.....


### வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/



விசேட விலைக்குறைப்பு

சிறந்த தேயிலை

சிறந்த விலையில்




EST. 1835 GS &Co BELIEVE

George Steuart Consumer (Pvt) Ltd

No. 439, Galle Road, Colombo 03, Sri Lanka

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 09, 2023

# சிகிச்சைக்கு வருவோரின் உயிரைப் பறிக்கலாமா?

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையிலும் ராகம போதனா வைத்தியசாலையிலும் வைத்தியர்களின் கவனக்குறைவு காரணமாக இருவர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலைமையானது நாட்டின் சுகாதாரத்துறை மீதான நம்பிக்கையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் பெண்ணொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட கண் அறுவை சிகிச்சையையின்போது அவர் கடந்த 05ஆம் திகதி உயிரிழந்துள்ளார். ஹங்வெல்ல, கொஸ்கம பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் சுகாதார தொழில் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். இந்தப் பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ள ப்ரொபோஃபோல் என்ற மயக்க மருந்தின் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ‘‘இதே வகை மயக்க மருந்தை பயன்படுத்தியதன் காரணமாகவே இரு வாரங்களுக்கு முன்னர் பேராதனை போதனா வைத்தியசாலையில் குழந்தையொன்று உயிரிழந்திருந்திருந்தது. அந்தச் சம்பவத்தின் உண்மைத் தன்மையை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு கோரியபோது, அதனை மறுத்து சிறுவர்களுக்கு இந்த வகையைச் சேர்ந்த மருந்தைப் பயன்படுத்துவதில்லை என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டிருந்தது.

ஆனால், பேராதனை போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த குழந்தைக்கு பயன்படுத்திய அதேவகையான மயக்க மருந்தே கண் வைத்தியசாலையில் அறுவை சிகிச்சைக்கு முன்னர் இந்தப் பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ளது. வைத்தியர்கள் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டிருக்கிறார்கள். சுகாதார அமைச்சு இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்’’ எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தப் பெண்ணுக்கு கண் அறுவை சிகிச்சை இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளதாகவும் இருதயம் செயலிழந்தமையே இதற்குக் காரணம் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

“இந்த மரணம் மருந்தினால் நேர்ந்துள்ளதா அல்லது வேறு காரணங்களால் நிகழ்ந்துள்ளதா என்பதை உடனடியாகக் கூற முடியாது. இந்த துரதிர்ஷ்டமான சம்பவத்துக்கு தேசிய கண் வைத்தியசாலை மருத்துவர்கள் சகலரும் கவலையை தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு மூவரடங்கிய விசேட வைத்திய குழு நியமிக்கப்பட்டுள்ளது. மரண பரிசோதனை அறிக்கை உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படும்’’ என அவர் தெரிவித்துள்ளார்.

சத்திரசிகிச்சையின்போது இவ்வாறான மரணங்கள் இடம்பெறுவதுண்டு. அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தோரணையில் தேசிய கண் வைத்தியசாலையின் வைத்தியர்கள் உயிரிழந்த பெண்ணின் கணவரிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ராகம போதனா வைத்தியசாலையில் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்காக அனுமதிக்கப்பட்டிருந்த 36 வயதுடைய கர்ப்பிணித் தாயொருவர் கடந்த வாரம் உயிரிழந்தார். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான அந்தப் பெண் உயிரிழந்தமைக்கான முறையான காரணங்கள் எதுவும் வைத்தியர்களால் முன்வைக்கப்படவில்லை.

“இந்தப் பெண் கடுமையாக நோய்வாய்ப்பட்ட நிலையிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தாயையும் மூன்று சிசுக்களையும் காப்பாற்றுவதற்கு வைத்தியர்கள் கடுமையாக உழைத்தார்கள். ஆயினும், காப்பாற்ற முடியவில்லை. தாயும் குழந்தைகளும் உயிரிழந்தமைக்கு வைத்தியசாலை பொறுப்பல்ல” என ராகம போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ரணவீர தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களின் அலட்சியத்தாலேயே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக குற்றச்சாட்டை முன்வைத்துள்ள அந்தப் பெண்ணின் கணவர் வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இவ்விரு சம்பவங்களும் வைத்தியர்களை நம்பிச் செல்லும் நோயாளர்களின் உயிர்கள் மீதான உத்தரவாதத்தை பாதிப்படையச் செய்துள்ளன.

வைத்தியர்கள் கடவுளுக்குச் சமம் என்று சொல்வதுண்டு. நோயாளர்களின் உயிரைப் பேணும் பெரும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. நோயாளர்கள் உயிரிழக்கும் பட்சத்தில் பொறுப்பற்ற விதத்தில் கருத்து சொல்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மருந்தின் தரம் குறித்து ஏதேனும் பிரச்சினைகள் இருக்கும் பட்சத்தில் அதனை வைத்தியர்களே முன்வைக்க வேண்டும். அதற்கான தீர்வுகள் என்னவென்பது குறித்து அவர்களே சுகாதார அமைச்சுக்கு பரிந்துரைக்க வேண்டும். ஆனால், அதைவிடுத்து மற்றவர்கள் மீது விரல்காட்டி தப்பிக்க முயல்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியற்கட்டளைச் சட்டத்தின் கீழ் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாட்டுக்கு தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக பாரிய குற்றச்சாட்டை முன்வைத்தார். இதற்கு சுகாதார அமைச்சு பொறுப்புக் கூற வேண்டுமெனவும் வலியுறுத்தினார். அந்த வேளையில் பிரதமர் தினேஷ் குணவர்தன சபையில் இருந்தபோதிலும், பொருத்தமான பதில் எதுவும் வழங்கவில்லை.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டிலிருந்த வைத்தியர்கள் பலர் ஏற்கனவே வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். ஆதலால், இப்போது பணியிலுள்ள வைத்தியர்களுக்குப் பொறுப்பு அதிகமல்லவா? அந்தப் பொறுப்பை மீறி, பெறுமதிமிக்க உயிர்களை சாதாரணமாகக் கருத முடியாது.



# ஜூலை - 9, ஒரு வருடம் பூர்த்தி

# என்ன நடந்தது நடக்கிறது நடக்கப் போகிறது?



சின்னத்தம்பி குருபரன்

ஒரு நாடு சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமாயின் அந்நாடு ஊழல், மோசடிகள் இல்லாமலும் மக்களின் உயர்ந்த வாழ்க்கைத்தரத்துடனும் உறுதியான பொருளாதாரக் கொள்கை, கல்விக் கொள்கை, வர்த்தகக் கொள்கை, நிதி, நாணயக் கொள்கை, சர்வதேச கொள்கை, அரசியல் கொள்கை என்பவற்றில் நிலையான தன்மை பேணப்பட வேண்டும். அத்தோடு, உள்நாட்டு உற்பத்தியாளரைப் பாதுகாக்கக்கூடிய வகையில் உறுதியான இறக்குமதிக் கொள்கையும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். உற்பத்தியாளரை முடிந்தவரை பாதுகாத்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து, மொத்த தேசிய வருமானத்தையும் பெருக்க முயற்சிக்க வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை எந்தக் கொள்கையிலும் உறுதித் தன்மை பேணப்படாமல், நாட்டின் உள்நாட்டு உற்பத்தித்துறைகள் எதனையும் பாதுகாக்க முடியாமல், நாட்டின் தலைவர் தொடக்கம் சாதாரண அதிகாரிகள் வரை ஊழல், மோசடிகள் செய்வதற்கு ஊக்குவித்த நாடாகவே இலங்கை கொள்ளப்படுகிறது. எல்லாத் துறைகளிலும் அரசியல்வாதிகள் கைவைத்து இறக்குமதிக் கட்டுப்பாடு, விவசாய உற்பத்திக்கான மூலப் பொருள் மீதான தடை, அமெரிக்க டொலர் நெருக்கடி ஆகிய பலவற்றினால் உள்நாட்டு உற்பத்தியைப் பாதித்ததோடு, மிக மோசமான அரசியல் பொருளாதார நெருக்கடி நிலையையும் தோற்றுவித்தது.

அரசியல், பொருளாதார நெருக்கடியால் சந்தையில் பொருட்களுக்கான பற்றாக்குறையைத் தோற்றுவித்தது. அதனால் பொருட்களின் விலை பன்மடங்கு அதிகரித்தது. டொலர் நெருக்கடியால் அத்தியாவசிய இறக்குமதிப் பொருட்கள் தடைப்பட்டன. அதனால், பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் நாட்கணக்கில் வரிசைகளில் சலித்துப் போய் ஏமாந்தனர். வரிசைகளில் பொருட்களுக்காக காத்திருந்த சிலர் மயக்கமடைந்து இறந்தனர். நீண்ட வரிசைகளில் காத்திருந்து சலிப்படைந்த மக்கள் வழிமறிப்பு மற்றும் எதிர்ப்புகளில் ஈடுபட்டனர். இதனை அடக்குவதற்கு அரசு கையாண்ட சில வழிமுறைகளும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை விரைவாக எடுக்கப்படாமையும் காரணமாக பிரச்சினைகள் பூதாகரமானதால் 2022 ஜனவரியிலிருந்து அரசுக்கு எதிரான மக்கள் போராட்டம் ஆரம்பமானது. இதனைச் சந்தர்ப்பம் பார்த்து அரசியல் கட்சிகளும், பல அமைப்புகளும், சில வெளிநாட்டு இராஜதந்திரிகளும் மறைமுகமாக ஊக்குவிக்க ஆரம்பித்தனர். பின்னர் இனம், மதம், மொழி, கட்சி சார்பில்லாமல் மார்ச் மாத பிற்பகுதியிலிருந்து போராட்டம் நாடு முழுவதும் பெரும் எடுப்பில் வலுப்பெற ஆரம்பித்தது. இப்போராட்டம் ‘கோட்டா கோ ஹோம்’ ‘மைனா கோ ஹோம்’ என்ற கோஷத்துடனும் அமைச்சர்மாரையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இராஜினாமா செய்யக் கோரியும் வலுப்பெற ஆரம்பித்தது.

ஏப்ரல் 9ஆம் திகதியிலிருந்து அரசுக்கு எதிரான போராட்டம் நாடு தழுவிய வகையில் பல்வேறு வடிவங்கள், பெயர்களில் முன்னெடுக்கப்பட்டன. காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட ‘கோட்டா கோ ஹோம்’, ‘கோட்டா கோ கம’ எனவும் அலரி மாளிகைக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட ‘மைனா கோ ஹோம்’, ‘மைனா கோ கம’ எனவும் பெயர் மாற்றம் பெற்று நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டன. இக்காலப்பகுதியில் அமைச்சரவையில் உள்ளோர் இராஜினாமா செய்து பல புதியவர்கள் நியமனம் செய்யப்பட்டனர். தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார். கட்சியின் தீர்மானங்களை மீறி ஒரு சிலர் பதவிகளுக்காக அரசோடு இணைந்துகொண்டார்கள்.

மக்கள் பிரச்சினை மேலும் தீவிரமடைந்தமையால் போராட்டம் மேலும் உக்கிரமடைந்தது.

**ஒருவேளை சஜித் பிரேமதாச பிரதமர் பதவியை ஏற்க முன்வந்திருந்தாலும் கூட சிலவேளை அவருக்கு ராஜபக்ஷக்கள் அதனைக் கொடுத்திருப்பார்களா என்பதும் சந்தேகமே. ராஜபக்ஷக்களும் அவர்களுடைய அணியினரும் செய்த ஊழல், மோசடிகளை மூடிமறைப்பதற்குப் பொருத்தமான நபராக ரணிலே அவர்களுக்குத் தென்பட்டார். அதனால் வாக்கு மாறாமல் இன்றுவரையும் அவர்களைப் பாதுகாத்து வருகின்றார்**

மே 9ஆம் திகதி அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்தார். அலரி மாளிகையில் இருந்து சென்ற சில அரசியல்வாதிகள் மற்றும் அரச சார்பு குண்டர்களால் போராட்டக்காரர்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பெரும் கலவரம் வெடித்தது. ஆத்திரமடைந்த பொதுமக்கள் அரசியல்வாதிகளின் சொத்துகளையும், வீடுகளையும், அரச சொத்துகள் சிலவற்றையும் எரித்தனர். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டனர். பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைமறைவாகினர். ஓரிரு நாட்களில் கலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

கலவரத்தின் பின்னர் சந்தையில் பொருட்களுக்கான தட்டுப்பாடு மேலும் அதிகரித்து விலையும் அதிகரித்தது. எரிபொருள், எரிவாயு உட்பட பல அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்காக நீண்ட வரிசைகள் மேலும் உருவாகின. எரிபொருள் இன்மையால் போக்குவரத்து தடைப்பட்டு நாடு முற்றாக முடங்கியது. அடிக்கடி அமைச்சர்மார் மாற்றப்பட்டுக் குறைந்தளவான அமைச்சர்களுடன் நாடு இயங்கியது. டொலர் வருவாய் குறைந்து பொருட்களின் இறக்குமதி முற்றாகப் பாதிக்கப்பட்டது. போராட்டங்கள் மேலும் தீவிரமடைந்தன. நாடு மிக மோசமான அரசியல், பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. இவை, போராட்ட வடிவம் மாற்றம் பெறுவதற்கும், தீவிரமடைவதற்கும் காரணமாக அமைந்தன.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய பிரதமர் பதவியை ஏற்குமாறு எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுத்தார். சஜித் உட்பட பலரும் நிபந்தனை விதித்து மறுக்கவே அச்சந்தர்ப்பத்தில் ஒரேயொரு தெரிவாக பிரதமர் பதவியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு அப்பதவி வழங்கப்பட்டது. அவரும் பிரதமரானார். தனக்கிருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி வெளிநாட்டு உதவிகளைப் பெற்று நாட்டின் பொருளாதார நெருக்கடியை விரைவாகத் தீர்த்து வைப்பதாகவும் அதிலும் மிகப் பிரதானமாக மக்கள் மூன்றுவேளை உணவு உண்பதை உறுதிசெய்வேன் எனவும் பத்திரிகையாளர்களிடம் உறுதியளித்தார். அவர் பிரதமராகி அதன் பின்னர் ஜனாதிபதியாகி ஒரு வருடம் கடந்துவிட்டது. வரிசை குறைந்திருக்கிறது. உச்சத்தில் இருந்த விலையேற்றம் சில பொருட்களுக்குச் சிறிதளவு குறைந்திருக்கிறது. அத்தோடு இயல்பு வாழ்க்கையும் கிடைத்திருக்கிறது. பெரிதாக வேறொன்றும் நடக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

2022 ஜூலை 9 பாரியளவிலான பேரணியும் போராட்டமும் நாடு முழுவதும் ஆரம்பமாகி இலட்சக்கணக்கானோர் பங்குபற்றினர். ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை ஆகியன போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டன.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய தனது மாளிகையிலிருந்து பின் வாசல் வழியால் பாதுகாப்பாக வெளியேறினார். அன்று மாலை ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீக்கிரையக்கப்பட்டது. அதனால் பல கோடி ரூபா பெறுமதியான அரிய சொத்துகள் எரிந்து நாசமாகின.

இரு முறை ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து அந்தக் கதிரையில் அமர்வதற்கு ஆசைப்பட்டுக்கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களால் அந்த அதிர்ஷ்டமும் கிடைத்தது. நாட்டில் அரசியல், பொருளாதார நெருக்கடி ஏற்படாதிருந்திருந்தால் அரசுக்கு எதிரான கலகம் ஏற்பட்டிருக்காது. ரணிலுக்கு ஜனாதிபதி பதவியும் கிடைத்திருக்காது. எதிர்க்கட்சித் தலைவரின் பலவீனமும் ரணிலுக்குச் சாதகமாக அமைந்தது. ஒருவேளை சஜித் பிரேமதாச பிரதமர் பதவியை ஏற்க முன்வந்திருந்தாலும் கூட சிலவேளை அவருக்கு ராஜபக்ஷக்கள் அதனைக் கொடுத்திருப்பார்களா என்பதும் சந்தேகமே. ராஜபக்ஷக்களும் அவர்களுடைய அணியினரும் செய்த ஊழல், மோசடிகளை மூடிமறைப்பதற்குப் பொருத்தமான நபராக ரணிலே அவர்களுக்குத் தென்பட்டார்.

(தொடர்ச்சி 07 ஆம் பக்கம் பார்க்க...)

★ அமெரிக்கத் தூதுவரின் ரெலிபோன் ஒப்பரேட்டராக மாறிய ரணில்
★ இந்தியாவிலிருந்து தங்கம் கொண்டுவந்தாரா மனோ கணேசன்?
★ வவுனியா சீனி தொழிற்சாலை விவகாரத்தால் ரெலோவுக்குள் சர்ச்சை
★ ஹரீஸ், இசாக் ரஹ்மான் எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் முக்கிய சந்திப்பு

# சண்டே சாம்பார்



ஆர்.சிவராஜா
mesivaraj@yahoo.com

**வெளிநாட்டுத் தூதுவர்களுடன் ஜனாதிபதி மேற்கொண்ட பயணம்**

இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் கடந்த வாரம் நுவரெலியாவுக்கு புகையிரத பயணமொன்றை மேற்கொண்டிருந்தனர். இந்தப் பயணத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே ஏற்பாடு செய்திருந்தார். உயர்ஸ்தானிகர்கள் மற்றும்



தூதுவர்கள் இவ்வாறானதொரு சுற்றுலாப் பயணம் சென்றமை இதுவே முதல் தடவையாகும்.

புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் பத்து பேரின் நற்சான்றிதழ்களை கண்டியில் வைத்து பெற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில், தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களின் சுற்றுலாப் பயணத்தில் இணைந்துகொண்டே நுவரெலியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

கொழும்பிலிருந்து பயணத்தை ஆரம்பித்த தூதுக்குழுவினர் நானுஓயா புகையிரத நிலையம் வரையில் பயணித்துள்ளனர். பேராதனையிலிருந்து இராஜதந்திரிகள் சிலரும் இந்தப் பயணத்தில் கலந்துகொண்டுள்ளதுடன், அவர்களுடன் ஜனாதிபதி செயற்குழுவின் பிரதானி சாகல ரத்நாயக்கவும் இணைந்துகொண்டார்.

அவர்கள், பழைய வைஸ்ரொயிஸ் புகையிரதத்திலேயே நானுஓயா வரை ஆடிப்பாடி குதூகலமாக வந்துள்ளனர். நுவரெலியாவிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் அவர்களுக்காக இராப்போசனம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற இராஜதந்திர தூதுக்குழுவினரை ஜனாதிபதியின் பாரியார் பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க வரவேற்றிருந்தமை சிறப்பமசமாகும்.

ஆங்கில ஆட்சியாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட அந்த மாளிகைக்குள் நுழைந்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், வரவேற்பறையில் பிரித்தானியர்களால் பொருத்தப்பட்டிருந்த பழைய தொலைபேசியின் அருகில் சென்று அதனை பார்வையிட்டார். அது, வரிசையான இலக்கங்கள் பொருத்தப்பட்ட மிகவும் பழைமையான தொலைபேசியாகும்.

அதனருகில் நின்ற ஜூலி சங், 'இன் இங்லன்ட்' என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ள அந்தத் தொலைபேசி தொடர்பில் தகவல் கேட்க ஆரம்பித்ததும், அவர் அருகில் வந்த ஜனாதிபதி ரணில் அவருக்கு அதன் வரலாற்றுத் தகவல்களைக் கூறி அந்தத் தொலைபேசியில் அழைப்பெடுக்கும் விதத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார். மிகவும் பழைமையான தொலைபேசியில் அழைப்பெடுப்பது தொடர்பில் தெளிவுபடுத்த சென்றதால் சிறிதுநேரத்துக்கு ஜனாதிபதி ரணில், தூதுவர் ஜூலி சங்கின் தொலைபேசி இயக்குபவராக மாறிவிட்டார் என்றே சொல்லவேண்டும்.

"சேர், எப்படியோ அமெரிக்காவுக்கு தகவலொன்றை வழங்கிவிட்டீர்கள் அல்லவா?" என்று அங்கிருந்த அதிகாரியொருவர் கேட்க, தூதுக்குழுவினரின் இந்தப் பயணம் இலங்கை தொடர்பில் உலகத்துக்கு தகவலொன்றை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ரணில் குறிப்பிட்டுள்ளார்.

குளிருக்காக ஜனாதிபதி மாளிகையில் தீ மூட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ள பகுதியில், பழைமையை நினைவுகூரும் வகையில் தீயும் மூட்டப்பட்டுள்ளது. மேலும், சிங்கள கலாசார உணவுகளை சுவைப்பதற்கும் இராஜதந்திர குழுவினருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. மறுநாள் நானுஓயாவிலிருந்து தெமோதரை வரை புகையிரத பயணத்தை ஆரம்பித்த தூதுக்குழுவினர், இயற்கை அழகை இரசிப்பதற்காக இடைக்கிடையில் பல்வேறு இடங்களில் புகையிரதம் நிறுத்தப்பட்டுள்ளது.

பட்டிபொல மற்றும் கேட்ரிவஸ்டன் ஆகிய புகையிரத நிலையங்களில் வைத்து புகையிரதத்திலிருந்து இறங்கி இயற்கையை இரசிக்கவும் செய்தனர். தெமோதரை - 09 பாலத்துக்கு அருகில் புகையிரதத்திலிருந்து இறங்கிய அவர்கள் அங்கிருந்த தேசிய, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் நலன் விசாரித்து அவர்களுடன் கலந்துரையாடியுள்ளனர். தெமோதரை ரயில் வளைவை கண்காணித்த அவர்கள், பின்னர் கொழும்பை நோக்கி பயணமாகியிருந்தனர்.

அதன்பின்னர், வருடாந்த கதிர்காம பெரஹரவை காண்பதற்காக ஜனாதிபதி நுவரெலியாவிலிருந்து கதிர்காமம் சென்றுள்ளார். பெருமளவு மக்கள் கலந்துகொண்டிருந்த அந்த பெரஹரவில் இருபுறமும் இருந்த மக்களை வரவேற்கவும் ஜனாதிபதி மறக்கவில்லை.

அன்றைய தினம் காலையே, அமைச்சர் மஹிந்த அமரவீரவின் 35 வருட அரசியல் பயண நிறைவை கொண்டாடுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் விசேட அதிதியாக கலந்துகொள்வதற்காக ஹம்பாந்தோட்டை பிரதேசத்தை நோக்கி ரணில் பயணமாகியிருந்தார். இதன்போது, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்காக அரசாங்கத்துடன் இணையுமாறு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சியினருக்கு ஜனாதிபதி அழைப்புவிடுத்தார்.

நிகழ்வின் நிறைவில் இடம்பெற்ற தேநீர் விருந்தில் கலந்துகொள்வதற்காக சென்றபோது, ஜனாதிபதியின் அருகில் வந்த முன்னாள் மாநகர முதல்வர் எராஜ், "சேர் என்னை அடையாளம் காண முடிகிறதா?" என்று கேட்டுள்ளார். அதற்கு ஜனாதிபதி, "ஏன் முடியாது. உங்களை முழு நாட்டுக்கே தெரியுமே" என்று பதிலளித்துள்ளார்.

மஹிந்த அமரவீரவுக்கு வாழ்த்து தெரிவிக்க வந்திருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியின் அருகில் சென்று 'அஸ்வெசும' நலன்புரி வேலைத்திட்டம் தொடர்பில் விசாரித்துள்ளனர். அதற்கு, சகல மக்களுக்கும் ஏற்றவாறு மாற்றியமைப்பதாக ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை மீண்டும் கொழும்புக்கு திரும்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கு முதல் தினம் பூரணைதின விடுமுறை என்பதால் அன்றையதினம் அமைச்சரவை கூட்டத்தையும் நடத்தியுள்ளார். புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் அமைச்சர்கள் சிலர் வினவ, அதற்கு ஜனாதிபதி வழமைபோல் பதிலளிக்கத் தவறியுள்ளார்.

அன்றைய தினம் பிற்பகல், ஜனாதிபதியின் இந்திய பயணம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் ஜனாதிபதியை சந்திக்க வந்திருந்தார். ஜனாதிபதி எதிர்வரும் 20ஆம் திகதி இந்தியா செல்வதுடன், அவருடன் அமைச்சர்களான டக்ளஸ், ஜீவன் ஆகியோர் செல்லவுள்ளனர். பிரதமர் மோடியை ரணில் டில்லியில் சந்திக்கவுள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை, இராஜாங்க அமைச்சர் டீ.டி.சானக்கவின் திருமண நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில், கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டலொன்றுக்குச் சென்றுள்ளார். முன்னாள் ஜனாதிபதிகளான மைத்ரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு அருகிலேயே ஜனாதிபதிக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்துள்ளது. அதே மேசையில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சமல் ராஜபக்ஷ மற்றும் பெசில் ராஜபக்ஷ ஆகியோரும் அமர்ந்தனர்.

அதன்போது, நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய எதிர்கால அரசியல் திட்டங்கள் குறித்து ஜனாதிபதிகள் மூவரும் கலந்தாலோசித்தனர்.

பொருளாதார திட்டங்கள் குறித்து பேசுவதற்காக வியாழக்கிழமை காலை ஜனாதிபதி நிதி அமைச்சுக்கு சென்றுள்ளார். அதன்போது மத்திய வங்கியின் வட்டி மற்றும் நிலையான வைப்பு வட்டி என்பவற்றைக் குறைப்பது தொடர்பில் அதிகாரிகளுடன் ஜனாதிபதி கலந்தாலோசித்திருக்கிறார்.

" கடன் மறுசீரமைப்பை செய்வதற்கு ஜனாதிபதியால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தை மக்கள் நம்பினார்கள். குறிப்பாக, வங்கிகள் வீழ்ச்சியை சந்திக்கும் என்று கூறினாலும், அதனை யாரும் நம்பவில்லை" என்று அதன்போது இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

"எப்போது பொலிஸ் மா அதிபரை நியமிக்கவுள்ளீர்கள்?" என்று இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய கேட்க, அதற்கு ஜனாதிபதி வழமையான புன்னகையுடன், சிறந்த நபரொருவரை விரைவில் நியமிப்பதாக பட்டும் படாமலும் கூறியுள்ளார்.

***வவுனியா சீனித் தொழிற்சாலை விவகாரம் - ரெலோவுக்குள் சர்ச்சை***

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை இரவு இணையவழியாக நடைபெற்றது. இதன்போது, பெரும் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

வவுனியாவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சீனித் தொழிற்சாலை, ரெலோவின் தலைமையின் தன்னிச்சையான செயற்பாடு பற்றி இங்கு கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பொதுச் செயலாளர் கோவிந்தன் கருணாகரம், சுரேன் குருசாமி, இந்திரகுமார் பிரசன்னா, சபா குகதாஸ், விந்தன் கனகரட்ணம், கணேசலிங்கம் சொக்கன், நித்தியானந்தன், கமலராஜன் ஆகியோர் பங்குபற்றினர்.

இன்றைய கூட்டத்தின் ஆரம்பத்தில், அண்மையில் வவுனியாவில் நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அடுத்ததாக வவுனியாவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சீனித் தொழிற்சாலை பற்றி பேசப்பட்டது.

கட்சியின் பொதுச் செயலாளர், மட்டக்களப்பு எம்.பி. கோவிந்தன் கருணாகரம் பேசியபோது, ''கட்சியின் தலைமைக்குழுக் கூட்டத்தை அவசரமாக கூட்டியதன் நோக்கங்களில் ஒன்று நயினாமடு சீனித் தொழிற்சாலை விவகாரம்'' என்றார்.

இதற்கு பரவலாகக் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்படுவதாகவும், ரெலோவுக்கு எதிராக கடுமையான பிரசாரம் செய்யப்படுவதாகவும், கட்சிக்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ள தாகவும், பொது அமைப்புகள், கட்சிகள் - விக்னேஸ்வரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் கதிர் ஆகியோர் எதிராக கருத்து தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

இந்த சாத்தியப்படாத ஒரு திட்டத்தை கொண்டுவரும் முயற்சியில் ரெலோ ஈடுபடுவதாகவும், தமிழ் மக்களுக்கும், மண்ணுக்கும் எதிராக ரெலோ செயற்படுவதாகவும் விமர்சிக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

"அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோது, உங்களது அனைத்து விடயங்களும் சரியென கூறிவிட்டு சென்றார். உண்மையில் அந்த விடயங்கள் எதுவும் எனக்குத் தெரியாது. இங்கு என்ன நடக்கிறதென்றே எனக்கு விளங்கவில்லை" என ஆதங்கப்பட்டு கருத்து தெரிவித்தார்.

இந்த விடயத்தில் தானே விளக்கமளிக்க வேண்டுமென சுரேன் குருசாமி தெரிவித்து, நீண்ட விளக்கமளித்தார்.

"இந்த சீனித் தொழிற்சாலை சீனாவின் திட்டமல்ல. கடந்த நல்லாட்சிக் காலத்தில் அப்போதைய தாய்லாந்து பிரதமர் இலங்கை வந்தபோது இது பேசப்பட்டது. அப்போது ஜனாதிபதி மைத்ரி. பிரதமர் ரணில். தாய்லாந்திலுள்ள நிறுவனம் ஒன்றும், பிரிட்டனிலுள்ள நிறுவனமொன்றும் இணைந்து இதை செயற்படுத்தவே அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் முன்மொழியப்பட்டபோது, அப்போது இரா.சம்பந்தனும் வரவேற்றார். அதற்கான எழுத்துபூர்வ ஆதாரங்களும் உள்ளன. இதேபோல் மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கக்கூடிய பெரிய திட்டங்கள் மேலும் வடக்கு, கிழக்குக்கு வர வேண்டுமென்றும் அவர் அப்போது குறிப்பிட்டிருந்தார். அப்போதைய வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனும் இந்தத் திட்டத்துக்கு அனுமதியளித்துள்ளார்.

தற்போது கிடைத்துள்ள அமைச்சரவை அனுமதியுடன், மொத்தமாக 4 தடவைகள் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. 3000 பேருக்கு வேலைவாய்ப்பு இதனால் கிடைக்கும். முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை கொடுப்பதற்காக இந்தத் திட்டத்தை செயற்படுத்தலாம். இந்த நிறுவனத்துக்கான பணியாளர்களை அந்தப் பிரதேசத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்தான் சிபாரிசு செய்வார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் வடக்கில் கணிசமான வேலைவாய்ப்பு பிரச்சினை குறைவதுடன், வவுனியாவை மையமாக வைத்து இந்தத் தொழிற்சாலை ஊடாக வருடாந்தம் ரூ. ஒரு பில்லியன் அளவில் பணப்பரிமாற்றம் நடக்கும். இது வவுனியா - வன்னி பொருளாதாரத்தை கணிசமாக உயர்த்தும்" என்றார் குருசாமி .

இதன்போது குறுக்கிட்ட கோவிந்தன் கருணாகரம் எம்.பி, இந்தத் திட்டம் சீனாவின் பின்னணியுடையதென்று இந்தியா கருதுவதாக தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சுரேன், ''அமைச்சரவை அனுமதியின் பின்னர், சூம் வழியான கலந்துரையாடலில், இந்திய தூதரக பொருளாதாரம் தொடர்பான அதிகாரி இந்தத் திட்டத்துக்கு வரவேற்பளித்துள்ளார். இந்தியா இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பில்லை, ஆதரவாகவே உள்ளது'' என்றார்.

''அப்படியென்றால், இதை ஏன் பகிரங்கப்படுத்தவில்லை, இந்தத் திட்டத்தால் சிங்களக் குடியேற்றம் நடக்கப்போகிறது, மகாவலி வரப்போகிறது, சாத்தியமில்லாத திட்டத்துக்கு ரெலோ முயற்சிக்கிறது என்ற விமர்சனங்களின் போது ஏன் பேசாமல் இருந்தீர்கள்? இதுபற்றி பகிரங்கமாக சொல்ல முடியுமா'' என கோவிந்தன் கருணாகரம் எம்.பி. கேட்டார்.

இதுபற்றி இப்போது தன்னால் பகிரங்கமாக பேச முடியாதென்றும், பொருத்தமான நேரத்தில் பகிரங்கமாக பதிலளிப்பேன் என்றும் சுரேன் குறிப்பிட்டார். ஏனெனில், அந்த நிறுவனத்திடம் அனுமதி பெறாமல் தம்மால் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தி தெளிவுபடுத்த முடியாதென்றார் சுரேன்.

இதன்போது கருத்து தெரிவித்த கருணாகரம் எம்.பி, ''5 பேர் உள்ள ஒரு வீட்டில், ஒருவர் குழப்படி செய்கிறார் என்பதற்காக ஏனைய 4 பேரும் சாக முடியாது. நீங்கள் ஒருசிலர் செய்யும் காரியங்களால் ரெலோவின் மீது பழி விழுகிறது. இது தொடர்பில் எங்களில் சிலர் இந்தியத் தூதரகத்தை சந்தித்து, ரெலோவிற்கும் திட்டத்துக்கும் சம்பந்தமில்லையென்பதை தெளிவுபடுத்துவோம்'' என்றார்.

ரெலோவின் சர்வதேச பொறுப்பாளர் சாம் என்பவரே இந்தத் திட்டம் ரெலோவினுடையது என முதலில் பகிரங்கமாக உரிமை கோரியதாகவும், இதனாலேயே சர்ச்சை ஏற்பட்டது என்றும் சுரேன் குறிப்பிட்டார்.

இந்த விவாதங்களைத் தொடர்ந்து, மட்டக்களப்பிலிருந்து கூட்டத்தில் கலந்துகொண்ட இந்திரகுமார் பிரசன்னா மற்றொரு சர்ச்சை விமர்சனத்தை முன்வைத்தார்.

"செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரன், கு.சுரேன் ஆகிய 3 பேரும்தான் அனைத்தையும் தீர்மானிக்கிறீர்கள். ரெலோவுக்கு எதிரான இவ்வளவு பிரசாரங்கள், பின்னடைவுகளுக்கு இந்த மூவரும்தான் பொறுப்பேற்க வேண்டும். நீங்கள் 3 பேரும்தான் கூட்டங்களுக்கு போகிறீர்கள். நாங்களும் 40 வருடங்களுக்கு மேலாக கட்சியில் இருக்கிறோம். எங்களை நீங்கள் கண்டுகொள்வதேயில்லை. இனி எந்த சந்திப்புக்கு செல்வதென்றாலும், குறைந்தது 5 பேர் இருக்க வேண்டும். நீங்கள் இந்தியாவுக்கு எதிராக செயற்படுவீர்கள் என்றால், நான் உங்களுக்கு எதிராக செயற்படுவேன்'' என்றார்.

பின்னர் விந்தன் கனகரட்ணமும் கருத்து தெரிவித்தார். "கடந்த சில மாதங்களாக ரெலோவுக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் இணையம், பத்திரிகை, பேஸ்புக்கில் வைக்கப்படுகிறது. அரசுடன் கள்ள உறவையும், தொடர்பையும் பேணிக்கொண்டு, அரசின் சலுகையாக இந்தத் தொழிற்சாலை வடக்குக்கு கொண்டு வரப்படுவதாகவும் விமர்சிக்கிறார்கள். இந்தத் திட்டத்துக்கு அப்போதைய முதல்வர் விக்னேஸ்வரன் அங்கீகரித்ததாக கூறுகிறீர்கள், ஆனால் 2016இல் அதை முதல்வர் நிராகரித்தார்'' என்றார் .

இதன்போது கருத்து தெரிவித்த கருணாகரம் எம்.பி, இந்தியா இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்கிறது என்பதை விக்னேஸ்வரன் அங்கீகரித்தார் என்பதை உறுதிப்படுத்த முடியுமா என கேட்டார்.

இதற்குப் பதிலளித்த சுரேன், ''அப்படியெனில் அம்பாந்தோட்டைக்கோ அல்லது வேறு பகுதிக்கோ கொண்டுசெல்ல வேண்டியேற்படும். இதனால் மக்களுக்கே பாதிப்பு ஏற்படும்'' என்றார்.

விந்தன் கனகரட்ணம் கருத்து தெரிவிக்கையில், விக்னேஸ்வரன், ஐங்கரநேசன், சுமந்திரன் போன்றவர்கள் பரவலாக எதிர்த்துள்ளதை சுட்டிக்காட்டியதுடன், ஊடகங்களிலும் அது பற்றிய செய்திகள் வெளியானதாக குறிப்பிட்டார். சுமந்திரனின் பின்னணியில் இயங்கும் பத்திரிகையொன்றுதான் இதைப்பற்றி எழுதுவதாகவும், தன்னிடமுள்ள தனிப்பட்ட பகையை மையமாக வைத்து இவ்வாறு எழுதப்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் இணக்கப்பாடு எட்டப்படாததால், எதிர்வரும் 19ஆம் திகதி ரெலோவின் தலைமைக்குழு மீண்டும் கூடுவதாக தீர்மானிக்கப்பட்டது.

***ஹரீஸ், இசாக் ரஹ்மான் எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் முக்கிய சந்திப்பு***

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பினருடனான பேச்சுவார்த்தை காலதாமதமாவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான் ஆகியோர் கடந்த புதன்கிழமை காலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதாக மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது, இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பினருடனான பேச்சுவார்த்தை காலதாமதமாவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ...... ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியதாகவும் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னர் உடனடியாக குறித்த பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம் கட்சிகளையும், முஸ்லிம் எம்.பிக்களையும் அழைக்க உள்ளதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக ஹரீஸ் தெரிவித்தார்.

மேலும், தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புகளின் தடைநீக்கம் தொடர்பில் இதுவரை வர்த்தமானி அறிவிப்பு வெளிவராமை சம்பந்தமாக வினவியபோது, பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் சகல பணிகளையும் மேற்கொண்டு வர்த்தமானி அறிவிப்பில் ஜனாதிபதி கையெழுத்திட தேவையான நடவடிக்கைகளை சட்ட மா அதிபர் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகவும், விரைவில் தடைநீக்க வர்த்தமானி அறிவிப்பு வெளிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் முஸ்லிம் சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு உரிய கடமைப் பொறுப்புகளை வழங்குவதிலுள்ள பாரபட்சம் தொடர்பிலும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டதாகவும் இந்த விடயம் தொடர்பில் முஸ்லிம் புத்திஜீவிகளையும், முஸ்லிம் சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளையும் விரைவில் தான் சந்தித்துப்பேச ஏற்பாடு செய்வதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அஸ்வெசும பயனாளிகள் தெரிவில் பொருத்தமான பயனாளிகள் புறக்கணிக்கப்பட்டுள்ள விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு முன்வைத்தபோது உரிய பயனாளிகளுக்கு இந்த உதவிகள் கிடைக்கும் விதமாக அஸ்வெசும பயனாளிகள் தெரிவில் இடம்பெற்றுள்ள குறைபாட்டை நிவர்த்தி செய்ய உள்ளதாக ஜனாதிபதி உறுதியளித்தார். மேலும் மாகாண சபைகளில் உள்ள நிர்வாக குறைபாட்டை சீர்செய்யவும், நிர்வாக திறனை அதிகரிக்கவேண்டிய அவசியம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நாட்டிலுள்ள ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் மாகாண அமைச்சுகளின் நிர்வாக வினைத்திறனை அதிகரிக்க புதிய பொறிமுறையை உருவாக்கி அதன்மூலமாக மாகாண அமைச்சுகள் வினைத்திறனுடன் செயற்பட வழிவகை ஏற்படும் என்றும் ஜனாதிபதி இதன்போது எங்களிடம் உறுதிபடக் கூறினார். அதுமட்டுமின்றி ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பில் முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் மேலும் தெரிவித்தார்.

***தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை பயன்படுத்த முடியாது***

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கைப்பற்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி எடுத்த முயற்சிக்கு இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஆர்.ராகவனை செயலாளராக்கொண்டு பதிவு செய்யப்பட்ட ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பெயரிலுள்ள ஜனநாயகத்தை நீக்கி தமிழ்த் தேசியக் கூட்டணி என மட்டும் செயல்படவும் அதனை ஆங்கிலத்தில் T.N.A. என உச்சரிக்கவும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்தில் விண்ணப்பிக்கப்பட்டது.

இந்த விண்ணப்பத்தை 2023 மே மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற தேர்தல்கள் ஆணைக் குழுவின் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதே பெயரில் வேறு கட்சி நீண்டகாலமாக இயங்குவதனால் இந்த சொல்லாடல் இடம் பெறும் வகையிலான பெயருக்கு அனுமதிக்க முடியாது என தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்து குறித்த கட்சிக்கு தற்போது எழுத்தில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் தற்போது 5 கட்சிகள் கூட்டாக இயங்குவதோடு 5 கட்சிகளின் தலைவர்களும் இணைத் தலைவர்களாக இயங்கும் நிலையில் ரி.என்.ஏ. ஆரம்பிக்கும்போது இருந்த 5 கட்சிகளில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். இரு கட்சிகளும் இந்த கூட்டணியில் இருப்பதனால் அந்தப் பெயர் தமக்கே சொந்தம் என கூறிவந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டது.

இதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என அனைவரும் இணங்கி தமிழரசுக் கட்சியின் பெயரில் பயன்படுத்தவே ஒப்புதல் வழங்கியதனால் அந்தக் கட்சியின் சின்னத்திற்கே இப்பெயரை பயன்படுத்த முடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு பதிலளித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிவிட்டதாக ரெலோவும், புளொட்டும் அறிவித்து தம்முடன் ஈ.பி.ஆர்எல்.எவ், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றையும் இணைத்துக்கொண்டு தாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என கூறினர்.

இதற்கமையே இக் கட்சியால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்கப்பட்ட நிலையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என பயன்படுத்த முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்பட்டுவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பெயரில் மாற்றம் செய்வதற்கு இலங்கை தமிழரசு கட்சி ஆட்சேபனை தெரிவித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கை தமிழரசு கட்சி பிரிந்துசென்று உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்தது. இதற்கு தமிழ் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியிருந்தது. 2004ஆம் ஆண்டு ஆனந்தசங்கரி செயற்பட்டதைபோல், தற்போது தமிழரசு கட்சி செயற்பட்டதாக பரவலாக விமர்சிக்கப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழு அண்மையில் கூடி, யாப்பு திருத்தம் செய்தது. அத்துடன், கட்சியின் பெயரையும் மாற்றும் தீர்மானத்தையும் எடுத்து, அது தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியென்ற பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியின் பெயரை, தமிழ்த் தேசியக் கூட்டணியென மாற்றுவதற்காக விண்ணப்பித்திருந்தது.

இதற்கு தமிழரசு கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சென்ற தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆட்சேபனையை பதிவுசெய்தார்.

***இந்தியாவிலிருந்து தங்கம் கொண்டுவந்தாரா மனோ கணேசன் ?***

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கான பயணமொன்றை முடித்துவிட்டு இலங்கை வந்தார்.

விமான நிலையத்தின் விசேட பிரமுகர்கள் தங்குமிடத்தில் அவர் காத்திருந்தபோது அவரது ஆவணங்களையும் , பயணப் பெட்டிகளையும் எடுத்துவர விமான நிலையப் பணியாளர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

என்ன நிறத்திலான பயணப்பெட்டி இருக்கிறது என்று அந்த பணியாளர்கள் வினவி சென்றுகொண்டிருந்தபோது, கறுப்பு நிறத்தில் ஒன்றும் சிவப்பு நிறத்தில் ஒன்றும் இருக்கின்றன. அந்த சிவப்பு பெட்டியில் தங்கம் கொண்டுவந்திருக்கிறேன் என்று மனோ கணேசன் கூற, அந்த இடத்தில் இருந்த அனைவரும் சத்தமாக சிரித்துவிட்டனராம்.

# 13க்கு பச்சைக் கொடி காட்டுவார்களா தமிழ்த் தலைவர்கள்?

**அக்கினியான்**

ஆனைப்பசிக்கு பாகன் சோளம்பொரி தீத்தி பசியை அடைக்க முற்பட்ட கதைபோல் தற்போதெல்லாம் 13 என்ற வட்டத்தைக் கீறி அவ்வட்டத்துக்குள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை மட்டுப்படுத்திவிடும் முயற்சி இரகசியமாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்த முயற்சி 13 உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருவது சாதாரணமாக தமிழர்கள் தெரிந்துகொண்ட விடயம். 13 என்பது தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு பரிபூரணமான தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதனால்தான் இந்தியாவால் திணிக்கப் பார்த்த இந்தத் திருத்தத்தை விடுதலைப் புலிகள் கடுமையாக எதிர்த்தார்கள். மறுபுறம் ஏற்றுக்கொண்டு மாகாண ஆட்சியை



இந்திய அரசின் ஆலோசனையின்பேரில் ஏற்றுக்கொண்ட முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் வடக்கு, கிழக்கு மாகாண சபையில் தமிழ் ஈழத்துக்கான பிரகடனத்தை செய்துவிட்டு மாகாண ஆட்சியை கைவிட்டுச் சென்றார்கள்.

தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வாக சமஷ்டி முறையிலான ஆட்சி முறையிலேயே தீர்வு கொண்டுவரப்படவேண்டுமென்று கோரி போராடத் தொடங்கி சுமார் ஏழு தசாப்தமும் இரு வருடங்களும் கடந்து வந்துவிட்டன. இன்னும் இது பற்றி பேசினால், சிங்களத் தலைமைகளே தமிழர்கள் பிரிவினை பற்றி பேசுகிறார்கள். நாட்டை துண்டாடப் பார்க்கிறார்கள் என்று கொந்தளிக்கிறார்கள். முன்னாள் அமைச்சரும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர, "விடுதலைப் புலிகளின் நோக்கத்துக்கு ஏற்பவே தமிழத் தேசியக் கூட்டமைப்பு இன்றும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது'' என்று குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கிறார். கூட்டமைப்பை தடைசெய்யவேண்டுமென்று பகிரங்கமாக பேசிவருகிறார்.

தந்தை செல்வநாயகம் தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் அரசியல் உரிமையுடனும் சுய மரியாதையுடன் வாழவேண்டுமானால் அவர்களுக்கான நிரந்தர தீர்வாக சமஷ்டி முறையிலான ஆட்சியே முன்வைக்கப்பட வேண்டும் என்பதை 1951ஆம் ஆண்டு திருகோணமலையில் நடத்தப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டில் ஆற்றிய உரையில் மிக துல்லியமாகவும் தெளிவாகவும் எடுத்துக்கூறியிருந்தார்.

இம்மாநாட்டில் தந்தை இரு விடயங்களை முக்கியப்படுத்தி காட்டியிருந்தார். ஒன்று தமிழர்கள் பிரிந்து செல்வது, மற்றது சமஷ்டி முறையில் தமிழ்ப் பிரதேசம் மாகாண ஆட்சியைப் பெறுவது. இதில் பிரிவது என்ற விடயத்தை கடுமையாக நிராகரித்தார் தந்தை. வடக்கு, கிழக்கு மக்களுக்கான உகந்த தீர்வு சமஷ்டி முறை தீர்வென்பதை பகிரங்கமாகவும் அழுத்தியும் அன்று உரைத்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் தீர்க்கமாகவும் துல்லியமாகவும் அறிவுபூர்வமாகவும் தந்தை விளக்குகையில் இவ்வாறு கூறினார். தன் உள்நாட்டு விடயங்களில் மாகாண அரசுக்கு முழு அதிகாரம் இருக்கும். சுயாட்சி மாகாணங்களை இணைப்பதற்கு ஒரு நடுவண் அரசு இருக்கும். மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் விடயங்கள் மாகாண அரசுகளினால் செயல்படுத்த முடியாத பலமும் அதிகாரமும் கொண்டதாக இருக்குமென மிகத் தெளிவாகவும் ஆழமாகவும் தந்தை எடுத்துரைத்தார். தந்தையவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாடு பிரிந்து செல்லவேண்டும் தனிநாட்டுக்கான அதிகாரம் பெறப்படவேண்டுமென்பதை வலியுறுத்தி நிற்கவில்லை என்பது சிங்களத் தலைமைகளுக்கு தெரியாதவொரு விடயமல்ல.

தந்தையவர்கள் சமஷ்டி வடிவிலான அதிகாரப்பகிர்வே தமிழ் மக்களுக்கான பொருத்தமான தீர்வு என்பதை ஏற்றுக்கொள்வதற்கு காரணமாக இருந்தவர்கள் சிங்களத் தலைமகள் என்பதும் தெளிவான விடயமாகும். 1924ஆம் ஆண்டு கண்டி நகரசபை மண்டபத்தில் கூடிய கண்டி தேசிய சபையினர் டொனமூர் ஆணைக்குழு முன் சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தனர். 1926 ஆம் ஆண்டு யாழ். வாலிபர் சங்கத்தின் அழைப்பின்பேரில் கலந்துகொண்ட முன்னாள் பிரதமர் பண்டார நாயக்க இங்கு உரையாற்றுகையில், பல இன மக்கள் வாழும் இலங்கைக்கு சமஷ்டி



முறையிலான அதிகாரப்பகிர்வே சிறந்தது என்பதை அடித்துக் கூறினார். இதன் மறுபிரதிபலிப்பாக 1949ஆம் ஆண்டு கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் கூட்டமொன்று இடம்பெற்றபோது தந்தை செல்வநாயகம் பின்வருமாறு தனது சமஷ்டி பற்றிய கருத்தை தெரிவித்திருந்தார்.

வடக்கு, கிழக்கு தமிழர்கள் சோல்பரி அரசியல் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே 1947ஆம் ஆண்டு தேர்தலில் வாக்களித்தார்கள், தமிழ் காங்கிரஸை ஆதரித்தார்கள். இதற்கு மாற்றுவழியாகவே ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகிற நாடொன்றுக்கு ஒவ்வொரு இனமும் தம்மைத்தாமே ஆள்வதற்கு சமஷ்டி முறையிலான ஆட்சிமுறையே ஏற்றதென அவர் விளக்கம் அளித்திருந்தார். தந்தையின் விளக்கத்தை புரிந்துகொண்ட கோப்பாய் வன்னியசிங்கம் தந்தையின் கருத்தை ஆதரித்து பேசுகையில், கனடா மற்றும் சுவிஸ்சர்லாந்து நாடுகளின் அரசியல் திட்டத்தை குறிப்பிட்டு அதுவே பொருத்தமானதென குறிப்பிட்டதுடன், இதை ஆதரித்து வடக்கு, கிழக்கு முழுவதும் தான் பிரசாரம் செய்யப்போவதாகவும் கூறியிருந்தார். இந்த ஆதரவின் அடிப்படையில் தந்தை சமஷ்டி தீர்வை அறிமுகம் செய்யும் முதலாவது கூட்டத்தை மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வீதியில் 1949ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி நடத்தினார். இந்தக் கூட்டமே தமிழ் மக்களின் சமஷ்டி கோரிக்கைக்கான முன்னுரையாக அமைந்தது.

பிரித்தானியர் புகுத்திய ஒற்றையாட்சி அமைப்பு முறையை அப்போதைய தமிழ்த் தலைவர்கள் எத்தகைய எதிர்ப்பும் காட்டாது ஏற்றுக்கொண்டமை அந்த ஒற்றையாட்சி முறைக்குள் சிறுபான்மை மக்களாகிய தமிழர்களுக்கு கூடிய பிரதிநிதித்துவம் பெற முயன்று தமிழ்த் தலைமைகள் தோற்றுப்போன விவரங்களை இக்கூட்டத்தில் கோப்பாய் வன்னியசிங்கம் விலாவாரியாக விளக்கியிருந்தார். இதன் பின்னணியில் ஏற்பட்ட அரசியல் ஓடுபாதைகள் தந்தையையும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தையும் பிரித்துவிட எத்தனிக்கும் பல சம்பவங்கள் நடந்தேறின.

இந்தப் பிரிவின் காரணமாக 1948ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதி கொழும்பு மருதானையில் தந்தை தலைமையில் நடத்தப்பட்ட கூட்டம் தமிழர்களுக்கான புதிய பாதையை திறந்துவிட்ட நிலையில், தந்தை செல்வா, கோப்பாய் வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் ஆகியோரின் கூட்டு, தமிழர் உரிமையை பெறுவதற்கான மாற்று யோசனையாக சமஷ்டியை மக்கள் முன்வைத்தார்களே தவிர, நாட்டை பிளவுபடுத்த வேண்டும், துண்டாட வேண்டும் என்ற கருத்துக்கோ கொள்கைக்கோ ஆதரவு தேட அவர்கள் முயலவில்லை. எப்பொழுதுமே தீவிரத்துடன் உரையாற்றும் தளபதி அமிர்தலிங்கம் இக்கூட்டத்தில் உரையாற்றும்போது தந்தையின் ஆலோசனையை ஆமோதித்தும் உரையாற்றினார்.

இந்த தொடக்கத்தை ஏற்றுக்கொள்ள விரும்பாத சிங்களத் தலைமைகள் தமிழரசுக் கட்சி ஆரம்பித்ததை விரும்பாத நிலையில், தமிழ் நாடு ஒன்றை அமைப்பதை நோக்கமாகக்கொண்டு கட்சியொன்றை தமிழர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள் என தென்பகுதியில் பிரசாரத்தை மேற்கொண்டார்கள். இலங்கை அரசியல் கூர்மை அடையாத இக்காலத்திலேயே இனவாதத்துக்கான ஆழமான வித்து சிங்களத் தலைமைகளால் விதைக்கப்பட்டுவிட்டது என்றே





கூறவேண்டும்.

இந்திய பிரஜாவுரிமைச் சட்டம் தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக தமிழ் காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்த தந்தை செல்வநாயகம், தமிழ் மக்கள் திக்கற்றவர்களாக ஆகிவிடக்கூடாது என்ற தீர்க்கத்துடன் சுதந்திர தமிழரசு ஒன்றை அமைக்கவேண்டும் என்ற எண்ணத்தை நடைமுறையில் கொண்டுவரவேண்டுமென்ற அவசியத்தை வலியுறுத்தியதுடன், அதற்கு கட்டுப்பாடுமிக்க அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்கவேண்டிய தேவையை சுட்டிக்காட்டியதுடன், தனது நோக்கத்தை பின்வரும் வார்த்தைகள் மூலம் தெளிவாக விளக்கினார்.

எங்களுடைய ஒரேயொரு நோக்கம் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டியின் அங்கமாக ஒரு சுதந்திர அரசை நிறுவுவதன்மூலம் தமிழ் மக்களின் விடுதலையைப் பெறுவதேயாகும் என தெளிவுபடுத்தியபோதும் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதைக் கண்ட சிங்களத் தலைவர்கள் அது தமிழ்நாடொன்றை அமைப்பதை நோக்கமாகக்கொண்டதாக பிரசாரம் செய்கிறார்கள்.

சமஷ்டி என்ற பதத்துக்கு பிரிவினை என்ற அர்த்தத்தையே சிங்களத் தலைமைகள் கொடுத்துவருகிறார்கள். இந்த நிலை தொடருமாக இருந்தால் தமிழ் மக்கள் எதிர்காலத்தில் எந்தவொரு அரசியல் உரிமைக்கும் உரித்துடையவர்களாக கோர முடியாத நிலையொன்று உருவாகிவிடும் என்பதை அன்று தெளிவாக குறிப்பிட்டு தமிழ் மக்கள் கோரும் சமஷ்டி என்பது அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான ஓர் அரசியல் உத்தி முறையே தவிர, நாட்டை பிரிப்பதற்கான ஆயுதமாகவோ வழியாகவோ கருதிவிடக்கூடாது என்பதை தெளிவாக எடுத்துரைத்திருந்தார்

இத்தகைய சூழ்நிலையில்தான் 1952ஆம் ஆண்டு தேர்தலில் 45,331 வாக்குகளைப்பெற்று இரு தொகுதிகளில் மட்டுமே வெற்றியீட்டிய தமிழரசுக் கட்சி 1956ஆம் ஆண்டு தேர்தலில் 1,42,036 வாக்குகளைப்பெற்று 10 தொகுதிகளில் வெற்றியீட்டியது. தமிழ் மக்கள் தந்தை செல்வாவின் சமஷ்டி தீர்வுக்கு தங்களது ஆணையை அத்தேர்தல் மூலம் வழங்கியிருந்தனர். இத்தேர்தல் மூலம் வடக்கையும் கிழக்கையும் தமிழரையும் முஸ்லிம்களையும் இணைப்பதில் தமிழரசுக் கட்சி வெற்றிபெற்றது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக 1956 ஆம் ஆண்டு தேர்தலில் பண்டாரநாயக்காவின் ஆட்சியை சிங்கள மக்கள் கொண்டுவந்தார்கள். இதற்கு இரு விடயங்கள் காரணமாகின.



ஒன்று பண்டாவின் தேசியவாதக் கொள்கை, மற்றது தமிழ் மக்களுக்கெதிரான கோஷங்கள். இதன் எதிரொலிப்பாகவே பண்டா தனிச்சிங்கள சட்டத்தையும் சிங்கள ஸ்ரீ பிரயோகத்தையும் பிரகடனப்படுத்தினார். ஐக்கிய தேசியக் கட்சி மலையக மக்களின் தேசிய உரிமையைப் பறிக்க பிரஜாவுரிமைச் சட்டத்தை அமுல்படுத்தியதும் அதற்கு ஏட்டிக்குப் போட்டியாக பண்டாரநாயக்கா தனிச்சிங்கள சட்டத்தை அமுல்படுத்த முற்பட்டார். அன்றைய நிலையில் கூட தந்தை பிளவுபடாத நாட்டுக்குள் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை முதன்மை படுத்தினாரே தவிர, தனி ஈழக் கோரிக்கைக்கு அவர் கங்கணம் கட்ட முயலவில்லை.

ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை உலகறியச் செய்யவேண்டி நிர்ப்பந்தமொன்று உருவாகுவதற்குரிய காலமும் சூழ்நிலையும் மாறிப்போன நிலையில்தான் 28 வருடங்கள் உரிமைக்காக போராடி விட்டோம். இனியும் பொறுத்திருக்க முடியாது. தமிழர்களின் அரசியல் உரிமை என்பதை மன்றாடி பெறமுடியாத நெருக்கடிக்கு தள்ளப்பட்டு விட்டோம். தனித்தமிழ் ஈழமே தமிழர்களுக்கான இறுதித்தீர்வாக இருக்க முடியுமென்ற முடிவுக்கு 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தீர்மானம் கொண்டுவந்தது.

பண்டாரநாயக்க உள்ளிட்ட சிங்கள அரசியல் தலைமைகள் தங்களுடைய அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு சிங்கள அப்பாவி மக்களை இனவாதிகளாக மாற்றி தமிழர்களின் அரசியல் சுயநிர்ணய உரிமைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் பௌத்த தேசியவாதத்தையும் பேரின வாதத்தையும் தமிழர்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிட்டனர். ஏலவே பண்டா - செல்வா ஒப்பந்தம் டட்லி - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை தமிழர்களுக்கு எதிரான சபையாக இயங்கியது. சிங்கள அரசியல் தலைமைகள் தமிழர்களை அரசியல் பகடைக்காய்களாகவே மாத்திரம் பயன்படுத்துகிறார்கள் என்பதை உணர்ந்த தந்தை செல்வநாயகம் தமிழர்களின் வாழ்விலும் அரசியல் போராட்டத்திலும் அழிக்க முடியாத பட்டயமாக 1976ஆம் ஆண்டு மே 14ஆம் திகதி வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றினார். ஈழத்தீவில் தமது உரிமைக்காக போராடிய தமிழர்களுக்கு உலகளாவிய அங்கீகாரத்தை வட்டுக்கோட்டை தீர்மானமே பெற்றுத்தந்தது மட்டுமன்றி பிரிவினைவாதம் என்ற கோஷத்தை இந்தத் தீர்மானம் உச்சரிக்க வைத்தது.

தமிழர்களின் வட்டுக்கோட்டை தீர்மானம் என்ற பட்டயத்தை நிறைவேற்றி தந்துவிட்டு 1977ஆம் ஆண்டு தந்தை மறைந்துவிட்டார். தமிழர்களின் விடுதலைக்கான வித்தை இட்டது இந்தத் தீர்மனமே. இதுவே ஈழப்போராட்டத்துக்கான ஆயுதப்போரை மூட்டி வைதததது

30 வருட ஆயுதப்போர் காலத்தில் தமிழ் ஈழத்துக்கான நெருக்கமான பிடியிலிருந்து மிதவாத போக்குடைய எந்த தமிழ்க் கட்சிகளும் தங்கள் பாதையால் செல்ல முடியாத நெருக்கடிகள் இருந்தது என்பது தவிர்க்கமுடியாத உண்மையாகும். கட்சித் தலைமைகள் அனைத்தும் புதிய நீரோட்டத்தோடு சேர்ந்து ஓடவெண்டியிருந்ததே தவிர, எதிர்த்து நிற்க முடியாத சூழ்நிலை கைதிகளாக அவர்கள் ஆக்கப்பட்டார்கள் .

யுத்தம் முடிவு கண்டபின்பு தமிழ் மக்களின் உரிமைப்போருக்கான பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைபிடம் கையளிக்கப்பட்டது தவிர்க்க முடியாத



கால சூழ்நிலையில் இந்தப் பொறுப்பை தார்மீக ரீதியாக கூட்டைப்பு ஏற்றுக் கொண்டிருந்தாலும் அமைப்பை சேர்ந்த கட்சிகளுக்கிடையே ஒற்றுமை பேணப்படவில்லை. ஒருமித்த கருத்து நிலவவில்லை. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இன்று கூட்டமைப்பு வடிவமே சின்னாபின்னப்பட்டுப்போய் நிற்கிறது. கூட்டமைப்பின் பிரதான பாத்திரமாக கணிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி தானும் சுருங்கி தன் வடிவத்தையும் சுருக்கி நிக்கும் அவலத்தையே இன்று நாம் கண்டு கொண்டிருக்கிறோம்.

தமிழ் மக்களுக்கான அரசியல் அதிகாரம் அல்லது அதிகாரப்பகிர்வு சமஷ்டி என்ற முறைமையினூடாவே பெறப்படவேண்டுமென்று தந்தை செல்வநாயகம் எவ்விடத்தில் இருந்து ஆரம்பித்து வைத்தாரோ அந்த புள்ளியையும் முன்னுரையையும் மறந்து போனவர்களாக தமிழ்த் தலைமைகள் நடித்துக்கொண்டிருக்கும் நிலையில் 13 என்ற எண்ணை தீர்வு திட்டமாக திணிக்க முயலும் கைங்கரியத்தில் பேரின ஆட்சியாளர்கள் கவனம் செலுத்திவருகிறார்கள். இதை மிக தந்திரமாகவும் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

13 என்ற எண்ணை ஈழத்தமிழ்களுக்கான தீர்வாக திணித்துவிட்வர்கள் இந்திய பேராட்சியாளர்கள். அவர்களின் பார்வையில் தமிழர்கள் 72 வருடங் களுக்கு மேலாக இத்தகைய ஒரு அதிகாரப்பகிர்வுக்குத்தான் போராடி வந்திருக்கிறார்கள் அதை நாம் பெற்றுக்கொடுத்துவிட்டோமென்ற மூத்தண்ணா பாங்கில் நடந்து கொண்டிருப்பதுதான் ஆச்சரியம் தருகிற விடயம். சிங்கள மக்களின் பார்வையில் சமஷ்டி என்பது எவ்வாறு நாட்டைப் பிரிக்கும் தமிழ்த் தலைமைகளின் உத்தி என்று கருதுகிறார்களோ அதே தோரணையில்தான் சமஷ்டியை முன்னுரிமைப்படுத்தினால் நாட்டை பிரித்துவிடுவார்கள். ஈழம் பிளவுபட்டு விடும். சிங்கள மக்கள் இந்திய தேசத்தை பகைக்க தொடங்கிவிடுவார்கள் என்ற எண்ணத்தை மனதில் கொண்டவர்களாகவே இந்திய தலைவர்கள் இன்றுவரை இருந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாகவே இந்திய தலைமைகள் 13 பற்றி அளவுக்கு அதிகமாக பிரஸ்தாபிக்கிறார்கள்.

13 உடன் மட்டும் தமிழ் மக்கள் சுருங்கிவிடுவார்களானால் தந்தை செல்வா முன்மொழிந்த பிளவுபடாத தேசிய தீர்வான சமஷ்டிக்காக 72 வருடங்களுக்கு மேலாக போராடிய ஜனநாயக போராட்டங்களின் நிலையும் தியாகத்துக்கும் என்ன நடந்தது 30 வருட யுத்தத்தில் இழக்கப்பட்ட இழப்புகளின் அடைமானம் என்ன என்பது கேள்விக்குறியாகவே போய்விடும்.

இந்திய தலைமைகள் ஈழத்துக்கு விஜயம் செய்கிறபோதெல்லாம் தரிசிக்க வருகிறபோதெல்லாம் தமிழ்த் தலைமைகளை அட்டகாசமாக சந்திக்கிறார்கள் அளவளாவுகிறார்கள் தீர்வு பற்றி பொழிப்புரை வழங்குகிறார்கள். ஆனால் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதைபோல் 13 முழுமையாக்குவோம், பூரணப்படுத்த அழுத்தங்களைப் பிரயோகிப்போம் என்று கூறிவிட்டு செல்கிறார்களே தவிர, தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கான வரலாற்று மூலப்பிரமாணத்தை ஆராயவோ அன்றி அறிவோ முற்படுகிறார்களில்லை என்பது தமிழ் மக்களுக்கு கவலை தரும் விடயம்.

# போர் மௌனித்தாலும் அவரின் பெயர் மௌனிக்காது!



பா.அரியநேத்திரன்









விடுதலைப் புலிகள் இல்லை என்பவர்களே விடுதலைப் புலிகளின் தலைவர் முன்னிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் எடுத்தார்கள் என இனவாத சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் தமது இனவாத கருத்தை விதைக்க ஆரம்பித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை ஜூலை முதலாம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர ஊடக சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இலக்கு நாட்டை பிளவடையச் செய்வதாகும். கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் முன்னிலையிலேயே பதவிப்பிரமாணம் செய்தனர். எனவே, அவர்கள் கூறும் விடயங்களை கவனத்திற்கொள்ள வேண்டிய தேவை கிடையாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்து சந்தர்ப்பங்களிலும், எந்தத் தீர்மானம் எடுத்தாலும் அதற்கு எதிர்ப்பையே வெளியிடும். கூட்டமைப்பு என்பது ஒரு தேசத்துரோக அமைப்பாகும் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் அமைப்பாகும் எனவும் தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் போராட்டம் கடந்த 2009, மே 18இல் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டு தற்போது 14 ஆண்டுகள் கடந்துவிட்டன. விடுதலைப் புலிகளின் மௌனத்துக்குப் பின்னர் 2010 பொதுத் தேர்தல், 2012 கிழக்கு மாகாண சபைத் தேர்தல், 2013 வடமாகாண சபைத் தேர்தல், 2015 பொதுத் தேர்தல், 2018 உள்ளூராட்சி சபைத் தேர்தல், 2020 இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தல் என மூன்று பாராளுமன்ற தேர்தல்களையும், இரண்டு மாகாண சபைத் தேர்தல்களையும், ஓர் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் இலங்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்து பல உறுப்பினர்களை வடக்கு, கிழக்கில் மக்கள் பிரதிநிதிகளாக வெற்றிபெற வைத்துள்ளது.

இவ்வாறான நிலையில் விடுதலைப் புலிகள் நாட்டில் இல்லாத வேளையில் சரத் வீரசேகர கூறுவதுபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் எந்த விடுதலைப் புலிகளின் தலைவரிடம் பதவிப்பிரமாணம் எடுத்தனர் என்பதை அவர் கூறவேண்டும்.

ஊடக சந்திப்பில் இவ்வாறான இனவாத பச்சைப்பொய்களை ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூறும்போது அதை கிளிப்பிள்ளைபோல் கேட்டுவிட்டு ஊடகவியலாளர்களும் அதனை செய்தியாக ஊடகங்களில் வெளியிடுவது என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமாக இல்லை.

உண்மையில் ஊடகவியலாளர்கள் குறுக்கிட்டு, 14 வருடங்கள் புலிகள் இல்லை என்று நாட்டு தலைவர்கள் கூறும்போது 2020 பொதுத் தேர்தலில் தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்த நாட்டுக்குச் சென்று புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் பதவிப்பிரமாணம் எடுத்தனர் என்பதை சொல்ல முடியுமா? என அவரிடம் கேட்டிருந்தால், அவர் கூறுவது எல்லாமே இனவாத பச்சைப்பொய் என்பதை ஊடகவியலாளர்களே வெளிக்கொண்டுவந்து இருக்கலாம்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை மறந்தாலும் சிங்களத் தலைவர்கள் மறக்கமாட்டார்கள். அவர்கள் கடந்த 14 வருடங்களாக புலிகளை உச்சரித்துக்கொண்டே தமது அரசியலை செய்வதை தொடர்ச்சியாகக் காணலாம்.

தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்களை, அதன் உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில் விடுதலைப் புலிகளின் தியாகத்தைக் கூறக் கூட முடியாதவர்களாக உள்ள நிலையில், இப்போது சிங்கள இனவாத பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது அடுத்தகட்ட அரசியலை தக்கவைக்க புலிகளும் அதன் தலைவரின் பெயரும் தேவைப்படுகிறது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் சென்ற முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணம் தொடர்பாக பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது தமக்கு எதுவும் அறிக்கையிடப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக தாம் அறிந்திருக்கவில்லை எனவும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரபணுப் பரிசோதனைக்காக இராணுவத்தால் மாதிரி எடுக்கப்பட்டு, இறுதி யுத்தத்தில் மீட்கப்பட்ட உடல் அவருடையதே என உறுதிசெய்யப்பட்டதாக இலங்கை இராணுவம்தான் கூறியிருந்தது. எனினும், அது தொடர்பான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறுவதற்கு முயற்சித்தபோதிலும் அதனை இராணுவத்தினர் மறுத்திருந்தனர் என்ற உண்மையை 14 வருடங்கள் கழித்து ஒரு முன்னாள் ஜனாதிபதி அதுவும் தமிழர்கள் பெருமளவு வாழும் தலைவர் பிரபாகரன் பிறந்த மாவட்டமான யாழ்ப்பாணத்தில் சென்று கூறியுள்ளமை சிங்களத் தலைவர்களின் சந்தர்ப்பவாத அரசியலை கோடிட்டுக் காட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் தொடர்பாக இலங்கையிலுள்ள சிங்களத் தலைவர்கள் இவ்வாறான முன்னுக்குப்பின் முரணான இனவாத கருத்துகளைக் கூறுவது ஒருபக்கம் இருக்க, இந்தியாவிலுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த காசி ஆனந்தனும், சுவிஸிலுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த முன்னாள் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பாளராக செயல்பட்ட தயாமோகனும் ஏட்டிக்குப் போட்டியான மாறுபட்ட கருத்துகளைக் கூறி மக்களை குழப்பியதைக் காணலாம்.

முதலில் காசி ஆனந்தன் கூறிய கருத்தைப் பார்ப்போம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இல்லையென்றால், அவருடைய மரபணு பரிசோதனை அறிக்கையை பகிரங்கமாக வெளியிடுவதற்கு இலங்கை அரசாங்கம் ஏன் மறுக்கின்றது என்று உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் கேள்வி எழுப்பிய அதேவேளை, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நலமாக இருக்கின்றார் என்று உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் அறிவித்ததன் பின்னரான சூழலில் இலங்கை இராணுவம் அதனை நிராகரித்துள்ளமை மற்றும் அக்கருத்துகளுக்கு எதிராக வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரதிபலிப்புகள் தொடர்பில் கருத்து வெளியிட்ட காசி ஆனந்தன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நலமாக இருக்கின்றார் என்ற பழ.நெடுமாறனின் கருத்துடன் தான் முழுவதுமாக உடன்படுவதாக கூறியிருந்தார்.

அதற்கு அவர் சில காரணங்கள் உள்ளன எனவும் இறுதிப்போரின்போது பிரபாகரனுடன் இருந்த இருபதுக்கும் மேற்பட்ட போராளிகளில் யாரும் இதுவரையில் அவர் இறந்துவிட்டார் என்ற தகவலை பகிரங்கமாக தெரிவிக்கவில்லை எனவும் இலங்கை இராணுவம் பிரபாகரன் இறந்துவிட்டதாகவும், அவருடைய மரபணு பரிசோதனை அறிக்கை தங்களிடத்தில் உள்ளதாகவும் கூறியுள்ளது.

இலங்கை இராணுவத்தைப் பொறுத்தவரையில் அவர்களிடத்தில் உண்மையாகவே மரபணு பரிசோதனை அறிக்கை காணப்படுமாக இருந்தால், அதனை வெளியிடுவதில் தயக்கம் காண்பிப்பது ஏன் என காசி ஆனந்தன் சுட்டிக்காட்டியிருந்தார்.

போர் நிறைவடைந்து 14 ஆண்டுகளுக்கு மேலாகின்ற நிலையில், இலங்கை இராணுவம் இன்னமும் பரிசோதனை அறிக்கையை வெளியிடத் தயங்குகின்றது என்றால் அதன் பின்னால் ஏதோ மர்மங்கள் உள்ளன. பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்பதே மட்டக்களப்பு காசி ஆனந்தனின் கருத்து.

அடுத்த மட்டக்களப்பு தயாமோகன் புலம்பெயர் நாடொன்றிலிருந்து கடந்த 2023, மே 17இல் ஒரு கருத்தைக் கூறி ஒளிப்பதிவு ஒன்றை ஊடகங்களில் வெளியிட்டிருந்தார். கடந்த 2009, மே 17இல் இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் தலைவர் பிரபாகரன் கடந்த வீரச்சாவை தழுவியதாகவும் அவர் உயிர்நீத்த தினமான மே 17ஆம் திகதியை தமிழ் மக்கள் அவரின் நினைவு நாளாக அனுஷ்டிக்குமாறும் கூறியிருந்தார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த காசி ஆனந்தன், தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்பதும், மட்டக்களப்பைச் சேர்ந்த தயாமோகன் தலைவர் பிரபாகரன் வீரச்சாவை தழுவிக்கொண்டார் என்றும் முள்ளிவாய்க்கால் போர் மௌனம் ஏற்பட்டு 14 வருடங்களின் பின்னர் கூறியுள்ளதை யாரின் கருத்து சரி, யாரின் கருத்து தவறு என்பதை காலந்தான் பதில் சொல்லவேண்டும்.

## ஜூலை - 9...

அதனால் வாக்கு மாறாமல் இன்றுவரையும் அவர்களைப் பாதுகாத்து வருகின்றார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகியது ஒரு விபத்து. கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டுச் செல்லும்போது ரணிலை பதில் ஜனாதிபதியாக நியமித்துச் சென்றார். 21-07-2023 அன்று இலங்கை அரசியல் யாப்பின்படி பாராளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பின் மூலம் 134 வாக்குகளைப் பெற்று ரணில் விக்கிரசிங்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் எட்டாவது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். போராட்டக்காரர்களால் பூனை போல் வந்தவர் அவர்கள்மீதே புலிபோல் சீறிப் பாய்ந்தார். ரணிலுக்கு அவரின் வீட்டை எரித்த கோபம், ராஜபக்ஷக்கள் மற்றும் அவர்களின் சகாக்களாகிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தம்மைப் பதவியிலிருந்து நீக்கக் காரணமான போராட்டக்காரர்களைப் பழி தீர்க்க வேண்டும் என்பதற்காக பல சட்ட நடவடிக்கைகளை எடுத்தனர். பலர் சிறைப்படுத்தப்பட்டனர். மீண்டும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் பயன்படுத்தப்பட்டது. அரச அரசியல்வாதிகளின் பாதிக்கப்பட்ட சொத்துகள் உடனடியாக மதிப்பீடு செய்யப்பட்டு நிவாரணமும் வழங்கப்பட்டது. அரசியல், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை.

இத்தகைய அரசியல், பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில் அதற்கு உடனடித் தீர்வு காண்பதற்காக எடுக்கப்படும் செயற்பாடுகளைப் பிளாஸ்டர் போட்டு மறைத்தல் என்பார்கள். அந்தச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகிய பின்னர் ஒவ்வொன்றாக முன்னெடுக்கப்பட்டது. இதற்காக ஜனாதிபதி செயலகத்துக்குள் ஆலோசகர்கள், ஆணைக்குழுக்கள் பணியாளர்கள் என தான் நியமனம் பெற்று முதல் ஆறு மாத காலத்துக்குள் 350 பேர் வரை நியமனம் செய்தார். அவர்களின் ஆலோசனைப்படி ஒவ்வொரு நெருக்கடிகளுக்கும் பிளாஸ்டர் போடும் செயற்பாடுகள் ஆரம்பமாகின. எரிபொருள், எரிவாயு நெருக்கடி, நீண்ட கியூ வரிசை என்பவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக முதலில் பிளாஸ்டர்கள் போடப்பட்டன. நீண்ட வரிசையைக் குறைப்பதற்கும் எரிபொருள் எரிவாயு இறக்குமதியால் அதிகளவு அமெரிக்க டொலர் வெளியேறுவதைத் தவிர்ப்பதற்கும் இரு பிளாஸ்டர்கள் போடப்பட்டன. வரிசையைக் குறைப்பதற்காகவும் எரிபொருள் மோசடிகளைத் தவிர்ப்பதற்காகவும் QR d என்ற பிளாஸ்டர் போடப்பட்டது. இரண்டாவது பிளாஸ்டர் எரிபொருள், எரிவாயுவின் விலையை 200 - 250 வீதம் வரை உயர்த்தி மக்கள்மீது சுமத்தப்பட்டது. இதனால் எரிபொருள் எரிவாயுவுக்கான கியூ வரிசை இல்லாமலாகி மொத்த நுகர்வு 33 வீதத்தால் குறைந்தது. இதனால் பெருமளவு டொலர் வெளியேற்றம் மட்டுப்படுத்தப்பட்டது. பால் மாவுக்கு 250 வீதம் வரை விலை அதிகரிக்கப்பட்டு இன்னொரு பிளாஸ்டர் போடப்பட்டதனால் 27 வீதம் வரை நுகர்வு குறைந்தது. அடுத்தடுத்த பிளாஸ்டர்கள் இறக்குமதிப் பொருட்கள், உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள், மின்சாரக் கட்டணம், நீர் விநியோகக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், வங்கிக் கடன்களுக்கான வட்டிவீத அதிகரிப்பு, வருமானவரி அதிகரிப்பு, முத்திரைக் கட்டணம், சேவைக் கட்டணம் எனப் பல பிளாஸ்டர்கள் போட்டு எல்லாவற்றையும் அதிகரித்து மக்கள்மீது சுமத்தி அவர்களை நிர்க்கதியாக்கி உள்ளார்கள்.

பொருட்களின் விலைகள், கட்டணங்களை மலைபோல் ஏற்றி, நுகர்வைக் குறைத்து பணவீக்கத்தைக் குறைத்துள்ளனர். எப்போதும் நட்டத்தில் இயங்கும் நிறுவனமான சதொச ஊடாக சில பொருட்களுக்கு மாததிரம் 23 வீதம் வரை விலைக் குறைப்புச் செய்துள்ளனர். இக்குறைப்புகளில் பெரும்பாலானவை மக்களைச் சென்றடையவில்லை. அதனால் மக்களின் நுகர்வு ஏறக்குறைய 25 வீதம் குறைந்திருக்கிறது. வருமானம் அதிகரிக்காமல் பொருட்களின் விலை அதிகரித்தமையால் வாழ்க்கைச் செலவு அதிகரித்து இரண்டு வருடங்களுக்குள் மத்திய தரத்திலிருந்து வறுமை நிலைக்கு மேலும் 40 இலட்சம் பேர் வந்திருக்கின்றனர். இதையே அரச தரப்பு அரசியல்வாதிகள் பலர் ரணில் ஜனாதிபதி ஆகிய பின்னர் தங்கள் செய்துவிட்டோம் என வாய் கூசாமல் கொக்கரித்துக் கொண்டிருக்கின்றனர்.

அரசியல்வாதிகள் பலரும் அவர்களுக்கு நம்பிக்கையாளர்களும், கோர்ப்பரேட் நிறுவனங்களும், அரசின் செல்வாக்கில் இயங்கிக்கொண்டிருக்கும் பல தனியார் நிறுவனங்களும், அதேபோல் இறக்குமதியாளர்கள் பலரும் வங்கிகளில் கோடிக் கணக்கில் கடன் பெற்று வருடக் கணக்கில் செலுத்தாதிருக்கின்றனர். இந்தப் பணம் அனைத்தையும் செலுத்தினாலோ அல்லது செலுத்த வைத்தாலோ வங்கிகளைப் பாதுகாத்து கடன் மறுசீரமைப்புச் செய்திருக்கலாம். இப்போது ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிலிருந்து அரசு பெற்ற 43 வீத கடன் மறுசீரமைப்புக்கு உள்ளாகி இருக்கிறது. நாட்டைக் கொள்ளையிட்டு வெளிநாட்டு வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றில் அரசியல்வாதிகள் பலர் இரகசியமாக வைப்பிலிட்டிருக்கும் பணத்தில் ஒரு பகுதியை நாட்டுக்குக் கொண்டுவந்திருந்தால் மொத்த உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் 61 பில்லியன் அமெரிக்க டொலரில் ஒரு பகுதிக் கடனைக் கொடுத்துத் தீர்த்திருக்கலாம். கடனைக் கொடுக்கக் கடன், வட்டி கொடுக்கக் கடன் பெற்றுக்கொண்டிருக்கிறோம். இத்தகைய அரசியல்வாதிகளைப் பாதுகாக்கவே ரணில் ஜனாதிபதிப் பதவியை ஏற்றிருக்கின்றார்.

அதற்கிடையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. வரி விதிப்புச் சட்டமூலம் உட்படப் பல சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இன்னும் நிறைவேற்றப்பட இருக்கிறது. மக்களுக்குப் பாதகமான சட்ட மூலங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மொட்டு கட்சியினர் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கின்றனர்.

ஆளுந்தரப்பு அரசியல்வாதிகளினது வெளிநாட்டுப் பயணங்களுக்கும் சுகபோக வாழ்க்கைக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படாத வண்ணம் செயற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி குழுக்களுக்கு மேல் குழுக்களை நியமித்துப் பணத்தை விரும்பியவாறு செலவு செய்துகொண்டிருக்கிறார். மக்களுக்கு எதுவும் நடக்காததுபோல் ஜனாதிபதி உட்பட அரசியல்வாதிகள் அறிக்கை விட்டுக்கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதியும் மொட்டு கட்சியினர் தன்னோடு ஒத்துழைக்கவில்லையெனில் பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவேன் எனப் பொதுஜன பெரமுனவினர் பலரை விரட்டிக்கொண்டிருக்கிறார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் 40க்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் இல்லாது போய்விடும் என்ற பயத்தில் வாய் மூடி மௌனிகளாக இருக்கின்றனர்.

இந்நிலை மேலும் நீடித்தால் போசாக்கு மற்றும் நிறை குறைந்த குழந்தைகள் பிறப்பு 50 வீதத்துக்கு மேலாகும். ஊட்டச்சத்துப் போசாக்குக் குறைபாட்டினால் எதிர்காலத் தொழிற்படை பாதிப்படையும். கடன் மறுசீரமைப்புச் செய்து தொடர்ந்தும் கடன் பெற்றுக்கொண்டு இருப்பதால் கடன் சுமை அதிகரிக்கும். வட்டிவீதம் அதிகரிக்கும். சேமிப்பும் முதலீடும் குறைந்து உற்பத்தி குறைவடையும். சந்தை நிரம்பல் பாதிக்கப்பட்டு பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கப்படலாம். டொலரின் பெறுமதி 400 ரூபாவைத் தாண்டிச் செல்லலாம். பணவீக்கம் மேலும் அதிகரிக்கலாம். எரிபொருள், எரிவாயு, மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம் அதிகரிக்கப்படலாம். நிவாரணம் கொடுப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் நிதி தேவைப்படலாம். அதற்காக ட்ரில்லியன் கணக்கான பணம் அச்சிடப்படலாம்.

வருமானமும் சம்பள அதிகரிப்பின்றியும் 50 வீதத்துக்கு மேற்பட்டோர் வறுமைக்குள் தள்ளப்படலாம். ஊழல், மோசடி, களவு, கொள்ளை, கடத்தல், வழிப்பறி, தற்கொலை, சமூகச் சீரழிவுகள் அதிகரித்து நாடு மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்படலாம். பலர் தொழிலை இழப்பார்கள். வங்கி நடவடிக்கைகள் பாதிப்படைவதால் பல வங்கிகள் திவாலாகலாம். கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் பல பாதிப்படையும். அதனால் வெனிசுவெலா, லெபனான் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை இலங்கையிலும் ஏற்படலாம். இதற்கான வழிவகைகளை உபாயமாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவில்லையாயின் மிக மோசமான நிலைக்கு நாடு தள்ளப்படும்.

# வவுனியா வடக்கு காஞ்சிரமோட்டை கிராம மக்களின் அவல வாழ்க்கைக்கு

# யார் பொறுப்பு ?

சிவகுமார் திவியா

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் இருக்கின்ற காஞ்சிரமோட்டை கிராமத்தில் மக்கள் மீள்குடியேறுவதற்கு வனவளத் திணைக்களம் தடை விதித்து வருகின்ற ஒரு நிலைப்பாடு அங்கே காணப்படுகின்றது.

காஞ்சிரமோட்டை கிராமத்திலிருந்து 1990களில் மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இவர்களில் பலர் இந்தியாவுக்குச் சென்றிருந்து தற்போது மீளத் திரும்பி வந்திருகின்ற நிலையில்கூட இத்தகைய தடையானது அம் மக்களை பெரிதும் பாதித்துள்ளதுடன், அம் மக்களது வாழ்விடங்களையே இன்று கேள்விக்குட்படுத்தி வருகின்ற விடயமாகவுள்ளது.

வவுனியா வடக்கு, நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட காஞ்சிரமோட்டை கிராமமானது 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய பூர்வீகமான கிராமம். அது மட்டுமல்லாது அதன் அயல் கிராமங்களான காட்டு பூவரசங்குளம், நாவலர் பண்ணை கிராமங்களில் 1977ஆம் ஆண்டு தென்னிலங்கையில் நடைபெற்ற வன்முறை காரணமாக இடம்பெயர்ந்த 300 தமிழ்க் குடும்பங்களை காந்தீயம் அமைப்பினர் குடியேற்றியிருந்தனர்.

1987ஆம் ஆண்டு நாட்டின் வன்முறை காரணமாக சில கிராம மக்கள் காணாமல்போன சம்பவத்தையடுத்து அக்கிராமங்களிலுள்ள மக்கள் அச்சம் காரணமாக உள்நாட்டிலும் இந்தியாவுக்கும் இடம்பெயர்ந்திருந்தனர். இறுதி யுத்தம் முடிவடைந்து 2009ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தால் ஒன்பது குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். அடிப்படை வசதிகளற்ற நிலையில் ஆறு குடும்பங்கள் வாழ முடியாத நிலையில் கிராமத்தைவிட்டுச் சென்றுவிட்டதன் பின்னர் மூன்று குடும்பங்கள் பல வருடங்களாக மின்சார வசதிகளற்ற நிலையிலும் காட்டுமிருகங்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தொடர்ந்து வசித்து வந்தனர்.

அந்தக் காலப்பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தின் கோரிக்கைக்கமைவாக இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த 38 குடும்பங்கள் காஞ்சிரமோட்டை மற்றும் அதன் அயல் கிராமங்களான மருதோடை, கல்லிக்குளம், ஊஞ்சல்கட்டி போன்ற கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோதும் தற்போதைய நிலையில் 27 குடும்பங்கள் நிரந்தரமாக வசித்துவருகின்றனர். வன இலாகா திணைக்களம் அம்மக்களின் காணிகளை வன இலாகாவுக்குச் சொந்தமானதென தெரிவித்து அவர்களுக்கான அனுமதியை வழங்க மறுத்து வருகின்றது.

இதன் காரணமாக காஞ்சிரமோட்டையில் மீள் குடியேறிய மக்கள் தமது வாழ்வாதாரத்துக்கு பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதுடன், அக் கிராமத்தில் பல காணிகளில் நீண்டகாலமாக அம் மக்கள் வசிக்காமையால் அவை மரங்களாலும் புதர்களாலும் நிறைந்து காடுகள்போல் காட்சியளிக்கின்றன. அவற்றை துப்புரவு செய்து அக்காணிகளில் மக்கள் குடியேறுகின்றபோது வன இலாகா திணைக்களம் அம்மக்களின் காணிகளை வன இலாகாவுக்குச் சொந்தமானதென தெரிவித்து அவர்கள் குடியேறுவதற்கான அனுமதியை வழங்க மறுத்து வருகிறார்கள். அம் மக்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் பல இருந்தும் வன இலாகா அதிகாரிகள் அம் மக்களின் மீள்குடியேற்றத்துக்கு தடை ஏற்படுத்துவதாக மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனால் தற்போது காட்டுமிருகங்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் காட்டு யானைகள் தாக்குதல்களால் யானைவேலிகள் அற்ற நிலையில் இம்மக்கள் அச்சமடைந்துள்ளனர். இத்துடன், போக்குவரத்து வசதிகள், குடிநீர் வசதிகள் என எந்தவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் கூட சுமார் 15 கிலோமீற்றர் தூரத்திற்கு உள்ள நெடுங்கேணி, ஒலுமடு பாடசாலைகளுக்கு நடந்து சென்றே தமது கல்வியைத் தொடருகின்றனர்.

இம் மக்கள் தற்காலிக வீடுகளில் வசித்துவந்த நிலையில் நல்லாட்சி அரசாங்கத்தின் கோரிக்கைக்கமைவாக அப்போது தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் 5 இலட்சம் பெறுமதியான வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டபோதும் அந்த வீட்டைக கட்டி முடிக்கக்கூடிய வகையில் முழுமையாக பணம் வழங்கப்படவில்லை.

மீள்குடியேற்ற மக்கள் எந்தவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையிலும் வாழ்வாதாரத்துக்கான தொழில் நடவடிக்கைகளின்றியும் பாடசாலை செல்லும் சிறுவர்கள், கைக்குழந்தைகளுடன் கொட்டும் மழைக்கு மத்தியில் அரை நிரந்தர மற்றும் தற்காலிக குடிசைகளில் கண்ணீருடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை, இம்மக்களின் மீள்குடியேற்றப் பிரச்சினை தொடர்பில் பல்வேறு அரசியல்வாதிகளும் குறித்த பகுதிக்குச் சென்று மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியபோதும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாமை குறிப்பிடத்தக்கது. இவர்களில் பலர் இந்தியாவுக்குச் சென்றிருந்து தற்போது மீளத் திரும்பி வந்துள்ள நிலையில் இத்தகைய தடையானது அம் மக்களை பெரிதும் பாதிப்பதுடன், அம் மக்களது வாழ்வாதாரங்களையே இன்று கேள்விக்குட்படுத்தி வருகின்ற விடயமாகவுள்ளது.

இவ்வாறே வடமாகாணத்தில் பல்வேறு பகுதிகளை வனவளத் திணைக்களமானது சொந்தம் கொண்டாடி வருகின்ற நிலையில், மக்களின் வாழ்க்கையானது பாரிய சவாலுக்கு உட்படுத்தப்பட்டே காணப்படுகின்றது.

குறிப்பாக, வவுனியா மாவட்டத்தில் 157 குளங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 66 குளங்களும், மன்னார் மாவட்டத்தில் 98 குளங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 78 குளங்களுமாக மொத்தமாக 399 குளங்கள் வனவளத் திணைக்களத்தின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவே தெரிய வருகின்றது.

அதேநேரம், மேற்படி குளங்களின் கீழ் விவசாய செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள விவசாயக் காணிகள் குறிப்பாக, வவுனியா மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரத்து 750 ஏக்கர் என விவசாயக் காணிகளையும் வனவளத் திணைக்களமே தன் ஆளுகையின் கீழ் கொண்டுவந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

அதுமட்டுமல்ல, வவுனியா நீரியமோட்டைக்குளம், சித்தான்குளம் போன்ற குளங்கள் கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழ் இருந்தும் அக் குளங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென நிதி ஒதுக்கீடுகள் மேற்கொண்டுள்ளபோதும் அந்தக் குளங்களின் புனரமைப்புப் பணிகளுக்கும் இந்த வனவளத் திணைக்களம் தடைகளை விதித்துக்கொண்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இத்தகையதொரு மோசமான நிலைமையால் இம்மக்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபனிடம் கேட்டபோது, நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் காஞ்சிரமோட்டை கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமம் ஒரு



திட்டமிடலுடன் இன்று கடந்த கால அரசியல் அதிகாரிகளால் குடியேற்றம் செய்யப்பட்ட ஒரு எல்லைக் கிராமமாகும். சொல்லப்போனால் ஒரு காடு சார்ந்த கிராமம். எந்தவித அடிப்படை வசதிகளும் அந்த கிராமத்தில் இல்லை. நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் முன்னர் இந்த கிராமத்திற்குச் சென்றேன். அப்போ அந்த கிராமத்தில் மின்சார இணைப்பு இல்லை. தூண்கள் வயர்கள் காணப்பட்டாலும் வனவிலங்கு திணைக்களம் சில மரங்களை வெட்ட அனுமதிக்காமையால் மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை. நான் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட பின்பு முன்னாள் ஜனாதிபதியுடன் கதைத்து மின் இணைப்பை பெற்றுக்கொடுத்தேன். இருந்தாலும் வாழ்வாதார ரீதியாக அந்த மக்களுக்கு எவ்வித உதவியும் கிடைக்கப்பெறவில்லை. தற்போது வனவளத் திணைக்களத்திலும் காணப்படும் காணிகளை வரக்கூடிய அனுமதிகளை பெற்றிருக்கின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மூலம் குறைந்தபட்சம் ஒவ்வொரு மக்களுக்கும் ஒரு ஏக்கர் காணியைப் பதிந்து இதற்காக வழங்கப்பட தீர்மானித்துள்ளோம்.

அதுமட்டுமல்ல 43 இலட்சம் பெறுமதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் வழங்கவுள்ளோம். ஓரளவு வேலைத்திட்டம் முடிவடைந்து இருக்கின்றது. தற்போதைய பொருளாதார பிரச்சினைகளால் ஒரு சில வேலைகள் மாத்திரம் முடிக்கப்படாமல் உள்ளன. விரைவாக அந்தத் திட்டமும் முடிவடையும். தொடர்ந்தும் அந்தக் கிராமத்தை நான் கண்காணிப்பில் வைத்திருக்கின்றேன். நான் முதலில் கூறியபடி அது திட்டமிடலுடன் இன்று குடியேற்றப்பட்ட ஒரு கிராமம். அதனால் அந்த மக்களின் வாழ்வாதாரத்தை நான் பூர்த்திசெய்வேன்'' - எனத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபனிடம் கேட்டபோது, அந்தக் கிராமத்தில் பல காணிகளில் நீண்டகாலமாக அம் மக்கள் வசிக்காமையால் அவை மரங்களாலும், புதர்களாலும் நிறைந்து காடுகள்போல் காட்சியளிக்கின்றன.



இவ்வாறான சூழ்நிலையில பாடசாலை மாணவர்கள் சுமார் 15 கிலோமீற்றர் தூரத்துக்குள்ள நெடுங்கேணி, ஒலுமடு பாடசாலைகளுக்கு நடந்து சென்றே தமது கல்வியைத் தொடர்கின்றனர். இதனால் இவர்களுக்கான இலவச பாடசாலை பஸ்சேவை ஒன்றை அந்தப் பாதை ஊடாக முதல்கட்டமாக ஒழுங்கமைத்துள்ளோம்.

அத்துடன் இம்மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதற்காக காஞ்சிரமோட்டை மற்றும் அதனை அண்டிய பகுதிகள் யுத்தத்திற்கு முன்னர் மக்கள் பரம்பரையாக வாழ்ந்த காணிகள். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள் திரும்பிய நிலையில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளார்கள். ஆனால் தற்போது வனவளத் திணைக்களம் அவை தமது காணி எனக் கூறி வருகின்றது. தற்போது அங்கு வசிக்கும் குடும்பங்களின் நிலையை கருத்திற்கொண்டு வவுனியா வடக்கு பிரதேச செலகத்தினர் மாவட்ட அரச அதிபருடன் பேசி வனவளத் திணைக்களத்தினரையும் அழைத்து கலந்துரையாடியுள்ளோம். அம் மக்களுக்கு அரை ஏக்கர் வீதம் அவர்கள் வசிக்கும் காணிகளுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டும் என கோரியுள்ளோம். அதற்கு வனவளத் திணைக்களமும் இணங்கியுள்ளது. விரைவில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அத்துடன் வீடு கட்டி வசிப்பதற்கு அரை ஏக்கர் காணி கிடைப்பது அந்த மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் அவர்களின் வாழ்வாதாரத்திற்காக பயிர்ச்செய்கை மற்றும் தோட்டச்செய்கை என்பவற்றை மேற்கொள்வதற்கான நிலங்களையும் விடுவிக்க வேண்டும் அல்லது ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் வீதமாவது வழங்க வேண்டும் என்பதே அக்கிராம மக்களின் கோரிக்கையாகவுள்ளது.

இத்துடன், சிறுவர்களுக்காக சிறு பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பித்துள்ளேன். காட்டுமிருகங்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் காட்டுயானைகள் தாக்குதல்கள் அதிகமாகவுள்ளதால் வெகுவிரைவில் யானைவேலிகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம் – எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் வவுனியா வடக்கு வனவள திணைக்கள அதிகாரி தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் விஜயவர்தன. நான் இந்த பகுதிக்கு இடமாற்றம் அடைந்து வந்த ஆரம்பித்திலேயே இந்த பகுதியில் ஏதோ பிரச்சினை உள்ளது என



அறிந்துகொண்டேன். அது தொடர்பாக அந்த குறித்த பிரதேசத்தில் நேரில் சென்று பார்வையிட்டபோது அப்பகுதியில் 30 வருடகால யுத்தத்திற்கு முன்னரும் பின்னரும் ஆக மக்கள் வாழ்ந்து வந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. ஆனால், அவ்வாறாக குடியிருக்கும் மக்களில் பகுதியளவானவர்களிடமே காணி உரிமைப்பத்திரம் இருப்பதுடன், நீதியானவரிடம் காணிப்பத்திரம் காணப்படவில்லை. ஆனால், இருப்பினும் இது தொடர்பாக பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது அவ்வாறு காணி உரிமைப்பத்திரம் இல்லாமல் அப்பிரதேசங்களில் குடியேறி இருக்கும் மக்களுக்கும் உரிய பத்திரங்களை வழங்குவதற்கான தீர்மானம் கூட அங்கு எடுக்கப்பட்டது. மக்களுடைய கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற முடியாமைக்கான காரணம் என்னவென்றால் மக்களது இருப்பிடம் எந்தளவு முக்கியமோ அந்த அளவிற்கு முக்கியமாக வனஇலாகாவின் காட்டுப் பிரதேசங்களும் அதே அளவிற்கு முக்கியமாக காணப்படுகின்றன. இப்பிரதேசங்களில் உள்ள காணி உரிமைப்பத்திரம் இல்லாத மக்களிடையே மட்டும்தான் முரண்பாடுகள் ஏற்படுகின்றனவே தவிர, காணி உறுதிப்பத்திரங்கள் இருக்கும் மக்களிடம் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அவர்களது உறுதிப்பத்திரங்களை பார்வையிடப்பட்ட பின்னர் அவர்கள் மீண்டும் விடுவிக்கப்படுகின்றனர். ஆனால் இந்தப் பிரச்சினைக்கு வெகு விரைவில் தீர்வு காணப்பட்டு காட்டு பிரதேசங்களையும் மக்களுக்குரிய இருப்பிடத்தையும் எல்லைப்படுத்துவதற்கான தீர்மானங்கள் கூட எடுக்கப்படவுள்ளன - எனத் தெரிவித்தார்

இது குறித்து கிராமத்தில் உள்ள ஒருவர் குறிப்பிடுகையில்,

எனது பெயர் விஸ்வநாதன். காஞ்சிரமோட்டை ஒரு பழைய கிராமமாகும் மீள்குடியேற்றத்தின் பின்பு சுமார் ஐந்து ஆறு வருடங்களாக இங்கு வசித்து



வருகிறோம். அரசாங்கத்தால் நமக்கு வீட்டுத் திட்டமும் காணியும் வழங்கப்பட்டன. இந்தக் காணியில் விவசாயம் செய்து ஐந்து வருடமாக இருந்து வருகிறோம். இதில் என்ன கஷ்டம் என்றால் எனக்கு வெளியில் வேலைக்கு செல்ல முடியாது. ஏனெனில் தூரம் அதிகம். வேலைக்கு செல்வதாயின் 10 கிலோமீற்றர் தூரமாவது செல்லுதல் வேண்டும். நாம் இங்கிருந்து செல்வதற்கு போக்குவரத்து வசதியும் இல்லை. 5 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று தான் பஸ்ஸில் பயணிக்க வேண்டும். தற்போது பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் பஸ் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த பஸ்ஸானது பாடசாலை நாட்களில் மாத்திரமே இங்கு வரும். ஏனைய நாட்களில் மருதோடைக்குச் சென்றே பஸ்ஸில் பயணிக்க வேண்டும். ஏதேனும் அவசரமாக வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும் என்றாலும் 20 கிலோமீற்றருக்கு அப்பால்தான் வைத்தியசாலை உள்ளது. நமக்கு ஒரு பஸ் வசதியை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறோம். அது மட்டுமன்றி மழைக்காலங்களில் இந்த வீதியில் பயணிக்க முடியாது. பிரதேச செயலகத்தால் நமக்கு வீட்டுத் திட்டமும் பதிவும் கிடைக்கப்பெற்றது. கைத்தொழிலிலும் விவசாயத்திலும் ஈடுபட்டு வருகிறோம். நான் எனது காணியில் உளுந்து பயிரிட்டு உழுது கொண்டிருந்தேன். அப்போதுவரை இருந்த வன உத்தியோகத்தர்கள் இதை விடவேண்டாம் எனக் கூறி எனது பெயரை எழுதிச் சென்றார்கள். பொலிஸ் உத்தியோகத்தர்களும் வனவள உத்தியோகத்தர்களும் வருகை தந்து என்னை அழைத்துச் சென்றார்கள். ஏன் எனக் கேட்டபோது அவர்கள் உங்கள் மேல் வனவள உத்தியோகத்தர்கள் வழக்கு பதிவு செய்துள்ளார்கள் எனக் கூறினார்கள்.

அங்கு சென்ற என்னை மறியல் செய்துவிட்டார்கள். இன்றுவரை அதற்கு ஒரு தீர்ப்பும் கிடைக்கப்பெறவில்லை.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)








# "அஸ்வெசும" வறுமை நிவாரண வேலைத்திட்டம் முறைப்பாடு காரணமாக பிற்போடப்படும் சாத்தியம்

Welfare Benefits Board
WBB Sri Lanka
தேவை நாடுவோருக்கான சேவை
INDEED FOR IN NEED

எம்.எஸ். அமீர் ஹுசைன்

அரசாங்கம் 2023 ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ள வறுமை நிவாரண உதவி வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் வாறுமை நிவாரண உதவி பெறுவதற்கு 20 இலட்சம் குடும்பங்கள் அளவில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஒவ்வொரு பிரதேச செயலக மட்டங்களிலும் இருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 37 இலட்சமாகும். இந்த விண்ணப்பங்களில் இருந்து 33 இலட்சம் விண்ணப்பங்கள் பரிசீலனைக்காக தெரிவுசெய்யப்பட்டு அவற்றிலிருந்து 20 இலட்சம் விண்ணப்பங்கள் கட்டம் கட்டமான அடிப்படையில் நிவாரண உதவி பெறுவதற்காக 20 இலட்சம் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. ஆனாலும் ஜூலை மாதம் 01 ஆம் திகதியிலிருந்து இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் ஓகஸ்ட் மாதம் வரையும் பின்போடப்படும் சாத்தியம் இருப்பதாக அறிய முடிகின்றது. பதிலாக நிறுத்தப்பட்ட சமுர்த்தி நிவாரண உதவிகளை மீண்டும் வழங்கவும் பணிப்புரை வந்திருப்பதாக சமுர்த்தி வங்கியாளர் சங்கம் தெரிவிக்கின்றது. காரணம், தற்போதைய நிலையில் 5,50,000 மேன்முறையீட்டு மனுக்கள் கிடைக்கப் பெற்றிருப்பதால் அவற்றையும் மீள் பரிசீலனை செய்ய கால அவகாசம் தேவைப் படுவதாகும்.



நாட்டில் ஒட்டுமொத்தமாக வறுமையால் பாதிக்கப்பட்ட நிலையில் 70 இலட்சம் குடும்பங்கள் அளவில் உள்ளன என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், உலக வங்கியின் கணிப்பீடொன்றின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை அண்மைக்கால பொருளாதார நெருக்கடி காரணமாக மேலும் 40 இலட்சத்தால் உயர்வடைந்திருக்கலாம் என்றும் அதன்படி வறுமையால் வாடும் குடும்பங்களின் மொத்தத் தொகை ஒரு கோடியே 10 இலட்சம் என்றும் கணிப்பீடுகள் கூறுகின்றன. இவ்வாறான ஒரு சூழ்நிலையில்தான இந்த 20 இலட்சம் குடும்பங்களும் புதிதமாக நடைமுறைக்கு வரவுள்ள 'அஸ்வெசும' என்ற திட்டத்தின் கீழ் நிவாரண உதவி வழங்கப்பட இருக்கின்றன என்று சமூக நல நலன்புரி சபையின் தலைவர் ஈ. விஜேரத்ன அண்மையில் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் ஆளுங்கட்சி சார்பு இல்லாத அரசியல்வாதிகளால் வழங்கப்பட்டுள்ள தவறான தகவல்கள் மூலம் நாட்டில் ஏற்கனவே சமுர்த்தி வறுமை நிவாரண உதவி பெறும் மற்றும் கஷ்டமான நிலையில் வாழும் குடும்பங்கள் மத்தியில் குழப்ப நிலை தோற்றவிக்கப்பட்டிருப்பதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் யாருக்கும் பாதிப்பு ஏற்படாதவண்ணம் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.



ஆனாலும் பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகயவின் பார்வையில் இந்த நிவாரண உதவி வழங்கும் திட்டமானது முறையாக கணிப்பீடுகள் செய்யப்பட்ட அடிப்படையில் உரிய குடும்பங்கள் தெரிவுசெய்யப்படவில்லை என்றும் ஏற்கனவே சமுர்த்தி வறுமை நிவாரண உதவி பெறும் குடும்பங்களான 27 இலட்சம் குடும்பங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 12 இலட்சம் குடும்பங்களுக்கு மாத்திரமே அஸ்வெசும திட்டத்தின்கீழ் நிவாரண உதவிகள் வழங்கப்பட வாய்ப்பிருப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனால் நிவாரண உதவி வழங்கும் திட்டத்தால் வெட்டுப்பட்டுள்ள குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்தத் திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்காக உள்வாங்கப்பட வேண்டும் என்று கருதும், ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள பட்டியலில் பெயர் உட்படுத்தப்பட்டில்லாத குடும்பங்கள் ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் வாயிலாகவும் மேன்முறையீடு செய்யவும் கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதன்படி 2023 ஜூலை மாதம் 10ஆம் திகதிவரையில் மேன்முறையீடு செய்ய முடியும். இந்தத் திட்டத்தால் நிவாரண உதவி பெறுபவர்களது பெயர்ப்பட்டியல்கள் பிரதேச செயலகங்கள் வாயிலாக கிராமசேவகர் பிரிவு மட்டங்களில் அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் மூலம் பார்வைக்கு இடப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் 05 இலட்சத்து 50 ஆயிரம் மேன்முறையீடுகள் கிடைத்திருப்பதாக அறிய முடிகின்றது.


ஏற்கனவே பிரதேச செயலக மட்டங்களில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்கள் வீடு வீடாகச் சென்று தகவல்களை திரட்டி கணிப்பீடுகள் செய்து உரிய குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. ஆனாலும் வீடு வீடாகச் சென்ற அதிகாரிகள் எவ்வாறு கணிப்பீடுகளை செய்தார்களோ அதனடிப்படையிலேயே தெரிவும் வெட்டும் இடம்பெற்றுள்ளன. யதார்த்தமாக நிவாரணம் கிடைக்கவேண்டிய குடும்பங்கள் சில பிரதேசங்களில் பட்டியலுக்குள் உள்வாங்கப்படாததால் நாடெங்கிலும் வறுமையில் வாடும் கஷ்டமான நிலையில் வாடும் மக்கள் மத்தியில் பதற்றநிலை உருவாகி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் கோஷங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அதனால் உண்மையாக வறுமையில் வாழும் குடும் பங்களுக்கு சரியான முறையில் இந்த நிவாரண உதவிகள் கிடைக்க வேண்டும். யாருக்கும் அநீதி இடம்பெறக் கூடாது.

இந்த நாட்டின் சட்டவாக்க சபையான பாராளுமன்றமே நாட்டில் பொருளாதார வங்குரோத்து நிலையொன்று ஏற்பட்டதாகவும் அது தொடர்பாக தேடி ஆராய்ந்து வாங்குரோத்து நிலை ஏற்படுவதற்கு வழிவகுத்த காரணிகளை கண்டறிய வேண்டும் என்றும் முடிவு செய்திருக்கின்றது. 2023.07.06ஆம் திகதி பாராளுமன்றம் 14 அங்கத்தவர்களைக்கொண்ட பாராளுமன்ற நிறைவேற்றுக் குழுவொன்றை அமைத்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வங்குரோத்து நிலைக்கும் பொருளாதார பின்னடைவுக்குமான காரணங்களை கண்டறிய குழுவொன்றை நியமித்திருக்கின்றது. இந்தக் குழு தொடர்பாக எதிர்க்கட்சி கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றது. இந்தக் குழுவின் தலைவராக பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர்நாயகம் சட்டத்தரணி சாகர காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார். 14 பேரை உள்ளடக்கிய இந்த பாராளுமன்ற தெரிவுக் குழுவில் 09 பேர் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



திருடர்கள் ஒன்றுசேர்ந்து எப்படி திருட்டு போனது என்பதை கண்டறிய முடியும் என்பது எதிர்க்கட்சியினரது வாதமாகும். இத்தகைய வங்குரோத்து நிலைக்கு காரணமாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கால ஆட்சியாளர்கள் இப்போது அந்த ஆட்சி காரணமாக பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதையோ அல்லது மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டதையோ ஏற்றுக்கொள்வதாக இல்லை.

2020ஆம் ஆண்டின் பின்னர் தலைதூக்கிய கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலின் பின்னர் படிப்படியாக நாடு பொருளாதார சரிவை நோக்கி நகர்ந்ததாயினும் 2019ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தில் இரண்டு வருட காலப்பகுதிக்குள் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார கொள்கை காரணமாக நாடு மிக வேகமாக பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. அதன் விளைவாக பொருட்கள் சேவைகளின் விலைகள் முன்னூறு வீதத்தால் உயர்வடைந்தது. பணவீக்கம் 60 வீதத்தை தாண்டியது. மக்களது மெய் வருமானத்தில் படுமோசமான வீழ்ச்சி ஏற்பட்டு திடீர் என்று உயர்வடைந்த வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாத அளவிற்கு மக்கள் அன்றாடம் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. வேலைவாய்ப்பு இன்மை, தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களை இடைநிறுத்தியமை, இளைஞர்கள் தமது எதிர்கால வாழ்க்கை குறித்த நம்பிக்கை இழப்பு என்றெல்லாம் மோசமான விளைவுகளை நாடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது.



இந்நிலையில், வறுமையின் வீதம் மேலும் உயர்வடைந்திருக்கின்றது. அப்படி இருக்க ஏற்கனவே சமுர்த்தி நிவாரண உதவிபெற்று வந்தவர்களுக்கு பாரபட்சம் காட்டும் வகையில் அஸ்வெசும கணிப்பீடு நடந்திருப்பதாக நாட்டில் பல பகுதிகளில் மக்கள் வீதிக்கு இறங்கியும் பிரதேச செயலகங்களின் முன்னால் திரண்டும் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஏற்கனவே வயோதிபர் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு பெறுபவர்களின் எண்ணிக்கை 4,56,806 ஆகும். சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு நிவாரணம் பெறுபவர்கள் 19,496, விசேட தேவை உடையோருக்கான நிவாரண உதவி பெறுபவர்கள் 46,857 என்ற அடிப்படையில் இவ்வாறான விசேட நிவாரண உதவி பெறுபவர்களாக 5,23,159 பேர் உள்ளனர்.

இந்த நிவாரண உதவித் திட்டத்தின் மூலம் பயன் பெறவேண்டிய குடும்பங்கள் பற்றிய மீள் மதிப்பீடு செய்யப்பட்டு அனைவருக்கும் நியாயம் கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டியது பொறுப்பாகின்றது. ஏற்கனவே சமுர்த்தி நிவாரண உதவி பெறும் குடும்பங்கள், தற்போதைய நிலையில் அன்றாட ஜீவியத்திற்கு வழி இல்லை என்ற நிலையில் புதிதாக வறுமைக்குள்ளாகி இருக்கும் குடும்பங்கள் என்ற அடிப்படையில் அனைவரும் கவனத்தில் எடுக்கப்பட்டு குறைபாடுகள் சரி செய்யப்படவேண்டும். எந்த வகையிலும் அரசியல் பாரபட்சங்களோ வேறும் ஒதுக்கல்களோ இடம்பெறக் கூடாது.

எவ்வாறாயினும் அஸ்வெசும திட்டத்தின் கீழ் நிவாரண உதவி பெற தகுதிபெறும் குடும்பங்கள் நான்கு பிரிவுக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். மிகவும் வறுமையில் உள்ளவர்கள் என்று அடையாளம் காணப்படுகின்ற முதலாவது பிரிவினருக்கு மாதாந்தம் 15,000 என்ற அடிப்படையில் மூன்று வருடங்களுக்கு வழங்கப்படும். அவர்களது குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை இரண்டாக இருந்தால் இந்த தொகையின் அரைவாசியே வழங்கப்படும். வறுமையில் வாடுபவர்கள் என்று அடையாளப்படுத்தப்படும் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு மாதாந்தம் 8,500 வீதம் வழங்கப்படும். அதேநேரம் வறுமை நிலையில் இருக்கலாம் என்று கருதப்படுகின்ற குடும்பங்கள் மேலும் இரண்டு பிரிவில் உள்ளடக்கப்படுகின்ற பிரிவினருக்கு மாதாந்தம் 5,000 மற்றும் 2,500 ரூபா என்ற அடிப்படையில் அஸ்வெசும நிவாரண உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக 2023/04/21ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கையை பொருளாதார நெருக்கடியி லிருந்து மீட்டெடுப்பதற்காக கடன் உதவி வழங்க தேர்ந்தெடுத்தபோது முன்வைக்கப்பட்டுள்ள முன் நிபந்தனைகளில் இந்தத் திட்டமும் ஒன்றாக இருக்கலாம் என்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மூன்று வருட காலத்தின் பின்னர் இத்தகைய நிவாரண உதவி பெறுபவர்களை வறுமை என்ற நிலையிலிருந்து விடுவித்து எந்தவிதமான நிவாரண கொடுப்பனவு பட்டியலில் இருந்தும் நீக்கப்படலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டு வருகின்றது. அதனால் மக்கள் மீண்டும் சமுர்த்தி நிவாரண கொடுப்பனவை வழங்குமாறு கோரிக்கை விடுத்தும் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே ஜனசவிய வறுமை நிவாரண திட்டம் நடைமுறையில் இருந்தது. அதன் பின்னர் சமுர்த்தி நிவாரண திட்டம் நடைமுறைக்கு வந்தது. இனி சமுர்த்தி திட்டத்துக்குப் பதிலாக வரப்போவது அஸ்வெசும திட்டமாகும். ஏற்கனவே வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடர்ந்த சிவில் யுத்தம் காரணமாக கணவர்மாரை இழந்த பல்லாயிரக்கணக்கான விதவைக் குடும்பங்கள் உள்ளன. இவர்களின் வருமான நிலை பூச்சியமாக இருக்கின்றன. வரண்ட வலய பிரதேசங்களில் வாழும் ஏராளமான குடும்பங்கள் விசாயம் செய்ய முடியாமல் உணவுப் பற்றாக்குறைக்கு முகங்கொடுத்து வருகின்றனர். மலையகத்தை எடுத்துக்கொண்டால் காலநிலை மாற்றம் ஏற்பட்டால் தினசரி சம்பளம் பெறும் குடும்பங்களுக்கு மிக மோசமான பாதிப்பு ஏற்படுகின்றன. அதனால் இதுபோன்ற புதிய திட்டங்கள் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்போது உதாசீனம் அல்லது அதிகாரிகளது அசமந்தப்போக்கு ஏற்பட்டால் பாதிக்கப்படுபவர்கள் இவ்வாறான அப்பாவி குடும்பங்களாவர்.

எந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தாலும் அரசியல், கட்சி நலனின் அடிப்படையில் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும்போது யதார்த்தமான வறுமையை ஒருபோதும் ஒழிக்க முடியாது என்பது மட்டும் உறுதியாகின்றது.

# மர்மம் விலகாத மனிதப் புதைகுழிகள்

# விசாரணைகளின் தாமதத்துக்கு காரணம் என்ன?

**ஜோசப் நயன்**

இலங்கையில் இடம்பெற்ற மனிதகுலத்துக்கு எதிரான போர்க்குற்றமும் இலங்கை அரசாங்கத்தால் போர் நெறிமுறைகளை மீறி மேற்கொள்ளப்பட்ட யுத்தமும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளின் வடுக்களும் மெல்ல மெல்ல திட்டமிட்ட அரச கட்டமைப்பால் அழிக்கப்பட்டு வந்தாலும் அவ்வப்போது தோன்றும் மனிதப் புதைகுழிகளும், அரசாங்கத்தின் ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களும், சர்வதேச அழுத்தங்களும், தமிழ் சமூகத்தின் எதிர்ப்புகளும் நாட்டில் இன்னமும் இன ரீதியான, மத ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வு முன்னோக்கி கொண்டுசெல்லப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், போர்க்குற்ற விசாரணைகள், காணாமல்போனோர் தொடர்பான தீர்வு தொடர்பில் சர்வதேச ரீதியாக இலங்கை சமாளிப்புகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், கடந்த வாரம் முல்லைத்தீவு பகுதியில் பெண் போராளிகள் உட்பட பலர் கொல்லப்பட்டு பைகளில் அடைத்து புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் புதைகுழி ஒன்று இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த பகுதி ஒன்றில் அடையாளம் காணப்பட்டுள்ளமை பலதரப்பட்ட கேள்விகளை எழுப்பியுள்ளது.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது தமிழர் தாயகப் பகுதிகளில் சுமார் நாற்பதாயிரம் தொடக்கம் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் இலங்கை இராணுவத்தின் பல்வேறு விதமான கொடூர தாக்குதல்களாலும், ஷெல் வீச்சுகளாலும் கொல்லப்பட்டதாக இறுதி யுத்தத்தின்போது உயிர் பிழைத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், இறுதி யுத்தத்துக்கு முன்பும், யுத்த நேரத்திலும், யுத்தம் நிறைவுற்ற பின்னரும் இலங்கையின் முப்படையினராலும், வெள்ளை வேன்களின் மூலமாகவும், தமிழர் தாயகப் பகுதிகளில் இலட்சக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டதாகவும் இன்னும் பலர் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் செல்லப்பட்டு காணாமலாக்கப்பட்டதாகவும் யுத்தம் நிறைவுற்றவேளை விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த போராளிகள் நூற்றுக்கணக்கானோர் பல்வேறு பகுதிகளில் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்து பின்னர் அவர்களும் காணாமலாக்கப்பட்டதாகவும் வலிந்து காணாமலாக்கப்பட்ட தங்கள் உறவுகளைத் தேடும் சங்க உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சுமார் 15,000 பேர் வரையில் இலங்கையின் இராணுவம், கடற்படை, அரச புலனாய்வாளர்கள், பொலிஸாரால் காணாமலாக்கப்பட்டுள்ளதாக வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் காணாமலாக்கப்பட்டோருக் கான அலுவலகத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக 2022ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட தகவலின் பிரகாரம் தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் உள்ளடங்கலாக இதுவரை இலங்கையில் 14,988 பேர் காணாமலாக்கப்பட்டுள்ளமைக்கான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தகவல் வழங்கியுள்ளனர்.

குறிப்பாக, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சாலும், ஜனாதிபதி செயலகத்தாலும் பெறப்பட்ட கோவைகளின் பிரகாரம் 14,700 பேர் காணாமலாக்கப்பட்டுள்ளதாகவும், காணாமலாக்கப்பட்டோருக்காக பிராந்திய ரீதியில் அமைக்கப்பட்ட அலுவலகங்கள் ஊடாக 1557 முறைப்பாடுகளும், காணாமலாக்கப்பட்டவர்களுக்கான தலைமை அலுவலகத்தால் 1375 முறைப்பாடுகளும் இவற்றில் நடவடிக்கையின்போது காணாமல்போனோர், ஆணை கிடைக்காதவை, இரட்டை பிரதிகள் தவிர்த்து ஒட்டுமொத்தமாக 14,988 பேர் காணாமல்போயுள்ளதாக காணாமல்போனோருக்கான அலுவலகம் தகவல் வழங்கியுள்ளது.

அதிலும் அவ்வலுவலகம் சுட்டிக்காட்டி யுள்ளதன் பிரகாரம் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாடுகளில் 60.68 வீதமானவை வடக்கில் இருந்தே கிடைக்கப்பெற்றுள்ளதாக அவ்வலுவலகம் தெரிவிக்கின்றது.

குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் 488 முறைப்பாடுகளும் அவற்றில் 2000 - 2021 வரையான காலப்பகுதிகளில் காணாமலாக்கப்பட்டமைக்கான 361 முறைப்பாடுகளும்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 1010 முறைப்பாடுகளும் அவற்றில் 2000 - 2021 வரையான காலப்பகுதிகளில் காணாமலாக்கப்பட்டமைக்கான 948 முறைப்பாடுகளும்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 528 முறைப்பாடுகளும் அவற்றில் 2000 - 2021 வரையான காலப்பகுதிகளில் காணாமலாக்கப்பட்டமைக்கான 461 முறைப்பாடுகளும்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2,106 முறைப்பாடுகளும் அவற்றில் 2000 - 2021 வரையான







காலப்பகுதிகளில் காணாமலாக்கப்பட்டமைக்கான 1,485 முறைப்பாடுகளும்,

வவுனியா மாவட்டத்தில் 568 முறைப்பாடுகளும் அவற்றில் 2000 - 2021 வரையான காலப்பகுதிகளில் காணாமலாக்கப்பட்டமைக்கான 401 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்

அதேநேரம் காலகட்டத்தின் பிரகாரம் இலங்கையில் 2001 - 2010 ஆண்டு காலப்பகுதியில் 5,605 பேர் காணாமல் போயுள்ளதுடன், 1981 - 1990 வரையான காலப்பகுதியில் 5,255 பேரும், 1991 - 2000 வரையான காலப்பகுதியில் 3,440 பேரும் காணாமல்போயுள்ளதற்கான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவ்வலுவலகம் தகவல் வழங்கியுள்ளது.

இலங்கை அரசின் மீதும் அதேநேரம் காணாமல்போனோர் அலுவலகம் மீதும் நம்பிக்கையற்ற நிலையில் தமிழர் தாயகப் பகுதிகளில் பலர் இவ்வலுவலகத்தில் எவ்விதமான பதிவுகளையும் முறைப்பாடுகளையும் மேற்கொள்ளாமல் உள்ள நிலையிலேயே 60 வீதமான முறைப்பாடுகள் வடக்கிலிருந்து மாத்திரம் மேற்கொள்ளப்பட்டமை கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

இவ்வாறு காணாமலாக்கப்பட்ட, சரணடைந்த தங்கள் பிள்ளைகளைத் தேடும் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் எங்காவது உயிருடன் இருந்துவிடமாட்டார்களா என்ற ஏக்கத்தில் - மரணிப்பதற்கு முன் அவர்களை பார்த்துவிடமாட்டோமா என்ற ஆசையில் 14 ஆண்டுகள் கடந்து வீதிகளிலும், அரச அலுவலகங்களிலும், மனித உரிமை ஆணைக்குழுக்களிலும், விசாரணைக்குழுக்களுக்கு முன்பாகவும் சாட்சியமளிக்காத நாட்களே இல்லை

ஆனால், அவ்வாறு நம்பிக்கையுடன் பிள்ளைகளைத் தேடும் தாய்மார்களின் மனதில் தங்கள் பிள்ளைகள் உயிருடன் உள்ளார்களா, இல்லையா என்ற கவலைகள் அண்மைக்காலமாக சூழ்ந்துகொள்ளத் தொடங்கியுள்ளன.

அதற்குக் காரணம், வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் அவ்வப்போது தோன்றும் மனிதப் புதைகுழிகளே!

முன்னதாகவே மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரம் மற்றும் மன்னார் சதொச புதைகுழிகளில் கம்பிகள் சுற்றப்பட்டும், குழந்தைகள் உட்பட 250க்கும் அதிகமான எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

அது இலங்கை அரசாங்கத்தால் காணாமலாக்கப்பட்ட தங்களுடைய உறவுகளாக இருக்கலாம் என்ற அச்சத்திலும் சந்தேகத்திலும் மன்னார் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகின்றனர்.

அவ்வழக்கே பல ஆண்டுகள் நடத்தப்பட்டு முடிவுறுத்தப்படாமல் தொடர்ச்சியாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு, கொக்கிளாய் பகுதியில் நீர் வடிகாலமைப்புச் சபையால் நீர் விநியோகத்துக்கென தோண்டப்பட்ட குழி ஒன்றில் நான்குக்கும் மேற்பட்ட பெண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - நெடுங்கேணி பிரதான வீதியில் 26 மைல் எல்லையில் கொக்குத்தொடுவாய் மத்தி (mn 82) கிராமசேவகர் பிரிவில் கடந்த



வியாழக்கிழமை (29.06.2023) நீர்வழங்கல் மேற்கொள்வதற் காக ஒப்பந்த நிறுவனம் ஒன்றால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது வீதியிலிருந்து 6 மீற்றர் தொலைவில் ஒரு மீற்றர் அகலம் கொண்ட கிடங்கில் 2 - 6 அடி ஆளத்தில் மனித எச்சங்கள் வெளிப்பட்டுள்ளன

இதனைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை (30.06.2023) முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா தலைமையிலான குழு மதியம் மூன்று மணியளவில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு அங்கு இராணுவ சீருடையை ஒத்த உடைகளும் எழும்புத்துண்டுகளும் பெண்கள் அணியும் உள்ளாடைகளும் வெளியில் காணப்பட்டதாகவும் இதற்கான அகழ்வுப் பணியை மேற்கொள்ள கொக்கிளாய் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை (06.07.2023) உரிய தரப்பு நிறுவனங்களுக்கு அழைப்பை விடுத்து அகழ்வுப் பணியை மேற்கொள்ளுமாறு கட்டளை பிறப்பித்திருந்தார்.

குறிப்பாக, அப்புதைகுழிகளில் பெண்களின் உள்ளாடைகளும் மீட்கப்பட்டுள்ளதுடன், விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிலர் வட்டுவான் பகுதியில் சரணடைந்த சமயம் அணிந்ததற்கு ஒப்பான சீருடையுடன் கூடிய எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன. குழியின் ஓரத்தில் பொலித்தீன் பைகளால் கட்டப்பட்ட விதமாக உள்ள சடலங்கள் என சந்தேகிக்கக்கூடிய விதமாக உள்ள சடலங்களும் காணப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட ஆடைகள் மற்றும் எழும்புகள் தமிழர் தாயகப் பகுதிகளில் பல்வேறுவிதமான சந்தேகத்தை எழுப்பியுள்ளது. குறிப்பாக, சரணடைந்த பெண் போராளிகள் சித்திரவதைகளுக்கும் துஷ்பிரயோகத்துக்கும் உள்ளாக்கப்பட்டு கொடூரமான முறையில் கொன்று புதைக்கப்பட்டுள்ளார்களா அல்லது சரணடைந்த புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்களா அல்லது காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் தங்களின் உறவினர்களின் சடலங்களா இவை போன்ற பல்வேறு சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்பாக இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஒழுங்கான முறையில் விசாரணைகளை மேற்கொள்வதில்லை என்பது தொடர்பில் நான்கு அமைப்புகள் இணைந்து குற்றசாட்டு ஒன்றை முன்வைத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அவ்வறிக்கை வெளிவந்து ஒரு வாரம் கூட பூர்த்தியாக நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

குறித்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடமான கொக்கிளாய், கொக்குதொடுவாய் பகுதியைச் சேர்ந்த தாங்கள் 1984ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக அப்பகுதியில் இருந்து வெளியேறியதாகவும் 1984ஆம் ஆண்டுக்குப் பின்னர் அப்பகுதி முழுவதும் இராணுவத்தின் சூனியப் பிரதேசமாகவே காணப்பட்டதாகவும் அங்கு பாரிய இராணுவ முகாம் மற்றும் இராணுவத்தின் மருத்துவ முகாம் காணப்பட்டதாகவும் பொதுமக்கள் யாரும் அப்பகுதிக்குள் நுழைய முடியாத நிலை காணப்பட்டதாகவும் அப்பகுதியில் வசிக்கும் சுந்தரம்பிள்ளை சிவமணி தெரிவிக்கின்றார்.

2009 யுத்தம் நிறைவுற்ற பின்னரும் இப் பகுதி முழுவதும் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் காணப்பட்டதுடன், யுத்தம் நிறைவடைந்து 2011 - 2013 வரையான காலப்பகுதியிலேயே அப்பகுதியில் மக்கள் மீள்குடியேற அனுமதி வழங்கப்பட்டதாகவும் அப்பகுதியில் மீள்குடியேற்றத்துக்காக தனது மகன் வீடொன்று அமைப்பதற்காக அத்திவாரம் வெட்டிய சமயத்தில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் உடையுடன் ஒரு சடலம் காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவிக்கின்றார்

அத்துடன், இப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் தனது இரு சகோதரர்கள் தேங்காய் பறிப்பதற்காக நாயாறு பகுதியிலிருந்து தங்கள் காணிக்குள் சென்றவேளை இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு கடுமையாக சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டு கிணற்றுக்குள் வீசப்பட்டதாகவும் பின்னர்




கிணற்றிலிருந்து தனது இரு சகோதரர்களையும் சடலமாக மீட்டதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு அரச படையினரின் வசம் இருந்த பகுதி ஒன்றில் ஆடைகள் உக்காத நிலையில் எழும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளமை ஒட்டுமொத்த சந்தேகத்தையும் இலங்கை இராணுவத்தின் மீது திருப்பியுள்ளது. இருப்பினும், நீதிமன்ற நடவடிக்கையூடாகவே குற்றம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்க முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளதாக வடமாகாண முன்னாள் உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் இலங்கை அரசாங்கத்தின் மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் போலித்தனமானவை என்பதுடன், காலத்தை வீண்விரயம் செய்து குற்றம் செய்தவர்களை சட்டத்திலிருந்து காப்பாற்றுவதற்கான வேலையை மேற்கொள்வதற்கான நடவடிக்கை என காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் தொடர்ச்சியாக குற்றஞ்சுமத்தி வருகின்றனர்.

நான்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கடந்த வாரம் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பிலும் அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பிலும் பல்வேறு விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, இலங்கையில் பல்வேறு காலப்பகுதிகளில் நடைபெற்ற மோதல்களின் போது பாரிய மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு அடையாளம் காணப்பட்ட புதைகுழிகளில் இன்னும் பல்லாயிரக்கணக்கான சடலங்கள் புதையுண்டு உள்ளதாகவும், இந்த புதைகுழி தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக்குழுக்கள் தமது கடமையை சரிவர முன்னெடுக்கவில்லை எனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது

இதனால் உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன எனவும் நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப்படுவதாகவும், நீதிமன்ற உத்தரவை பொலிஸார் தாமதப்படுத்தியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சார்பாக வாதிடும் வழக்கறிஞர்கள் புதைகுழி உள்ள இடங்களுக்குப் போவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது உயிருடன் உள்ள சாட்சிகளைக் கண்டறிவதற்கு எந்தவொரு தரவுகளும் சேகரிக்கப்படவில்லை எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது

யாரேனும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டிருந்த வழக்குகளிலும் அந்தக் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேசத்துக்கு முன் தாங்கள் விசாரணைகளை திறம்படச் செய்வதாக காண்பித்து வழக்கு விசாரணைகளை இழுத்தடிப்பதும் வழக்குகளை இழுத்தடிப்பதாகவுமே பல புதைகுழி வழக்குகள் காணப்படுவதாக புதைகுழி வழக்குகளில் அரசாங்கம் தான் என்ன நினைக்கின்றதோ அதையே செய்கின்றது எனவும் காணாமலாக்கப்டோருக்கான சங்க மன்னார் மாவட்ட தலைவி மனுவெல் உதயசந்திரா தெரிவிக்கின்றார்.

மேலும் இராணுவம் இவ்வாறு தமிழர்களை கொன்று புதைத்த இடங்களையே இராணுவ முகாம்களாக்கி வைத்துள்ளதாகவும் அக்காணிகளை விடுவித்தால் இவ்வாறு நூற்றுக்கணக்கான புதைகுழிகள் வெளிப்படலாம் என்ற அச்சத்திலேயே அம்முகாம்களை இராணுவம் கைவிடாமல் இருப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்

குறிப்பாக, இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த இப்பகுதியில் இதேபோன்று உள்ள வேறு புதைகுழிகளும் கண்டுபிடிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே மகாவலி வலயம், பௌத்த விகாரைகள், சிங்களக் குடியேற்றங்களை அமைத்து புதைகுழிகளை மறைக்கின்றது என குற்றம் சுமத்துகின்றார்

கடந்த 2018இல் மன்னார் சதொச மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் வழக்கில் குற்றம் இழைத்தவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதுடன் சந்தேக நபர்களும் அடையாளப் படுத்தப்படவில்லை. மேலும் மிகுதியுள்ள எலும்புகளை அகழ்வதற்கான நடவடிக்கையும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

மன்னார், திருகேதீஸ்வரம் இராணுவ முகாமுக்கு அருகில் மீட்கப்பட்ட 141 அதிகமான எலும்புக்கூடுகளும் அவை கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பிலான விசாரணையும் 10 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வருகின்றபோதிலும் மீட்கப்பட்ட எலும்புகள் இதுவரை பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

இதேபோன்று யாழ்ப்பாணம் மிருசுவில் புதைகுழி, செம்மணி புதைகுழி, மாத்தளை புதைகுழி என 20க்கும் மேற்பட்ட புதைகுழிகளில் இலங்கை அரசாங்கத்தின் இன அழிப்புக்கான ஆதாரங்கள் புதைக்கப்பட்டாலும் அவற்றை உறுதி செய்வதற்கான இழுத்தடிப்புகள் மூலம் தன்னை பாதுகாத்துக்கொள்கின்றது இந்த அரசாங்கம்.

நாட்டில் ஒரு நபர் வாழ்வதற்கான உரிமை இலங்கையில் மறுக்கப்பட்டு சர்வதேச யுத்த சட்டங்கள் மீறப்பட்டு ஜனநாயகம் புதைக்கப்பட்டதன் நேரடி சாட்சியமே இந்தப் புதைகுழிகள்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட இன்னும் கண்டுபிடிக்கப்படவுள்ள மனிதப் புதைகுழிகள் இலங்கையில் தசாப்தங்கள் கடந்தும் இடம்பெறும் இன அழிப்பு மற்றும் ஜனநாயக கொலைகளின் சாட்சியங்களே.

எப்போது இந்தப் புதைகுழிகளில் தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படு கின்றதோ, எப்போது இந்தப் புதைகுழிகளில் கொடூரமாக கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கிடைக் கின்றதோ அன்றுதான் இந்த நாடு சுதந்திர நாடு என்ற வழிநோக்கி நடக்கும். அதுவரை மதவாத, இனவாத கொலையாளியாகவே இந்த நாடு காணப்படும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

# சுபநேரங்களை சுயமாக கணிப்பது எப்படி?

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

## ஜோதிடத்தின் அடிப்படை குறித்த விளக்கம்

இயற்கையே உலகம். அண்டவெளியில் பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்களும், கல்லால், மண்ணால், நெருப்பால், வாயுவால், பருப்பொருளான கிரகங்களுக்கு மத்தியில் தொடர்ச்சியாக இயங்கி வருகின்ற நாம் வாழும் இந்த புவியில் மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களும் எவ்வித குறையுமின்றி சந்தோஷமாக, மகிழ்ச்சியாக வளமாக வாழவே ஆசைப்படுகின்றன. அந்த வகையில் நாம் அன்றாடம் மேற்கொள்ளும் அனைத்து செயல்களிலும் வெற்றி மேல் வெற்றி பெற நினைக்கின்றோம். வெற்றி என்பது நமது திறமையால் முயற்சியால் மட்டும் வந்துவிடுவதில்லை, அதற்கு அப்பாற்பட்ட இயற்கை சக்தி அல்லது தெய்வ சக்தி கூடவே இருக்கின்றது என்ற பேருண்மையை அறிந்துகொண்டு அவற்றை சரியாகப் பயன்படுத்தினால் நிச்சயம் நாம் வாழ்வில் எல்லா வகையிலும் வெற்றிவாகை சூடிக்கொண்டே இருப்போம் என்பதுதான் உண்மை.

ஒரு காரியத்தில் நீங்கள் வெற்றியடைய வேண்டுமென்றால் முதலில் நமது எண்ணம் சிந்தனை அனைத்தும் அந்த காரியத்தின்பால் இருக்கவேண்டும். அது போட்டியாக இருந்தால் என்ன, தொழிலாக இருந்தால் என்ன, காதலாக இருந்தால் என்ன, கல்வியாக இருந்தால் என்ன. வெற்றியடையும் வரை அதைப்பற்றியே சிந்திக்க வேண்டும். அப்போதுதான் கடின இலக்குகளையும் கடந்து, இறைவன் அனுக்கிரகத்தால் நாம் வெற்றிபெற்றவர்களாவோம். அதைவிடுத்து வெறுமனே உட்கார்ந்திருந்தால் வாழ்க்கையில் எதையுமே சாதிக்க முடியாதுபோகும். வெற்றிபெற வேண்டுமானால் நாம் விழிப்புடனும் சுறுசுறுப்புடனும் காரியமாற்ற வேண்டும். இதற்கு நாள், நட்சத்திரம், திதி, யோகம், கரணம் போன்றன நமக்கு எச்சரிக்கை செய்து காரியமாற்ற உதவுகின்றன.

பொதுவாக 'இன்று எனக்கு நல்ல நாள், எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி பெற்றேன்' என பலர் கூறுவதைக் கேட்டு வருகின்றோம். அவ்வாறே 'எனக்கு இன்று நாள் சரியில்லை, தொட்டது அனைத்திலும் ஒரே சிக்கலும் பிரச்சினையுமாக இருக்கின்றது, தோல்வி மேல் தோல்வியாக இருக்கின்றது' என்று புலம்பும் பலரையும் அன்றாடம் கண்டு வருகின்றோம். தினசரி பத்திரிகையிலும் வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் சொல்லப்படும் ராசி பலன்கள் எதுவே தமக்கு சாதகமாக இல்லையே என்று அங்கலாயிப்பவர்கள் பலர். அதைவிட சொல்லப்பட்ட நல்ல நேரத்தில் காரியங்களை ஆரம்பித்தும் வெற்றிபெற இயலவில்லையே என்று ஜோதிடத்தின் மீதும், ஜோதிட சாஸ்திரத்தின்மீதும் உங்களுக்கு ஐயப்பாடு எழும்புவது உண்மைதான்.

கிரகங்களின் சுழற்சியால்தான் உயிரினங்களின் வாழ்க்கையும் செயல்பாடுகளும் அவ்வப்போது காலத்திற்கேற்ப மாறிவருகின்றன என்பதுவே உண்மை. கிரகங்களில் கதிர்வீச்சு ஈர்ப்பு சக்தியால்தான் நாம் இயங்கிக் கொண்டிருக்கின்றோம். நமது பிறப்பு காலத்தில் கிரகங்கள் நின்ற நிலையில்தான் நமது வாழ்வை இறுதிக் காலம் வரை வகுத்து கொடுத்துள்ளது என்பதுதான் உண்மை.

ஜோதிடம் என்பது மெய்யான ஆக்கபூர்வமான, அபூர்வமான ஒரு கலையாகும். இக்கலையை அறிந்து, தெரிந்து சரியாக பயன்படுத்தினால் நிச்சயம் உங்கள் வாழ்விலும் அனைத்து சவால்களையும் கடந்து உங்களால் வெற்றிவாகை சூடமுடியும் என்பது உறுதி.

இனி வெற்றியின் ரகசியத்தைப் பற்றி பார்ப்போம். தினசரி நாளேடுகளிலும், ஊடகங்களிலும் நல்ல நேரம், ராகு காலம், எமகண்ட நேரம், குளிகை நேரம் என்றெல்லாம் நேரங்களை சொல்லக் கேட்டிருப்பீர்கள். இதில் ராகு காலமோ, எமகண்ட நேரமோ, குளிகை நேரமோ எவ்விதத்திலும் பெரிய மாற்றங்களை உங்களுக்குக் கொடுத்துவிடுவதில்லை. இது அனைவருக்கும் பொதுவானதொன்றாகும். ஆனால், நல்ல நேரம் என்பதில் சில சிக்கல் உள்ளதை நீங்களே கண்கூடாகப் பார்த்திருப்பீர்கள். கொடுக்கப்பட்ட நல்ல நேரத்தை நம்பி தொடங்கியது அல்லது நடைமுறைப்படுத்தியது எதுவுமே சாத்தியப்படாமல் வெறுமனே தோற்றுப்போன அனுபவம் உங்களுக்கு நிறையவே இருக்கவே செய்யும். தினசரி பொதுவாக நல்ல நேரமென கணிக்கப்பெற்று கொடுக்கப்படும் நேரமானது உங்களுக்கு பொருத்தமானதா? உசிதமானதா? என்பதை உங்கள் சுய ஜாதகமே எப்பொழுதும் தீர்மானிக்கும் என்பதை நீங்கள் நிச்சயம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எனவே 'நல்ல நேரம்' என்றவுடன் கண்ணை மூடிக் கொண்டு எதையும் செய்துவிடாதீர்கள்,

உங்களுக்கான நல்ல நேரத்தை எவ்வாறு தெரிவு செய்துகொள்ள வேண்டும்? ஒரு சிறப்பான நல்ல நேரத்தை உருவாக்கிக் கொண்டு வெற்றிபெற பின்வரும் அம்சங்களைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

1. நாள்
2. பஞ்ச பட்சி நிலை
3. தார பலன்

(அட்டவணை 03)

**மயில்**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | உண்டி | மரணம் | துயில் | அரசு | நடை |
| செவ்வாய் | துயில் | அரசு | நடை | உண்டி | மரணம் |
| புதன் | நடை | உண்டி | மரணம் | துயில் | அரசு |
| வியாழன் | மரணம் | துயில் | அரசு | நடை | உண்டி |
| வெள்ளி | அரசு | நடை | உண்டி | மரணம் | துயில் |
| சனி | உண்டி | மரணம் | துயில் | அரசு | நடை |
| ஞாயிறு | துயில் | அரசு | நடை | உண்டி | மரணம் |

**ஆந்தை**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | அரசு | உண்டி | துயில் | நடை | மரணம் |
| செவ்வாய் | துயில் | நடை | மரணம் | அரசு | உண்டி |
| புதன் | நடை | மரணம் | அரசு | உண்டி | துயில் |
| வியாழன் | மரணம் | அரசு | உண்டி | துயில் | நடை |
| வெள்ளி | உண்டி | துயில் | நடை | மரணம் | அரசு |
| சனி | அரசு | உண்டி | துயில் | நடை | மரணம் |
| ஞாயிறு | துயில் | நடை | மரணம் | அரசு | உண்டி |

**கோழி**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | அரசு | நடை | உண்டி | மரணம் | துயில் |
| செவ்வாய் | உண்டி | மரணம் | துயில் | அரசு | நடை |
| புதன் | துயில் | அரசு | நடை | உண்டி | மரணம் |
| வியாழன் | நடை | உண்டி | மரணம் | துயில் | அரசு |
| வெள்ளி | மரணம் | துயில் | அரசு | நடை | உண்டி |
| சனி | அரசு | நடை | உண்டி | மரணம் | துயில் |
| ஞாயிறு | உண்டி | மரணம் | துயில் | அரசு | நடை |

**ஆந்தை**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | உண்டி | துயில் | நடை | மரணம் | அரசு |
| செவ்வாய் | நடை | மரணம் | அரசு | உண்டி | துயில் |
| புதன் | மரணம் | அரசு | உண்டி | துயில் | நடை |
| வியாழன் | அரசு | உண்டி | துயில் | நடை | மரணம் |
| வெள்ளி | துயில் | நடை | மரணம் | அரசு | உண்டி |
| சனி | உண்டி | துயில் | நடை | மரணம் | அரசு |
| ஞாயிறு | நடை | மரணம் | அரசு | உண்டி | துயில் |

**காகம்**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | மரணம் | துயில் | அரசு | நடை | உண்டி |
| செவ்வாய் | அரசு | நடை | உண்டி | மரணம் | துயில் |
| புதன் | உண்டி | மரணம் | துயில் | அரசு | நடை |
| வியாழன் | துயில் | அரசு | நடை | உண்டி | மரணம் |
| வெள்ளி | நடை | உண்டி | மரணம் | துயில் | அரசு |
| சனி | மரணம் | துயில் | அரசு | நடை | உண்டி |
| ஞாயிறு | அரசு | நடை | உண்டி | மரணம் | துயில் |

**காகம்**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | துயில் | நடை | மரணம் | அரசு | உண்டி |
| செவ்வாய் | மரணம் | அரசு | உண்டி | துயில் | நடை |
| புதன் | அரசு | உண்டி | துயில் | நடை | மரணம் |
| வியாழன் | உண்டி | துயில் | நடை | மரணம் | அரசு |
| வெள்ளி | நடை | மரணம் | அரசு | உண்டி | துயில் |
| சனி | துயில் | நடை | மரணம் | அரசு | உண்டி |
| ஞாயிறு | மரணம் | அரசு | உண்டி | துயில் | நடை |

**ஆந்தை**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | நடை | உண்டி | மரணம் | துயில் | அரசு |
| செவ்வாய் | மரணம் | துயில் | அரசு | நடை | உண்டி |
| புதன் | அரசு | நடை | உண்டி | மரணம் | துயில் |
| வியாழன் | உண்டி | மரணம் | துயில் | அரசு | நடை |
| வெள்ளி | துயில் | அரசு | நடை | உண்டி | மரணம் |
| சனி | நடை | உண்டி | மரணம் | துயில் | அரசு |
| ஞாயிறு | மரணம் | துயில் | அரசு | நடை | உண்டி |

**கோழி**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | நடை | மரணம் | அரசு | உண்டி | துயில் |
| செவ்வாய் | அரசு | உண்டி | துயில் | நடை | மரணம் |
| புதன் | உண்டி | துயில் | நடை | மரணம் | அரசு |
| வியாழன் | துயில் | நடை | மரணம் | அரசு | உண்டி |
| வெள்ளி | மரணம் | அரசு | உண்டி | துயில் | நடை |
| சனி | நடை | மரணம் | அரசு | உண்டி | துயில் |
| ஞாயிறு | அரசு | உண்டி | துயில் | நடை | மரணம் |

**வல்லூறு**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | துயில் | அரசு | நடை | உண்டி | மரணம் |
| செவ்வாய் | நடை | உண்டி | மரணம் | துயில் | அரசு |
| புதன் | மரணம் | துயில் | அரசு | நடை | உண்டி |
| வியாழன் | அரசு | நடை | உண்டி | மரணம் | துயில் |
| வெள்ளி | உண்டி | மரணம் | துயில் | அரசு | நடை |
| சனி | துயில் | அரசு | நடை | உண்டி | மரணம் |
| ஞாயிறு | நடை | உண்டி | மரணம் | துயில் | அரசு |

**மயில்**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | மரணம் | அரசு | உண்டி | துயில் | நடை |
| செவ்வாய் | உண்டி | துயில் | நடை | மரணம் | அரசு |
| புதன் | துயில் | நடை | மரணம் | அரசு | உண்டி |
| வியாழன் | நடை | மரணம் | அரசு | உண்டி | துயில் |
| வெள்ளி | அரசு | உண்டி | துயில் | நடை | மரணம் |
| சனி | மரணம் | அரசு | உண்டி | துயில் | நடை |
| ஞாயிறு | உண்டி | துயில் | நடை | மரணம் | அரசு |

4. ஹோரை
5. ராகு காலம் - எமகண்ட நேரம்
6. யோகம்
7. திசை

**1. முதலில் உங்களுக்கான அதிஷ்ட நாளை எப்படி தெரிந்துகொள்வதென்று பார்ப்போம்.**

உங்கள் பிறப்பு ஜாதகத்தின் பிரகாரம் உங்களுக்கான பஞ்ச பட்சி இதுவென ஜோதிடர்கள் கணித்திருப்பார்கள். அவ்வாறு பஞ்ச பட்சி இதுவென்று தெரியாதவர்கள், முதலில் தாம் பிறந்த நட்சத்திரத்தை சரியாக தெரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறே நீங்கள் பிறந்தது வளர்பிறையா அல்லது தேய் பிறையா என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். தெரியாதவர்கள் அனுபவமிக்க நல்ல ஜோதிடர்களின்

(அட்டவணை 01)

| | வளர்பிறையில் பிறந்தால் | தேய்பிறையில் பிறந்தால் |
|---|---|---|
| அச்சுவினி | வல்லூறு | மயில் |
| பரணி | | |
| கார்த்திகை | | |
| ரோஹினி | | |
| மிருகசீரிடம் | | |
| | | |
| திருவாதிரை | ஆந்தை | கோழி |
| புனர்பூசம் | | |
| பூசம் | | |
| ஆயிலியம் | | |
| மகம் | | |
| பூரம் | | |
| | | |
| உத்தரம் | காகம் | காகம் |
| அத்தம் | | |
| சித்திரை | | |
| சுவாதி | | |
| விசாகம் | | |
| | | |
| அனுஷம் | கோழி | ஆந்தை |
| கேட்டை | | |
| மூலம் | | |
| பூராடம் | | |
| உத்திராடம் | | |
| | | |
| திருவோணம் | மயில் | வல்லூறு |
| அவிட்டம் | | |
| சதயம் | | |
| பூரட்டாதி | | |
| உத்திரட்டாதி | | |
| ரேவதி | | |

உதவியை நாடலாம். பொதுவாக உங்கள் பிறப்பு ஜாதகத்தில் சூரியன் இருக்கும் இடத்திலிருந்து எண்ணிக்கொண்டு வரும்போது, சூரியனுக்கு முதல் ஏழு இடங்களில் இருந்தால் நீங்கள் பிறந்தது வளர்பிறையில் என்றும், அவ்வாறு இல்லாமல் சூரியனுக்கு எட்டு முதல் பன்னிரண்டுக்குள் சந்திரன் இருந்தால் நீங்கள் பிறந்தது தேய்பிறையில் என்றும் எடுத்துக்கொள்வதும் சரிதான்.

**உங்கள் பஞ்ச பட்சி (அட்டவணை 01)**

மேற்படி அட்டவணைப்படி நீங்கள் முதலில் உங்கள் பட்சியை தெரிந்துகொண்டு, பின்னர் அப்பட்சியானது எவ்வெவ் தினங்களில் (அசுப) படுபட்சியாக அமர்ந்திருக்கின்றது என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

(அட்டவணை 02)

மேற்படி நாட்களில் உங்கள் பஞ்ச

(அட்டவணை 07)

| | ராகு காலம் | | எமகண்டம் | |
|---|---|---|---|---|
| | நேரம் | | | |
| வாரம் | முதல் | வரை | முதல் | வரை |
| திங்கள் | 7:30 | 9:00 | 10:30 | 12:00 |
| செவ்வாய் | 3:00 | 4:30 | 9:00 | 10:30 |
| புதன் | 12:00 | 13:30 | 7:30 | 9:00 |
| வியாழன் | 1:30 | 3:00 | 6:00 | 7:30 |
| வெள்ளி | 10:30 | 12:00 | 3:00 | 4:30 |
| சனி | 9:00 | 10:30 | 1:30 | 3:00 |
| ஞாயிறு | 4:30 | 6:00 | 12:00 | 13:30 |

பட்சியானது தொழிற்படாது என்பதால் நிச்சயமாக அத்தினங்களை உங்கள் சுப காரியத்திற்காக பயன்படுத்துவதால் தோல்வியைத் தவிர வெற்றி என்பது இருக்கவே இருக்காது. அந்த நாட்களைத் தவிர்த்து ஏனைய நாட்கள் உங்களுக்கு உசிதமானதாக அமையும்.

**2. பஞ்ச பட்சியின் நிலையை எவ்வாறு அறிவது?**

அதாவது பஞ்ச பூதங்களை உள்ளடக்கிய பஞ்ச பட்சியானது ஐந்து விதமான தொழில்களை பகல், இரவு என இரண்டு வெவ்வேறு காலங்களிலும் ஆற்றும். காலை சூரிய உதயம் முதல் மாலை சூரிய அஸ்தமனம் வரை பகல் பொழுதெனவும், சூரிய அஸ்தமனம் தொடங்கி மறுநாள் சூரிய உதயம் வரை இரவு பொழுதெனவும் பிரிக்கப்பட்டு அதற்கமைய அமைய பட்சிகள் தொழிலாற்றும். திங்கள் முதல் ஞாயிறு வரை, ஐந்து யாமங்கள் என்ற அடிப்படையில், தினசரி சுமார் 2 மணித்தியாலமும் 24 நிமிடங்களும் அவை அரசு, நடை, ஊண், உறக்கம், மரணம் என ஐந்து வித தொழில்களை ஆற்றும். இதில் நீங்கள் அதி சுப காரியத்திற்காக உங்கள் பட்சி அரசு செய்யும் நேரத்தை தெரிவு செய்துகொள்வது மிகவும் நன்மையாகும். அரசில் 100 வீதம் நன்மையும். நடையில் 75 வீதம் நன்மையும், ஊனில் 50 வீதம் நன்மையும், உறக்கத்தில் 25 வீதம் நன்மையும், மரணத்தில் அதிக தீமையையும் கொடுக்க பட்சியானது கடமைப்பட்டுள்ளது. எனவே, நிச்சயமாக பட்சியின் உறக்கம் மற்றும் மரணம் போன்ற தொழில்கள் நடைபெறும்போது நல்ல நேரத்தை தெரிவு செய்துகொள்ள வேண்டாம். இனி பட்சியின் தொழில்களை இரவு – பகல் மற்றும் வளர்பிறைக்கு – தேய்பிறைக்கு என தனித்தனியாக அட்டவணையில் பார்ப்போம்.

**வளர்பிறையில் ஐந்து யாமம் பகல்/இரவு (அட்டவணை 03)**

(அட்டவணை 04)

**வல்லூறு**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | மரணம் | உண்டி | நடை | அரசு | துயில் |
| செவ்வாய் | உண்டி | நடை | அரசு | துயில் | மரணம் |
| புதன் | மரணம் | உண்டி | நடை | அரசு | துயில் |
| வியாழன் | துயில் | மரணம் | உண்டி | நடை | அரசு |
| வெள்ளி | அரசு | துயில் | மரணம் | உண்டி | நடை |
| சனி | நடை | அரசு | துயில் | மரணம் | உண்டி |
| ஞாயிறு | உண்டி | நடை | அரசு | துயில் | மரணம் |

**வல்லூறு**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | நடை | துயில் | உண்டி | அரசு | மரணம் |
| செவ்வாய் | மரணம் | நடை | துயில் | உண்டி | அரசு |
| புதன் | நடை | துயில் | உண்டி | அரசு | மரணம் |
| வியாழன் | துயில் | உண்டி | அரசு | மரணம் | நடை |
| வெள்ளி | உண்டி | அரசு | மரணம் | நடை | துயில் |
| சனி | அரசு | மரணம் | நடை | துயில் | உண்டி |
| ஞாயிறு | மரணம் | நடை | துயில் | உண்டி | அரசு |

**ஆந்தை**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | உண்டி | நடை | அரசு | துயில் | மரணம் |
| செவ்வாய் | நடை | அரசு | துயில் | மரணம் | உண்டி |
| புதன் | உண்டி | நடை | அரசு | துயில் | மரணம் |
| வியாழன் | மரணம் | உண்டி | நடை | அரசு | துயில் |
| வெள்ளி | துயில் | மரணம் | உண்டி | நடை | அரசு |
| சனி | அரசு | துயில் | மரணம் | உண்டி | நடை |
| ஞாயிறு | நடை | அரசு | துயில் | மரணம் | உண்டி |

**ஆந்தை**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | மரணம் | நடை | துயில் | உண்டி | அரசு |
| செவ்வாய் | அரசு | மரணம் | நடை | துயில் | உண்டி |
| புதன் | மரணம் | நடை | துயில் | உண்டி | அரசு |
| வியாழன் | நடை | துயில் | உண்டி | அரசு | மரணம் |
| வெள்ளி | துயில் | உண்டி | அரசு | மரணம் | நடை |
| சனி | உண்டி | அரசு | மரணம் | நடை | துயில் |
| ஞாயிறு | அரசு | மரணம் | நடை | துயில் | உண்டி |

**காகம்**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | நடை | அரசு | துயில் | மரணம் | உண்டி |
| செவ்வாய் | அரசு | துயில் | மரணம் | உண்டி | நடை |
| புதன் | நடை | அரசு | துயில் | மரணம் | உண்டி |
| வியாழன் | உண்டி | நடை | அரசு | துயில் | மரணம் |
| வெள்ளி | மரணம் | உண்டி | நடை | அரசு | துயில் |
| சனி | துயில் | மரணம் | உண்டி | நடை | அரசு |
| ஞாயிறு | அரசு | துயில் | மரணம் | உண்டி | நடை |

**காகம்**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | அரசு | மரணம் | நடை | துயில் | உண்டி |
| செவ்வாய் | உண்டி | அரசு | மரணம் | நடை | துயில் |
| புதன் | அரசு | மரணம் | நடை | துயில் | உண்டி |
| வியாழன் | மரணம் | நடை | துயில் | உண்டி | அரசு |
| வெள்ளி | நடை | துயில் | உண்டி | அரசு | மரணம் |
| சனி | துயில் | உண்டி | அரசு | மரணம் | நடை |
| ஞாயிறு | உண்டி | அரசு | மரணம் | நடை | துயில் |

**கோழி**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | அரசு | துயில் | மரணம் | உண்டி | நடை |
| செவ்வாய் | துயில் | மரணம் | உண்டி | நடை | அரசு |
| புதன் | அரசு | துயில் | மரணம் | உண்டி | நடை |
| வியாழன் | நடை | அரசு | துயில் | மரணம் | உண்டி |
| வெள்ளி | உண்டி | நடை | அரசு | துயில் | மரணம் |
| சனி | மரணம் | உண்டி | நடை | அரசு | துயில் |
| ஞாயிறு | துயில் | மரணம் | உண்டி | நடை | அரசு |

**கோழி**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | உண்டி | அரசு | மரணம் | நடை | துயில் |
| செவ்வாய் | துயில் | உண்டி | அரசு | மரணம் | நடை |
| புதன் | உண்டி | அரசு | மரணம் | நடை | துயில் |
| வியாழன் | அரசு | மரணம் | நடை | துயில் | உண்டி |
| வெள்ளி | மரணம் | நடை | துயில் | உண்டி | அரசு |
| சனி | நடை | துயில் | உண்டி | அரசு | மரணம் |
| ஞாயிறு | துயில் | உண்டி | அரசு | மரணம் | நடை |

**மயில்**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | துயில் | மரணம் | உண்டி | நடை | அரசு |
| செவ்வாய் | மரணம் | உண்டி | நடை | அரசு | துயில் |
| புதன் | துயில் | மரணம் | உண்டி | நடை | அரசு |
| வியாழன் | அரசு | துயில் | மரணம் | உண்டி | நடை |
| வெள்ளி | நடை | அரசு | துயில் | மரணம் | உண்டி |
| சனி | உண்டி | நடை | அரசு | துயில் | மரணம் |
| ஞாயிறு | மரணம் | உண்டி | நடை | அரசு | துயில் |

**மயில்**

| | 6:00 8:24 | 8:24 10:48 | 10:48 1:12 | 1:12 3:36 | 3:36 6:00 |
|---|---|---|---|---|---|
| திங்கள் | துயில் | உண்டி | அரசு | மரணம் | நடை |
| செவ்வாய் | நடை | துயில் | உண்டி | அரசு | மரணம் |
| புதன் | துயில் | உண்டி | அரசு | மரணம் | நடை |
| வியாழன் | உண்டி | அரசு | மரணம் | நடை | துயில் |
| வெள்ளி | அரசு | மரணம் | நடை | துயில் | உண்டி |
| சனி | மரணம் | நடை | துயில் | உண்டி | அரசு |
| ஞாயிறு | நடை | துயில் | உண்டி | அரசு | மரணம் |

**தேய்ப் பிறையில் ஐந்து யாமம் பகல் / இரவு (அட்டவணை 04)**

கிழமை நாட்களையும், வளர்பிறை – தேய்பிறையையும், பகல் - இரவு இவற்றைக் கவனத்திற்கொண்டு சரியாக உங்கள் பட்சி அரசு செய்யும் நேரத்தை தெரிந்துகொண்டு காரியம் ஆற்றுங்கள் வெற்றி நிச்சயம்.

**3. தாரா பலனைப் பற்றி பார்ப்போம்.**

பொதுவாக எண்ணற்ற நட்சத்திரங்கள் வான மண்டலத்தில் இருந்தாலும் ஜோதிட ரீதியாக பலன் தரக்கூடிய அசுவினி முதல் ரேவதி நட்சத்திரம் முதலாக 27 நட்சத்திரங்களைப் பற்றி அறிந்திருக்கின்றோம். இதில் நீங்கள் பிறந்த நட்சத்திரத்திலிருந்து சுப காரியத்திற்காகத் தெரிவுசெய்யும் அன்றைய நட்சத்திரம் வரை எண்ணிக்கொண்டு வருகின்றபோது, அன்றைய நாளில் 02, 04, 06, 08, 09, 11, 13, 15, 18, 20, 22, 24, 26, 27 என ஏதாவது ஒரு நட்சத்திரம் உடைய நாளாக அமைந்தால் உங்களுக்கு அன்றைய நாளில் தார பலன் சிறப்பாக இருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம்.

(அட்டவணை 05)

இவ்வாறு உங்களுக்கான சுப நட்சத்திரங்கள் அமைந்த நாட்களை நீங்கள் சரியாகத் தெரிவுசெய்து கொள்ளலாம்.

**4. சுப ஹோரையை எவ்வாறு தெரிவுசெய்வது?**

இந்த முறையை பயன்படுத்தி சுபகாரியங்களை செய்யத் தேவையான நல்ல நேரத்தை அறிந்து செயல்படுவதால் வெற்றியை அடையலாம். ஹோரையின் கால அளவு 01 மணி நேரமாகும். இதை அன்றைய சூரிய உதயத்திலிருந்து கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். அட்டவணையில் சூரிய உதய நேரம் காலை 6 மணியென எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

1. சூரிய ஹோரை - அரச காரியங்களில் வெற்றி பெற
2. சந்திர ஹோரை (வளர்) - வியாபாரம், உழவு தொழில்
3. செவ்வாய் ஹோரை - வீடு, நிலம், வாங்க, மருத்துவத்திற்கு
4. புதன் ஹோரை - கல்வி, தேர்வு, போட்டிப் பரீட்சைக்கு
5. குரு ஹோரை - தொழில் மற்றும் அனைத்து சுப காரியங்களுக்கும்
6. சுக்கிர ஹோரை - புதிய ஆடை, திருமணம், உல்லாசம்
7. சனி ஹோரை - இரும்பு சம்பந்தமான அலுவல்களுக்கு

நீங்கள் செய்யப்போகும் காரியத்துக்கான சரியான ஹோரையை தெரிவுசெய்து உரிய நேரத்தைப் பயன்படுத்துவதால் நிச்சயம் நன்மையையும் வெற்றியையும் அடைவீர்கள் என்பது திண்ணம். கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டணையில் உரிய கிழமைகளுக்கான சுப ஹோரைகளை தெரிவு செய்துகொள்ள முடியும்.

(அட்டவணை 06)

**5. ராகு காலம் - எமகண்ட நேரங்களை அறிதல்**

ஒவ்வொரு நாளிலும் ராகு காலம், எமகண்டம் ஆகிய நேரங்களில் சுபகாரியங்கள் செய்வதை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். சில நேரங்களில் உங்கள் பஞ்ச பட்சி ஆட்சி செய்யும் நேரத்தில் ராகு காலம் அமையுமாயின், பட்சி ஆட்சி செய்கின்ற இரண்டரை மணித்தியாலத்தில் ராகு கால நேரமான ஒன்றரை மணித்தியாலத்தைக் கழித்துவிட்டு மிகுதி நேரத்தில் சுப காரியம் செய்யலாம்.

(அட்டவணை 07)

**6. யோகங்களை தெரிவுசெய்வது எவ்வாறு?**

ஒவ்வொரு தினத்திலும் காணப்படும் யோகங்கள் குறித்து பஞ்சாங்கங்களிலும், தினசரி பஞ்சாங்க நாட்காட்டியிலும் குறிப்பிட்டிருப்பார்கள். சுப காரியங்களை செய்ய நீங்கள் தீர்மானிக்கும் நாள் நிச்சயமாக நல்ல யோக நாளாக அமைவதால் பல நன்மைகளையும் அதிர்ஷ்டங்களையும் பெற முடியும். பொதுவாக அமிர்தயோகம், சித்த யோகம் சுப காரியங்களுக்கு உசிதமானவை. இவை தவிர மரண யோகம், பிரபலாரிஷ்ட யோகம் போன்றன சுபகாரியங்களுக்குக் கூடாதவை. எனவே இவ்வாறான யோகங்களை தவிர்த்தல் நன்மையாகும்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

(அட்டவணை 06)

| | மணி முதல் | வரை | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை | 6.00 | 7.00 | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| | 7.00 | 8.00 | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் |
| | 8.00 | 9.00 | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் |
| | 9.00 | 10.00 | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |
| | 10.00 | 11.00 | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| | 11.00 | 12.00 | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு |
| பகல் | 12.00 | 1.00 | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் |
| | 1.00 | 2.00 | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| | 2.00 | 3.00 | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் |
| | 3.00 | 4.00 | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் |
| | 4.00 | 5.00 | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |
| | 5.00 | 6.00 | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| மாலை | 6.00 | 7.00 | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு |
| | 7.00 | 8.00 | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் |
| | 8.00 | 9.00 | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| | 9.00 | 10.00 | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் |
| | 10.00 | 11.00 | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் |
| | 11.00 | 12.00 | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் |
| இரவு | 12.00 | 1.00 | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
| | 1.00 | 2.00 | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு |
| | 2.00 | 3.00 | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் |
| | 3.00 | 4.00 | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் |
| | 4.00 | 5.00 | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் |
| | 5.00 | 6.00 | குரு | சுக்கிரன் | சனி | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் |







# அரேபிய - இலங்கை உறவில் விரிசலை உண்டாக்கும் இனவாத சிந்தனை!

உமர் அலி உஸ்மான்

கடந்த கொரோனா காலங்களில் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்காமல் நல்லடக்கம் செய்ய அனுமதியுங்கள் என்ற முஸ்லிம் நாடுகளின் கோரிக்கைக்கு செவிசாய்க்காத இலங்கை அரசாங்கம், முஸ்லிம் நாடுகள் அல்லது அரபு நாடுகளின் எதிர்ப்பை அல்லது வெறுப்பை சம்பாதித்துக்கொண்டது. இதனால் கடந்த காலங்களில் பொருளாதார ரீதியாகவும், இராஜதந்திர ரீதியாகவும் இலங்கை பல்வேறு சவால்களை சந்திக்க நேரிட்டதென்பது எண்ணெய் அரசியலில் புதைந்துள்ள உண்மை. இதன் தொடர்ச்சியாக அக்கரைப்பற்று பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை சுனாமி வீட்டுத் திட்டத்தை உடனடியாக பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதுவராலயத்தின் ஊடாக தொடர்ச்சியாக சவூதி அரேபியா கோரிக்கை முன்வைத்து வருகிறது. எனினும், இந்த விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் இன்றுவரை எந்தவொரு காத்திரமான நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. பயனாளிகளின் பாவனைக்கு இந்த வீட்டுத் திட்டம் கையளிக்கப்படாமையால் வீட்டுத் திட்டம் பற்றைக்காடாக மாறியுள்ளது.

உலகை உலுக்கிய சுனாமியில் இலங்கையில் அதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்டம் அம்பாறை. முப்பதாயிரத்துக்கும் அதிகமான உயிர்களை இலங்கையில் காவுகொண்ட சுனாமி, ஏறத்தாழ பத்தாயிரம் உயிர்களையும், பல கோடி மதிப்புள்ள சொத்துகளையும் இழக்கச்செய்து பல நூற்றுக்கணக்கானவர்களையும் காணாமலாக்கி அம்பாறை மாவட்ட மக்களுக்கு அகதி வாழ்வின் அத்தனை அத்தியாயங்களையும் கற்பித்தது. இந்த அகதி வாழ்விலிருந்து விடுபட பலரும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அதில் முக்கிய தேவையாக இருந்த இல்லிடம் எனும் பிரச்சினையைத் தீர்க்க நாட்டின் பல பகுதிகளிலும் பல்வேறு வீட்டுத் திட்டங்கள் உருவாகின.

அதில் முக்கியமான ஒரு வீட்டுத் திட்டம்தான் 500 வீடுகளைக்கொண்ட மன்னர் அப்துல்லாஹ் மாதிரி நகரமொன்று அம்பாறை மாவட்டத்தின் நுரைச்சோலை கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டது. கிழக்காசியாவில் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணத்துக்காக சவூதி நிறுவனத்தினாலேயே இந்த வீட்டுத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் சவூதி உள்துறை அமைச்சின்கீழ் காணப்பட்ட இந்த நிறுவனம் இன்று நிவாரணம் மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான மன்னர் சல்மான் நிலையத்தின் கீழ் செயற்படுகினறது.

இந்த வீட்டுத் திட்டம் உத்தியோகபூர்வமாக 2011.06.09ஆம் திகதி அலரி மாளிகையில் வைத்து இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. எனினும், நாட்டிலுள்ள இன விகிதாசாரத்தின் அடிப்படையில் இந்த வீட்டுத் திட்டத்திலுள்ள வீடுகள் கையளிக்கப்பட வேண்டுமென தொடரப்பட்ட 178/2008ஆம் இலக்க வழக்குக்கு உயர் நீதிமன்றம் 2009.12.02ஆம் திகதி தீர்ப்பளித்தது. எவ்வாறாயினும், அக்கரைப்பற்றிலுள்ள இன விகிதாசாரத்தின் அடிப்படையிலேயே இந்த வீட்டுத் திட்டத்திலுள்ள வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென முஸ்லிம் சமூகமும் அதன் மக்கள் பிரதிநிதிகளும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதனால் குறித்த வீட்டுத் திட்டம் உரிய பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே குறித்த வீட்டுத் திட்டத்தை உடனடியாக பயனாளிகளுக்கு வழங்குமாறு கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதுவராலயம் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளது. இதேவேளை, உயர் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் நாட்டிலுள்ள தேசிய இன விகிதாசாரப்படி இந்த வீட்டுத் திட்டத்தைக் கையளிக்க வேண்டும் என்ற விடயம் கடந்த ஜூன் மாதம் 12ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் முன்வைக்கப்பட்டது. இந்த முன்மொழிவுக்கு ஆதரவான கருத்துகளே இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன. எனினும், இதனை நிராகரித்த பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், "அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழும் மக்களின் இன விகிதாசாரப்படியே இந்த வீட்டுத் திட்டத்தை வழங்க வேண்டும்" என்று அந்தக் கூட்டத்தில் வாதிட்டிருந்தார்.

அன்றைய தினம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸின் நெறிப்படுத்தலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ.டி.வீரசிங்க ஆகியோரின் இணைத்தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச உயரதிகாரிகளின் பங்குபற்றலுடன் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வீட்டுத் திட்டத்தை தேவையுடைய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதிலுள்ள இழுபறியில் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை ஏற்று தேசிய இன விகிதாசாரப்படி அந்த வீட்டுத் திட்டத்தை



கையளிக்க வேண்டும் என எழுத்தில் ஆளுநரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கையை ஏற்க முடியாதென அன்று வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன.

இக்கூட்டத்தில் இந்த விடயம் பேசப்படப் போகிறது. இதனால் நமக்கு அரசின் பக்கம் இருந்து சிக்கல் வந்துவிடும் என்பதால் முஸ்லிம் எம்.பிக்கள் இந்தக் கூட்டத்தை தவிர்த்துக்கொள்ள, கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரே ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் அந்தக் கூற்றை மறுதலித்து இந்தத் தீர்மானம் மனசாட்சிக்கு முரணானதென்றும் அந்த வீட்டுத் திட்டத்தை நாட்டின் தேசிய இன விகிதாசாரப்படி வழங்க முடியாதென்றும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழும் மக்களின் இன விகிதாசாரப்படியே வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

இந்த வீட்டுத் திட்டங்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சவூதி அரசாங்கம் வழங்கிய உதவி. இந்த வீட்டுத் திட்டத்தை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதிலுள்ள இழுபறியால் சவூதி - இலங்கை நட்புறவுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இந்த வீட்டுத் திட்ட விடயம் தொடர்பில் சவூதி மன்னர் அதிருப்தியில் உள்ளதாக இலங்கைக்கான சவூதி தூதுவர் எங்களிடம் பலமுறை கூறியுள்ளார். இந்த வீட்டுத் திட்டங்களை மனிதாபிமானமே இல்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்காமல் எங்கோ இருக்கும் சம்பந்தமே இல்லாத மக்களுக்கு வீடுகளைக் கையளிக்க முனைவது ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் வாதிட்டார்.

அதுமட்டுமன்றி, இது உச்சநீதிமன்றத்துடன் தொடர்புபட்ட விடயமாக உள்ளதால் இந்த விடயத்திலுள்ள நியாயங்களை எடுத்துரைக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்ட மா



அதிபரை சந்தித்துப் பேச வேண்டுமென்றும் அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறும் கிழக்கு மாகாண ஆளுநரையும் அவர் இவ்வேளையில் கேட்டுக்கொண்டார்.

இது விடயமாக சட்ட மா அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட உயர்மட்டங்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேச தான் துரிதகதியில் ஏற்பாடுகளை செய்வதாக கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது உறுதியளித்தார். ஆனால், இந்தக் கட்டுரை எழுதப்பட்டு நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கும் இந்த நொடிவரை அதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் ஆளுநர் எடுத்ததாகத் தெரியவில்லை. ஜப்பான், இந்தியா என்று பாரதப் பிரதமர் மோடியை முன்னோடியாகக்கொண்டு வெளிநாட்டுப் பயணங்களிலேயே அவர் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கிறார். ஒருவேளை, தேசிய இனவிகிதாசாரப்படி இந்த வீடுகள் கையளிக்கப்பட்டால் தாமும் சில நன்மைகளை கையகப்படுத்த நினைக்கிறாரோ தெரியவில்லை.

சுனாமியால் வாழ்விடங்களை இழந்தவர்களுக்காக நுரைச்சோலை பிரதேசத்தில் சவூதி அரேபியாவால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் 2011ஆம் ஆண்டு பூர்த்திசெய்யப்பட்டன. இந்த வீட்டுத் திட்டத்தை இந்தக் கட்டுரை வாசிக்கும் நிமிடம் வரை உரிய பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்க முடியாமல் போனமைக்குப் பின்னால், வறட்டு கௌரவத்துடன் கூடிய ஓர் இனவாதச் சிந்தனை இருந்தது என்பதைப் புறந்தள்ளிவிட முடியாது. சம்பந்தமே இல்லாத காரணங்களை முன்வைத்து தொடுக்கப்பட்ட ஒரு வழக்கின் காரணமாக எப்போதோ பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க வேண்டிய நுரைச்சோலை வீட்டுத் திட்டமானது, தற்போது சிதைந்து, பழுதடைந்து, காடுகள் வளர்ந்து மனித இனம் பயன்படுத்த முடியாத நிலையில் கொடிய விலங்குகளின் சரணாலயமாக காணப்படுகிறது என்பதுதான் கவலையான விடயம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்காக அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நுரைச்சோலை பிரதேசத்தில் இந்த வீட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. இலங்கை நாணயப் பெறுமதியில் சுமார் 552 மில்லியன் ரூபாவை அப்போது வழங்கியது. இந்த வீட்டுத் திட்டத்துக்கான ஒப்பந்தம் 2006ஆம் ஆண்டு மே மாதம் 02ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. நுரைச்சோலை வீட்டுத் திட்டத்தை நிர்மாணிக்கும் பொறுப்பு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சிடம் வழங்கப்பட்டது.

அப்போது வீடமைப்பு அமைச்சராக தலைவர் அஷ்ரபின் பாரியார் பேரியல் இஸ்மாயில் அஷ்ரப் பதவி வகித்திருந்தார். சுமார் 40 ஏக்கர் காணியில் அமைந்துள்ள இந்த வீட்டுத் திட்டத்தில் 500 வீடுகள் அளவில் உள்ளன. மேலும், ஆண் மற்றும் பெண்களுக்கான சகல வசதிகளுடனும் கூடிய தனித் தனிப் பாடசாலைகள், வைத்தியசாலை, சந்தைத் தொகுதி, பொது நிகழ்வுகளுக்கான மண்டபம், விளையாட்டு மைதானம், பள்ளிவாசல் மற்றும் பஸ் நிறுத்தங்கள் ஆகியவையும் அங்கு உள்ளன. அதுவொரு கனவுக்குட்டி நகரமாகும் என்பதை கண்ணால் கண்ட யாரும் மறுக்கமுடியாது.

நுரைச்சோலை வீட்டுத் திட்டச் செயற்பாடுகள் எல்லாமே நன்றாகப் போய்க்கொண்டிருந்த ஒரு தருணத்தில், இடையில் புகுந்தது ஜாதிக ஹெல உறுமய. நுரைச்சோலை வீடுகளை முஸ்லிம்களுக்கு மட்டும் வழங்குவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தது. இந்த வழக்கு தொடர்பான தீர்ப்பு அப்போதைய நீதியரசர் சரத் என். சில்வா தலைமையில் வழங்கப்பட்டது. நுரைச்சோலை வீடுகளை தனி இனமொன்றுக்கு வழங்கக்கூடாது என்றும் அனைத்து இனத்தவர்களையும் உள்ளடக்கி மேற்படி வீடுகளை நீதியாகப் பகிர்ந்தளிக்குமாறும் அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டது.

மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டு வருடங்கள் பல கடந்துவிட்டன. ஆனாலும், நுரைச்சோலை வீடுகள் இற்றைவரை யாருக்கும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இப்போது, அங்குள்ள வீடுகளைப் பகிர்ந்தளித்தாலும், அவை பயன்படுத்தும் நிலையில் இல்லை என்பது கூடுதல் தகவல். அதிகாரப்பலம் பொருந்திய ஊரின் எம்.பி. அதாஉல்லா கூட இவ்விடயத்தில் மக்களுக்கு கையளிக்க வேண்டி முழுமனதுடன் இயங்கவில்லை.

சுனாமியில் அம்பாறை மாவட்டத்தில் பெரியநீலாவணை முதல் பொத்துவில் வரையிலான கரையோர முஸ்லிம் மக்களே அதியுச்சமாக பாதிக்கப்பட்டவர்கள். அப்படியிருக்க தமிழ், முஸ்லிம், சிங்கள, கிறிஸ்தவ மக்களுக்கு - நாடுபூராகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நாட்டின் தொண்டு நிறுவனங்கள் வீடுகளை அமைத்துக் கொடுத்தது. அதேபோன்றே நுரைச்சோலை வீட்டுத் திட்டமானது சுனாமியால் வீடுகளை இழந்த முஸ்லிம்களுக்காக அரேபிய கடலின் சவூதி வள்ளல்களால் நிர்மாணிக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் வீடுகளை இழந்த பல நூற்றுக்கணக்கான முஸ்லிம்களுக்கு இதுவரையும் வீடுகள் கிடைக்காமல் உள்ளன. ஆனால், இந்த மாவட்டத்தில் சுனாமியால் நான்கைந்து பெரும்பான்மை யினத்தவர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டனர். அந்த பாதிப்பின் அளவும் பெரிதாக இல்லை. ஆனாலும், பாதிக்கப்பட்ட குடும்பத் தொகையை விடவும் அதிகமான வீடுகள், சலுகைகள், நிவாரணங்கள் இந்த மாவட்ட பெரும்பான்மையின மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளமை இங்கு கவனிக்கப்பட வேண்டியது.



இதேபோன்று, சுனாமியால் வீடுகளை இழந்த தமிழ் மக்களுக்கும் போதுமான தொகை வீடுகள் வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறானதொரு நிலையில், நுரைச்சோலை வீடுகளைப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதே நியாயமாகும் என்று ஒருதரப்பார் வாதிட்டு வருகின்றனர். எப்படியாவது இப்போதைக்கு நுரைச்சோலை வீடுகளைப் பகிர்ந்தளித்தாலே போதும் என்கிற மனநிலையைக் கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். பெருந்தொகை நிதியில் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி வீட்டுத் திட்டமானது, யாருக்கும் பிரயோசனமின்றி அழிவடைந்துபோவதை விடவும், மக்களுக்குப் பயனாகட்டும் என்று நினைக்கின்றமையே அதற்கான காரணமாகும் என்கிறார்கள்.

ஆனால், தற்போதைய நிலையில் அந்த வீடுகளைப்



பெற்றுக்கொள்வோர் உடனடியாக அவற்றைப் பயன்படுத்தும் நிலையில் இல்லை. அங்குள்ள வீடுகளில் இருந்த பெறுமதியான பொருட்களெல்லாம் களவாடப்பட்டுள்ளன. வீட்டுத் திட்டம் முழுக்க காடு வளர்ந்துள்ளது. மேலும், பற்றைக்காடு நிரம்பியுள்ள அந்த வீடுகளில் வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளன. அதனால், அங்கு பாரியதொரு புனரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டிய தேவை உள்ளது. அதற்குப் பெருமளவான நிதி தேவைப்படும். இன்னும் சில காலங்களில் வில்பத்து போன்று இதுவும் காட்டுப்பகுதியாக மாறினாலும், இல்லை அறிவிக்கப்பட்டாலும் ஆச்சரியப்பட முடியாது. இன்றைய நிலையில் இலங்கை அரசு இந்த வீடுகளைத் திருத்தும் அளவுக்கு பொருளாதார நிலையில் இல்லை.

இந்நிலையில், நுரைச்சோலை வீட்டுத் திட்டத்தை புனரமைப்புச் செய்வதற்கான நிதியை வழங்குவதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்த வரலாறுகளும் உள்ளன. இப்போது கேட்டாலும் சவூதி அரசு நிதியளிக்கும் என்பது வேறு கதை. அவ்வாறு நிதி கிடைத்தாலும், குறித்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு கணிசமான காலம் எடுக்கும். அதன்பின்னரே அங்கு மக்கள் குடியேற முடியும் என்பதெல்லாம் இருக்கிறது. இந்த நுரைச்சோலை வீட்டுத் திட்டம், அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. அதன் எல்லையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தீகவாபி கிராமம் உள்ளது. தீகவாபி, ஒரு பெரும்பான்மையினக் கிராமமாகும். ஆனால், அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள அனைத்துப் பகுதிகளும் முஸ்லிம் பிரதேசங்களாகும். இதனால், தீகவாபியை முன்னிறுத்தி அங்கு எல்லைப் பிரச்சினைகள் தொடர்ச்சியாக எழுந்துகொண்டு வருகின்றன.

முஸ்லிம் கிராமங்களின் எல்லைகளுக்குள் அரச இயந்திரத்தின் துணை கொண்டு, தீகவாபி தனது எல்லைகளை நகர்த்துவது வாடிக்கையான விடயமாகும். மேலும், புனித பூமி எனும் பெயரில் முஸ்லிம் கிராமங்களின் எல்லைகள் அபகரிக்கப்பட்டு தீகவாபியுடன் இணைக்கப்பட்டும் உள்ளன என்பதை கடந்த கால வரலாறுகள் தெளிவாக கூறி வைத்துள்ளன.

இவ்வாறானதொரு, நிலையிலேயே நுரைச்சோலை வீட்டுத் திட்டம் தொடர்பில் தீகவாபி அச்சம் கொண்டது. தனது எல்லையில் முஸ்லிம்களை குழுமையாகக் கொண்டதொரு குடியிருப்பு உருவானால், அது தனக்கு ஆபத்தாக அமைந்துவிடும் என்று அந்தக் கிராமம் எண்ணியது. இந்தப் பின்னணியிலேயே நுரைச்சோலை வீட்டுத் திட்டம் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய வழக்குத் தாக்கல் செய்தது. நுரைச்சோலை வீட்டுத் திட்டத்தின் தற்போதைய நிலைக்கு அந்த வழக்கே காரணமானது. நுரைச்சோலை வீடுகளை முஸ்லிம்களுக்குப் பகிர்ந்தளிப்பதில் கடந்த காலத்தில் இருந்த எந்த ஆட்சியாளர்களும் விருப்பம் கொண்டிருக்கவில்லை. அதுபோன்றே இன்றைய அரசாங்கமும் விருப்பம் கொள்ளவில்லை. அதனால் நுரைச்சோலை விடயத்தில் அவர்கள் இழுத்தடிப்புகளைச் செய்துகொண்டு வருகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராகியுள்ளார். தனது ஊரின் பிரச்சினைக்கு அவர் தீர்வை வழங்கும் இடத்தில் அமர்ந்துள்ளார். இருந்தாலும் அவரின் தேர்தல் கால உண்டியலாக உள்ள இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்கும் எண்ணம் இருக்கிறதா என்பது இங்கு கேள்விக்குறியே.

கடந்த அரசுகளின் பலமிக்க சக்தியாக இருந்த (நகர திட்டமிடல் அப்போதைய அமைச்சராக இருந்த) முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் இந்த விடயத்தில் மிகப்பெரும் அசட்டையாக இருந்தார். அவருக்கு ஒத்தாற்போல் மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாங்கள் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான் என்பதை நிரூபிக்கும்வண்ணம் இவ்விடயத்தில் பாராமுகமாகவே இருந்தார் என்பது மிகவும் கவலையான விடயமாக உள்ளது. இப்போதைய எதிரணித் தலைவரும், முன்னாள் வீடமைப்பு அமைச்சருமான சஜித் பிரேமதாச இந்தக் காயை சரியாக தட்டியிருக்க வேண்டும். அவரின் கையில் கம்பிருந்தும் தட்டும் தூரத்தில் மாங்காய் (வீட்டுத்திட்டம்) இருந்தும் குறியை தவறவிட்டுள்ளார் அவர்.

கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு செய்த அநியாயங்களுக்கு பாவமன்னிப்பு தேடும் விதமாக ஜனாதிபதி ரணிலும் அவருடன் நல்ல உறவைக்கொண்டிருக்கும் எம்.பிக்களான அதாஉல்லா, முஷாரப், நசீர் அஹமட் போன்றோரும் ஜனாதிபதியுடன் மறைமுக காதலை வெளிப்படுத்திவரும் ஆளுந்தரப்பு, எதிர்த்தரப்பு எம்.பிக்களும், கட்சித் தலைவர்களும் ஒன்றிணைந்து இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

தேர்தல் மேடைகளில் அம்பாறை மாவட்ட மக்களுக்கு தலைமைகள் கொடுத்த வஹ்தா இனியாவது நிறைவேற்றப்பட வேண்டும்.



# உள்ளியின் மருத்துவப் பயன்பாடுகள்



எமது பிரதேசத்தில் தொற்றுநீக்கி மருந்துகளுக்கு (Antibiotics and Antiseptics) அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படுகின்றது. எமது பிரதேச மூலவளங்களில் ஒன்றாகிய மூலிகை வளத்தை அடிப்படையாகக்கொண்டு நவீன தொழில்நுட்ப விஞ்ஞான உத்திகளைப் பயன்படுத்தி மூலிகைத் தொற்றுநீக்கிகளை (Herbal Antiseptics and Herbal Antibiotics) உருவாக்குவதும், தொற்று நோய்க் கிருமிகளுக்கு எதிராகப் பயன்படுத் தக்கூடிய மூலிகைகளை ஆராய்வதும் அவசியமான - அவசரமான தேவை களில் ஒன்றாக அமைகின்றது. தமிழர்களால் நீண்டகாலமாக உணவாகவும் மருந்தாகவும் பயன் படுத்தப்பட்டுவரும் உள்ளியின் தொற்றுநீக்கித் தன்மைகளையும் (Antiseptic) மருத்துவ செயற்பாடு களையும் நவீன விஞ்ஞானக் கண் ணோட்டத்தில் ஆராய்வது இன்றைய காலகட்டத்தின் தேவைகளில் ஒன்றாக அமைகின்றது.

மூலிகைகளில் சில, ஒஜஸ் எனப் படும் நிர்ப்பீடனத்தை (Immunity Power) அதிகரிப்பதாகக் கூறப்படு கின்றது. சில மூலிகைகளில் காணப் படும் இரசாயனப் பதார்த்தங்கள் நுண்ணுயிர்க்கொல்லிகளாக (Anti-biotic) அல்லது தொற்றுநீக்கிகளாக (Antiseptic) தொழிற்படுகின்றன. வேறு சில மூலிகைகளில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் தின்குழியச் செய்கை (Phagocytic action), பிற பொருளெதிரி உருவாக்கம் (Antibody formation) ஆகியவற்றை அதிகரிக்கச் செய்வதன் மூலம் நோய்க்கிருமிகளை அழிப்பதாக ஆய்வுகள் மூலம் அறியக் கூடியதாயுள்ளது.


உள்ளியில் Allin, Allisin, Allyl di-sulphide, Allyl propyl disulphide, Inulin, Choline, Myrosinase போன்ற இரசாயனப் பதார்த்தங்கள் காணப் படுவதோடு நுண்ணங்கிகளுக்கு எதிரான (Micro organism) பிரதான தொற்றுநீக்கி (Antise-ptic) மூலிகை களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது. உள்ளியில் காணப்படும் கந்தகச் சேர்வைகள் (Sulphur Compounds) நுண்ணுயிர்க்கொல்லிகளாகச் செயற்படுகின்றன.

உள்ளியானது சுவாசப்பைத் தொகுதி (Respiratory Systm), சமிபாட்டுத் தொகுதி (Gastro-Intestinal System) ஆகியவற்றில் சிறந்த நுண்ணுயிர்க்கொல்லியாகத் தொழிற்படுகின்றது. நுரையீரல், கிருமித் தாக்கத்தால் ஏற்படும் சுரப்புகளை குறைப்பதாகவும், சீதக் கழிச்சலைக் கட்டுப்படுத்துவதாகவும் சித்த மருத்துவ ஆய்வுகள் மூலம் அறியக்கூடியதாயுள்ளது. உள்ளியில் காணப்படும் ஆவிப் பறப்புடைய எண்ணெயானது (Essential Oil) இரத்தத்தினுள் அகத்துறிஞ்சப்பட்டு சுவாசக் குழாய்களிலும் நுரையீரலிலும் சுரக்கப்படுவதால் சிறந்த நுண்ணுயிர்க் கொல்லியாகத் தொழிற் படுகின்றது.

உள்ளி உடலிலுள்ள நீர்ப்பீடனத் தொழிற்பாட்டை (Immune Function) துரிதப்படுத்துகின்றது. மேலும் உள்ளியிலுள்ள கந்தகமடங்கிய இரசாயனப்பொருள் உடலிலுள்ள தின்குழிய, நினநீர்க்குழிய (Macropage, lymphocyte) பாதுகாப்புக் கலங்களில் தொழிற் பாட்டை அதிகரித்து புற்றுநோய்க் கலங்களை எலிகளில் அழிப்பதாக கலிபோர்னிய பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி ஆய்வுகள் மூலம் அறியக்கூடியதாயுள்ளது.

உள்ளியில் காணப்படும் கந்தகச் சேர்வைகள் நெருப்புக் காய்ச்சல் (Typhoid, Paratyphoid) போன்ற நிலைகள் வராமல் தடுப்பதற்கு பயன்படுத்தலாம். கட்டுகளுக்கு உள்ளியை அரைத்துப் போடுவதோடு, சுளுக்கு (Sprain) போன்ற நிலைகளில் உள்ளியை உப்புடன் சேர்த்துப் பற்றிடுவர். உள் நாக்கு அழற்சி (Tonsilitis), புரையோடும் புண்கள் ஆகியவற்றுக்கு உள்ளிச்சாற்றை பிரயோகிப்பதன் மூலம் சிறந்த பலனைக் காணலாம்.

வறட்டு இருமல், மூச்சுக்குழாய் அழற்சி (Bronchitis), தொய்வு (Bronchial Asthma) வயிற்றுவலி, வயிற்றில் பூச்சி (Worms), சந்துவாதம் ஆகிய நிலைகளில் உள்ளிச்சாறு பிரதான அருந்து நீராக சித்த மருத் துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. மேலும், அதி இரத்த அழுத்தம் (Hy-pertension), பாரிசவாதம் போன்ற நோயாளிகளில் உள்ளியைப் பயன் படுத்தும்போது இரத்த கொலஸ்ட்ரோலை (Blood Cholesterol), குறைப்பதாகவும் Anti coagulant ஆக தொழிற்படுவதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



இவ்வகையான நிலையில் சித்த மருத்துவத்தில் பூண்டுத்தேன் பயன்படுத்துகின்றனர். மேலும் இவ்வகையான நோயாளிகளில் உள்ளி, வெங்காயச்சாற்றுடன் தேன் கலந்து கொடுப்பதனால் சிறந்த பலனைக் காணமுடியும்.

மேலும் உள்ளியானது சிறுநீர்ப் பெருக்கியாக (Diuretic), தொழிற்படுவதோடு விந்துபாயத்தை அதிகரிப்பதுடன், பாற்சுரப்பையும் கூட்டுகிறது. மயக்க நிலையில் உள்ளிச்சாறானது நசிய சிகிச்சைக்காக பயன்படுத்தப்படுகின்றது. முகவாதம் (Facial paralysis), கிருத்தசிவாதம் (Sciatica) போன்ற நிலைகளில் உள்ளியைப் பயன்படுத்தலாம்.

ஊர்மக்கள் சாதாரண வயிற்றுக் குத்து நிலையில் உள்ளியைச் சுட்டு சாப்பிட்டு குணம் காண்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. தேமலின் மேல் உள்ளிச்சாறு பூசும் போது சிறந்த பலன் கிடைக்கிறது. வாத நோய்களில் உள்ளி, வெந்தயம் அவித்த நீரானது அனுபானமாக சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப் படுகின்றது. உள்ளியிலிருந்து தயாரிக்கப்பட்ட வெள்ளை வெங்காய மாத்திரை வாதநோய்கள், அஜீரணம், வயிற்றுவலி, அதிகுருதி அமுக்க நிலை போன்ற பல நோய் நிலை களைக் குணப்படுத்துகின்றது.

தமிழர்களாகிய நாங்கள் எமது பண்பாட்டு மரபுகளை மறந்துவிட்டு மேற்குலக நாகரிக மோகத்தில் வாழ்கின்றோம். எமது பண்பாட்டு மரபுகளை வேறு நாட்டவர்கள் பாதுகாக்கப்போவதில்லை. நாமே எமது பண்பாட்டு மரபுகளை அழிய விடாது பாதுகாக்க வேண்டும். களனிப் பல்கலைக்கழகம் ஆயுர் வேத சத்திரசிகிச்சையில் முது விஞ்ஞானமாணி (MSc) கற்கைநெறி, ஆயுள்வேத சிகிச்சையில் முதுவிஞ்ஞான மாணி (MSc) கற்கைநெறிகளையும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆயுள்வேத நிபுணத்துவ பட்டப் பின்படிப்பு (MD Ayurveda), சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் சுதேச அறிவு மையமும், ஆயுள் வேத முதுவிஞ்ஞானமாணி கற்கைநெறியும், பௌத்த பாளி பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய உளவியல் கற்கைநெறியும், பேராதனை பல்கலைக்கழகத்தில் மருந்தியலுக்கான தாவரவியல் முதுவிஞ்ஞானமாணியும் (MSc) நடத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை நிபுணத்துவ பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகளை தமது நாற்பது ஆண்டுகால பயணத் தில் நடத்தாமல் இருப்பதும், மூலிகை மருத்துவ விஞ்ஞானிகளை உருவாக்காமல் இருப்பதும் தமிழரே தமிழர் தம் அழிவுக்கு காரணமாக அமைவதும் வேதனைக்குரியது.

(வளரும்)



டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்
BSMS, P.G.Dip in Pub Adm, M.Sc
மூலிகை சுகவாழ்வு நிறுவனம்,
தெல்லிப்பழை.

# சுபநேரங்களை சுயமாக

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

(அட்டவணை 02)

| வளர்பிறை படுபட்சி நாட்கள் | | |
|---|---|---|
| வல்லூறு | வியாழன் | சனி |
| ஆந்தை | ஞாயிறு | வெள்ளி |
| காகம் | திங்கள் | |
| கோழி | செவ்வாய் | |
| மயில் | புதன் | |

| தேய்பிறையில் படுபட்சி நாட்கள் | | |
|---|---|---|
| வல்லூறு | செவ்வாய் | |
| ஆந்தை | திங்கள் | |
| காகம் | ஞாயிறு | |
| கோழி | வியாழன் | சனி |
| மயில் | புதன் | வெள்ளி |

**7. அதிர்ஷ்டகரமான திசையை எவ்வாறு தெரிவு செய்வது?**

நாம் அன்றாடாடம் மேற்கொள்ளும் அனைத்து சுப நிகழ்வுகளும் சுப திசையை நோக்கிச் செய்யவேண்டும் என்ற நியதி முக்கியமாக கடைப்பிடிக்கப்படுகின்றது. இவ்வாறு சுப திசையை நோக்கி நமது காரியங்களை தொடங்குவதால் அனைத்தும் வெற்றியும், மேன்மையும் கொண்டுவந்து தருவதாக சொல்லப்படுகின்றது. மேலே உள்ள ஆறு விடயங்களையும் நீங்கள் சரியாகக் கடைப்பிடித்து, இதில் தவறு செய்தாலும் உங்களுக்கு முழுமையான பலன்கள் கிடைக்காது என்பதுவே உண்மை.

திங்கள் முதல் ஞாயிறு வரையுள்ள கிழமை நாட்களில் குறித்த திசைகளில் சூலம் இருப்பதால் அத்திசையை நோக்கி பயணங்கள் மற்றும் சுபகாரியங்களை செய்யவேண்டாமென ஜோதிட சாஸ்திரம் எச்சரிக்கின்றது. சூலம் என்றால் அதிகமான வெப்பம் அல்லது சூடு என்பது பொருளாகும்.

சூலம் உள்ள திசைகளைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| திங்கள் | - | கிழக்கு (கூடாது) |
| செவ்வாய் | - | வடக்கு (கூடாது) |
| புதன் | - | வடக்கு (கூடாது) |
| வியாழன் | - | தெற்கு (கூடாது) |
| வெள்ளி | - | மேற்கு (கூடாது) |
| சனி | - | கிழக்கு (கூடாது) |
| ஞாயிறு | - | மேற்கு (கூடாது) |

(அட்டவணை 05)

| | | |
|---|---|---|
| 1. 1, 10, 19ம் நட்சத்திரங்கள் | - | மனக்கிலேசம் உண்டாகும். |
| 2. 2, 11, 20ம் நட்சத்திரங்கள் | - | செல்வம், சம்பத்து உண்டாகும். |
| 3. 3, 12, 21ம் நட்சத்திரங்கள் | - | விபத்து ஏற்படுத்தும். |
| 4. 4, 13, 22ம் நட்சத்திரங்கள் | - | சுகங்களை அளிக்கும் |
| 5. 5, 14, 23ம் நட்சத்திரங்கள் | - | காரிய நாசத்தினைக் கொடுக்கும். |
| 6. 6, 15, 24ம் நட்சத்திரங்கள் | - | தெய்வ அனுக்கிரகத்தினை அளிக்கும். |
| 7. 7, 16, 25ம் நட்சத்திரங்கள் | - | துன்பங்களைக் கொடுக்கும். |
| 8. 17 வது நட்சத்திரம் | - | சந்திராஷடமம் (அதிக தீமை) |
| 9. 8, 26ம் நட்சத்திரங்கள் | - | சுகங்களைக் கொடுக்கும். |
| 10. 9, 18, 27ம் நடசத்திரங்கள் | - | அதிக சுகங்களைக் கொடுக்கும். |

அதிர்ஷ்டகரமான சுப நேரத்தினை தெரிவுசெய்யும்போது மேலே சொல்லப்பட்ட (07) ஏழு வகையான விடயங்களையும் கவனத்திற்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாமல் வெறுமனே நாட்காட்டியிலும், நாளேடுகளிலும், ஊடகங்களிலும் கொடுக்கப்படும் பொதுவான சுப நேரங்களை மட்டும் கவனத்திற்கொண்டு முக்கிய சுப காரியங்களை செயல்படுவதால் எவ்வித நன்மையும் அதிர்ஷ்டமும் நிச்சயமாக ஏற்படப் போவதில்லை என்பதை அனைவரும் நினைவிற்கொள்ளல் வேண்டும்.

எனவே கொடுக்கப்பட்டுள்ள பொதுவான சுப நேரமானது உங்கள் சுபகாரியத்திற்கு உசிதமானதா என்பதை நிச்சயமாக நீங்கள் பரிசோதித்து அறிய வேண்டும்.

இதற்கு உங்கள் சுய ஜன்ம ஜாதகம் சரியாகக் கணிக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். மேலே சொன்ன விதிகளை அனுசரித்து நீங்களே உங்கள் ஜன்ம ஜாதகத்தின் துணையோடு தினசரி உங்களுக்கான அதிர்ஷ்ட நேரங்களை சரியாக அமைத்து செயல்பட்டு அனைத்துவித நன்மைகளை அதிர்ஷ்டங்களையும் பெற்றுக்கொள்வீர்களாக.

# வெடிமணியம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*வெள்ளைத்தோல் போர்த்திய மனித உரிமை கனவான்களுக்கும் அது தெரியும்.*

*வெறுமனே மண்டைஓடுகள் எத்தனை என்ற கணக்கோடு இந்தப் புதைகுழியும் மூடப்படும்.*

*இதைத்தானே கடந்த காலத்திலும் செய்தார்கள்.*

*எங்களுக்கான "நீதி" என்பது எட்டாக்கனிதான்.*

*இந்த லட்சணத்தில் "குருந்தூர்மலை விகாரைக்கு" படையெடுத்து வந்து பௌத்த பேரினவாதிகள் முல்லைத்தீவில் முகாமிட்டு தங்களின் நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.*

*நாடு கிடக்கும் நிலையில் ரணில் அரசின் அமைச்சர்களும் பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனை கொண்ட அரசியல்வாதிகளும் முல்லைத்தீவில் "முகாமிட்டு" குருந்தூர் மலையில் அடாத்தாக கட்டப்பட்டுள்ள விகாரைக்கு வந்து போவதன் பின்னணி என்ன?*

*இந்த விவகாரம் நல்லபிள்ளைக்கு நடிக்கும் ஜனாதிபதி ரணிலுக்கு தெரியுமா ? தெரியாதா?*

*அல்லது இதுவும் ஒரு ரணில் - ராஜபக்ஷ அரசின் மறைமுக நடவடிக்கையா?*

*நீதிமன்ற கட்டளையை மீறி குருந்தூரில் அமைக்கப்பட்ட விகாரை தொடர்பான விவகாரம் நீதிமன்றத்தில் "சூடு" பிடித்துள்ள நிலையில்;*

*அந்த "தப்பை" மூடி மறைத்து நீதிமன்ற நடவடிக்கைகளை திசை திருப்பவே பௌத்த பேரினவாத சிந்தனைகொண்ட ஒரு சிலர் முல்லைத்தீவில் முகாமிட்டு இருப்பதாக உணரமுடிகிறது.*

*சீரழிஞ்சு போய் இருக்கும் நாட்டை கட்டியெழுப்ப "எல்லாரும்" ஒன்றாக வரவேண்டும் என்று ஒருபுறத்தே கூவிக்கொண்டு;*

*மறுபுறத்தே தமிழர் தாயகமெங்கும் "கபளீகரம்" செய்துகொண்டிருக்கிறது ரணில் - ராஜபக்ஷ அரசு.*

*இந்தக் கிழமையும் முல்லைத்தீவு கேப்பாப்புலவு மக்கள் தங்கள் சொந்த நிலங்களை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும் என போராடினார்கள்.*

*2009 இக்கு பிறகு 14 ஆண்டுகளாக அந்த மக்கள் விடாமல் தொடர்ச்சியாக போராடுகிறார்கள்.*

*ஆனாலும் இராணுவம் தமிழ்மக்களின் சொந்த நிலங்களை விட்டு வெளியேறாமால் அடாத்தாக இருக்கிறார்கள்.*

*"இந்தா விடுகிறம், அந்தா விடுகிறம்" என்ற ஏமாற்று வாக்குறுதிகளை ரணில் - ராஜபக்ஷ அரசுக்கு முட்டுக்கொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகள் காலத்துக்குக்காலம் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.*

*எத்தனை நாளைக்குத்தான் இவர்களின் "திருகுதாளம்" நிலைக்கும் எண்டு அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.*

*ஏற்கனவே இந்தப் பத்தியில் அடிக்கடி சொன்னது போல;*

*வடக்கும் கிழக்கும் "பத்தி எரியும்போது" அதில் தெற்கு மக்கள் குளிர்காய்ந்தால்.........*

*மீண்டும் ஒரு காலமாற்றத்தில் "தெற்கு" பத்தி எரிஞ்சு மீண்டும் கோல்பேசில் நிண்டு "ஐயோ காப்பாத்துங்கோ" எண்டு குழறி அழும்போது;*

*வடக்கும் கிழக்கும் "மௌனமாகவே" வேடிக்கைப் பார்க்கும் நிலைதான் வரும்.*

*அப்ப வந்து ஒருசில "நல்லெண்ண நக்கிகள்" ஏதாவது எங்களுக்கு கருத்துச் சொல்ல வெளிக்கிட்டால்;*

*அம்மாவாணை வாற விசருக்கு அடிக்கிற அடியில வாயால "தாய்ப்பால்" கக்கும்.*

*இண்டைக்கு வடக்கு, கிழக்கில் நிகழும் "அநியாயங்களை" தட்டிக்கேட்க துப்பில்லாத எந்த "நல்லிணக்க நக்கிகள்" எவருக்கும் உண்மையில் இந்த நாட்டின் மீள் எழுச்சியில் அக்கறை இல்லை.*

*- மன்னார் தொடக்கம் முல்லைத்தீவு வரை மனிதப் புதைகுழிகள் இந்த உலகத்தின் கண்முன்னே வெளித்தெரிகிறது!*

*- அடாத்தாக தமிழர் நிலங்கள் சிங்கள இராணுவம் பிடித்து வைத்திருக்கிறது!*

*- சட்டத்துக்குப் புறம்பாக நீதிமன்ற கட்டளைகளையும் மீறி சைவ அடையாளங்கள் அகற்றப்பட்டு புத்த விகாரைகள் கட்டப்படுகின்றன!*

*உலக நாடுகள் இந்த விடயங்கள் பற்றி சொல்லுவதை விடுவம். அது இரண்டாம் கட்டம்.*

*சிறிலங்காவில் வாழும் சிங்கள் மக்களின் நிலைப்பாடு என்ன?*

*முப்பது ஆண்டுகளாக அடக்கி ஒடுக்கி இனப்படுகொலை செய்யப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு என்ன பதிலை "சிங்கள மக்கள்" சொல்லப்போகிறார்கள்?*

*சிங்கள் அரசியல்வாதிகளை விடுவம். ஏனெண்டால் அவர்கள் மனம் மாறவோ அல்லது திருந்தவோ அல்லது தமிழர்களுக்கு நிகந்த அநியாயங்களை ஏற்றுக்கொள்ளவோ போவதில்லை.*

*நாங்கள் கேட்பது கோல்பேசில் நிண்டு தமிழர்களை நோக்கி "நல்லெண்ண கைகளை" நீட்டிய தெற்கு மக்களிடம்தான்.*

*சிறிலங்காவில் நிகழ்ந்த "இனப்படுகொலையை" நல்லிணக்கம் பேசும் தெற்கு மக்கள் முதலில் ஏற்றுக்கொள்ளவேணும்.*

*அதில் இருந்துதான் "சிறிலங்காவின் மீள் எழுச்சியும்" பொருளாதார ஸ்திரத்தன்மையும் நிலையானதாக இருக்கும்.*

*பல உலக நாடுகளின் வரலாற்றுப் பக்கங்களை புரட்டிப்பார்த்தால்;*

*ஒரு நாட்டில் இன்னொரு சக இனம் அடக்குமுறைக்கு உள்ளானதை அந்த நாட்டில் உள்ள பெரும்பான்மை இனம் ஏற்றுக்கொண்டால் மட்டுமே அந்த நாட்டில் நிரந்தர சமாதானமும் அரசியல் எழுச்சியும் நடக்கும்.*

*ஆக;*

*2009 இலும் அதுக்குப் பிறகும் ராஜபக்ஷ அரசால் தொடரப்பட்ட "இனப்படுகொலையின்" நீட்சியை இப்போது ரணில் - ராஜபக்ஷ அரசு தொடர்கிறது.*

*2009 இல் மிகத் தெளிவாக வெளிப்படையாக நிகழ்த்தப்பட்ட "இனப்படுகொலை" இன்று தமிழர் தாயகமெங்கும் மறைமுகமாக நிகழ்கிறது.*

*உயிர்களை கொல்வது மட்டும்தான் "இனப்படுகொலை" என்றாகாது.*

*ஓர் இனத்தின் வாழ்வியலையும் இருப்பையும் அவர்களது மொழியையும் கலாசாரத்தையும் அழிப்பதும் இனப்படுகொலைதான்.*

*ஐக்கிய நாடுகள் சபை அப்படித்தானே சொல்கிறது.*

*அப்படியெண்டால் சிறிலங்காவில் இன்றுவரைக்கும் தமிழர்கள் மீதான "இனப்படுகொலை" நிகழ்ந்துகொண்டுதானே இருக்கிறது.*

*"சிறிலங்காவில் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுகின்றன" எண்டு முதலைக்கண்ணீர் வடிக்கும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கண்களுக்கு முல்லைத்தீவில் தோண்டப்படும் மனிதப் புதைகுழிக்குள் யார் இருக்கிறார்கள் என்று தெரிய வாய்ப்பேயில்லை.*

*ஏனெண்டால்;*

*2009 தொடக்கம் இண்டுவரைக்கும் சிறிலங்காவில் ஒரு இனம் "இனப்படுகொலை" செய்யப்பட்டுக்கொண்டேயிருக்கிறது என்பது சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கு தெரிஞ்சாலும்;*

*அவர்களால் "சுதந்திரமாக" வாய்திறக்க முடியாது.*

*காரணம் சிறிலங்காவில் கொல்லப்பட்டது "தமிழர்கள்". இந்த இனத்தைப் பற்றிய அக்கறை எந்த சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இல்லை.*

*இதேபோல ஒண்டு ஆப்கானிஸ்தானிலோ அல்லது உக்கிரேனிலோ நிகழ்ந்தால் உடனே ஓடிப்போய் "நீலிக்கண்ணீர்" வடிப்பார்கள்.*

*இதுதான் இன்றைய புதிய "உலக ஒழுங்கு"!*

*ஈழத்தமிழர்களை " கடவுள்தான் காப்பாற்றவேணும் "!*

# அரசியல்வாதிகளின் பதவிக்கு ஆப்பு வைக்கும் வழக்குகள்

**ரமணி**

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரேயொரு எம்.பியான ஓ.பி.எஸ்.ரவீந்திரநாத்குமாரின் தேர்தல் வெற்றி செல்லாதென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரேயொரு எம்.பியான ரவீந்திரநாத்குமாரின் எம்.பி. பதவிக்கு ஆபத்து வந்துள்ளது.

பன்னீரின் மகனான ரவீந்திரநாத்குமாரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கிவிட்டதாக அறிவித்த எடப்பாடியார், இந்தத் தீர்ப்பால் அதிர்ச்சியடைந்துள்ளார். எடப்பாடியின் எதிரியான பன்னீரின் மகனின் பதவி பறிப்பு அவருக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் உண்மையான சொத்து விபரம் வெளியிடப்படவில்லை என்ற குற்றச்சாட்டில் ரவீந்திரநாத்குமாரின் எம்.பி. பதவி பறிக்கப்பட்டுள்ளது. இதேபோன்ற குற்றச்சாட்டு எடப்பாடி மீதும் சுமத்தப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

வாக்காளர் ஒருவரால் தேர்தலில் வெற்றி பெற வைக்க முடியும். அதே வாக்காளரால் அந்தப் பதவியைப் பறிக்க முடியும் என்பதை ரவீந்திரநாத்குமாரின் வழக்கு நிரூபித்துள்ளது. விஜயின் படம் பார்ப்பது போன்ற அனுபவத்தைக் கொடுத்துள்ளது.

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் மகன், ஓ.பி.ரவீந்திரநாத்குமாரின் வெற்றி செல்லாதென நீதிமன்றம் அதிரடி தீர்ப்பளித்துள்ளது. எனினும், மேன்முறையீடு செய்ய ஏதுவாக 30 நாட்களுக்கு தீர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேனி தொகுதியில் ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ரவீந்திரநாத்குமார் போட்டியிட்டார். அவர் காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை விட சுமார் 76 ஆயிரம் வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றார். ரவீந்திரநாத்குமாரின் வெற்றியை எதிர்த்து, தேனி தொகுதி வாக்காளர் மிலானி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த மனுவில், சொத்து விவரங்களை மறைத்து வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து ரவீந்திரநாத்குமார் தேர்தலில் வெற்றிபெற்றதாக குறிப்பிட்டிருந்தார். எனவே, அவரது வெற்றி செல்லாதென அறிவிக்க வேண்டும் என மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. இரு தரப்பு வாதங்கள் நிறைவடைந்திருந்த நிலையில், திகதி குறிப்பிடப்படாமல் தீர்ப்பு ஒத்திவைக்கப்படடிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.எஸ்.சுந்தர் கடந்த வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கினார். தேனி தொகுதியில் ஓ.பி.ரவீந்திரநாத்குமாரின் வெற்றி செல்லாது என அதிரடி தீர்ப்பளித்தார். இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்ய ஏதுவாக இந்தத் தீர்ப்பை 30 நாட்களுக்கு நிறுத்திவைக்க வேண்டும் என்று ரவீந்திரநாத்குமாரின் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, இந்தத் தீர்ப்பை 30 நாட்களுக்கு நிறுத்திவைத்து உத்தரவிட்டுள்ளார். எனவே, 30 நாட்களுக்கு இந்தத் தீர்ப்பு அமுலுக்கு வராது. ரவீந்திரநாத்குமார் மேன்முறையீடு செய்து தனது பதவியை காப்பாற்றியுள்ளார்.

எம்.பி, எம்.எல்.ஏக்கள் மீதான மற்ற வழக்குகளைப்போலல்லாமல் இந்த வழக்கில் விசாரணையை சீக்கிரமாக நடத்தி முடித்துள்ளனர். சிதம்பரத்தின் மீதான வழக்கில் அவரது பதவிக்காலம் முடிந்த பிறகே தீர்ப்பு வந்தது. பெரும்பாலான நேரங்களில் பதவிக்காலம் முடிந்த பிறகே தீர்ப்பு வந்துள்ளது.




ஆனால், இந்த முறை சீக்கிரமாகத் தீர்ப்பு வந்துள்ளது ஆச்சரியமாகவே இருக்கிறது. இன்றைய சபாநாயகர் அப்பாவு சட்டமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் தொடுத்த வழக்கின் தீர்ப்பு இன்னமும் வெளியிடப்படவில்லை. ரவீந்திரநாத்குமாரின் வழக்குத் தீர்ப்பு விரைவாக வெளியானதால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

ரவீந்திரநாத்குமார் பொறுப்பு வகித்த நிறுவனத்தின் பங்குகளையும், தான் நிர்வகித்து வந்த நிறுவனத்தில் 45 இலட்சம் அளவுக்குப் பெற்ற சம்பளத்தையும், அவரது தம்பிக்கு கொடுக்க வேண்டிய ரூ. 66 இலட்சம் கடனையும், தான் பெற்ற வீட்டுக் கடனையும், சொத்துகளை அடமானம் வைத்து வாங்கிய கடனையும் தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் காட்டாமல் மறைத்துள்ளார். இதில் ஒன்றிரண்டை குறிப்பிட்டு தங்க தமிழ்ச்செல்வன் எழுத்துப்பூர்வமாக மனு தாக்கல் செய்தார். தங்க தமிழ்ச்செல்வன் முன்னர் பன்னீருக்கு ஆதரவாக இருந்து எம்.எல்.ஏ. பதவியைப் பறிகொடுத்தவர்.

ஒரு மனு வந்தால் அதை விசாரித்து முடிவெடுத்துத்தான் மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டுமா, இல்லையா என்பதைச் சொல்ல வேண்டும். ஆனால், அதைச் செய்யாமல் அதிகார துஷ்பிரயோகமாக தேர்தல் அதிகாரி அவரது வேட்பு மனுவை ஏற்றுக்கொண்டார். இதனை எதிர்த்து தேனி தொகுதி வாக்காளர் மிலானி, தேர்தல் வழக்கு தாக்கல் செய்தார்.

**ஆதாரங்கள்:**

ஓ.பி.ரவீந்திரநாத்குமார் பங்கு வகிக்கும் நிறுவனத்தின் ஆவணங்கள், வருமான வரி பேலன்ஸ் ஷீட்டுகள், சம்பளம்



பெற்றதற்கான விவரங்கள் என அரச காப்பகங்களிலுள்ள ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது .

நீதிமன்றத்திலேயே தான் இந்த வேட்பு மனுவை சரியாகப் பரிசீலிக்கவில்லை என்பதை தேர்தல் நடத்தும் அதிகாரி, ஒப்புக்கொண்டார். மேலும், ரவீந்திரநாத்குமார் தவறாக வேட்பு மனுவில் குறிப்பிட்டதற்கான ஆவணங்களையும் தேர்தல் அதிகாரியே தாக்கல் செய்தார். ஓ.பி.ரவீந்திரநாத்குமாரிடம் கிட்டத்தட்ட 6 நாட்கள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதில், அவர் மீதான தவறு நிரூபிக்கப்பட்டு, அவரது வெற்றி செல்லாதென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. கொரோனா காரணமாக 3 ஆண்டுகள் ஒழுங்காக விசாரணை நடக்கவில்லை. பின்னர் தலைமை நீதிபதியிடம் முறையிட்டு சிறப்பு வழக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு கடந்த ஓராண்டாக தொடர்ந்து வழக்கு நடைபெற்று வந்தது. ரவீந்திரநாத்குமார் உச்ச நீதிமன்றம் சென்று இடைக்கால தடை வாங்க முயற்சித்தும் அவரது மூன்று மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

இதேவேளை, அமைச்சர் பொன்முடிக்கு எதிரான நில அபகரிப்பு வழக்கில் அவர் நிரபராதி என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது இதனால் திராவிட முன்னேற்றக் கழகம் மகிழ்ச்சியடைந்துள்ளது.

1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை அமைச்சராக இருந்த பொன்முடி, போலி ஆவணங்களைத் தயாரித்து சைதாப்பேட்டையிலுள்ள 3,630 சதுர அடி நிலத்தை தனது மாமியார் சரஸ்வதி பெயரில் பதிவு செய்ததாக புகார் எழுந்தது.

இந்த வழக்கில் பொன்முடி உள்ளிட்ட 10 பேர் மீது இலஞ்ச ஒழிப்புத்துறையினர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். கடந்த 2007ஆம் ஆண்டு இந்த வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம் பொன்முடி உள்ளிட்டோரை விடுவித்தது.

இதை எதிர்த்து இலஞ்ச ஒழிப்புத் துறை வழக்கு தொடுத்த நிலையில், சிறப்பு நீதிமன்ற உத்தரவை இரத்து செய்து வழக்கை மீண்டும் நடத்த உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. தொடர்ந்து, இதுதொடர்பாக 90க்கும் மேற்பட்ட சாட்சிகளிடம் அரச தரப்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜெயவேல், குற்றம் நிரூபணமாகவில்லை எனக் கூறி அமைச்சர் பொன்முடி உட்பட 7 பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார். போலி ஆவணம் தயாரித்ததற்கான போதிய சான்றாதாரத்தை அரசு சமர்ப்பிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அண்ணா திராவிட முன்னேறக் கழகத்தின் முன்னாள் அமைச்சர்கள் மீதுள்ள ஊழல் வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை ஆரம்பிப்பதற்குத் தேவையான இசைவு ஆணையை விரைந்து அனுப்புமாறும், மாநில அரசு நிறைவேற்றி அனுப்பியுள்ள சட்ட மசோதாக்களுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறும் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி கடிதம் எழுதியதாக வெளியான செய்தி அரசியல் அரங்கில் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர் செந்தில் பாலாஜியின் பதவியைப் பறிக்க கடிதம் எழுதிய தமிழக ஆளுநர் ரவி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் அமைச்சர்களான கே.சி.வீரமணி எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோரைக் காப்பாற்ற முயற்சி செய்கிறாரோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்திய பாராளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் உறுப்பினராக இருக்கும் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு எதிராக வழக்குகள் உள்ளன. இந்திய மத்திய அரசுக்கு எதிரானவர்களின் மீதான வழக்குகளின் தீர்ப்புகள் விரைவாக வெளியாகின்றன. பாரதீய ஜனதாக் கட்சியில் இணைபவர்களுக்கு எதிரான வழக்குகள் கிடப்பில் போடப்படுகின்றன.

---

**"வவுனியா வடக்கு காஞ்சிரமோட்டை கிராம மக்களின் அவல வாழ்க்கைக்கு"**

**(08ஆம் பக்கத் தொடர்ச்சி)**

நாம் நீதிமன்றத்திற்கு சென்று வருகிறோம். அதுமட்டுமன்றி இங்கு யானை நடமாட்டமும் உள்ளது. மாலை 4 மணிக்குப் பின்னர் நாம் நடமாடிக்கொண்டே இருப்போம். ஏனெனில், இது சிறுவர்கள் வசிக்கும் இடமாகும். அதுமட்டுமன்றி காலையிலும் யானைகள் வரும். நமக்கு இதற்கான வேலியும் அடைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறோம். இங்கு குடிநீர்ப் பிரச்சினை உள்ளது. குடிநீர் வசதி செய்வதற்கான பொருட்கள் கொண்டுவந்து வைத்துள்ளார்கள். ஆனால், இன்னும் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கவில்லை.




அதனையும் விரைவாக செய்து தருமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த விடயம் குறித்து மற்றுமொருவர் தெரிவிக்கையில்

வணக்கம் எனது பெயர் தியாகராஜா. நான் காஞ்சிரமோட்டை கிராமத்திலிருந்து பேசுகின்றேன். நான் மருதோட ஆடியஸ் செயலாளர். இந்த காஞ்சிரமோட்டை கிராமமானது ஆரம்பத்திலிருந்து கேள்விப்பட்ட விடயம். இந்த கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்டு சரியான விதத்தில் இந்த மக்கள் குடியேற்றப்படாத காரணத்தினால் இன்றுவரை இந்த மக்கள் வாழ்வாதாரப் பிரச்சினையில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த மக்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லையாதலால் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் இந்த கிராமத்திற்கு வந்துள்ளார். ஆறு மாத காலத்தில் நமக்கு தெரிவுபெற்று தருவதாகக் கூறினர். ஆனால் இன்னும் ஒரு தீர்வும் கிடைக்கவில்லை. அதேபோல் பல அரச உத்தியோகத்தர்கள், தலைவர்கள், அமைச்சர்மார் போன்றோர் இங்கு வந்துள்ளனர். ஆனாலும் இந்த மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்காமல் இந்த மக்கள் மிகவும் அவதிப்படுகின்றார்கள். நாங்கள் உங்களிடம் கேட்டுக்கொள்ளும் விடயம் என்னவென்றால், இந்த மக்களின் காணிகளை விட்டுக்கொடுத்து அவர்களுடைய வாழ்வாதாரமாக விளங்கும் விவசாயத்தை நடத்துவதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சுமார் ஆறு மாத காலத்திற்கு முன்பாக வவுனியா மாவட்டத்தில் தற்போது ஜனாதிபதியாகிய ரணில் விக்கிரமசிங்கவால் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. டிசிசியால் வவுனியாவில் உள்ள காணிகளை விடுவிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. அந்த கிராம பட்டியலில் இந்த கிராமமும் ஒன்று. இந்த கிராம காணிகளை விடுவித்து மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஜனாதிபதியால் கட்டளை விடுக்கப்பட்டும் இன்றுவரை இந்த மக்களுக்கான காணி விடுவிக்கப்படவில்லை.

நம் மக்கள் தமது கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் இல்லாமல் உள்ளது. இந்த மக்கள் சிறிய ஒரு புதரை அகற்றினால் கூட வனவிலங்கு அதிகாரிகளால் நீதிமன்றத்தில் வழக்கிடப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இப்போது இலங்கையில் நடைபெறும் பொருளாதாரப் பிரச்சினையில் பொருட்களின் விலை உயர்வடைந்து காணப்படுகிறது. இந்த நிலையில் இந்த மக்கள் ஒரு வாழ்வாதாரம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். யுத்த காலத்தின் பின்பு மீள்குடியேற்றப்பட்ட மக்கள் இவர்களாவர். இந்தக் கிராமமானது பழைய கிராமமாகும். இங்கு 350 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்தக் கிராமத்தில் பல பண்ணைகள் காணப்படுகின்றன. வீதி காணப்படுகின்றது. பலரிடம் காணிகளுக்கான பேர்மிட் காணப்படுகிறது. கிணறுகளும் காணப்படுகின்றன. இங்கே முன்னர் மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கான ஆதாரம் பல காணப்படுகின்றன. எல்லாராலும் அவதானிக்கக்கூடிய விடயம் என்னவென்றால், இந்த கிராமத்தின் தேர்தல் பத்திரம் பதியும்போது காஞ்சிரமோட்டின் நாவல் பண்ணை என்னும் பழைய பத்திரத்தில்தான் தற்போதும் மக்கள் பதிந்து வருகின்றார்கள்.

ஒரு புதிய கிராமத்தைக் கட்டியெழுப்பினால் அதற்கு பதிவு செய்ய வேண்டும். அப்படி பதிவு செய்தால்தான் தேர்தல் நடத்த முடியும். ஆனால், இந்த கிராமத்தில் பழைய பதிவு காணப்பட்டதால் இன்னும் பழைய தேர்தல் பத்திரம் பதிந்துவருகிறோம். இங்கு ஒரு பாடசாலையும் காணப்பட்டது. அதற்கான சான்றுகளும் காணப்படுகின்றன. ஒரு தனிநபரிடமிருந்து அரசாங்கம் பாடசாலைக்கான காணியை பெற்றுக்கொண்டு விற்றுள்ளது. இதற்கான சான்றுகளும் உள்ளன. இந்த சான்றுகளை நாம் பல அரச அதிகாரிகளிடம் சமர்ப்பித்தும் எமக்கான தீர்வு இன்னும் கிடைக்கவில்லை. கூடிய சீக்கிரம் இந்த காணி விடுவிக்கப்படும் என்பதை இந்த மக்களின் எதிர்பார்ப்பாகும். பலநாள் போராட்டத்தின் பின்னர் மற்றும் மின்சார வசதி கிடைக்கப்பெற்றது. வீதி திருத்தப்படுவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றும் நாடு வீழ்ச்சியடைந்த காரணத்தினால் அது முடியாமல் போனது.

அதனால் பாடசாலை மாணவர்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர். இங்கிருந்து இரண்டு கிலோமீற்றர் நடந்து சென்றேன். பஸ்ஸில் பயணிக்கவேண்டி உள்ளது. தற்போதுதான் பஸ் வசதி கிடைக்கப்பெற்றது. முன்பு ஏழு கிலோ மீற்றர் தூரம் பாடசாலை மாணவர்கள் காட்டுப்பகுதியில் நடந்து சென்றே பஸ்ஸில் பயணித்தனர். எப்போது பாடசாலை மாணவர்களின் சிரமத்தை புரிந்துகொண்டு அரசாங்கம் ஒரு பஸ்ஸை வழங்கியுள்ளது. இருந்தபோதும் வீதி ஒழுங்கற்ற காரணத்தால் அந்த பஸ்ஸும் பயணிக்க கஷ்டமாக உள்ளது. மழை பெய்தால் பாடசாலை மாணவர்கள் சீருடை அணிந்து சென்றுவர முடியாத ஒரு நிலையில் காணப்படுகிறோம். இங்கிருந்து ஒரு அவசர தேவைக்காக வைத்தியசாலை செல்ல வேண்டும் என்றாலும் வவுனியாவுக்குத்தான் செல்ல வேண்டும். இதற்கான போக்குவரத்து வசதி இங்கு இல்லை. இந்த வீதியானது எமக்கு மிகக் கஷ்டமாக உள்ளது.

கதிர மலர் வெள்ளையம்மா என்பவர்



குறிப்பிடுகையில் நான் இந்த ஊரில் வசித்து வருகிறேன். முன்னர் நாங்கள் வசதியாகத்தான் இருந்தோம். இங்கு வந்த பின்புதான் கஷ்டம் ஏற்பட்டது. ஐயாவிற்கும் வருத்தம் ஏற்பட்டது. எம்மை தடி வெட்டவோ மண் கொத்தவோ யாரும் அனுமதிக்கவில்லை. இப்படி இருந்தால் நாம் எப்படி முன்னேறுவது? இங்கு தண்ணீருக்கும் பஞ்சம் காணப்படுகிறது. ஏனெனில் இங்கு கிணறு இல்லை. தண்ணீர் காணப்பட்டால் பரீட்சையை செய்து நாம் பிழைத்துக்கொள்வோம். போக்குவரத்தும் பிரச்சினையாகத்தான் காணப்படுகிறது. நமக்கு மட்டுமல்ல, இந்த ஊரில் உள்ள அனைத்து மக்களும் இந்தப் பிரச்சினையால் அவதிப்படுகிறார்கள். எனது மகன் கூலி வேலைக்கு செல்கிறார். அவரை நம்பியே நாங்கள் இருக்கிறோம்.







எனது மூத்த மகன் காணாமல் போய்விட்டார் - எனத் தெரிவித்தார்

ஆகவே இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த மக்கள் காஞ்சிரமோட்டை கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோதும் வனஇலாகா திணைக்களம் அம்மக்களின் காணிகளை வன இலாகாவிற்கு சொந்தமானது என தெரிவித்து அவர்களுக்கான அனுமதியை வழங்க மறுத்து வருகிறார்கள்.

இதன் காரணமாக காஞ்சிரமோட்டையில் மீள் குடியேறிய மக்கள் வாழ்வாதாரத்துக்கு பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதுடன், தமது வாழ்வதற்கான சாதக நிலைமைகள் மறுக்கப்பட்டவர்களாக வாழ வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

இத்தகையதொரு மோசமான நிலைமையானது வெகு விரைவாக மாறவேண்டும என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

# எரியும் ஏரியா மலை!

ஹஜ்ஜுப் பெருநாளும் முடிந்தாச்சு
கடைக்கு போகணும் எழும்புங்களேன்
அஞ்சாறுநாளா கிடக்குறீங்க
அந்தாளும் குழம்புவானே..!

சீட்டுக்காசும் முதல்தேதி கொடுக்கணும்
சீறியெழுவார் ரசீதா ராத்தாவும்
வீட்டுப் பிரச்சின விளங்காம
வீட்டோட கிடக்குறீங்க நீங்க..!

உடுப்பு வாங்கின காசும் கொடுக்கணுமே
ஊருக்குள்ள சின்ன கடனுகளும் கிடக்கு
அடுப்புகேசும் அன்னாஇன்னா
அதுவும் முடிஞ்சிதோ அதோகதிதான்..!

மூத்த மச்சானும் ராதாவுக்கு
மூணுலட்சம் அனுப்பினாரு
நேத்துப் போறாங்க குடும்பமாய்
நுவரலியா சுத்தி வரவாம்..!

மதினி மாரும் பாசிக்கூடாபோய்
மறுநாள்தான் வந்தாங்க
புதினம் பார்க்கயாச்சும்
பாலமுனை போகலையே..!

புச்சித் தேங்காதான் இந்த மனுஷன்
பிள்ளைகளும் அழுவுறாங்க
பிக்னிக் போவோமென்டு
பிடிவாதமாய் நிற்கிறாங்க..!

பிறசரம் தலைக்குள ஏத்துது
பீச்சுக்கு போயாச்சும் பின்னேரம்
மறந்து மனத தேத்துறதுக்கு
மனிசனும் எழும்புறாரில்ல என்செய்வேன் !

*- இலக்கியச் செம்மல்*
*இல்மி அஹமட் லெப்பை -*

# தூறல்கள்

# போதை அரக்கனை விரட்டுவோம்

போதையால் பாதை மாறும் மானிடா
போதைப் பழக்கத்தை புதைத்திடு
புதிய வாழ்வை விதைத்திடு
புவியில் புகழை பரப்பிடு
புண்ணியம் கிடைக்கும் உனக்கு
அற்ப சுகத்துக்கு அடிமையாகி
அழகான வாழ்வைத் தொலைத்து
அவனியில் அவஸ்தைப்படும் மானிடா
அல்லல்பட்டு அமைதி இழந்து
அயலவருக்கும் தொல்லை
கொடுக்கும் கொடிய போதையை
விரட்டடா
போதையால் நீ மட்டும் அழியவில்லை
உன் குடும்பமும் சீரழிகிறது
சமூகமும் சங்கடப்படுகிறது
மதத் தலைவர்கள் குமுறுகிறார்கள்
தீய போதையை விட்டொழி
சீரிய வாழ்வை சிதைக்காதே
சிறப்படைவாய் ஜெகத்தில்

காவல் துறையே
காத்திரமாக செயல்படு
மாறாதது ஏதுமில்லை
மாற்றத்தை ஏற்படுத்துவோம்
மயக்கத்தை மறப்போம்
வாழ்க்கை சிறக்கும்
சமூகக் காவலர்களே
சன்மார்க்க மேதைகளே
சட்டத்தால் எதுவும் மாறாது
சீரழியும் இளைஞர் சமூகத்தை
இன்முகத்துடன் அணுகி
இனிதாக பேசி ஈனப் பழக்கத்தை
இகத்திலிருந்து விரட்ட
இரவு பகலாய் உழைப்போம்
கொடிய அரக்கனை
விரட்டி விடு மானிடா
வினயமாக வேண்டுகிறேன்

*- கவியாக்கம் அபூ அஸ்மியா -*

# நலன்புரித் திட்ட(மா)ம்

வறுமைக்குள் தள்ளப்பட்டோரை
வகைப்படுத்தி இனம்கண்டு
வரப்பிரசாதங்களை வழங்கிட
வந்ததுவாம் நலன்புரித் திட்டம்

நாட்டின் பேசுபொருளாய்
நாவின் ஏசுபொருளாய்
நற்பெயரைத் தொலைத்தது
நலன்புரித் திட்ட(மா)ம்

அங்கலாய்ப்பை உள்வாங்கி
அல்லல்களை உருவாக்கி
பங்கமாய் போகிறது
பங்களிப்புத் திட்ட(மா)ம்

நம்பியிருந்த உதவிகள்
நரம்பிழந்து போனதாலே
தங்கியிருந்த தெம்புகளும்
தவிடுபொடியானதாம்

பாகுபாடு பாரபட்சம்
பாதி வழியையும் மூடியதால்
நீதிதானோ இதுவென்று
வீதிக்கு மக்கள்
விரைகின்றனர்

பக்கச்சார்பானதாம்
பச்சாதாபப்பட வேண்டியதாம்
உச்சஸ்தாயிலில் குரல்கள்
உணர்வுகளைக் கொட்டுகின்றன

நலன்புரித் திட்டத்தினால்
நம்வாழ்வு சிறக்குமென
நயமாக நம்பியிருந்தோரும்
நட்டாற்றில் விடப்பட்டனரோ

தெரிவுப் பட்டியலில்
கை விரிக்கப்பட்ட
பெயர்களால்
கனவு கண்ட மக்கள்
பலரும் கதிகலங்கித்தான்
போயினரோ

மேன்முறையீடுகளை
ஏற்றிடவே மேலிடமும்
தயாராகிறது
வீண்பேச்சு வியாக்கியானம்
தகர்த்திடவே
விண்ணப்பம் ஏற்கிறது

சரியானோர் அடையாளமாகி
சறுக்கிடாமல் அடைக்கலமாகி
சங்கையாய் நலன்புரித் திட்டம்
சாதனையில் பயணிக்கட்டும்.

*- உசனார் எம்.பஷீர் -*
*ஏறாவூர்*

# காற்றே உன் ஆட்சி

காற்று வந்தது
கடல் அலை
உயர்ந்து நெளிந்தது.
மரங்கள் நடனத்தில்
இறுதி ஆண்டு
பரீட்சை எழுதுகின்றன

வீட்டுக் கூரைகள்
இசை அமைப்பதில்
கடும் ஆர்வக்
கோளாறுடன்...
பளிச்சிட்ட நிறங்கள்
யாவும்
மங்களாகிவிட்டன.

ஏன்? புழுதிப் படலம்
அடுக்கடுக்காய்.
சூரியனும்
மங்கலே!...

உலகுக்கு புழுதி
சுவாச வரவேற்பு

அறிமுகம்
பறவைகளாய்
சட்டைகளும்
தகரங்களும்
படங்குகளும்
பறக்கின்றன....

அம்மியும்
அடுத்த நொடியில்
பம்பரமாகுமோ!...

ஆணவ மரங்களுக்கு
மரணதண்டனையும்
மாறு கால் கை
துண்டிப்பும்

நிறைவேற்றும்
நேரடிக் காட்சி
காற்று வந்தது

*- மூதூர் றிஸ்வின் -*

# தென்றல் பாடும் தாலாட்டு

இதயமும் துடிப்புமாய்
இணைந்தே வாழ்ந்திடுவோம்

பூவும் மணமுமாய்
பூரித்தே மகிழ்ந்திடுவோம்

நகமும் சதையுமாய்
நலமே பெற்றிடுவோம்

கற்பனையும் கவிதையுமாய்
கலையாக இனித்திடுவோம்

இரவும் நிலவுமாய்
இங்கிதம் கண்டிடுவோம்

தென்றல் பாடும்
தாலாட்டாய் இனித்திடுவோம்

புரியலும் மகிழ்ச்சியுமாய்
புவிதனை வென்றிடுவோம்

நகமும் சதையுமாய்
நல்லறம் கொண்டிடுவோம்

விட்டுக் கொடுத்தே
வசந்தத்தைக் கண்டிடுவோம்

*ஏரூர் கவிமாமணி*
*எம்.ரி.எம்.அன்ஸார்*

# இனியாவது நன்றாகக் கவனியுங்கள்!



ஒரு மருத்துவ வகுப்பின் முதல் நாள், ஆசிரியர் ஒரு பிணத்தை வைத்து பாடம் நடத்த ஆரம்பித்தார்

"ஒரு மருத்துவனுக்கு மிக முக்கியமானது மூன்று விடயங்கள். ஒன்று நோயாளியின் உடலைத் தொடவோ, பார்க்கவோ கூச்சப்படக்கூடாது. அடுத்தது எதையும் நன்றாக கவனிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு தன் விரலை பிணத்தின் வாய்க்குள் விட்டு பின் வெளியே எடுத்து விரலை முத்தமிட்டார்.

பிறகு மாணவர்களிடம், "சரி எல்லோரும் நான் செய்ததுபோல் செய்யுங்கள்" என்றார்.

மாணவர்கள் மிகவும் தயங்கினர் ஆனால், நேரம் ஆக ஆக எல்லோரும் செய்ய ஆரம்பித்தார்கள்.

ஒரு கட்டத்தில் எல்லோரும் செய்து முடித்திருக்க ஆசிரியர், "எல்லோரும் முடித்தாயிற்றா? நான் பிணத்தின் வாய்க்குள் விட்டது ஆள்காட்டி விரல், முத்தமிட்டது நடு விரல். இனியாவது நன்றாக கவனியுங்கள்" என்றார்.











# சர்ச்சிலின் கிண்டல்



வின்ஸ்டன் சர்ச்சில் ஒருமுறை நண்பர்களுடன் விருந்து ஒன்றில் உரையாடிக் கொண்டிருந்தார்.


ஒரு நண்பர் சர்ச்சிலை மட்டந்தட்ட நினைத்து, அவர் வெளியே சென்ற தருணம் பார்த்து அவரது கைக்குட்டையில் தன் பொக்கெட்டில் இருந்த பேனாவை எடுத்து கழுதையின் படம் ஒன்றை வரைந்து வைத்துவிட்டார். திரும்பி வந்து பார்த்த சர்ச்சில், "என் கைக்குட்டையில் யார் முகம் துடைத்தது? அவர் முகம் அப்படியே இதில் பதிந்து விட்டதே!" என்று கூற, எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்து திருதிரு வென்று விழித்தனர்.

# 'தலை'யின் மதிப்பு



ஐன்ஸ்டீன் யூதர் என்ற காரணத்தாலேயே அகிலம் போற்றும் அறிவியல் அறிஞர் என்பதையெல்லாம் புறந்தள்ளிவிட்டு அவருக்கு ஹிட்லர் பல தொல்லைகள் தந்தார். ஐன்ஸ்டீனின் வங்கிக் கணக்கை முடக்கிவிட்டு அவர் மனைவி எல்சாவின் பாதுகாப்புப் பெட்டகத்தையும் கைப்பற்றிக்கொண்டார். ஐன்ஸ்டீன் தனது சேமிப்பு முழுவதையும் போட்டு காபூத் நகரில் கட்டியிருந்த வீட்டையும் தோட்டத்தையும் எடுத்துக் கொண்ட ஹிட்லர், அவருடைய அறிவியல் படைப்புகளை தீயிட்டு எரிக்கச் செய்தார். ஐன்ஸ்டீனை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 20 ஆயிரம் டொலர் பரிசு தருவதாக ஹிட்லர் அறிவித்ததைக் கேள்விப்பட்ட ஐன்ஸ்டீன், ''என் தலைக்கு இத்தனை மதிப்பு இருப்பதை இப்போதுதான் தெரிந்துகொண்டேன்" என்றார்.

# துன்பத்திலும் நகைச்சுவை



கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவானந்தம் எம்.எல்.ஏ.ஆன பிறகு தாம்பரத்தில் ஒரு குடிசை வீட்டில் வாடகைக்கு குடும்பத்துடன் குடியேறினார். அந்தக் குடிசை மழை பெய்தால் ஒழுகும். ஒரு நாள் இரவு கடும் மழை பெய்தது. வீடெல்லாம் மழை. தண்ணீர். பாத்திரங்களை ஆங்காங்கே வைத்து ஒழுகிய மழைநீரை பிடித்து வெளியே ஊற்றிக் கொண்டிருந்தார் ஜீவாவின் மனைவி. ஜீவா கூரை மேல் ஏறி, ஒழுகிய பகுதிகளைச் சரிசெய்துகொண்டிருந்தார். அப்போது ஜீவாவின் மனைவி, "என்னங்க, நிற்கக்கூட இடமில்லையே இந்த வீட்டில்? இதற்கு எதுவும் செய்ய மாட்டேன் என்கிறீர்களே?" என்றார். அந்தத் துன்பத்திலும் ஜீவா சிரித்துக்கொண்டே, "நிற்க முடியவில்லையென்றால் உட்காரேன் " என்று கூறினார்.

# நடிகவேள் எம்.ஆர்.ராதா தமிழ் சினிமாவின் அடையாளம்!

பீம்சிங் இயக்கத்தில், சரவணா பிலிம்ஸ் தயாரிப்பில், சிவாஜி - சரோஜாதேவி நடிப்பில், பாகப்பிரிவினை 1959இல் வெளியானது. 'அல்டாப்பு சிங்காரம்' என்ற வில்லன் கதாபாத்திரத்தில் நகைச்சுவை வசனங்களை அள்ளி வீசி, அப்ளாஸ் வாங்கினார் ராதா. படம் பெரியளவில் வெற்றியடைந்தது.

சரோஜாதேவி அப்போதுதான் அறிமுகமாகி இருந்தார். அவருக்கும் வரிசையாகப் படங்கள் ஒப்பந்தமாகிக் கொண்டிருந்தன. 'பாகப்பிரிவினை' படத்தில் கிராமத்துப் பெண்ணாக நடித்தார் சரோஜாதேவி. காட்சிப்படி, சரோஜாதேவி துடைப்பத்தால் ராதாவைத் துரத்தித் துரத்தி அடிக்க வேண்டும். ராதாவுக்கும், சரோஜாதேவிக்குமான முதல் காட்சியே இதுதான். மாட்டேன் என்று மறுத்தார் சரோஜாதேவி.

ராதா, இம்மாதிரியான காட்சிகளில் நடிக்க இமேஜ் பார்க்க மாட்டாரே... ''பொண்ணு பெங்களூரு, பீல்டுக்கு புதுசு அதுதான் மாட்டேன்னு சொல்லுது...'' என்று ராதாவிடம் சொன்னார் பீம்சிங்.

''யாரந்த பெங்களூரு பொண்ணு?" என்றார் சத்தமாக ராதா. அவரின் குரலைக் கேட்டதிலேயே அதிர்ந்து போனார் சரோஜாதேவி.

''அடிக்க மாட்டேன்னு சொன்னியாமே..." என்றார் ராதா.

''நீங்க சீனியர் நடிகர். என்னால முடியாது" என்று பிடிவாதமாக மறுத்துவிட்டார் சரோஜா தேவி. பீம்சிங்கும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்.

''பொண்ணைப் பாத்தா பாவமா இருக்கு; விட்டுடலாம்" என்றார் ராதா. காட்சி மாற்றியமைக்கப் பட்டது. உள்ளிருந்து, ''என்னை அடிக்காதே... என்னை அடிக்காதே" என ராதாவின் அலறல் கேட்கும். சரோஜாதேவி கையில் துடைப்பத்துடன் வெளியே வருவார்.



பின்னாலேயே வருவார் ராதா. அவரது தலையிலெல்லாம் துடைப்பக்குச்சி சொருகப்பட்டிருக்கும்.

நாளடைவில் சரோஜாதேவி மேல் ராதாவுக்குத் தனிப் பாசம் ஏற்பட்டது. பீம்சிங்கிடம், ''சின்னப் பொண்ணு; ராத்திரிலாம் ஷுட்டிங் இருந்தால களைப்பா இருக்கும். முதல்ல அவங்களுக்கு ஷாட்டை வைச்சு அனுப்பி விடுப்பா. பாவம்..." என்பார்.

அதேபோன்று, சரோஜாதேவி பேசும் தமிழ் சரியில்லை என்ற கருத்தும் அன்று இருந்தது. ''நீ கொஞ்சி கொஞ்சிப் பேசறதே நல்லாத்தான் இருக்கு; இந்தத் தமிழையும் ரசிப்பானுங்க பாரு..." என்பார் ராதா.

'பாகப்பிரிவினை' படத்தில் ஒரு காட்சியில் நம்பியார், சிவாஜியிடம் குழாப்புட்டு சாப்பிடுங்க... என்பார். இடையில் புகுந்து ராதா, ''வெளிநாட்டுக்காரன் நீராவியிலே ரயிலு விடுறான்; கப்பல் விடுறான்; விமானம் விடுறான்... நம்மாளு, இன்னும் நீராவியிலே கொழுக்கட்டைதான் விடுறான்..." என்பார். இந்த வசனம் மிகவும் புகழ் பெற்றது.

'பாகப்பிரிவினை' பட வெற்றி விழா நடந்தது. விழாவிற்கு வந்திருந்த இந்தி நடிகர் சுனில் தத், நடிகர்கள் தங்கியிருந்த இடத்துக்கு வந்தார். அவரை வரவேற்ற சிவாஜியிடம், ராதா எங்கே? என்று விசாரித்தார். பின்னால் இருப்பதாக சிவாஜி சொன்னதும், அங்கு சென்றார் சுனில் தத்.

அங்கே, அண்டர்வேர், முழுக் கை பனியனுடன் சமையல் செய்துகொண்டிருந்தார் ராதா. இவரா அவர்... என்று வாயடைத்துப் போனார் சுனில் தத்.

ராதாவின் அருகில் சென்ற சுனில் தத், கைகுலுக்கி, ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார். அவர் பேசி முடிக்கும் வரை அமைதியாக இருந்த ராதா, ''என்னடா சொல்றான் இவன்..." என்று அருகில் இருப்பவரிடம் கேட்டார்.

அதற்குபின் தான், ராதாவுக்கு ஆங்கிலம் தெரியாது என்ற உண்மை, சுனில் தத்துக்குத் தெரிய வந்தது. 'பாகப்பிரிவினை' படத்தில் தெளிவான உச்சரிப்புடன், ஆங்கிலம் பேசி அசத்தியிருப்பார் ராதா. அதை நம்பி ஏமாந்து போனார் சுனில் தத்.





காரைக்கவி

# சீத்துவக்கேடு 247

இன்னுமொரு விசயம் உனக்கு நான் சொல்லவேணும். அப்ப அந்த நாளையில எங்கடை ஆக்கள் குணில் வட்டு எண்டு ஒரு விளையாட்டும் விளையாடி இருக்கினம். குணில் எண்டது தடி இல்லாட்டில் குச்சி எண்டு பொருள். அப்ப எங்கடை ஆக்கள் உருண்டுகொண்டு இருக்கிற மணி வட்டை குணிலாலை அடிச்சிருக்கினம். அதைத்தான் குணில்வட்டு எண்டு சொல்லுறது. இப்படிக் குணிலாலை அடிச்சால் வட்டு இன்னும் வேகமா ஓடுமாம்.

உந்த விசயத்தை எங்கடை இளங்கோவடிகள்

" உருள்கின்ற மணி வட்டைக்
குணில் கொண்டு துரந்ததுபோல்,
இமய மால் வரைக் கல் கடவுள் ஆம்''
என்ற வார்த்தை இடம் துரப்ப
ஆரிய நாட்டு அரசு ஓட்டி,
அவர் முடித்தலை அணங்கு ஆகிய
பேர் இமயக் கல் சுமத்தி,
பெயர்ந்து போந்து" (சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை, உரைப்பாட்டுமடை) எண்ட வரியளிலை சொல்லுறார் எண்டார் அப்பு.

எங்கடை சேரன் செங்குட்டுவன் இமயத்தில் வில் சின்னம் பொறிச்ச செய்தியைக் கேட்ட ஆரிய மன்னர்கள் கனக விசயர் தமிழரசரின்ரை வீரத்தைப் பகிடி பண்ணினவையாம். உதைக் கேள்விப்பட்ட சேரன் அவங்களுக்கு போய் நல்லா வெளுக்க வேணும் எண்டு நெச்சு ஆயத்தப்படுத்திக்கொண்டு இருந்தான். அப்ப பாத்து ஆரோ கண்ணகிக்கு கோயில் வைக்க இமயமலையில இருந்து கல்லு கொண்டு வரலாம் எண்டு அவனிட்டை சொல்லி இருக்கினம். அதக் கேட்டதும் அவன்ரை எண்ணம் உருளுகின்ற மணிவட்டைக் குணிலாலை அடிச்ச மாதிரி வேகமாகப் போனதாம் எண்டு இளங்கோவடிகள் இந்தப் பாட்டிலை சொல்லுகிறார் எண்டார் அப்பு.



பேந்து அவன் எங்கட சேரன் செங்குட்டுவன் கனகவிசயரை தோற்கடிச்சு அவங்களின்ரை தலையிலை உந்தக் கல்லுகளை வைச்சுக் கொண்ணந்தது கண்ணகிக்கு கோயில் கட்டினது எல்லாம் உனக்குத் தெரியுந்தானே எண்டு சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

உந்த விளையாட்டு விளையாட கட்டாயம் அரங்கு ஒண்டு வேணும் எண்டு எங்கட திருவள்ளுவர்

"அரங்கு இன்றி வட்டு ஆடி அற்றே நிரம்பிய
நூல் இன்றிக் கோட்டிக் கொளல்".

(திருக்குறள் 401) எண்டு சொல்லி இருக்கிறார் கண்டியோ எண்டவர், பேந்து இப்ப நாங்கள் விளையாடுற ஹொக்கி உந்த குணில் வட்டு விளையாட்டிலை இருந்துதான் வந்திருக்கவேணும் எண்டார்.

ஏன் கனக்கப் போவான் எங்கடை பிள்ளையார் கோயில் வீதியிலை சின்னப் பெடியள் உந்த தடி வைச்சு கார் ரயர் உருட்டி விளையாடிறதை இப்பவும் பாக்கலாம் எல்லே எண்டார். உப்பிடி அவங்கள் உந்தக் குணிலை மாதிரி நாக்கு மாதிரி வளைஞ்ச தடியாலையும் வட்டுகளை அடிச்சு இருக்கிறாங்கள் . உந்த வட்டுகளிலை அரக்கு எண்ட சிவப்பு மெழுகாலை புள்ளியள் போட்டு இருக்குமாம்.

உதை அவங்கள் வட்டுநா விளையாட்டு எண்டு சொல்லி இருக்கிறாங்கள் எண்டார்.

மதுரை மருதன் இளநாகனார் எண்ட புலவர் உந்த வட்டுநா விளையாட்டு விளையாடின செய்தியை

"வங்கா வரிப் பறைச் சிறு பாடு
முணையின்,
செம் பொறி அரக்கின் வட்டு நா வடிக்கும்
விளையாடு இன் நகை" (நற்றிணை 341)

எண்ட பாட்டிலை சொல்லுறார் எண்டார்.

பேந்து உந்த சங்ககால வட்டுநா விளையாட்டு எண்ட நாத்தடி விளையாட்டுத்தான் அப்பத்தே கோல்ப் விளையாட்டுக் கண்டியோ எண்ட அப்பு, இப்ப வலு பிரபலமா இருக்கிற ஹொக்கி, கோல்ப் எல்லாம் முந்தி எங்கடை ஆக்கள் அப்ப அந்தக் காலத்திலை விளையாடி இருக்கிறாங்கள் எண்டதை நினைக்க எவ்வளவு பெருமையா இருக்குத் தெரியுமோ. உதெல்லாம் சீமையிலை போய் இருக்கினம் எண்டதுக்காக வேல்லைக்கரனுக்குத்தன் எல்லாம் தெரியும் எண்டு சொல்லுற எங்கட வெங்காயங்களுக்குத் தெரியாது எண்டார்.

(இன்னும் ஆடுவம் )

# இவ்வார இராசி பலன்கள்



வித்வ கலாபூஷணம்
ஜோதிட திலகம் சிவஸ்ரீ
வெங்கட சுப்ரமணிய
குருக்கள்

### மேஷ ராசி அன்பர்களே!

எந்த விடயத்திலும் நிதானம் தேவை. வருமானம் திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உரிய சிகிச்சையின் மூலம் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கும்போது குடும்பப் பெரியவர்களுடன் கலந்து ஆலோசித்து எடுப்பது நல்லது. சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கும்.

அலுவலகத்தில் புதிய பொறுப்புகள் வந்துசேரும். எதிர்பார்த்த சம்பள உயர்வு ஓரளவு திருப்தியாக இருக்கும். சலுகைகளைக் கேட்டுப் பெறுங்கள்.

வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்றவோ அல்லது விரிவுபடுத்தவோ நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

### ரிஷப ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. திருமண வயதில் உள்ள பெண் அல்லது பிள்ளைக்கு திருமண முயற்சிகளை மேற்கொள்ளலாம். பழைய கடன்களைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். உறவினர், நண்பர்கள் மூலம் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

எதிர்பார்த்த பதவி உயர்வு சம்பள உயர்வு இப்போது கிடைக்காது என்றாலும் ஓரளவு சலுகைகள் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்களை மனம் திறந்து பாராட்டுவார்கள்.

வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்டு செய்யவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

### மிதுன ராசி அன்பர்களே!

பொருளாதார நிலை நல்ல நிலையில் இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. கடந்த சில நாட்களாகக் கணவன் - மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். அதிகரிக்கும் பணிச்சுமையின் காரணமாக உடல் அசதியும் மனச்சோர்வும் உண்டாகும். உங்களைப் பற்றித் தவறாகப் புரிந்துகொண்ட நண்பர்களும் உறவினர்களும், தங்கள் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

அலுவலகத்தில் சக ஊழியர்களிடம் எச்சரிக்கை தேவை. பணிச்சுமை அதிகரிக்கும் என்றாலும் சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள்.

வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருவார்கள். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கவும், வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சில சலுகைகள் கிடைக்கும்.

### கடக ராசி அன்பர்களே!

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் இடமுண்டு. ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மற்றவர்களின் தலையீடு காரணமாக குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

பணியிடத்தில் தேவையின்றிப் பேசவேண்டாம். சம்பள உயர்வு ஓரளவு திருப்திகரமாக இருக்கும். மேலதிகாரிகள் கடிந்துகொண்டால் அனுசரித்துச் செல்வது நல்லது.

வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.பங்குதாரர்கள் உங்களுடைய முயற்சிகளுக்கு உதவிக்கரமாக இருப்பார்கள்.

### சிம்ம ராசி அன்பர்களே!

கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விடயமாக வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ள வேண்டி வரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். அரசாங்க வகையில் இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். உறவினர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகளில் ஈடுபட சாதகமான வாரம்.

அலுவலகத்தில் தேவையின்றி சக ஊழியர்களின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து பேச வேண்டாம். மற்றபடி எதிர்பார்த்த பதவி உயர்வு அல்லது சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்புண்டு.

வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். சிலர் வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட மறைமுக இடையூறுகள் விலகும்.

### கன்னி ராசி அன்பர்களே!

சகோதர வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் கொஞ்சம் அனுசரித்துச் செல்வது அவசியம். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு கையிருப்பைக் கரைக்கும். சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும். பொருள்கள் களவு போக வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்கவும். தாயாரின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்ச்சியடைவீர்கள். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

அலுவலகத்தில் சின்னச் சின்னக் குழப்பங்கள் உண்டாகி நீங்கும். சக ஊழியர்களிடம் வெளிப்படையாகப் பேச வேண்டாம். பொறுமையுடன் நடந்துகொள்வது நல்லது.

வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட லாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் விற்பனையை அதிகரிப்பதில் ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள். சக வியாபாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

### துலா ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அநாவசிய செலவுகள் எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் தேவை. குடும்பம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். இளைய சகோதரர்களால் செலவுகள் ஏற்படும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் உணவு, தண்ணீர் விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் சில ஆதாயங்கள் ஏற்படக்கூடும்.

அலுவலகத்தில் அதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். பணிச்சுமை அதிகரிப்பது குறித்து கவலைப்பட்டாலும் உரிய சலுகைகள் கிடைப்பதால் மகிழ்ச்சியடைவீர்கள்.

வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் உதவிக்கரமாக இருப்பார்கள். விற்பனையைப் பெருக்குவதில் பணியாளர்கள் உற்சாகமாக ஈடுபடுவார்கள்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு குலதெய்வ பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகள் மூலம் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

அலுவலகத்தில் உங்கள் பணி பாராட்டப்படும். உயரதிகாரிகள் நெருக்கமாக இருப்பார்கள். சக ஊழியர்களிடம் எச்சரிக்கையுடன் பழகுவது நல்லது. வார்த்தைகளில் நிதானம் தேவை.

வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக மிகவும் உழைக்கவேண்டி இருக்கும். வங்கிக் கடனுதவி கிடைக்கும். பணியாளர்களால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

### தனுசு ராசி அன்பர்களே!

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. ஆனாலும், புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல்நலம் சீராகும். கண வன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அவர்களைக் கண்டிக்காமல் அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று கூடிவரும்.

அலுவலகத்தில் சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். உங்கள் பொறுமை பாராட்டப்படும். பணிச்சுமை அதிகரித்தாலும் உரிய சலுகைகள் கிடைக்கும்.

வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாகப் பாடுபடவேண்டி வரும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்படக்கூடும்.

### மகர ராசி அன்பர்களே!

பொருளாதார வசதிக்குக் குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். அதனால், தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்துவிடலாம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். சிலருக்கு வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் மூலம் பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

கடுமையாக உழைத்தாலும் உரிய பலன் இருக்காது. பணியிடத்தில் சக ஊழியர்களிடம் கடுமை காட்ட வேண்டாம். அதிகாரிகளிடம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

வியாபாரத்தில் புதிய முதலீடுகள் இப்போது வேண்டாம். சக வியாபாரிகளின் பேச்சைக் கேட்டு புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும்.

### கும்ப ராசி அன்பர்களே!

நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்துசேரும். பணவரவு அதிகரிக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப விடயத்தில் மற்றவர்களின் தலையீட்டை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாட்களாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், அவருடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம்.

சிலருக்கு வேலையில் இடமாற்றம் அல்லது துறை மாற்றம் கிடைக்க வாய்ப்புண்டு. சம்பளம் உயர வாய்ப்பிருப்பதால் அதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வீர்கள்.

வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூல மாக முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

### மீன ராசி அன்பர்களே!

எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூரில் இருக்கும் உறவினர்கள் மூலம் ஆதாயமும் ஏற்படும். திருமண வயதில் உள்ள மகன் அல்லது மகளின் திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் உறவினர்களிடம் மதிப்பு அதிகரிக்கும். கணவன் - மனைவிக்கிடையே சிறு சிறு வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் பொறுமை அவசியம்.

சக ஊழியர்களிடம் விட்டுக்கொடுத்துப் போங்கள். அதிகாரிகள் கொஞ்சம் கடுமை காட்டுவார்கள். பொறுமை அவசியம். சலுகைகளை ஒருமுறைக்கு இருமுறை கேட்டுப் பெற வேண்டியிருக்கும்.

வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். தேவையான கடனுதவியும் கிடைக்கும். பங்குதாரர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். அலுவலகம் செல்பவர்களுக்கு சலுகைகள் கிடைக்கும்.

தமிழன் தொடர்கதை

# யார் அவன்

அத்தியாயம் ௫

புத்தளம் ஸாலிஹ் அஸீம்

தன் நண்பிமேல் உயிரையே வைத்திருந்தவன் எப்படி அவளை கொலை செய்திருப்பான்? அதற்கான வாய்ப்புகளும் குறைவுதான். அதேநேரம் கொலைவெறியோடு திரியும் இவனுக்கு கொலை செய்வது ஒண்ணும் பெரிய விடயமும் அல்ல. இதை எப்படியும் தெரிந்துகொள்ளணும். அது கொஞ்சம் ஆபத்தான விடயம் என்றாலும் கூட அதனை எவ்வளவு முயற்சியெடுத்தும் செய்தேயாகணும் என்று தனக்குள் கங்கணங்கட்டியவள்,

அதற்கு முதலில் அவன் வீட்டுக்குச் சென்று அந்தக் கொலைக்காரனை நேரில் சந்திக்கணும். அவ்வாறு சந்தித்து அவனிடம் இந்த விடயத்தைக் கேட்கணும். அதற்காக அவன் என்னை கொன்றாலும் கூட பரவாயில்லை. இதை எப்படியும் செய்தே தீரணும். அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று, அவன் ரவியை கொலைசெய்ய முயற்சிக்கிறான். அதிலிருந்து அவனைக் காப்பாற்றணும். அடுத்தது, என் நண்பியை கொலை செய்திருக்கக்கூடும் என்ற சந்தேகம் வருகிறது. எனவே, அதனை உறுதிசெய்யணும். இந்த இரண்டுக்கும் ஒரு முடிவு காண்பதற்காகவே அவனை நான் கட்டாயம் சந்திக்கணும். இதில் எது நடந்தாலும் எனக்குப் பரவாயில்லை. ஆனாலும் இந்த விடயங்கள் ரவிக்கு எந்த வகையிலும் தெரியவே தெரியக்கூடாது என்று முடிவெடுத்தாள் ராதா.

மறுநாள் வழமைபோல் கடைக்குப் போவதற்காக புறப்படுவதுபோல் புறப்பட்டு, கடைக்குப் போகிறேன் என்று அம்மாவிடம் சொல்லிவிட்டுப் போனாலும் அவள் உண்மையில் கடைக்குப் போகவில்லை. மாறாக, அந்தக் கொலைகாரனை சந்திப்பதற்காகவே அவன் வீடு நோக்கிச் சென்றாள். அது கொஞ்சம் தூரமான இடம் என்றாலும் கட்டாயம் அங்கு சென்று அவனை எப்படியும் சந்தித்தாக வேண்டும் என்ற வெறியோடு எந்தவிதமான முன்னாயத்தங்களோ, பாதுகாப்போ, துணையோ இல்லாமல் தனிமையிலேயே அவ்விடத்துக்குச் சொன்றாள் ராதா.

ஒருவாறு சிரமங்களுக்கு மத்தியில் பஸ்ஸில் சென்று அவ்வூரை சென்றடைந்த ராதா, நேராகவே அவள் வந்த குறிக்கோளுடன் அக்கொலைகாரனின் வீட்டை நோக்கிச் சொன்றாள். ஆனாலும் அந்த வீடு பற்றைகள் நிறைந்து காணப்பட்டது. அங்கு யாரும் மனிதர்கள் வாழ்கிறார்கள் என்ற அடையாளமே இருக்கவில்லை. அதனால் ஒருவேளை அக்கொலைகாரன் அந்த வீட்டில் இப்போது இல்லையோ என்றும் நினைக்கத் தோன்றியது அவளுக்கு.

ஏனென்றால், அந்தளவுக்கு அந்த வீட்டின் அப்போதைய அமைப்பு காணப்பட்டது. அப்போது அவள் மனதில் அதிரும்படி ஒரு சம்பவம் நடந்தது.

''நீ எதுக்கு இப்போ இங்கே... வந்தே...?'' என்ற கேள்வி சத்தம் கேட்டு திடுக்கிட்டு திரும்பிய ராதா அதிர்ந்துபோனாள். காரணம், அங்கே அக்கொலைகாரன் நின்றுகொண்டிருந்தான்.

அவன் வேறு யாருமல்ல. அவளுடைய நண்பியின் அண்ணன்தான். முன்பெல்லாம் அவளுடைய நண்பியை சந்திப்பதற்காக இங்கு வரும்போது ராதாவுடன் மிகவும் அன்பாகப் பேசுவான், பழகுவான். இப்போது அது தலைகீழாகவே மாறிப்போய் இருந்தது. அவனின் குரலில் அந்த அன்பு, பக்குவம் எதுவுமே இருக்கவில்லை. அதற்கு மாறாக ஒரு விரக்தி, கோபம், வெறி மட்டுமே இருந்தது. இருந்தாலும் கடிநாயாக

இருந்தாலும் பழக்கப்பட்டவர்களுக்கு அது தன்னை கடிக்காது என்ற சிறு நம்பிக்கை இருக்குமே. அதுதான் அவனின் மேல் அவளுக்கும் இருந்தது. அந்த நம்பிக்கையுடன்,

''அண்ணா நான் உங்களை சந்தித்துவிட்டு போகத்தான் வந்தேன்'' என்று சற்று அச்சத்துடனும் அதனை வெளியில் காட்டிக்கொள்ளாதபடியும் அவனிடம் சொன்னாள்.

அதனைக் கேட்டவன்,

''நீ எதற்காக என்னை சந்திக்க வந்தே...? '' என்றான் கனத்த குரலில்.

''ஆமாம் அண்ணா. உங்களிடமிருந்து சில உண்மைகளைத் தெரிந்துகொள்ளணும். அதுதான் வந்தேன்'' என்றாள் பதிலுக்கு ராதா.

அதற்கவன், ''எந்த உண்மையை. அந்தக் கொலைகாரனை பற்றிய உண்மையையா'' என்றதும் அவளுக்கு தூக்கிவாரிப் போட்டது.

என்ன கொலைகாரனையானு கேட்கிறார். யாரை சொல்கிறார். ரவியையா. அவர் அப்படிப்பட்டவர் இல்லையே. ஒருவேளை ரவி சொன்னதைபோல் வேறு யாருக்காவது பதிலாகத்தான் ரவியை குறி வைத்திருக்கிறானோ. சரி எதுவாக இருந்தாலும் அதனைக் கேட்டு தெரிந்துகொள்வோம் என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டவள்,

''அண்ணா நீங்கள் சொல்வது எதுவும் எனக்கு விளங்கவில்லை. கொஞ்சம் விபரமாய் சொல்ல முடியுமா...?'' என்று கெஞ்சுவதைபோல் கேட்டதும்,

''சரி உள்ளுக்கு வாம்மா. விபரமாய் சொல்கிறேன். நீ அதை கட்டாயம் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும்'' என்றபடி ராதாவை வீட்டுக்குள் அழைத்துச் சென்றான்.

அவ்வீடு பேய் வீட்டைப்போல் ஒட்டரைகள் நிறைந்து, தூசுகள் படிந்து பாழடைந்த இடமாகக் காட்சியளித்தது. எப்படியோ உண்மைகளை அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணமே அவளுக்கு இருந்ததால் அதைப் பற்றியெல்லாம் அவள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

ஒரு கதிரையை தூசு தட்டிவிட்டு அவளை இருக்கச் சொல்லி கொடுக்க அதில் அவள் அமர்ந்துகொண்டாள்.

பின்னர் அவன் கதையை சொல்வதற்கு முன் அங்கு கிடந்த ஒரு பெட்டியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து வந்தான் அதனுடன் ஒரு புகைப்படமும் இருந்தது. ஆனால், அப்புகைப்படத்தை கையில் வைத்துக்கொண்டு கடிதத்தை மட்டும் ராதாவிடம் நீட்டினான். அதனை அவளிடம் கொடுத்துவிட்டு

''இந்தாம்மா இந்தக் கடிதத்தை முதலில் நீ வாசித்துப் பாரு. அதற்குப் பிறகு மற்றவற்றையெல்லாம் சொல்கிறேன்'' என்றான். அதனை கையில் வாங்கிக்கொண்ட ராதாவும் அக்கடிதத்தை வாசிக்கத் தொடங்கினாள்.

அக்கடிதத்தில்,

(தொடரும்)



## மலையகத்தின் சொல்ல மறந்த கதை

கொலாரா
கொடுநோயி
ஒரு பக்கம் பரவி வர
அட்டைக்கடி,
பாம்புக்கடி
மலைதேச கடுங்குளிரு
என்றெல்லாம்
இயற்கை ஒருபக்கம்
உயிரை வாங்கி வர
மாசக்கண்கினிலே
அப்பாவி மக்களையும்
செயிலுக்குள்ள
போட்டுவிட்டும்
வாட்டி
வதைச்சாங்க....

நாதியின்றி போயிவிடும்
என்ற ஒரு ஆழமான
ஆழ்மனது
சிந்தனையும்
சிலைமேலே எழுத்தாக
அவர்களது
மனசுக்குள்ளே
ஆழமாக
இருந்ததுவே..

இதற்கு ஒரு தீர்வாக
தோட்டங்களின்
எல்லா மூலையிலும்
சாராய கடைகளையும்
கள்ளு தவறணையும்
திறந்து
விட்டாங்க.....



ஊட்டுவள்ளி
தோட்டத்திலும்
ஒன்னுக்கு
மேலாக
சாராய
கடைகளுமே
புதுசாக
பிறந்ததுவே....

மாசந்தரும்
கூலியிலே
சாராய
கடைகளுக்கு
முழு காச
கொடுத்துவிட்டு
மீதி நாளில்
கடனாளி
ஆகி நிக்கும்
நிலையுங்கு
வந்ததுவே....

இதுக்கும் மேல ஒரு
இம்சையான
சம்பவமும் இல்லாமல்
இருக்கவில்ல

கோப்பிக்காட்டு
மக்களிலே
ஒருபோதும் ஒருநாளும்
சிந்திக்கும்
மனநிலையை
ஆங்கிலேய சர்காரும்
ஒருநாளும்
வைக்கவில்லை...

வத்து சேர்ந்த இந்த
சனம் சொந்த
ஊரு போயிவிட்டால்
கோப்பிக்காட்டு
வேளைக்கிங்கு

தும்பற அம்பலத்தில்
சேர்ந்து விடும்
கூட்டமது
குடியே குடியேனு
கூடுவிடும் கூட்டமிது..

(சொல்ல மறந்த
கதை இன்னும்
சொல்லப்படும்)

தொடரும்
எம். ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் சிறுகதை

# இயற்கையின் சீற்றம்

பசறை சீரா

ஏப்ரல் மாத வெயிலின் தாக்கம் அதிகமானதால் வீட்டின் முற்றத்தில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த அவருக்கு மரங்களிலிருந்து வரும் தென்றல் காற்றும், பறவைகளின் சப்தமும், அனில்களின் ஓட்டமும் ஆட்டமும் மனதுக்கும் உடம்புக்கும் இதமாய் இருந்தன. கண்களை மூடிய அவருக்கு ஏற்கனவே நடந்த சம்பவம் ஒன்று நினைவிற்கு வந்தது.

" ஐயோ கடவுளே, நான் என்ன செய்ய போறேனோ தெரியல..? ஏம் புள்ள என்ன விட்டு போயிடும்போல இருக்கே" என்ற சத்தம் கேட்டு பக்கத்து வீட்டிற்கு விரைந்து சென்றாள் நல்ல தம்பியின் மனைவி வசந்தி. அங்கு அவளுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது.

ஆம். பக்கத்து வீட்டு ராமசாமியின் மகள்தான் புவனா. அவள் விஷக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியம் செய்யாமல் காய்ச்சல் அதிகமாகி சாப்பாடு ஏதும் சாப்பிடாமலும் கண்கள் மேலே சொருகி, பேச்சு, மூச்சு இல்லாமல் கிடந்ததைப் பார்த்த உடனே ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கொண்டு போவோம். உடுப்பு, தேவையான பொருட்களை எடுத்து வைங்க புவனா அம்மா. நான் போய் எங்க மகனை ஆட்டோவ எடுத்துக்கிட்டு வரச் சொல்றன் என்று வீட்டிற்கு வந்து படுத்திருந்த மகனிடம் விடயத்தை சொல்ல, அவனும் விரைவாக உடுத்திக்கொண்டு ஆட்டோவையும் தயார்நிலை படுத்தினான். பின்பு சுகமில்லாத பிள்ளையை ஏற்றி புவனா அம்மாவுடன் தனது மனைவியையும் சேர்த்துக்கொண்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

பரிசோதனை செய்த மருத்துவர் உடனடியாக "வாட்டுல நிப்பாட்ட சொல்லி" சேலைன், மருந்து ஏற்றப்பட்டது. "காய்ச்சல் கூடும் மட்டும் இவ்வளவு நாள் என்ன செய்தீர்கள். இன்னும் ஒரு நாள் வீட்டுல இருந்திருந்தா புள்ளய உயிரோட பார்க்கவே முடியாமல் போயிருக்கும்" என்று நர்ஸ்மார்களும் ஏசியதாக வசந்தி கூறியது நினைவிற்கு வந்தது.


" என்னங்க, என்னங்க இந்த ரீய குடிங்க" என்று மனைவி வந்து எழுப்ப, கண்களை திறந்த அவருக்கு "இந்த நேரத்துக்கு வந்துருவான். இன்னும் ஆளைக் காணோம்" என்று பார்த்தபோது வேலியிலுள்ள ஓட்டை வழியாக ஷபிங்கோ (நாய்க்குட்டி) ஓடி வருவதைப் பார்த்து

"அந்த பிஸ்கட்டையும் தா, யோகட் கப்பையும் தா" என்று கூற, வசந்தி இரண்டையும் எடுத்து வந்தாள். கோப்பையில் கொஞ்சம் ரீயை ஊற்றி பிஸ்கட் துண்டுகளைப் போட்டாள். வாலை வாலை ஆட்டிக்கொண்டு அருகில் வந்து ரீ, பிஸ்கட்டை சாப்பிட்டுக் கொஞ்சநேரம் உட்கார்ந்துவிட்டு மறுபடியும் வந்த வழியே ஓடி விடுவான்.

"எவ்வளவோ உதவி செய்த நம்மள பொலிஸூல என்ரி போட்ட ராமசாமியை என்னன்னு சொல்றது. இன்னக்கி புவனா மகள் உயிரோட இருக்குதுன்னா அதுக்கு என் மனைவிதான் காரணம். அதகூட மறந்துட்டான்" என மனதுக்குள் நினைத்து வருத்தப்பட்டார்.

நல்லதம்பியின் மன ஓட்டத்தை புரிந்தவளாய், "அத எல்லாம் விட்டுத் தள்ளுங்க. அவர்களுக்கு தெரிந்தது அவ்வளவுதான். நாம எப்பயும் நல்லதையே நினைப்பம்" என்று கூறியவளாய் வீட்டுவேலையில் மூழ்கத் தொடங்கினாள். அப்போது கேட்டை தட்டும் சத்தம் கேட்டு எழுந்து சென்று கேட்டைத் திறந்தார். பொலிஸ் சீருடையுடன் நின்ற அவர் "ஓயாத நல்லத்தம்பி..?" என்று சிங்களத்தில் வினவ ஆரம்பித்தார். அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளித்த நல்லத்தம்பி கடைசியில் "இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் மரவாதுகளை வெட்டி போட்டுறன்" என சிங்களத்தில் கதைத்தவராய் இருவரும் நல்ல நண்பர்களாகவே மாறிவிட்டனர். "மினிசு தன்னெத்த மேம தமாய் இன்னே" எனக்கூறி விடைபெற்றுச் சென்றார். பொலிஸ்காரருக்கு உள்ள இரக்கம் கூட இவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. மரங்கள் இருந்தால் இலை, குலை கொட்டத்தான் செய்யும். அதற்காக மரத்தை வெட்ட முடியுமா?.

"எத்தனை நாள் பலாக்காய், பலாப்பழம் கொடுத்திருப்பம்." ராமசாமியின் பசியை போக்கி இருக்கும் இந்த மரம். " இப்ப அவர் கண்ண குத்துது" என ஏசிக்கொண்டே மரம் வெட்டுகிறவனை தொலைபேசியில் வரச்சொன்னார். அவனும் வந்து மரவாதுகளும் வெட்டப்பட்டன. அவர்கள் வீட்டுப்பக்கம் நின்ற தென்னை மரமும், பலா மரமும் ஒன்றுசேர்ந்து உரசும் சத்தம் காதுக்கு இனிமையாய் இருக்கும். இப்போது தனித்துவிடப்பட்ட தென்னை மரம் ஏனோ சோகமாய் காட்சியளித்தது. மரவாதுகள் வெட்டியதால் முற்றத்தில் கட்டில் போட்டு படுப்பதையே நிறுத்திவிட்டார்.



ஐந்து, ஆறு மாதத்துக்குப் பிறகு பலா மரம் மீண்டும் துளிர்த்து வளர்ந்து இருந்தது. நேற்று முன்தினம் அடித்த பலத்த காற்றினால் தென்னை மரத்து அடிமட்டையும், பெரிய தேங்காய் குலை ஒன்றும் சேர்ந்து விழுந்ததில் ராமசாமியின் வீட்டு முன்பகுதி உடைந்துவிட்டது.

மனிதனுக்கு மனிதன் செய்யும் துரோகத்தை இயற்கை அன்னையால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவளின் சீற்றத்தைக் காட்டிவிட்டால் போலும். தென்னைகீற்றும் புதிதாய் முளைத்த வாதும் சேர்ந்து மறுபடியும் உரசும் சத்தம் கேட்க ஆரம்பித்துவிட்டது. புதிய மரக்கிளையில் ஒரு பலகை தட்டையும் வைக்க ஏற்பாடு செய்தார். இப்போது மரங்கொத்தியும், குயிலும், புறாவும், மைனாவும் அழையா விருந்தாளிகளாய் வரத்தொடங்கின. அனில்களின் ஆட்டமும் அதிகரித்துவிட்டது. தென்றல் காற்று அவ்வப்போது அவரை தீண்டிவிட்டுச் சென்றது. வழமைப்போல் ரீ கப்பை கையில் வைத்துக்கொண்டு ஷபிங்கோவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தார் நல்லதம்பி.

# பண மோகத்தில் Franchise லீக் கிரிக்கெட்டால் அழிந்துபோன வெஸ்ட் இண்டீஸ்

விஸ்வநாதன் அபிவிதுஷன்

## அசுர சிம்மாசனத்தில் இருந்தவர்களுக்கு ஏற்பட்ட சோகக் கதை மீண்டெழுமா வெஸ்ட் இண்டீஸ் ?

கட்டுக்கடங்காத காளையைப்போல் கட்ஸ் ஆன உயர்ந்த உடம்பும், தொட்டாலே சிக்ஸர்தான் எனுமளவு பேட்டர்ஸ்களைக்கொண்ட அணியே வெஸ்ட் இண்டீஸ். எட்டாக் கனி டெஸ்ட் ரன் லாரா, முதல் சிக்ஸ் என்றாலே ஞாபகம் வருகின்ற கெயில், பூரான், பொல்லார்ட், அரக்கன் ரசல், சமி மாயச் சுழல் சுனில் நரேன் என்று இன்னும் பல ராட்சர்களைக்கொண்டு இந்த கிரிக்கெட் உலகையே திரும்பிப் பார்க்கச் செய்தவர்கள்தான் இவர்கள். மிரட்டலான சொட் அடிகள், நொறுக்கிடும் வேகப்பந்துகள், சருக்கிப் பாயும் பீல்டிங் என்றும், மைதானத்தை நடன அசைவுகளாலும் புதிய பல செலிபிரேஷன் ஸ்டைலினாலும் அலங்கரித்தவர்கள். அத்தோடு ஜென்டில்மேன் கிரிக்கெட் ஆடுவதில் தனிச் சிறப்பானவர்கள். எதிரணி வீரர்களுக்கான மதிப்பையும், மரியாதையையும் நன்கு உணர்ந்து செயற்படுபவர்கள். அனுசரணை இல்லாமலேயே 2016 ரி20 உலகக்கிண்ணம் வென்றவர்கள். இன்றும் அதே நிதி பிரச்சினைக்குள்ளேயும் அரசியல் அதிகாரம் கலந்திட்ட வட்டத்திற்குள் மிதக்கிறார்கள். இரு தடவைகள் ஒருநாள் உலகக்கிண்ணம், இரு தடவைகள் ரி20 உலகக்கிண்ணம், ஒரு சம்பியன்ஸ் கிண்ணம் என தன்னகத்தே கொண்ட ஒரு தேசம் இன்று தொடர்ச்சியாக தகுதிச்சுற்றுகள் ஆட வந்து அதிலும் தோல்வியுடன் வெளியேறுகிறது.

95 வருட கிரிக்கெட் வரலாற்றில் ரசிகர்களால் கொண்டாடப்படும் ஓர் அணி என்றால் அது மேற்கிந்திய தீவுகள்தான். 1928ஆம் ஆண்டு முதன்முதலாக டெஸ்ட்டில் தடம் பதித்து அதன் பின் 1973ஆம் ஆண்டு ஒருநாள் போட்டிகளில் களமிறங்கியது. 1975ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் வி.வி.எ. ரிசட்ஷன் தலைமையில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி மேற்கிந்திய தீவுகள் சம்பியனானது.

அது மட்டுமல்லாமல் 1979ஆம் ஆண்டு நடைபெற்ற அடுத்த உலகக்கிண்ணத்தையும் மேற்கிந்திய தீவுகள் அணி கைப்பற்றியது. இப்படியெல்லாம் அசுர வளர்ச்சிகளில் கிரிக்கெட் ஆடிய ஓர் அணி இன்று இல்லாமல் ஓர் உலகக்கிண்ணம் ஆரம்பிக்க போகிறது என்பது யாராலும் மனதால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது.

ஒவ்வொரு ரசிகனுக்கும் மேற்கிந்திய தீவுகள் என்றாலே நினைவுக்கு வருவது வி.வி.ஏ. ரிசட்சன், பிரையன் லாரா, சந்திரபோல், இயன் பிசோப் என்று பல ஜாம்வான்களின் பெயர்கள். அது மட்டுமல்லாமல், கடந்த 10 வருடங்களில் பிரபல்யமான வீரர்கள் ஏராளம். உதாரணமாக கிறிஸ் கெய்ல் கார்லஸ் பிரத்வேயிட், டெரென் சமி, ரசல், போலாட், பிரோவா என்று பல வீரர்கள். டெஸ்ட் போட்டிகளில் ஒரு இன்னிங்ஸில் 400 ஓட்டங்களைப்பெற்ற அசைக்க முடியாத சாதனைக்கு சொந்தக்காரரும் (பிரையன் லாரா) இந்த தேசத்தில்தான் இருக்கின்றார்.

ரி20 கிரிக்கெட் என்றால் அது மேற்கிந்திய தீவுகள்தான் பெயர்போன அணியினர். எந்தவொரு தருணத்திலும் போட்டியை மாற்றியமைத்து போட்டியை தன்வசம் மாற்றியமைக்கூடிய வல்லமைகொண்ட தேசம் என்றால் அது இவ்வணி. இதற்கு சிறந்த உதாரணம் 2016ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ரி20 உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் கடைசி ஓவரில் வெற்றிக்காக தேவைப்பட்ட 19 ஓட்டங்களை பென் ஸ்டோக்ஸின் பந்தில் பிரத்வெயிட் 4 சிக்ஸர்களை விளாசி மேற்கிந்திய தீவுகள் அணிக்கு நினைத்துப் பார்க்க முடியாத வெற்றியை பரிசளித்தார்.

அதுமட்டுமல்லாமல் அதே நாளில் மேற்கிந்திய தீவுகள் பெண்கள் கிரிக்கெட் அணியும் ரி20 உலகக்கிண்ணத்தை கைப்பற்றி தங்களது இரு கிண்ணங்களுடனும் தேசிய கொடியுடனும் அங்கு இருந்த கிரிக்கெட் ரசிகர்களுக்கு நன்றி கூறியதை யாரும் மறக்கமாட்டர்கள். இதுவரை நடந்த ரி20 உலகக்கிண்ணத் தொடரில் சுவாரஸ்யமான மற்றும் விறுவிறுப்பான இறுதிப்போட்டி என்றால் அது 2016 இறுதிப்போட்டி என்று கூறும் அளவுக்கு அன்றைய போட்டி நடைபெற்றது. அந்த இறுதிப் போட்டியின் இறுதி தருணத்தில் வர்ணனையாளராக இருந்த மேற்கிந்திய தீவின்





















முன்னாள் வீரர் இயன் பிசோப், பிரேத்வெயிட் கடைசி ஆறு ஓட்டத்தை அடிக்க "கார்லஸ் பிரத்வெயிட் ரிமெம்பர் த நேம்" என்று ஆங்கில மொழியில் உரத்த குரலில் கூறியது இன்னும் நமது காதுகளுக்கு ஒலித்துகொண்டே இருக்கின்றது.

உலகக்கிண்ணத்துக்கு தகுதிபெறாமல் போகும் அளவுக்கு கிரிக்கெட் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன என்று பார்த்தால் யாரை குறை கூறுவது என்பது தெரியவில்லை. முதன்முதலில் 2014ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சுற்றுலா மேற்கொண்ட மேற்கிந்திய அணி இடைநடுவே தங்கள் தொடரை நிறுத்தி தாயகம் திரும்பியது உங்களில் எத்தனை பேருக்கு நினைவிருக்கும் ?

அப்போதைய வீரர் பிரோவோ அதை வெளிப்படையாகவே, நமது கிரிக்கெட்டில் அரசியல் புகுந்து விட்டது, எமக்கு சரிவான ஊதியம் கொடுக்க மறுக்கிறார்கள் என்றும், அதுமட்டுமல்லாமல் எங்களுக்கு பயிற்சி செய்ய சரியான மைதானங்கள் இல்லை என்பதையும் திட்டவட்டமாகவும், வெளிப்படையாகவும் கூறியிருந்தார்.

அதுபோக அந்த நாட்டு கிரிக்கெட் சபையே இதற்கு முழுப்பொறுப்பை ஏற்க வேண்டும் என பல வீரர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

நடைபெற்று முடிந்த இந்த தகுதிகாண் சுற்றில் நெதர்லாந்து, சிம்பாப்வே, ஸ்கொட்லாந்து அணிகளிடையே விளையாடிய விதத்தில் விளங்குகின்றது, அவர்கள் அந்த போட்டித்தன்மை புரிந்து சரியான திட்டங்களுடன் விளையாட வில்லை என்பது உண்மை. சுனில் நரேன் 2019ஆம் ஆண்டும், 2022ஆம் ஆண்டில் அண்ட்ரூ ரசலுக்கும் சரியான ஊதியம் கிடைக்கவில்லை. இந்தப் பிரச்சினை காரணமாக எங்களுக்கு தாய்நாட்டுக்கு விளையாடுவதில் நாட்டம் காட்ட முடியாது அப்பட்டமாக கிரிக்கெட் சபைக்குத் தெரிவித்தனர்.

மேற்கிந்திய தீவுகளின் பல வீரர்கள் பிரன்ச்சைஸ் லீக் போட்டிகளில் கவனம் செலுத்தினார்கள். லீக் போட்டிகளைப் பொறுத்தவரையில் எந்தவொரு லீக் போட்டியாக இருந்தாலும் அதில் குறைந்தது ஒரு மேற்கிந்திய வீரர் இருப்பார். அந்தளவுக்கு அவர்களின் திறனை இந்த உலகம் அடையாளம் கண்டுகொண்டது. இந்த வையகம் அடையாளம் கண்டுகொண்டதை தக்கவைக்க தவறியிருக்கிறது மேற்கிந்திய கிரிக்கெட் சபை.

2016 ரி20 இறுதிப் போட்டியின் பின்னர் தலைவரான டேரென் சமி, தமக்கு இந்தத் தொடருக்கு வருவதற்கு முதல் சரியான ஸ்பொன்சர் இல்லை என்றும் பல பிரச்சினைகளை முன்வைத்திருந்தார். நினைத்திருந்தால் அந்தத் தொடரில் பிரகாசிக்காமல் நாடு திரும்பிருக்கலாம். ஆனால், அவர்கள் முதல் போட்டியில் ஆப்கானிஸ்தானுடன் தோல்வியுற்ற போதிலும் மீண்டெழுந்து கிண்ணத்தைக் கைப்பற்றி மேற்கிந்த கிரிக்கெட் சபைக்கும் உலகிற்கும் ஒரு நல்ல செய்தியை உரக்க சொல்லிவிட்டார்கள்.

அதன்பின் ஐ.பி.ல், கெரிபியன் ப்ரீமியர் லீக், பாகிஸ்தான் சுப்பர் லீக், பங்களாதேஷ் ப்ரீமியர் லீக், பிக்பாஷ் லீக் என்று பல லீக் போட்டிகளில் பங்குபற்றி தங்கள் திறன்களை வெளிப்படுத்தி அடையாளத்தை நிலைநிறுத்திய போதிலும் அதில் கிடைக்கும் அனுபவத்தை தங்கள் தேசத்துக்கு வழங்க மறுத்துவிட்டார்கள். இந்த லீக் போட்டிகள் ஒரு அணியின் அசுர வேக வளர்ச்சியில் பங்குவிளைவிக்கிறது. அதற்கு சிறந்த உதாரணம் ஐ.பி.ல் தொடர்.

2007ம் ஆண்டு ஒருநாள் உலகக்கிண்ண தொடரின் பாரிய பின்னடைவின் பின்னர் 2008ம் ஆண்டு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஐ.பி.ல் தொடரை ஆரம்பிக்கிறார்கள். இன்று உலகில் அதிகப்படியான ரசிகர்களால் கவரப்பட்ட ஒரு தொடராகவும், அதுமட்டுமல்லாமல் இன்;று இந்திய கிரிக்கெட்டின் அசுர வளர்ச்சியில் ஐ.பி.எல் பங்குள்ளது என்பது எந்த மாற்று கருத்துமில்லை. இந்தியா அணி ஒரு நேரத்தில் 2 தொடர்களை விளையாடும் அளவுக்கு வீரர்களை அடையாளப்படுத்தி வைத்திருக்கார்கள். இது அனைத்தும் அந்த கிரிக்கெட் வாரியத்தின் சிந்தனைமிக்க வளர்ச்சிகளில் ஒன்று.

இந்திய வீரர்கள் எந்தவொரு வெளிநாட்டு லீக் தொடரிலும் விளையாடுவதை பார்த்திருக்கமாட்டீர்கள். காரணம், அவர்களுக்கு அதற்கு அனுமதியில்லை. எனவே, இந்த உள்ளூர் லீக் போட்டிகளின் பிரகாரம் ஒரு அணியின் அசுர வளர்ச்சிகளையும் நம் கண்களால் பார்க்கின்றோம். அதேபோன்று முற்காலத்தில் கிரிக்கெட் ஜாம்பவான்களை கொண்டு திகழ்ந்த அணி கண் முன்னே அழிந்துகொண்டே போகிறது என்பதையும் கண்ணழைகளால் பார்க்கின்றோம்.

மேற்கிந்திய கிரிக்கெட் சபை தன் திறமையான வீரர்களுக்கு சரியான ஊதியத்தையும், திட்டங்களையும், அதுபோக சட்டதிட்டங்களையும் சரியாக வகுத்திருந்தால் இன்று இந்தளவுக்கு சென்றிக்காது. கடைசியாக நடைபெற்ற ரி20 உலகக்கிண்ணத் தொடரிலும் தகுதிக்காண் சுற்றுடன் வெளியேறிய அதே சம்பவம் இன்றும் மீண்டும் நம் மனசுக்கு மனக்கவலையளிக்கின்றது.

நெதர்லாந்து அணியினுடான தகுதிகாண் சுற்றில் தோல்வியின்போது வர்ணனையாளர்களாக இருந்த இயன் பிசோப்பின் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக கொட்டியதை நாம் பார்த்தோம். 2016 டி20 உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் ஆங்கில மொழியால் தன் தாய்நாட்டுக்காக உரத்த குரலில் பேசிய இயன் பிசப் இன்று பேச வார்த்தைகள் வராமல் திக்கி திண்டானார்.

மறுபக்கம் 2016ஆம் ஆண்டின் ரி20 தலைவர் டேரென் சமி அணியின் பயிற்றுவிப்பாளராக சோக அலைகளுடன் அறையில் இருந்தார். மாறாக, 2016 ரி20 உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் சிக்ஸர் அடித்து தாய்நாட்டுக்காக கிண்ணத்தை வென்றுகொடுத்த பிரத்வெயிட் யோசனையும் கவலையான முகச்சாயலுடனும் காணப்பட்டார்.

கிரிக்கெட் என்பது வெறும் விளையாட்டு இல்லை. அது உணர்வுகளால் மீட்டெளப்பட்ட ஒரு விளையாட்டு என்பதை மீண்டும் நிலைநிறுத்தியது அந்த தருணம். எனவே, இனிவரும் காலங்களில் சரியாக திட்டங்களை வகுத்து, பல அனுபவ வீரர்கள் முன்வந்து இந்த அணியை மீட்டெடுத்து மீண்டும் நாங்கள் சம்பியன்ஸ் என்று நிலைத்து நின்றுவிட வேண்டும் என்பது கிரிக்கெட் மீது அதீத அன்பு வைத்திருக்கும் மேற்கிந்திய ரசிகர்களினதும், உலகவாழ் கிரிக்கெட் ரசிகர்களினதும் ஆசை.


தற்போது விற்பனையில்...

தரம் 4, 5 மாணவர்களுக்கான

ஜூனியர் தமிழன் புலமைப்பரிசில் வழிகாட்டி



நுண்ணறிவு நுட்பங்களும் விளக்கங்களும்

வினாத்தாள் I, II வழிகாட்டி செயலட்டைகள்

மாதிரி வினாத்தாள்

தொடர்புகளுக்கு 0768313896

விலை ரூ.60 மட்டுமே


# ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகாண் சம்பியனாவது யார் ?
# இறுதியாட்டத்தில் இலங்கை – நெதர்லாந்து இன்று மோதல்






ஏ. அகீல் சிஹாப்

ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகாண் தொடரின் இறுதி ஆட்டத்தில் இன்றைய தினம் இலங்கை மற்றும் நெதர்லாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த ஆட்டம் ஹராரே நகரில் பிற்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

இந்தியாவில் இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. உலக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கு 9 மற்றும் 10ஆவது அணிகளை தெரிவுசெய்யும் தகுதிகாண் தொடர் கடந்த மாதம் 18ஆம் திகதி சிம்பாப்வேயில் ஆரம்பமானது. குழு 'ஏ' மற்றும் குழு 'பி' என தலா ஐந்து அணிகள் வீதம் மொத்தமாக பத்து அணிகள் பங்கேற்ற குறித்த தொடரின் மூலம் இலங்கை மற்றும் நெதர்லாந்து ஆகிய இரண்டு அணிகள் உலகக்கிண்ணத் தொடரில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றன. இவ்வாறான நிலையில் உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்ற இரண்டு அணிகளுக்கும் இடையில் தகுதிகாண் தொடரின் இறுதிப்போட்டி நடைபெற இருக்கிறது. இந்த போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு தகுதிகாண் தொடரின் சம்பியன் கிண்ணமும் வழங்கப்படவுள்ளது.

அந்த வகையில் ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி டெல்லி அருண் ஜெட்லி மைதானத்தில் தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்கிறது.

2023 ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடரில் மொத்தம் பத்து அணிகள் இடம்பெற்றிருக்கும் நிலையில் புள்ளிப்பட்டியலின் அடிப்படையில் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

இரு மனங்கள் இணையும் திருமணத்திற்காக...

# VIVAHA விவாஹா

மலர் :1 இதழ் : 39- 09.07.2023

சந்திரன் மறைவு ஸ்தானங்களில் திருமணப் பொருத்தம் இருந்தால் என்னென்ன பிரச்சினைகள் வரும்?

மணமகள் கையை அலங்கரிக்கும் போர்ட்ரெட் மெஹந்தி!

ஏழில் புதன் இருந்தால் ஏற்படும் திருமணத் தடையும்... பரிகாரமும்...



Ajith ××××× Sharmila

# தண்ணீருடன் உப்பு சேர்த்து முகம் கழுவினால் சரும பிரச்சினைகள் தீரும்...



உப்பு தண்ணீரால் தலைக்குக் குளித்தால் முடி அதிகமாக கொட்டும் என்று சொல்வார்கள். ஆனால், அதே உப்பு தண்ணீரால் முகம் கழுவினால் முகம் அழகாகும் என்றால் நம்புவீர்களா? ஆம், அதுதான் உண்மை. எப்படியென்று பார்க்கலாம்.

தண்ணீரில் உப்பு போட்டு முகம் கழுவினால் சகல சரும பிரச்சினைகளும் தீரும். முகம் தங்கமாக மின்னும். முயற்சி பண்ணுங்கள்.

சாதாரணமாக முகம் கழுவப் பயன்படுத்தும் தண்ணீரில் சிறிது உப்பு சேர்த்து கழுவுங்கள் என்று சொன்னால் கேட்பதற்கு வித்தியாசமாக இருக்கலாம். ஆனால், அப்படி செய்யும்போது உங்களுடைய சருமத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பார்த்து நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.









***பருக்களை விரட்டும்***

உப்பு தண்ணீர் சருமத்திலுள்ள பக்டீரியாக்களை முதலில் வெளியேற்றும். அத்தோடு சருமத்தில் திறந்திருக்கும் பெரிய துளைகளைச் சுருக்கி, சருமத் துளைகளுக்குள் தேங்கியிருக்கும் சீபம் மற்றும் எண்ணெய்களை உறிஞ்சி எடுக்கும்.

இதன்மூலம் சருமத்தை சுத்தம் செய்து சருமத்திலுள்ள மாசுகளை முற்றிலும் வெளியேற்றி பருக்களை விரட்டும். இதனால் உங்களுடைய சருமம் சுத்தமான சருமமாக பளபளப்புடனும் இருக்கும்.

***சரும நோய்களை விரட்டும்***

சருமத்தில் ஏற்படும் அதிகப்படியான வறட்சி போன்றவற்றின் காரணமாக சொரியாசிஸ், எக்ஸிமா உள்ளிட்ட நோய்கள் உண்டாகும். இவை அதிகரிக்கும்போது அழகை கெடுப்பது மட்டுமன்றி சருமத்தின் ஆரோக்கியத்தையும் வெகுவாக பாதிக்கும்.

உங்களுடைய சருமத்தை அடிக்கடி உப்பு நீரைப் பயன்படுத்தி கழுவி வந்தால் சருமத்தில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் கொஞ்சம் கொஞ்சமாக தீர ஆரம்பிக்கும். குறிப்பாக, கடல் உப்பில் பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம் ஆகியவை நிறைந்திருக்கின்றன. இது சரும ஆரோக்கியத்தை மேம்படுத்தக்கூடும்.

***ஃபேஷியல் டோனராக***

உப்பு நீரை முகத்தை சுத்தப்படும் ஒரு பொருளாகப் பயன்படுத்தலாம். அப்படி பயன்படுத்தும்போது சருமத்தின் பெரிய துளைகளைச் சுருக்கும். சருமத் துளைகளுக்குள் இருக்கும் எண்ணெய்ப் பசையை வெளியேற்றும்.

அடிக்கடி முகத்தை வெறும் நீரால் கழுவுவது நல்லது. குறிப்பாக மேக்கப் போடுவதற்கு முன்பு உப்பு நீரால் முகத்தைக் கழுவிக்கொள்வது நல்லது.

***சிறந்த எக்ஸ்ஃபோலியேட்***

கடல் உப்பு சருமத்துக்கு மிகச் சிறந்த எக்ஸ்ஃபோலியேட்டராகச் செயல்படுகிறது. கடல் உப்பை பொடித்து சருமத்தில் ஸ்கிரப் போல் பயன்படுத்தும்போது சருமத்திலுள்ள இறந்த செல்கள் வெளியேறும்.

சருமத்தைப் புத்துணர்ச்சியாக்கி, அதிகமாகத் தளர்ந்த சருமத்தை இறுக்கமாக்கி சருமத்தை மென்மையாக மாற்றுகிறது.

***சருமப் புத்துணர்ச்சிக்கு***

சென்சிடிவ் சருமம் உள்ளவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோருமே தங்களுடைய சருமப் பராமரிப்பில் கடல் உப்பைச் சேர்த்துக்கொள் ளலாம்.

இந்த கடல் உப்பு சருமத்தின் செல்களைப் புதுப்பித்து புத்துணர்ச்சியாக மாற்றுகிறது. அதோடு சருமம் மென்மையாக மாறும்.

கடல் உப்பு சருமத் துளைகளுக்குள் எளிதாக உள்நுழைந்து சருமத்தின் சேதத்தை திருத்தும் தன்மை கொண்டது.

சருமத்தை நீரேற்றத்துடன் வைத்திருக்கச் செய்யும். சருமம் பொலிவடைந்து புத்துணர்ச்சியாக மாற்றும்.

***பேஸ்மாஸ்க்***

கடைகளில் எப்சம் உப்பு என்று சொல்லப்படுகிற உப்பு கிடைக்கும். இது சருமப் பிரச்சினைகளுக்கும் ஆரோக்கியத்திற்கும் உதவி செய்கிறது.

அதனால் எப்சம் உப்பையும் கடல் உப்பையும் உங்களுடைய வழக்கமான பேஸ்பேக்குகளில் சேர்த்துப் பயன்படுத்தலாம்.


# 7ஆம் இடத்தில் இந்தக் கிரகங்கள் இருந்தால் திருமணம் செய்தாலும் வீணான சிக்கல்கள் வரலாம்

| | | | |
|---|---|---|---|
| 12 விரய மோட்ச ஸ்தானம் | 1 லக்கின, சுய ஸ்தானம் | 2 குடும்ப, தன ஸ்தானம் | 3 இளைய சகோதர, தைரிய ஸ்தானம் |
| 11 மூத்த சகோதர, லாப ஸ்தானம் | ஒவ்வொரு ஸ்தானம் / வீடும் நம் வாழ்வில் உள்ள பல்வேறு அம்சங்களை கூறுகிறது. | | 4 சுக, தாயார் ஸ்தானம் |
| 10 கர்ம, தொழில் ஸ்தானம் | | | 5 பூர்வ புண்ணிய ஸ்தானம் |
| 9 பாக்கிய, தந்தை ஸ்தானம் | 8 ஆயுள், துஸ் ஸ்தானம் | 7 மனைவி, தொழில், கூட்டாளி ஸ்தானம் | 6 நோய், எதிரிகள் ஸ்தானம் |

ஜோதிடத்தில் நாம் பிறக்கும் நேரத்தை வைத்து எழுதப்படும் ஜாதகத்தில் 7ஆம் இடத்தில் இருக்கும் கிரகம் எப்படிப்பட்ட பலனைத் தரும் என்பதைப் பார்ப்போம்...

ஜோதிடம் என்பது நவக்கிரகங்களை அடிப்படையாக வைத்து செயல்படுவது. ஜாதகம் என்பது நாம் பிறந்த நேரத்தை வைத்து அந்த நேரத்தில் கிரகங்கள் அமைந்திருந்த இடத்தை வைத்து எழுதப்படுகிறது. அதன் மூலம் ராசி, லக்கினம் வைத்து நம் எதிர்காலத்தை ஜோதிடர்கள் கணிக்கின்றனர்.

நவக்கிரகத்தில் ஒவ்வொரு கிரகத்துக்கும் ஒவ்வொரு தனித்துவக் குணம் உள்ளது. சில கிரகங்கள் சுப கிரகமாக இருக்கின்றன. இவை எந்தக் கட்டத்தில் இருந்தாலும் சுப பலன்களைத் தரக்கூடியவை. சில கிரகங்கள் அசுப கிரகங்களாக இருக்கின்றன. அந்தக் கிரகங்கள் சில கட்டங்களில் இருக்கும்போது மோசமான பலன்களைத் தருகின்றன.




ஜோதிடத்தில் 7ஆம் இடம் என்பது மனைவி, தொழில், கூட்டாளி ஸ்தானம் என்று குறிப்பிடப்படுகிறது.

அதன் காரணமாக திருமணப் பொருத்தத்தைப் பார்க்கும்போது இந்த 7ஆம் இடம் மிக முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. 7ஆம் இடத்தில் அமைந்துள்ள கிரகத்தைப் பொறுத்து ஜாதகருக்கு எப்படிப்பட்ட மனைவி அமைவார், எப்படிப்பட்ட தொழிலில் பங்குதாரர் அமைவார் என்பது தெரியவரும்.

அந்த வகையில் நம் ஜாதகத்தில் 7ஆம் இடத்தில் எந்தக் கிரகம் இருந்தால் என்ன பலன் என்பதைப் பார்ப்போம்.

7இல் சூரியன் அமையப்பெற்றவர் மிகச் சிறந்ததொரு வாழ்க்கைத்துணையைப் பெறுவார். இவர் திருமண வாழ்க்கையில் இணைந்ததும் மிக பிரபலமாக வாய்ப்புள்ளது. ஆனால், இவருடன் சனி, ராகு, செவ்வாய் போன்ற கிரகங்கள் அமைந்தால் நல்ல திருமண வாழ்க்கை அமைவது மிகக் கடினம்.

### 7ஆம் இடத்தில் சந்திரன்:

7இல் சந்திரன் அமையப்பெற்றவருக்கு நல்ல அழகான, அன்புள்ள, கருணையுள்ள, ஆன்மிக நாட்டமுள்ள ஒரு துணை கிடைப்பார்.

### 7ம் இடத்தில் செவ்வாய் :

7இல் செவ்வாய் அமையப்பெற்றவருக்கு நல்லதும் உண்டு, கெட்டதும் உண்டு. இவர்கள் அதேபோல் 7இல் செவ்வாய் அமைந்த துணையை தெரிவு செய்வது அவசியம். அதனால் நன்மை நடக்கும். பொதுவாக 7இல் செவ்வாய் இருந்தால் ஒருவித உற்சாகம், எதையும் செய்து முடிக்கும் ஆற்றல் பிறக்கும்.

செவ்வாயுடன் ராகு சேர்ந்திருந்தால் கஷ்டம்தான்.

### 7ஆம் இடத்தில் புதன் :

7இல் புதன் இருக்கப்பெற்றவருக்கு நன்றாக படித்த, வசதியான மனைவி அமைவாள். உறவினர் முறையில் மனைவி இருப்பாள். அத்தோடு குடும்பத்தில் மனைவியின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும்.

### 7ஆம் இடத்தில் குரு :

7இல் குரு பகவான் அமையப்பெற்றவர், நல்ல மனைவி அல்லது கணவன் பெற்று சிறப்பாக வாழ்வார். அத்தோடு திருமணத்துக்குப் பின்னர் ஜாதகதாரர் நல்ல முன்னேற்றம், செல்வத்தை அடைந்து உயர்நிலையை அடைவார்.

### 7ஆம் இடத்தில் சுக்கிரன் :

7இல் சுக்கிரன் பகவான் அமையப்பெற்றவருக்கு நல்ல வசதியான, அழகான துணை அமையும். அத்தோடு கலை, வணிகத்தில் கொடி நாட்டுவார். இவர் நல்ல வருவாய் ஈட்டக்கூடியவராக, அழகானவராக இருப்பார். திருமணத்துக்குப் பின் சொத்துகள் கூடும். சுக்கிரன் 7ல் இருப்பதால் சிலருக்கு இரண்டு திருமண யோகம் ஏற்படலாம்.

### 7ஆம் இடத்தில் சனி :

7இல் சனி பகவான் அமையப்பெற்ற ஜாதகருக்கு தன் குலத்துக்கு மாறுபட்ட குணமுடைய கணவன் / மனைவி அமையும். இத்தகைய வாழ்க்கை அவரது துறவற வாழ்க்கைக்கு சமமாக இருக்கும்.

### 7ஆம் இடத்தில் ராகு :

7இல் நிழல் கிரகமான ராகு பகவான் அமையப்பெற்றவர் களத்ரபாவம் சரியாக அமையாமல் போகலாம். அதாவது, அவருக்கு அமையும் மனைவி நோய் நல பிரச்சினையுடன் இருப்பாள் அல்லது தன் குலத்திலிருந்து மாறுபட்டு அதாவது மதம், குலம் மாறிய திருமணம் செய்யக்கூடும்.

### 7ஆம் இடத்தில் கேது :

7இல் நிழல் கிரகமான கேது அமையப்பெற்றவருக்கு திருமணம் நடப்பதே பெரிய போராட்டமாக இருக்கும். அப்படியே திருமணம் நடந்தாலும் அதில் பெரிய அளவில் பற்று இருக்காது.


Kugan
photography
k- Studio
0 75 485 1306



# சரியான பருவத்தில் திருமணம்

தாத்தா, பாட்டி காலத்தில் 15 வயதில் திருமணம் செய்வது சாதாரணமான விடயம். அதே நம் அப்பா, அம்மா காலத்தில் 21 வயதில் திருமணம் நடந்தது. ஆனால், இன்றைக்கு நன்றாக படித்து கை நிறைய சம்பாதித்தாலும் சரியான பருவத்தில் திருமணம் செய்யாமல் 30 வயது வரை தள்ளிப் போடுகின்றனர்.

இது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பது நிபுணர்களின் கருத்து. பருவம் பார்த்து விதை விதைக்க வேண்டும். அப்போதுதான் சரியாக முளைக்கும் என்பது விவசாயத்துக்கு மட்டுமல்ல, வாழ்க்கைக்கும்தான் பொருந்தும் என்பது நிபுணர்களின் அறிவுரை. சரியான பருவத்தில் திருமணம் செய்வதனால் ஏற்படும் நன்மைகளை நிபுணர்கள் பட்டியலிட்டுள்ளனர்.

சீக்கிரம் செட்டில் ஆகுங்க:

இன்றைய இளைய தலைமுறையினர் கல்வியில் அதிக அக்கறை காட்டி வருகிறார்கள். நல்ல படிப்பு, அதற்கேற்ற வேலை, கைநிறைய சம்பளம் என்று ஓர் இலட்சியத்தை மனதில் பதித்துக்கொண்டு அதை சாதித்தும் விடுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் படிப்புக்கேற்ற வேலை கிடைத்ததும் அதற்கு மேலும் தள்ளிப்போடாமல் தாமதமின்றி திருமணம் செய்துகொள்வது அவசியம். இன்றைய காலத்தில் 15 வயதுக்குள் பால்ய விவாகம் செய்வது சாத்தியமில்லை. ஆனால், இளம் பருவத்தில் அதாவது 21 வயதிலிருந்து 25 வயதிற்குள் திருமணம் செய்து வைக்கும் வழக்கத்திற்கு மாற முயற்சிக்கலாம்.

இளம் வயதில் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளின் பெற்றோர் நல்ல ஆரோக்கியமாக இருப்பார்கள். அதனால் பிறக்கப்போகும் தங்கள் பேரன், பேத்திகளை அவர்கள் தங்கள் பொறுப்பில் பார்த்துக் கொள்வார்கள்.

இதனால் தலையாய பிரச்சினையான குழந்தை வளர்ப்பது கூட தம்பதிகளுக்கு சாதாரண விடயமாகிவிடுகிறது. 18 முதல் 25 வயதில் திருமணம் செய்துகொண்ட 8 ஆயிரம் இளம் தம்பதியரிடம் மேற்கொண்ட ஆய்வில் குடும்பத்தில் பெற்றோர் – குழந்தைகளிடையேயான உறவு முறையில் அதிகளவில் ஒரு ஒட்டுதல் இருந்தது.

தலைமுறை இடைவெளிகள் அதிகம் இல்லை. இளம்வயது தம்பதியருக்குப் பிறந்த குழந்தைகள் அதிக புத்திசாலிகளாக இருந்தனர். திருமணம் காரணமாக அவர்களின் நடத்தையில் குறிப்பிடத்தக்க மாற்றம் இருந்தது.இந்த வயதினருக்கு ஏற்படும் மன அழுத்தம் தடுக்கப்பட்டது.

உளவியல் சிக்கல்கள்

மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் 15 வயதுக்குள்ளாகவே இளமைப்பருவத்தில் அடியெடுத்து வைத்துவிடுகிறோம். ஹோர்மோன்களின் மாற்றம் அப்போதே தொடங்கிவிடும். திருமணம் செய்யாமல் 30, 35 வயது வரை இயற்கைக்கு எதிராக வாழ முற்படுவதினால் பல்வேறு சிக்கல்களை சந்திக்க வேண்டியிருக்கிறது.



சிசேரியன் பிரசவங்கள், தாமதமான திருமணம் உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும்கூட பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. தாமதமாக திருமணம் செய்துகொள்ளும் பெண்களுக்கு குழந்தை பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. கருத்தரித்தல் தாமதமாகும்.

அப்படியே கருத்தரித்தாலும் சுகப்பிரசவம் கேள்விக்குறி என்ற நிலை ஏற்படும். காலதாமதமாக திருமணம் செய்பவர்களுக்கே அதிகமாக சிசேரியன் பிரசவம் நடப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் அறுவை சிகிச்சையை அறிந்ததில்லை. அவர்கள் ஆரோக்கியமான வயதில் திருமணம் செய்தனர். சுகப் பிரசவங்கள் நடந்தன. படிப்பு, வேலை, சொந்த காலில் நின்ற பிறகே இல்லறம் என்றெல்லாம் கூறி திருமணத்தை தாமதாக செய்துகொள்கிறார்கள். இதனால் வயது முதிர்வடையும்போது உடல் வளைந்துகொடுக்கும் தன்மையை இழக்கிறது.

இடுப்பெலும்பு வளைந்து கொடுக்கும் வயதைத்தாண்டி திருமணம் செய்துகொள்ளும்போது அநேக பெண்களுக்கு சிசேரியன் அவசியமாகி விடுகிறது.

தந்தையாகும் தகுதி

ஆண்கள் தாமதமாக திருமணம் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தால் தவறான பழக்கம் உடையவர்களாக மாறிவிடுகிறார்கள்.

தாமதமான திருமணத்தால் தீயபழக்கங்கள், இணையதள தேடல் என மாற்றுவழிகளில் இன்றைய இளைஞர்கள் பயணிக்கும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதனால் தவறான நடத்தை, பல உயிர்க்கொல்லி நோய்கள், கலாசார சீரழிவு ஆகியன தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. பலர் தந்தையாகும் தகுதியையும் இழக்கிறார்கள.

ஆகவே, இன்றைய பெற்றோர்களே நீங்கள் தாமதமாக திருமணம் செய்துகொண்டிருந்தாலும் பரவாயில்லை. உங்களின் குழந்தைகளுக்காவது காலா காலத்தில் திருமணத்தை முடித்துவைத்து சீக்கிரம் பேரக் குழந்தைகளை பார்த்து செட்டிலாகும் வழியைப் பாருங்கள்.

இவ்வாறு இயற்கையான சில விஷயங்களை அறிந்து, புரிந்து செயல்பட்டால் நலமான சமுதாயத்தை உருவாக்கலாம்.

# மணமகள் கையை அலங்கரிக்கும்

# போர்ட்ரெட் மெஹந்தி!




இரவு படுக்கும் முன் உள்ளங்கைகளில் மருதாணி வைத்து காலையில் காய்ந்தவுடன் கழுவி சிவந்திருக்கும் நம் கையை பார்க்கும்போது வரும் ஆனந்தமே தனிதான். நம்முடைய கைகளை வளையல்கள், மோதிரம், பிரேஸ்லெட் கொண்டு அலங்கரித்துக்கொண்டாலும், மெஹந்தி கொடுக்கும் அலங்காரம் நம் கைகளை தனித்து எடுத்துக்காட்டும். இதில் பல வகை டிசைன்கள் இருந்தாலும், இதில் வேறென்ன புது மாதிரியான டிசைன்கள் உள்ளன என்று பெண்கள் தேடிக்கொண்டே இருக்கிறார்கள். இதனாலேயே புதுப்புது டிசைன்கள் மெஹந்தியில் அறிமுகமாகிக் கொண்டே இருக்கின்றன. அந்த டிசைன்களின் புதுவரவுதான் 'போர்ட்ரெட் மெஹந்தி.'



மெஹந்தி கையில் போட்டுக் கொள்ளும் போது, ஒரு நேர்மறை யான மனநிலையை கொண்டுவரும். வெறுமனே எங்கள் கைகளை பார்ப்பதற்கும் மெஹந்தி போட்ட பிறகு பார்ப்பதற்கும் நிறைய வேறுபாடு தெரியும். மெஹந்தி எம் கைகளை அலங்கரிப்பது மட்டுமில்லாமல், அதை பார்க்கும்போதெல்லாம் மனதுக்கு சந்தோஷமான மனநிலையைக் கொடுக்கும். அதனாலயே பெண்கள் அதிகம் மெஹந்தியை தங்களுடைய கைகளில் இட்டுக்கொள்ள விரும்புகிறார்கள். மெஹந்தியில் இந்தியன் டிசைன், அரபிக் டிசைன், பாரம்பரிய டிசைன்கள், மண்டோலா டிசைன், லோட்டஸ் டிசைன்கள் என பல வகைகள் இருக்கின்றன.

அழகுக் கலையிலும், பேஷன் உலகிலும் அடிக்கடி புது 'டிரெண்ட் உருவாகி, பிரபலமாவது வழக்கமான ஒன்றுதான். அந்தவகையில் அழகுக் கலையில் சமீபத்தில் புதிய போக்காக வலம் வருகிறது, 'போர்ட்ரைட் மெஹந்தி'.

அதாவது, மருதாணியைப் பயன்படுத்தி, அடுத்தவர் முகத்தை தத்ரூபமாக வரைவதுதான், இன்றைய நிலை. அதில் திறமையானவராகத் திகழ்கிறார், உனாதி பட்டேல். இவரது உருவ மெஹந்தி வேலைப்பாடுகள் இன்ஸ்டாகிராம், பேஸ்புக்கில் பிரபலம். அதுபற்றிய தகவல்களை வண்ணமயமாக பகிர்ந்துகொள்கிறார்.

கொரோனா ஊரடங்கு காலகட்டம் ஒவ்வொருவருக்கும் புதுப்புது விடயங்களை கற்றுக்கொடுத்திருக்கிறது. அந்தவகையில், நான் வடஇந்திய டீன் ஏஜ் பெண்களுக்கே உரித்தான, போர்ட்ரைட் மெஹந்தியை கற்றுக்கொண்டேன். சிறுவயதிலிருந்தே மெஹந்தி போடுவேன் என்றாலும், போர்ட்ரைட் மெஹந்தியில் இப்போதுதான் ஆர்வம் பிறந்திருக்கிறது.

யூ–டியூப், இணையதளம் வாயிலாக இந்தக் கலையைப் பயின்று, நிறைய முயற்சிகள் மேற்கொண்டு, இன்று இதில் கை தேர்ந்தவராகி இருக்கிறேன் என்று உற்சாகமாக ஆரம்பிக்கும் உனாதி, மகாராஷ்டிராவை சேர்ந்தவர். என்ஜினீயரிங் பட்டதாரி.

சில காலம் ஐ.ரி. துறையில் பணியாற்றிவிட்டு, இப்போது புதுமையான அழகுக் கலைகளை முயன்று வருகிறார். அதில் 'போர்ட்ரைட் மெஹந்தி' இவரது தனித்துவ கை வண்ணமாக மிளிர்ந்துகொண்டிருக்கிறது.

''என்னுடைய அப்பாவிடமிருந்து ஓவியக் கலையை கற்றுக்கொண்டேன். ஒயில் பெயிண்டிங் கலையும் முயன்றிருக்கிறேன். அதன் காரணமாக, ஓவிய மாதிரியிலேயே உருவாகும் மருதாணி ஓவியத்தை மிக சுலபமாக வரைய முடிந்தது. இதுவும் ஓவியம்தான். ஆனால், வண்ணத்தூரிகைக்குப் பதிலாக மெஹந்தி கோனும், காகிதத்திற்கு பதிலாக கையும் பயன்படுத்தி வரையும் தத்ரூப ஓவியம்.

மற்ற ஓவிய வேலைகளின்போது தவறுகளை திருத்திக்கொள்ளலாம். ஆனால், மருதாணி ஓவியத்தில், தவறுகளை திருத்துவது கொஞ்சம் சிரமமானது. நிறைய பழகினால் மட்டுமே, கைகளில் மருதாணி ஓவியம் வரைய முடியும்'' என்று வர்த்தக ரீதியாக பேசும் உனாதி, பிரபல பொலிவுட் நடிகை களுக்கு மெஹந்தி பூசியிருக்கிறார்.

புதுமையான வடிவங்களில் மெஹந்தி பூசி விடுவதுடன், உலகத் தலைவர்களின் ஓவியங் களையும், மருதாணியில் வார்த்தெடுத்திருக்கிறார். கை முழுக்க மெஹந்தி வரைய 2 மணிநேரம் தேவைப்பட்டால், இதுபோன்ற ஓவியங்களை வரைய கூடுதலாக அரை மணிநேரம் தேவைப்படும் என்கிறார்.

அதேபோல் விசேட நாட்களில், கடவுள் உருவங்களைக் கையில் வரையும் பழக்கமும், வரலாற்றுச் சம்பவங்களை நினைவுகூரும் வகையிலான காட்சிகளை வரையும் போக்கும் அதிகரித்திருக்கிறது.

''புதிய கலை வடிவமாக இப்போது இந்தியாவிற்குள் நுழைந்திருக்கும் போர்ட்ரைட் மெஹந்தி, வருங்காலத்தில் பெண்களுக்கான அழகுக் கலை தொழிலாக மாறுவதில் எந்தவித சந்தேகமும் இல்லை. வட இந்திய மோகம், தமிழ்நாட்டில் அதிகரித்துவரும் நிலையில், மருதாணி ஓவியங்களுக்கு வருங்காலத்தில் அதீத வரவேற்பு இருக்கும் என நினைக்கிறேன். மேக்கப் கலை, புடவை கட்டிவிடுதல் போன்ற பகுதிநேர வேலை பட்டியலில் இதுவும் பெண்களின் விருப்பமான தொழிலாக மாற வாய்ப்பிருக்கிறது. ஏனெனில், சில நூறு ரூபா முதலீட்டில், பல ஆயிரங்களை சம்பாதிக்க முடியும் என்பதால், கல்லூரி மாணவிகளிடம் அதீத வரவேற்பு பெறும். ஆனால் எல்லோராலும், இதை சுலபமாக செய்துவிடமுடியாது. கலைநயமும், பொறுமையும் இருப்பவர்களுக்கு, இந்த கலை இலாபகரமான தொழிலாக மாறலாம் என்று நிறைவாய் பேசி முடித்த உனாதி, வருங்காலத்தில் மேலும் பல புதுமையான கலைகளை பயில ஆர்வமாய் இருக்கிறார்.

# சந்திரன் மறைவு ஸ்தானங்களில் திருமணப் பொருத்தம் இருந்தால் என்னென்ன பிரச்சினைகள் வரும்?



திருமணப் பொருத்தத்தின்போது நாம் திருமணம் செய்யப்போகும் ஆண், பெண் ஆகிய இருவரின் ஜாதகத்தில் உள்ள கிரகங்களின் அமைப்பை வைத்து ஆராயவேண்டியது அவசியம். இதில் சந்திரன் எப்படி அமைந்துள்ளார், அதனால் அந்த ஜாதகருக்கு எப்படிப்பட்ட பலன்கள் கிடைக்கும் என்பதை விரிவாக பார்ப்போம்.

ஒருவரின் ஜாதகத்தில் சந்திரன் பலமாக இருந்தால் என்ன பலன், அவர் மறைவு ஸ்தானங்களில் இருந்தால் எப்படிப்பட்ட பாதிப்புகள் ஏற்படும் என பல்வேறு தகவல்களை ஜோதிட நிபுணர் ஆர். பால்ராஜ் (98943 16587) விளக்கியுள்ளார்.

திருமணப் பொருத்தங்கள் பார்ப்பதற்குப் பெண்ணின் மற்றும் ஆணின் நட்சத்திரங்களை அடிப்படையாகக்கொண்டுதான் பெரும்பாலும் நிச்சயம் செய்கின்றனர். இருவருடைய ஜாதகங்களிலும் கிரக நிலை எப்படி இருக்கின்றன என்பதையும் ஆராய வேண்டும் என்று எல்லா ஜோதிட நூல்களும் கூறுகின்றன.

நட்சத்திரங்களின் நிலைகளை ஆராய்வதைபோல் முக்கியமான கிரகங்களின் நிலைகளையும் ஆராய வேண்டும். அவை சந்திரனும், சுக்கிரனுமாகும். ஒரு ஜாதகத்தில் சந்திரனின் பலம் நன்றாக இருந்தால்தான் அந்த ஜாதகரின் இல்லற வாழ்க்கை சுகமானதாக இருக்கும்.

சந்திரன் பலமாக இல்லாத ஜாதகர் சதா குழப்ப நிலையிலேயே இருப்பதுடன், சந்தேக புத்தி உள்ளவராகவும் இருப்பார். எனவே, இரண்டு ஜாதகங்களிலும் சந்திரனின் பலம் ஒன்றுபோலவே இருக்க வேண்டும். ஏனென்றால், சந்திரன் மனம், புத்தி, உடல் நலம், ஆசைகள், சிற்றின்பம் ஆகியவற்றுக்குக் காரகனாக இருக்கின்றார்.

சந்திரன் ஒரு ஜாதகத்தில் மறைவு ஸ்தானங்கள் என்று கூறப்படும் 6, 8, 12இல் இருந்தால் அந்த ஜாதகருக்கு உடலில் வீரியம் குறைவு, மறதி, புத்தியில் மந்த நிலை ஆகியவற்றை ஏற்படுத்தும் என்பது ஜோதிட விதி.

சந்திரன் லக்கினத்திலிருந்து 1, 3, 6, 7, 10, 11 ஆகிய ஸ்தானங்களில் அமையப் பெற்றவர்களுக்கு உடல் ஆரோக்கியத்துடன் மனமும் தீர்க்கமான எண்ணங்களைக் கொண்டிருக்கும். இவர்கள் தங்களுடைய திடமான மனோபலத்தால் வாழ்க்கையை திறம்படக் கொண்டுசெல்வார்கள். வாழ்க்கையை செம்மையாக அமைத்துக்கொள்வதற்கான திட்டங்களை வகுக்கத் தெரிந்தவர்களாதலால் அதற்கான பொருள் சம்பாதிப்பதிலும் ஆர்வமாக இருப்பார்கள். எதிரிகளை தந்திரமாக வெற்றிகொள்வார்கள். உடல் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவார்கள்.

சந்திரன் 4, 5, 9 ஆகிய ஸ்தானங்களில் இருந்தால் என்ன செய்யும் என்பதையும் பார்த்துவிடலாம்.

சந்திரன் 4இல் இருந்தால் காரகோ பாவ நாஸ்தி என்னும் அமைப்பின்படி தாயின் உடல் நலம் பாதிக்கப்படும். எல்லா வசதிகள் இருக்கும், வீடு மனை சொத்து வாகனங்கள் என எல்லாம் இருந்தாலும் மனதில் ஒருவிதமான சோர்வு இருக்கும். 5, 9 ஆகிய வீடுகளில் சந்திரன் அமர்ந்தால் மிகுந்த தயாள குணம் உடையவராக இருப்பார். வள்ளல் தன்மை மிக்கவராக இருப்பார்.



# ஒரே கோத்திரத்தில் திருமணம் செய்வதை தவிர்ப்பது ஏன்?

இந்து சமயத்தில் ஒரே கோத்திரத்தில் திருமணம் செய்துகொள்வதில்லை. திருமணப் பொருத்தத்தின்போது ஜாதகத்தை வைத்து திருமணப் பொருத்தம் பார்ப்பது மட்டுமல்லாமல், ஒரே கோத்திரமாக இருக்கக்கூடாது என்று பார்க்கப்படுவதும் முக்கிய விடயங்களில் ஒன்று. இதன் பின்னணியிலுள்ள நல்ல விடயங்கள் என்ன, அறிவியல் என்ன என்பதை தெரிந்துகொள்வோம்.

இந்து திருமணச் சடங்குகள்

இந்து சமயம் பல்வேறு வாழ்வியல் விடயங்களை அடங்கிய ஒன்று. இதில் வெறும் இறைவழிபாட்டைத் தாண்டி, வாழ்க்கை முறையை நெறிப்படுத்தக்கூடிய மிகவும் சிறப்பான விடயங்கள் அடங்கியுள்ளன. திருமணத்தின்போது திருமணம் செய்துகொள்ளக்கூடிய ஆண் மற்றும் பெண்ணின் கோத்திரம் என்னவென்று கேட்கப்படுகின்றன.

ஆணும். பெண்ணும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் திருமணச் சடங்குகள் செய்யப்படுவதில்லை. இரண்டு வெவ்வேறு கோத்திரங்கள் உள்ளவர்கள் திருமணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

சப்த ரிஷியின் வழித்தோன்றல்களால் உருவாக்கப்பட்ட கோத்திரங்கள்



ஜோதிட சாஸ்திரத்தின்படி கோத்ராக்கள் சப்தரிஷியின் வழித்தோன்றல்களால் உருவாக்கப்பட்டன.

கோத்திரம் அல்லது குலம் என்று குறிப்பிடப்படுவது, ஒரு சமூகத்தின் ஒரு குழுவைக் குறிக்கின்றது.

ஒரே வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் குறிக்கக்கூடியது கோத்திரம். கோத்திரம் குடும்பப் பெயரைப் போன்றதாகும்.

வேதகால ரிஷிகளின் வழிவந்தமையால் அந்த கோத்திரங்களுக்கு அவர்களின் பெயர்களே அமைந்தன.

ஜாபாலி கோத்திரம், சௌனக கோத்திரம், பாரத்துவாஜ கோத்திரம், மார்க்கண்டேய கோத்திரம், காசியபர் கோத்திரம், போன்றவை கோத்திர பெயர்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

உண்மையில் இந்த கோத்திரத்தைப் பார்த்து திருமணம் செய்ய காரணம் ஒரே இரத்த உறவினர்களிடையே திருமணம் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே.

கோத்ரம் என்பதில் ஒளிந்துள்ள அறிவியல் :

ஜோதிட சாஸ்திரத்தின்படி, கோத்ரம் என்றால் வம்சாவளி என்று பொருள். ஒரே கோத்திரம் என்றால் நாம் முன்னோர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இதன் காரணமாக, ஒரே கோத்திரத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் சகோதர சகோதரிகளின் உறவு வகையில் வருவார்கள்.

ஆணும் பெண்ணும் ஒரே கோத்திரத்தில் திருமணம் செய்துகொண்டால் குழந்தை பெறுவதில் பிரச்சினைகள் வரும். தற்போது கூட நெருங்கிய சொந்தத்தில் திருமணம் செய்யக்கூடாது என்று சொல்லக் காரணம் இதுதான்.

திருமணத்துக்கு மூன்று கோத்திரங்களை தவிர்க்கின்றனர். பெரும்பாலான இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் திருமணப் பொருத்தம் பார்க்கும்போது மூன்று முதல் ஐந்து கோத்திரங்களை விட்டு விட்டுத்தான் திருமணங்கள் செய்யப்படுகின்றன.

அதாவது திருமணம் செய்ய உள்ள அந்த ஆண் அல்லது பெண்ணின் பெற்றோரின் கோத்திரம்.

தந்தையின் கோத்திரம், தாயின் கோத்திரம், பாட்டியின் கோத்திரம் என மூன்று கோத்திரங்களை விட்டு மற்ற கோத்திரத்தை சேர்ந்தவருக்குத்தான் திருமணம் செய்துகொடுக்கும் வழக்கம் உள்ளது. இதனால் திருமண வாழ்க்கையிலும், குழந்தைப் பேற்றின்போது எந்தப் பிரச்சினையும் வராது என நம்புகின்றனர்.

அறிவியல் முக்கியத்துவம் :

விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, நெருங்கிய உறவில் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தை மரபணு தொடர்பான பிரச்சினைகள் கொண்டிருக்கும். அதேபோல் குழந்தைப் பேறு சமயத்தில் அதிக ஆபத்து பிரச்சினைகள் ஏற்படலாம் என்கின்றனர்.

பல மரபணு சார்ந்த நோய்களுக்கு இதுவே முக்கிய காரணமாக அமைகின்றது. அதனால் நம் முன்னோர்களின் அறிவுறுத்தலின்படி ''கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு'' என்ற பழமொழியைப் பின்பற்றவும்.



# ஏழில் புதன் இருந்தால் ஏற்படும் திருமணத் தடையும்... பரிகாரமும்...

புதன், புத்திசாலித்தனத்தைக் குறிக்கும் காரக கிரகமாகும். ஏழில் தனித்து புதன் இருப்பவர்களுக்கு எளிதாக இளம் வயதில் திருமணம் நடக்கும். தாய்மாமன் வழி உறவில் திருமணம் நடக்கும் வாய்ப்பு அதிகம். தன் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி வாழ்க்கைத்துணையை சந்தோஷமாக வைத்திருப்பார்கள். வாழ்க்கைத்துணை இளமைப் பொலிவுடன் இருக்கவேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துவார்களா. இது ஒரு அலி கிரகம் என்பதால் – ஆண்களுக்கு காதலியையும் பெண்களுக்கு காதலனையும் குறிக்கும் கிரகம் என்பதால் திருமணத்துக்குப் பிறகும் காதலர்களாக ஆதர்சன தம்பதியராக வாழ்வார்கள். தனுசு மற்றும் மீன லக்னமாக இருக்கும்போதும் ரிஷப லக்னத்துக்கு ஏழாம் அதிபதி புதனின் நட்சத்திரமான கேட்டையில் நின்றாலும் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணத்தைத் தரும். மற்றபடி தனித்த புதன் எந்தத் தொந்தரவும் தராது. புதனுடன் பகை கிரகங்களான செவ்வாய், சந்திரன், ராகு, கேதுகள் சேரும்போது உலகப் போரே நடந்த பாதிப்பு வாழ்க்கையில் இருக்கும். ஊருக்காகவும் உறவுக்காவும் கணவன் – மனைவியாக நடிப்பார்கள். வாழ்க்கைத்துணை இருக்கும்போதே அவரை அலட்சியப்படுத்தி மற்றவரோடு சிரித்துப் பேசி வாழ்க்கைத்துணையை வெறுப்படையச் செய்வார்கள். அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் நடக்கும்.

ஏழில் புதன் விவாகரத்துக்குப் பிறகு கூட சேர்ந்து வாழ்வார்கள். புதனின் சேட்டைகளைக் கணிப்பது கடினம். சென்ற பிறவியில் இளம்பெண்ணைக் காதலித்து ஏமாற்றிய குற்றத்தின் பதிவால் இது போன்ற பிரச்சினைகள் ஏற்படும். பரிகாரம் 17 வாரம் புதன்கிழமை மகா விஷ்ணுவுக்கு பால் அபிஷேகம் செய்து வழிபட வேண்டும்.

திருமணம் ஆகாத 07 இளம் பெண்களுக்கு 17 வாரம் இனிப்பு உணவு தானம் தர வேண்டும்.

கொழும்பை வதிவிடமாகக்கொண்ட 1991இல் பிறந்த, உயரம் 5'3'' procurement manager ஆக பணிபுரியும் இந்து (வேளாளர்) மணமகளுக்கு படித்த மணமகன் தேவை. தொடர்புக்கு 077-2222325

இந்து முக்குலம் அரச துறையில் பணியாற்றும் இவருக்கு வயது 33. திருமணமாகி ஒரு நாளில் ஒருசில காரணங்களால் விவாகரத்துக்குள்ளான இவருக்குதகுந்தநல்லொழுக்கமுள்ளஅரசதுறை அல்லது தொழில்செய்யும் மணமகள் தேவை. மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். 077 3022758/072 6328336

இந்து நாயுடு இந்திய வம்சாவளி வயது 23 அழகிய சிவந்த நிறமுடையவர். இவருக்கு பதிவுத் திருமணம் மட்டும் ஆகி ஒரு வாரத்தில் சில காரணங்களால் விவாகரத்தானவர். நல்லொழுக்கமுள்ள 30 வயதுக்குள் நல்ல மணமகளை ஐரோப்பிய நாடுகளில் எதிர்பார்க்கிறோம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். 077 3022758 / Whatsapp 072 6328336.

மாத்தளை 1992இல் பிறந்த தனியார் துறையில் சுப்பர்வைசர் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. சாதி மதம் தடை இல்லை, சீதனம் தேவை இல்லை. தொடர்பு 0765424575.

யாழ். இந்து வேளாளர் 1993, பூரட்டாதி, Doctor, Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை. டச்சுவீதி, சாவகச்சேரி. 021 4923738, 077 4380900. Realmatrimony.com.

RC கணக்காளராக பணிபுரியும் மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். உயரம் 5'4'' (வேறு மதத்தவரும் விரும்பத்தக்கது) வயது 35. 076 6612325.

புலோலி, இந்து வேளாளர், 1995 மகம் கல்வியியல் கல்லூரி ஆசிரியர், 5'6'', B.A படித்துக்கொண்டிருக்கும் 7இல் செவ்வாய், பா.கிரகம் 521/4 மணமகனுக்கு பட்டதாரி ஆசிரியர், கல்வியியற் கல்லூரி ஆசிரியர், பட்டதாரி உத்தியோகத்தர் மணமகளை எதிர்பார்க்கின்றோம். T.P:076 2674603, 0212261374

யாழ். கிறிஸ்தவம் (RC) வேளாளர் 1978இல் பிறந்த, சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. தொடர்புக்கு 076 3547191

யாழ். இந்து வேளாளர் 1988 அத்தம் 1இல் செவ்வாய் 38 பாவம் Auditor, 1989 உத்தரம் 12இல் செவ்வாய் 44 பாவம் சிங்கப்பூர் இஞ்ஜினியர், 1987 அத்தம் அவுஸ்திரேலியா PR, 1990 ரேவதி 8இல் செவ்வாய் சுவீடன் PR, 1991 அஸ்வினி சிங்கப்பூர் இஞ்ஜினியர், 1990 அவிட்டம் 8இல் செவ்வாய் நியூசிலாந்து இஞ்ஜினியர் தகுந்த மணமகள்மார் தேவை. தொடர்பு: 0770783832, 0779649245

இந்து வேளாளர் 1995இல் பிறந்த பூராடம் 3ஆம்பாதம் குற்றங்களற்ற இலங்கையில் கல்வி கற்று அவுஸ்திரேலியாவில் பொறியியலாளராக கடமையாற்றும் அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்ற மணமகளுக்கு மருத்துவம் அல்லது பொறியியல்துறை சார்ந்த மணமகனை எதிர்பார்க்கின்றோம். whatsapp number +61493097250

இந்து சைவ வேளாளர், 1992.11.14, திருவாதிரை, மிதுனம், Brand Manager, B.B.A. (Kelaniya), C.I.M.A. M.B.A. (PIM), 56", பொது நிறம். மணமகன் தேவை. தொடர்புக்கு 0776562550/0770356527

நீர்கொழும்பை வதிவிடமாகக்கொண்ட, உயரம் 55", 42 வயது, திருமணம் செய்து 30 நாளில் விவாகரத்தான Training Manager மணமகனுக்கு NRC (bible) நல்லொழுக்க முள்ள மணப்பெண் தேவை. தொடர்புக்கு: 0771416590


உங்கள் வரன்தேடும் விளம்பரங்களை இலவசமாக பிரசுரித்துக்கொள்ள

**076 1393805**

Whatsapp இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள்

# தினம் ஒரு நெல்லிக்காய் சாப்பிடுவதால் ஏற்படும் பயன்கள்...



தினம் ஒரு நெல்லிக்காய் சாப்பிட்டால் போதும். ஒரு நெல்லிக்காய் மூன்று ஆப்பிள்களுக்குச் சமம்.

நெல்லிக்காயில் கல்சியம், விற்றமின் சி, புரதம் போன்ற சத்துகள் அதிகமாக இருக்கின்றன. சித்தா, ஆயுர்வேதம் போன்ற இயற்கை மருத்துவங்களில் நெல்லிக்காயைத் தவறாமல் பயன்படுத்துகிறார்கள்.

வயிறு சம்பந்தப்பட்ட நோய்களைக் கட்டுப்படுத்தும் 'திரிபலா' சூரணத் தயாரிப்பில் நெல்லிக்காய்க்கு முக்கிய பங்கு உண்டு. உடலுக்கும் கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரும் குணமுடையது என்பதால் ஜலதோஷத்தை உண்டாக்கிவிடும் என்று சிலர் தவறாக நினைக்கிறார்கள். உண்மையில் ஜலதோஷம் வராமல் நெல்லிக்காய் தடுக்கும்.

நெல்லிக்காய் வைரஸ் மூலம் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்தும். திராட்சை, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்களில் விற்றமின் சி இருக்கிறது. ஆனால், வேறு எந்தப் பழங்களிலும் இல்லாத அளவுக்கு நெல்லிக்காயில் விற்றமின் சி மிக அதிகம்.

ஒரு சின்ன நெல்லிக்காயில் 600 மில்லிகிராம் விற்றமின் சி இருக்கிறது. பச்சைக் காயாகச் சாப்பிடும்போதுதான் நெல்லிக்காயின் சத்துகள் முழுமையாகக் கிடைக்கின்றன. ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று நெல்லிக்காயாவது சாப்பிடலாம்.

நெல்லிக்காயில் கல்சியம் சத்து நிறைய இருப்பதால், எலும்புகள் உறுதியாகும். இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கவைக்கும். இரத்த சோகைக்கும் நெல்லிக்காய் நல்ல மருந்து. நெல்லிக்காய் தலைமுடியைக் கருமையாக செழிப்பாக வளரவைக்கும் என்பதால்தான் கூந்தல் வளர்ச்சிக்கு உதவும் எண்ணெய் வகைகளிலும் தலைச் சாயத் தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது.

தினமும் ஒரு நெல்லிக்காய் சாப்பிட்டு வந்தால், சர்க்கரைக் குறைபாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடலாம். அதிக உடல் பருமனால் கஷ்டப்படுகிறவர்கள் காலையில் வெறும் வயிற்றில் நெல்லிக்காய்ச் சாறுடன் இஞ்சிச்சாறு அருந்திவந்தால் தேவையற்ற எடை குறைந்து சிக்கென்ற தோற்றத்தைப் பெறலாம்.


திருமண தேடல் விளம்பரங்களை
**இலவசமாக** பிரசுரித்துக்கொள்ள
அரிய வாய்ப்பு!



“உங்களுடைய அன்பான மகன் / மகளின் திருமணத்துக்கு பொருத்தமான துணையை தேடுகிறீர்களா? அவ்வாறாயின் அதற்கான வாய்ப்பை நாம் உங்களுக்குத் தருகிறோம்.”

தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) 23CM X 10CM அளவுள்ள கடித உறையில் உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

**உங்களுக்கு கிடைக்கும் சகல கடிதங்களையும் மூன்று வாரங்களுக்கு ஒருமுறை உங்களுடைய முகவரிக்கு நாம் அனுப்பி வைப்போம்.**

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900, தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805

விவாஹா திருமண சேவை
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு.

thamilaneditor@gmail.com



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07

# தமிழ் முரசு

තමිල් මුරසු

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 3 இதழ் : 02 - 09.07.2023




## தமிழ்ப்பணி புரிந்து மனங்களை வென்ற தம்பிலுவில் ஜெகதீஸ்வரி நாதன்

## நம்முடைய ஆதி மரபே கதை கேட்கும் மரபுதான்

– பவா செல்லதுரை

கனிஷ்கா காயத்திரி

தமிழ் முரசு
தமிழ் முரசு Thamil Murasu
நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com
தொலைபேசி: 0115 200 900/011 588 6187
விளம்பரம் : 0114 846 097

# கதை சொல்லும் கலை

"ஒரு ஊர்ல ஒரு ராஜாவும் ராணியும் இருந்தாங்களாம்" என்று பாட்டி சொன்ன கதைகள் கேட்டு வளர்ந்தவர்கள் ஏராளம். இன்றைய தலைமுறையினருக்கு இந்த அனுபவம் குறைவாக இருக்கலாம். ஆனாலும் தொலைக்காட்சிகள் பிரபலமடையாத 90கள் வரையில் தாத்தா, பாட்டிகள் சொல்லும் கதைகளைக் கேட்டே வளர்ந்த சிறுவர், சிறுமியர் அதிகம் எனலாம்.

இலங்கை வானொலியில் மாஸ்டர் சிவலிங்கம் கதை சொல்லலில் ஈர்த்துக்கொள்ளாத சிறுவர் சிறுமியரே இல்லை எனலாம். முகமறியாது அவரது குரலால் மட்டுமே பல்வேறு சிறுவர் சிறுமியரை வானொலியால் ஈர்த்து வைத்திருந்தார் அவர்.

மறைந்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் எழுதிய கதைகளில் பாட்டி சொன்ன கதை மிகவும் பிரபலமானது. பாட்டி ஒருவர் அயல்வீட்டுச் சிறார்களுக்கு கதை சொல்வது போன்ற தோரணையில் தனது பேத்திக்கு கூறவேண்டிய அறிவுரைகளை கூறிவிடும் பாங்கில் அமைந்த கதை பாட்டி சொன்ன கதை. இந்தக் கதை தெளிவத்தை ஹோசப்பின் மாஸ்டர் பீஸ் என்ற அளவில் பேசப்பட்டது. காவேரி என்கிற பெயரில் தொலைக்காட்சி நாடகமாகவும் தயாரிக்கப்பட்ட கதை அது. தெளிவத்தை ஜோசப் சிறுகதை எழுத்தாளர் போன்றே நல்ல கதை சொல்லியும் ஆவார். அவரது மேடைப் பேச்சுகள் கதை சொல்லும் பாங்கிலேயே அமைந்திருக்கும்.

கிழக்கு மண்ணின் சிறுகதை எழுத்தாளரான எஸ்.எல்.எம்.ஹனிபா வும் இதே வகை கதை சொல்லிதான். அவருக்கே உரிய கிழக்கின் மொழிநடையில் எவ்வளவு பேசினாலும் கேட்டுக்கொண்டிருக்கச் செய்யும்.

கதை சொல்லல் என்பது ஒரு கலை. கதை ஒரு ஊடகம். சமகால ஊடகத் துறையில் இந்தக் கதை சொல்லல் என்பது முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. ஒரு விடயத்தை வாசகர்களுக்கு கொண்டுசெல்ல உண்மையான சம்பவங்களை ஆராய்ந்து எழுதுவதைக் கூட ஊடக மொழியில் கதை எழுதுதல் (Story writing) என்றே சொல்கின்றனர். அதேபோல் கதை சொல்லல் (Story telling) என்பது இன்றைய நவீன சமூக ஊடகத் தளத்தில் மிக முக்கிய நுட்பமாகக் கையாளப்படுகிறது.

அதேபோல் சிறுகதைகளாக எழுதப்பட்டவற்றை கதையாக மொழிதல் மூலம் பல்வேறுபட்ட வாசகத் தளத்துக்குக் கொண்டுசெல்வதை அவதானிக்கலாம். கதையை வாசித்து புரிந்துகொள்வதைக் காட்டிலும், ஒருவர் கதை சொல்லும்போது அதனைக் கேட்டு புரிந்துகொள்ளுதல் இலகுவாக அமைவதே இதற்கான காரணமாகும்.

அந்தவகையில் சமகாலத்தில் தமிழ் இலக்கியத் தளத்தில் பிரபலமான கதை சொல்லியாக வலம் வருபவர் பவா செல்லதுரை. அண்மையில் இலங்கைக்கும் வருகை தந்து சென்ற பவா செல்லதுரை அண்மையில் அமெரிக்காவில் நடந்த கலைச் சங்கமத்திலும் கலந்து கொண்டிருந்தார். அவரது கதை சொல்லும் யூரியூப் தளங்கள் சமூக வலைத்தளங்களில் மிகவும் பிரபலமானவை. அவரது இயல்பான கதை சொல்லும் ஆற்றல், ஞாபக சக்தி, உணர்வுகளை எடுத்துச் சொல்லும் விதம் போன்றன அவர்பால் வாசகர்களை ஈர்த்து வைக்கும் அற்புதத் திறன்களாகி நிற்கின்றன.

அவர்பற்றி மேலும் அறிந்துகொள்ளவும் கதை சொல்லும் கலையை ஊக்குவித்து கதை கேட்டலை அதிகரிக்கச் செய்யவும் இந்த வார 'தமிழ் முரசு' பவா செல்லதுரையின் நேர்காணல் ஒன்றை சுமந்து வருகிறது. எமது தமிழ் இலக்கியத் தளம் இன்னும் இன்னும் கதை சொல்லிகளை வேண்டி நிற்கிறது.

# 'புஷ்பக 27' முன்னோட்ட வெளியீடு




ஒரு மாபெரும் புரட்சியை 'புஷ்பக - 27' என்ற திரைப்படம் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனை இராவணா விஷன் புரடக்ஸன் என்ற நிறுவனம் ஒரு முழு நீளத் திரைப்படமாகத் தயாரித்திருக்கிறது. தமிழரின் தொன்மத்தைத் தேடிச் செல்லும் விண்வெளித் திரைக் காவியமாகத் தயாரிக்கப் பட்ட இத்திரைப்படத்தின் குறுந்திரை முன் னோட்ட வெளியீட்டு நிகழ் வானது கடந்த புதன் கிழமை (05.06.2023) மாலை 06.30 மணியளவில் யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் அமைந்துள்ள நித்திலம் கலையகத்தில் இடம்பெற்றது.

அந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் இரகுராம், வைத்திய கலாநிதி சிவன்சுதன், ஈழத்தின் மூத்த திரைப்பட நடிகர் இராஜமகேந்திரசிங்கம், சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம், பெரிய பிரித்தானியா, கருவி நிறுவத்தின் தலைவர் சிவா ஜி. சேகரம், மூத்த ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்துகொண்டனர். அவர்களுடன் திரை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் 'புஷ்பக - 27' திரைப்படக் கலைஞர்கள் எனப் பலர் கலந்து விழாவுக்கு மேன்மேலும் மெருகூட்டினர்.

ஈழத்துத் திரைப்படத் துறையானது தன்னகத்தே ஒரு மாபெரும் வரலாற்றைக் கொண்டு "ஈழ சினிமா" என்ற பெயரோடு முன்னே நகர்ந்து செல்கிறது. அந்த வரலாற்றின் தொடக்க காலத்தில் தயாரிக்கப்பட்ட பல சினிமாக்களை வெறும் சினிமாக்கள் என்று பார்க்கப்பட முடியாதவாறு அவை ஆவணப் பெறுமதியைக் கொண்டவைகளாக விளங்குகின்றன. அதற்கு 'குத்துவிளக்கு' என்ற திரைப்படத்தினூடாகவே அன்றைய யாழ்ப்பாணத்தை நாம் தரிசிக்க முடிகிறதென்பதனைச் சான்றாகக் கூறலாம்.

அந்தவகையில் போர்க்காலச் சினிமா வரலாறென்பது மிகவும் பெறுமதிமிக்கதாகக் காணப்பட்டாலும் 2009இல் மௌனிக்கப் பட்ட யுத்தத்தின் பின்னர் அதன் போக்கில் கணிசமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இராணுவ நெருக்கடிகள் திரைத் தயாரிப்புகளுக்கு பாரிய முட்டுக்கட்டைகளாக இருந்தன. அதனால் பலர் தமது முயற்சிகளைக் கைவிட்டு ஒதுங்கிவிட்டனர். இருந்தும் சில இளைஞர்கள் அத்துறையின் காவலர்களாக இருந்து இன்றும் சாதனைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அந்த வரிசையில் 'புஷ்பக - 27' என்ற தலைப்பிட்டதொரு திரைப்படம் வெளியீட்டுக்குத் தயாரான நிலையில், அதன் முன் னோட்டம் தற்போது வெளியிடப்பட்டிருக்கிறது. ஈழ சினிமாவின் வரலாற்றில்





மங்கல விளக்கேற்றலோடு விழா ஆரம்ப மானது. சிறப்பு விருந்தினர்களோடு 'புஷ்பக - 27' திரைப்பட திரைக்கதை எழுத்தாளர் சத்தியா மென்டிஸ் மற்றும் அதன் இயக்குநர் காரை சிவநேசன் ஆகியோரும் இணைந்து மங்கல விளக்கை ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து அக வணக்கம் இடம்பெற்றது.

பின்னர் 'புஷ்பக - 27' திரைப்படத்தின் குறுந்திரை முன்னோட்டத்தைப் பேராசிரியர் இரகுராம், வைத்திய கலாநிதி சிவன்சுதன், நடிகர் இராஜமகேந்திரசிங்கம் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைத்தனர். அதனைத் தொடர்ந்து அவர்களின் உரைகள் இடம்பெற்றன.

முடிவில் இத்திரைப்படத்தின் இயக்குநர் காரை சிவநேசன் வழங்கிய நன்றியுரையோடு நிகழ்வு முற்றுப்பெற்றது.

**கே.எஸ்.ஆனந்தா**



# இடர்கால இலக்கியங்கள்

## ‘வயல் மாதா’ பரபரப்புடன் பேசப்படுகிறது

‘வயல்மாதா’ சிறுகதைத் தொகுப்பு வந்து சில நாட்கள்தான் ஆகின்றன. ஆனால், அது தொடர்பில் சர்ச்சையைக் கிளப்பியவர்கள் பலர். அவர்களில் பலர் கேள்விச் செவியர்போல் தெரிகிறது. அதில் எத்தனை பேர் ‘வயல் மாதா’ என்ற தொகுப்பைப் படித்திருப்பார்கள்?

‘வயல் மாதா’ தொகுப்பு எரிக்கப்பட்டது, கிழிக்கப்பட்டது அல்லது அச்சுறுத்தப்பட்டது என்ற செய்தியைப் படித்தவர்கள் அந்தப் பரபரப்பில் தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் எனச் சொல்லப்படுகிறது. அவற்றைப் பார்த்து அதன் எழுத்தாளர் டானியல் ஜெயந்தன் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருப்பதோடு அது தொடர்பில் சரியானதொரு விளக்கத்தையும் தனது முகநூலில் பதிவிட்டிருக்கிறார். அந்நூல் எரிக்கப்பட்ட ஒளிப்பதிவுகளும் முகநூலில் உள்ளன. அதுபற்றி பலர் பலவாறு தமது கருத்துகளைச் சொல்லியிருக்கின்றனர். அவற்றை உங்களுக்காக.




யாழ்ப்பாணப் பொது நூலகம் அரசுடமை. அங்கிருந்த நூல்கள் அரசால் விலைகொடுத்துக் கொள்வனவு செய்யப்பட்டவை. எனவே, தனக்கு உரிமையானதை அரசு எரித்ததில் தவறில்லை என்றுகூட ஒருவரால் மனசாட்சியே இல்லாமல் குதர்க்கம் செய்ய முடியும். நூல் எரிப்பு ஆதரவாளர்களின் அற மட்டமும், அறிவு மட்டமும் இத்தகைய அதலபாதாளத்தை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கின்றன. புத்தகங்கள் என்பவை காசு கொடுத்து வாங்கிப் பற்றவைப்பதற்கு சிகரெட்டோ, சுருட்டோ அல்ல. இலக்கிய நூல்கள் ஒரு சமூகத்தின் தீவிரமான கலாசார இயக்கம். விலை கொடுத்து வாங்கியதால் அதை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என வாதிடுவது Vandalism எனவும்,

நூலை எரிப்பது ஓர் எதிர்ப்பு வடிவமென்றால், அது நியாயமென்றால் கலைஞரின் ஒட்டுமொத்த நூல்களையும் வாங்கி அ.தி.மு.கவினர் எரிக்கலாம். தமிழ்த் தேசியத்தை விமர்சிப்பவர்களின் இலக்கிய நூல்களை வாங்கி நாம் தமிழர் கட்சியினர் எரிக்கலாம். இடதுசாரிகளின் இலக்கிய நூல்களை வலதுசாரிகளும் வலதுசாரிகளின் இலக்கிய நூல்களை இடதுசாரிகளும் எரித்து இன்புறலாம்.

நல்லவேளையாக இந்த விடயத்தில், எரிப்புச் சுதந்திரத்திற்கு ஆதரவளிக்கும் இலக்கியவாதிகள் அளவுக்கு இன்னும் அரசியல்வாதிகள் சீரழியவில்லை - எனவும் தனது முகநூலில் எழுத்தாளர் சோபாசக்தி கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

‘வயல் மாதா’ பிரச்சினை தொடர்பாக இலக்கியச் சமூகத்திடம் சில விடுபட்ட கேள்விகளைக் கேட்கிறேன். என பின்வரும் முகநூலில் எழுதியிருப்பவர் மெலிஞ்சி முத்தன்.

‘வயல் மாதா’ நூல் வெளிவந்து பிரச்சினையானதும் இந்தப் பிரச்சினையை சரியான முறையில் அணுகுவதற்கு உறுதுணையாக என் பக்க உரையாடல்களை நான் தொடங்கியிருந்தேன். புத்தகத்தின் மீது விமர்சனமிருந்தால் ஓர் எதிர்ப்பு அறிக்கை வெளியிடலாம் அல்லது ஒரு கிராம அமைப்பையும் எழுத்தாளர்கள் சிலரையும் இணைத்து இவ்விடயத்தைக் கொண்டுசெல்லலாமென்றே கருதினேன்.

நான் ஒருவருடன் பேசி பக்குவப்படுத்த முயன்றுகொண்டிருந்த தருணத்தில்தான் அவரை வந்து நூலெரிக்கப் போன வாகனம் ஏற்றிச் சென்றது. அதன்பின்னர் நூலை எரித்து, அதனை வீடியோ எடுத்து அவர்களே அந்த நூலுக்கான மிகச்சிறந்த விளம்பரத்தைச் செய்தார்கள். அது மட்டுமல்லாமல் பிரச்சினைக்குள்ளான கதையையும், அந்த நூலின் ஏனைய பகுதிகளையும் மிக விரிவாகவே பரப்பினார்கள்.

விமர்சனமிருப்பவர்கள் இதனை சரியான அணுகுமுறையில் கொண்டுசெல்ல வேண்டும் எனச் சொன்னதற்கே எனக்கு சமூகவிரோதிப் பட்டம் சூட்டினார்கள். தொலைபேசி வழியாக எனக்கு அழுத்தங்கள் தந்தார்கள். ஒரு கிராமமே செய்யும் செயலாக குறிப்பிட்ட சில மனிதர்கள் முன்நின்று செய்யும் செயல்கள் உருமாறி வருவதைக் காண்கிறேன். இதற்குப் பின்னர் எழுத்தாளருக்கு ஆதரவான குரல்கள் பெருகி வருகின்றன. கத்தோலிக்க அடிப்படைவாதத்துக்குள் நின்று இலக்கியம் பற்றிய புரிதல்கள் இல்லாமல் எழுத்தாளனுக்கு எதிர் நிலையில் நின்று பேசப்படும் குரல்களாகவே பல குரல்கள் அடிபட்டுப் போவதை முக நூலில் காண்கிறேன்.

நான் ஓர் இலக்கியவாதியாகவும், இதே மக்கள் சமூகத்தில் இருப்பவனாகவும் என்னுடைய தார்மீகக் கடமையாகவும் இந்தப் பிரச்சினைக்குள் விடுபட்ட சில பார்வைக் கோணங்களை இலக்கியம் பற்றிய புரிதலோடேயே நின்று இந்தச் சமூகம் சொல்ல முயன்றும் சரியாகச் சொல்ல முடியாத சில விடயங்களை ஜெயந்தனிடமும், இலக்கியக் கோட்பாட்டுத் தளங்களில் இயங்கும் எழுத்துச் செயற்பாட்டாளர்களிடத்திலும் கேட்டு பதில் பெற விரும்புகிறேன். இதை எனக்கான பொறுப்புணர்வுடன் செய்யாமல் என்னால் கடந்து செல்ல முடியவில்லை. கேள்விகள் எல்லாமே அறியாமையிலிருந்து மட்டும் எழுபவையல்ல. மேலதிக புரிதலை நோக்கியும் எழலாம்.

01. ஒரு நிஜக் கதை இலக்கியமாக்கப்பட்டிருக்கிறது. அந்த நிஜக்கதையை அறிந்தவர்கள், அதற்குள் பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு பாத்திரங்களையும் துல்லியமாகக் காண்பவர்கள் பெயர் குறிப்பிடவில்லையென்றாலும் ஒரு பெண்ணின் மார்பகங்களைப் பற்றி அவசியப்படாத இடமாய் கருதக்கூடிய இடத்தில் எழுதியிருப்பது ஒருவித ஆண்மன வக்கிரம் எழுத்தில் செய்யப்பட்ட பாலியல் துஷ்பிரயோகம் என்று ஒரு வாதம் வைத்தால் அதற்கான பதில் என்ன?

02. பிரதிக்கு உள்ளே மட்டும் நின்றுதான் ஒரு வாசகர் பார்க்கலாமென்றால், நிஜக்கதையை, அது சமூகத்தில் ஏற்படுத்திய கொதிநிலை ஆறுவதற்கு முன்னர் இலக்கியமாக்கும் எழுத்தாளர் அந்தக் கொதிநிலையை அதிகமாக்குகிறார். அவ்வாறு சமூகக் கொதிநிலையை உருவாக்கும் எழுத்தாளரின் பிரதியை மட்டுமே பார்த்துவிட்டு அவர் எங்கிருந்து கதையை எடுத்தாரோ அந்த சமூகக் களத்தை அப்படியே விட்டுச் செல்லல் சரிதானா?

3. ஒரு நிஜக்கதை நடந்த அதே சமூகச் சூழலுக்குள் அதே கதையை ஒருவர் எழுதும்போது, சில பாத்திரப் பெயர்கள்கூட அச்சூழலுக்குள் இருக்கும்போது உடனேயே ஒப்பிடல்களைச்செய்து ஒவ்வொரு பாத்திரமுமே இன்னார், இன்னாரென்று பார்ப்பவர்களிடம் எழும் கோபத்துக்கான எதிர் விளக்கத்தை எப்படிக் கொடுப்பது?

4. இவ்வாறான மக்கள் சமூகத்தின் மத நம்பிக்கைகள், பிற்போக்கான தன்மைகள் எல்லாவற்றையும் தவிர்த்து இக்கோபத்தை அணுக முடியாதா?

5. தூசண வார்த்தையென்பது பெண்ணுடலை இழிவுபடுத்தும் தன்மையோடு எடுத்துப் பாவிக்கும் ஒரு சொல் அணுகுமுறைதானே. அதனை இலக்கிய ரசனைக்காக, பேச்சு வழக்குத்தன்மையோடு எடுத்துப் பாவித்தல், அதை மிதமிஞ்சிய தன்மையாய் வெளிப்படுத்தல் என்பதை ஒரு ஆண் எழுத்தாளர் செய்திருப்பதை பெண்ணியக் கண்ணோட்டத்தில் எப்படிப் பார்க்கிறீர்கள்?

நான் கேட்டிருக்கும் இந்தக் கேள்விகளுக்கு உங்கள் நேரத்தை ஒதுக்கி பொறுப்புணர்வோடு பதில் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கணபதி சர்வானந்தா**





**ஈழத்து நாடக ஆளுமை பாலேந்திராவின் 50 ஆண்டுகால கலைப் பயணத்தைக் கொண்டாடும் முகமாக கடந்தவாரம் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நூல் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.**

**‘நேர் காணல்கள் ‘எனும் தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வும், பாலேந்திரா ஆனந்தராணி ஆகியோர் இணைந்து வழங்கிய "அரங்க நினைவலைகள்" ஆற்றுகையும் இடம்பெற்றன.**

# மலையக நட்சத்திர கலைப்பேரவையின் வெள்ளி விழா

(கலஹா செய்தியாளர்)

மலையக நட்சத்திர கலைப் பேரவையின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழா நிகழ்வுகள் பேரவையின் தலைவர் மலையக வாசுதேவன் தலைமையில் மிகச் சிறப்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை 25.06.2023 அன்று புஸ்ஸல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) இடம்பெற்றன.

இதன்போது மலையக பிரதேசத்தில் பாரம்பரிய கலை, இலக்கிய கல்வி, ஊடகம், மருத்துவம், சமூக சேவை உட்பட பல்வேறு துறைகளிலும் சாதனைகள் புரிந்த, புரிந்துகொண்டிருக்கும் 65 பேர்





விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதற்கு முன்னர் இடம்பெற்ற மலையக நட்சத்திரக் கலைப் பேரவையின் அனைத்து நிகழ்வுகளிலும் அரசியல் பிரமுகர்களின் பங்களிப்பு இருந்தாலும் இம்முறை அது முற்று முழுதாக வேறுபட்ட விதமாக காணப்பட்டதுதான் சிறப்பம்சம்.

அரசியலை தவிர்த்து கல்வி, கலை, இலக்கியம், முக்கியமாக கவிதைத் துறையில் மலையகத்தில் விடிவெள்ளியாகக் கருதப்படும் ஸ்ரீபாத கல்வியல் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதியும் அரச கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பதில் மேலதிக ஆணையாளருமான சு. முரளிதரன் பிரதம அதிதியாகவும், விசேட அழைப்பாளர்களாக கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் முத்துலிங்கம், பிரபல எழுத்தாளர் மு.சிவலிங்கம், கம்பளையைச் சேர்ந்த சமூகசேவையாளர் எம்.எம்.எம்.ரம்சின், கல்கி சேவா சங்கத் தலைவரும் சமூகசேவையாளருமான ஐ.வீ.எஸ்.விஜயன் உட்பட புஸ்ஸல்லாவ பிரதேசத்தில் அமைந்துள்ள இந்து தேசிய பாடசாலை, சரஸ்வதி தேசிய பாடசாலை, நயாபான தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் அதிபர்களான முறையே எஸ்.சந்திரமோகன், ஜி.லோகேஸ்வரன் டீ.கணேசன் மற்றும் புஸ்ஸல்லாவ மக்கள் வங்கிக் கிளை உதவி முகாமையாளர் திருமதி சுபாஷினி, சமூகசேவகர் சேதுராமன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி நிகழ்வில் கலைஞர்களின் பல்வேறுபட்ட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. காலை 10 மணிக்கு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு ஒரு மணியளவில் முடிக்கப்பட தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் மாலை 5 மணிவரை அது தொடர்ந்து இடம்பெற்றது. அதிதிகள் உட்பட அவையோர் அனைவரும் சலிக்காமல் பொறுமையுடன் இறுதிவரையில் வீற்றிருந்தமை பிரமிக்க வைத்தது.

**நட்சத்திரக் கலைப் பேரவையின் வரலாறு:**

1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி புரட்டொப் மேமலையைச் சேர்ந்த மாதையா வாசகம் என்ற கலைஞர் மலையக வாசுதேவனால் புஸ்ஸல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட கலைஞர்கள், கலை ஆர்வலர்களின் பங்களிப்புடன் ஐ.வீ.எஸ்.விஜயன், சப்ருல்லா அமரர்களான எம்.எஸ்.இராதா கிருஷ்ணன், ஆர்.கே.செல்வநாயகம் ஆகியோர் செயற்பட்டர். தற்போது அமைப்பின் தலைவராக மலையக வாசுதேவன், செயலாளராக மருதமுத்து நவநீதன், பொருளாளராக ஐ.வீ.எஸ்.விஜயன் உப தலைவராக எம்.எஸ்.இராதாகிருஷ்ணன், உப செயலாளராக எஸ்.டீ.சப்ருல்லாவையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது



மேற்படி அமைப்பின் தலைவராக அனைத்து அங்கத்தவர்களின் பரிபூரண ஆதரவுடன் 25 வருடங்களாக தொடர்ந்து மலையக வாசுதேவன் இருந்துவருவதுடன்,

ஏனைய பதவிகளில் அன்றுமுதல் இன்றுவரை செயலாளர்களாக எம். நவநீதன், எம்.யோகேஸ்வரன், எஸ்.பன்னீர்செல்வம், ஏ.சந்திரமோகன் ஆகியோரும்

பொருளாளர்களாக ஐ.வீ.எஸ். விஜயன், சந்தனம், சத்தியநாதன், டீ.எஸ்.சப்ருல்லா ஆகியோரும் உள்ளனர்.

**2023 ஆண்டு தற்போதைய நிர்வாகக் குழு உறுப்பினர்களின் விபரம்:**

தலைவர் எம்.வாசகம் (மலையக வாசுதேவன்), செயலாளர் ஆறுமுகம், சந்திரமோகன் (அதிபர்), பொருளாளர் எஸ்.டீ.சப்ருல்லா, உப தலைவர் எம்.மகேஸ்வரன், பிரசார செயலாளர் எம்.நவநீதன், காப்பாளர்களான ஐ.வீ.எஸ்.விஜயன், பீ.சேதுராமன்.

**ஆலோசகர்கள் :**

டீ.நடராஜா, ஆர்.கே.செல்வநாயகம், எஸ்.சத்தியநாதன், பீ.திருஞானம் ரா.சேகர்.

**செயற்குழு உறுப்பினர்கள் :**

எம்.மகேஸ்வரி, எம்.கல்யாணி, என்.அர்ஜுன், என்.கிருபாலனி, வீ.கிருஷாந்தன், வீ.விரோஷா, எம்.இந்துஜா.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்...)











பவா செல்லதுரை, எழுத்தாளர், நடிகர், தமிழ் இலக்கியத்தின் குறிப்பிடத்தக்க புனைவெழுத்தாளர், பேச்சாளர், கவிஞர், கதைசொல்லி, களப்பணியாளர், திரைப்பட நடிகர், இயற்கை விவசாயி, அரசியலாளர். அடித்தள மக்களின் வாழ்க்கையை வலுவாகச் சித்திரித்த படைப்பாளி. தீவிர இலக்கியக் கதைகள் பலவற்றை தன் தனித்த குரல்வழிப் பெரும் வாசகப் பரப்புக்கு எடுத்துச் சென்ற கதைசொல்லி. இவரது கதைசொல்லும் காணொளிகள் யூடியூபில் லட்சக்கணக்கான பார்வைகளைப் பெற்றுள்ளன. பல படைப்புகள், விருதுகளுக்கு சொந்தக்காரரான இவர் அண்மையில் இலங்கை வந்திருந்தார்.

தனது கதை சொல்லும் அனுபவங்கள் பற்றி அவர் பகிர்ந்துகொண்டவை நேர்காணல் வடிவில் தருகின்றோம்..



# நம்முடைய ஆதி மரபே கதை கேட்கும் மரபுதான்

## பவா செல்லதுரை

**வாசிப்பு மீதான ஆர்வம் எப்போது வந்தது?**

நான் பத்தாம் வகுப்பு படிக்கும்போதுதான் முதன்முதலில் பாடப் புத்தகங்களைத் தாண்டி இலக்கியப் புத்தகங்களை வாசிக்கத் தொடங்கினேன். முதன்முதலில் வாசித்த புத்தகம் நன்றாக நினைவில் உள்ளது. ஜெயகாந்தனின் 'ஒரு மனிதனும் சில எருமை மாடுகளும்' என்ற புத்தகத்தையே முதலில் வாசித்தேன். அதுதான் வாசிப்பின் மீதான ருசியை எனக்கு முதலில் கொடுத்தது. அப்படித்தான் புத்தகம் வாசிக்கத் தொடங்கினேன்.

**உத்வேகத்துடன் தமிழ் இலக்கியத்தில் இயங்கியவர் நீங்கள்...**

ஜெயமோகன், எஸ்.ராமகிருஷ்ணன், தமிழ்ச் செல்வன், கோணங்கி, போப்பு, ஷாஜகான், நான் என எங்கள் ஏழு பேருடைய தமிழ்ச் சிறுகதை களுடன் அவற்றுக்கு நிகரான லத்தீன் அமெரிக்கச் சிறுகதைகளுடன் 'ஸ்பானிய சிறகுகளும் வீரவாளும்' தொகுப்பு தமிழ் இலக்கியத்தின் முகத்தையே மாற்றியது. அன்றைக்கு இலக்கியத்தில் இதைப் பற்றி பேசாதவர்கள் கிடையாது. இதில் ஜெயமோகனும் ராமகிருஷ்ணனும் தீவிரமாக எழுதிவருகிறார்கள். நான் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கத்தில் 30 ஆண்டுகள் செயல்பட்டேன். எழுதவும் வாசிக்கவும் முடியாத அளவுக்குப் பணிகள் செய்தேன். பிறகு, இது ஒரு களப்பணியாளன் செய்யவேண்டியது; படைப்பாளி அல்ல என அதிலிருந்து வெளியே வந்தேன். முரண்பாடு எதுவும் கிடையாது.

**கதை சொல்லும் இந்தக் கலையை முதலில் எப்போது தொடங்கினீர்கள்?**

வாசித்த ஒரு கதையைப் பலரிடம் சொல்ல வேண்டும் என நினைப்பவன் நான். நண்பர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர், "நீ இந்தப் பேச்சில் 12 கதைகளைச் சொல்லியிருக்கிறாய்" என்றார்.

திருவண்ணாமலையில் அவர் நடத்திவந்த பல்சமய மையத்தில் வெள்ளிக்கிழமை சாயங்காலம் கதைசொல்லும் நிகழ்ச்சி நடத்தலாம் என்ற யோசனையையும் அவர்தான் முன்வைத்தார். ஒரு படைப்பாளியாக இந்தப் புதிய முயற்சியில் எனக்கு விருப்பம் இருந்தது.

**இதன் நோக்கம் என்ன?**

ஷோபா சக்தியின் கதையிலிருந்து தொடங்கினேன். கதை சொல்லத் தேர்ந்தெடுக்கும் எழுத்தாளர்களின் மூன்று கதைகளைச் சொல்வது, அவர்களது புத்தகங் களை அந்த வளாகத்தில் வாசகர்களுக்காகக் காட்சிப்படுத்துவது இதெல்லாம் திட்டம். நாங்கள் வெள்ளிக்கிழமை நிகழ்ச்சியை நடத்துவோம். வாசகர்கள் சனி, ஞாயிறுகளில் எழுத்தாளர்களின் கதைகளை வாசிக்க வேண்டும் என்பது எங்கள் கனவு. கதைசொல்லல் வாசிப்பை மட்டுப்படுத்தக் கூடாது என நினைத்தேன். தொடக்கத்தில் நிகழ்வுக்கு 60 பேர் வந்தார்கள். போகப்போக 500 பேர் வரத் தொடங்கினர்.

**'பெருங்கதையாட'லை எப்போது தொடங்கினீர்கள்?**

சிறுகதைகளைச் சொல்லும் 'கதை கேட்க வாங்க' நிகழ்ச்சியை செய்துவந்தபோது, அந்த வடிவம் நீர்த்துப்போய் விடுமோ என்ற பயம் எனக்கு இருந்தது. அதனால், அதிலிருந்து விலகி ஒரு நாவலை எடுத்துக் கதையாகச் சொல்லலாம் என நினைத்தேன்; அதுதான் 'பெருங்கதையாடல்'. எங்கள் வீட்டுப் பத்தாயத்தில், மாமர நிழலில் ஜெயகாந்தனின் 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' நாவலைச் சொன்னேன். நாஞ்சில் நாடன் அதைத் தொடங்கிவைத்தார். பிறகு, திருவண்ணாமலைக்கு வெளியில் மதுரை அமெரிக்கன் கல்லூரி திறந்தவெளி அரங்கில் எஸ்.ராமகிருஷ்ணனின் 'இடக்கை' நாவலைச் சொன்னேன். என் கட்டுரைத் தொகுப்புகளில் குறிப்பிட்ட மனிதர்கள் பற்றியும் சொல்லியுள்ளேன்.

**உங்கள் சிறுகதைகளில் வட தமிழகத்துக்கே உரித்தான நிகழ்த்துக் கலைகள் மீதான ஈர்ப்பு வெளிப்படுவது உண்டு. கதைசொல்லலுக்கு இது ஆதாரமா?**

நிச்சயமாக இருக்கலாம். நம்முடைய ஆதி மரபே கதை கேட்கும் மரபுதான். பிறகுதான் நமக்கு எழுத்துகள் வருகின்றன. ஆதியில் தன் அனுபவங்களைச் சைகையால், பிறகு சொற்களால் இன்னொருவருக்குக் கடத்தினார்கள். கதை வாசித்தல் மட்டும் போதும் எனச் சிலர் நினைக்கிறோம். ஆனால், கதை சொல்லல் இரண்டாம்பட்சமானது கிடையாது.

**கதையைச் சொல்லும்போது அது முழுக்க உங்கள் பார்வையில்தான் இருக்கும். அதனால் கதையின் பன்முகத்தன்மை பாதிக்கப்படும் சாத்தியம் உண்டா?**

குறைவான சாத்தியம்கூட இல்லை. நான் சொல்லும் கதையைக் கேட்கும் ஒரு சாதாரண வாசகர், கேட்பதற்கு முன்னும் கேட்டதற்குப் பின்னும் அந்தக் கதையை வாசிக்கப்போவதில்லை என வைத்துக்கொள்ளுங்கள். நான் கதை சொல்வது நன்மையா, இல்லையா. இன்னொரு விடயம், எழுதுவதுதான் உயர்வான விடயம் என எழுத்தாளர்கள் சிலர் நினைக்கிறார்கள். ஆனால், கதை சொல்வதும், எழுதுவதற்கான படைப்பு அவஸ்தையையும் உள்ளடக்கியதுதான். சில இடங்களில் எழுத்தாளரைத் தாண்டியும் போக முடியும்.

கோயம்புத்தூரில் ஜெயகாந்தனின் 'பாரீஸுக்குப் போ' நாவலைச் சொன்னேன். அந்த நாவலில் பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் இருப்பார்கள். ஆனால், அந்த நாவலில் வேலைக்காரரான முனுசாமியை மையப்படுத்திக்கொண்டே இருப்பேன். இந்த என் பார்வை வேறு ஒருவருக்கு அகப்படாமலேயே போய்விடலாம்.

**உங்கள் கதைசொல்லல், என் கதையை வெளிப்படுத்தவில்லை என எழுத்தாளர்கள் யாராவது விமர்சித்திருக்கிறார்களா?**

அப்படிச் சொன்ன ஒரே எழுத்தாளர் திலீப் குமார். அவருடைய 'கானல்' என்கிற கதையைச் சொன்னேன். அதைத் தவறாகக் 'கானல்நீர்' எனச் சொல்லிவிட்டேன். பிறகு வேறொரு நிகழ்ச்சியில் சந்திக்கும்போது "நீங்கள் என் கதையின் தலைப்பைத் தவறாகச் சொல்லிவிட்டீர்கள்" என்றார். மேலும், தன் கதைகளைச் சொல்வதில் உடன்பாடில்லை என்றார். உடனடியாக அவர் கதைகளை என் யூடியூப் பதிவிலிருந்து நீக்கிவிட்டேன். பதிலாக அவர் கதைகளை வாசித்துப் பதிவேற்றினேன். அது அவருக்குப் பிடித்திருந்தது.

**கதைசொல்வதில் என்ன மாதிரியான இலக்கணத்தைப் பின்பற்றுகிறீர்கள்?**

கதைகளின் ஆன்மாவைத்தான் பிடிக்க விரும்பு கிறேன். ஜெயகாந்தனின் ஒரு கதையில் அந்தப் பெண், மாங்காய் கடித்தாள் என்று சொல்லிவிட்டேன். ஆனால், புத்தகத்தில் புளியங்காய் என இருப்பதாக ஒரு வாசகர் சொன்னார். ரெண்டுமே புளிதானே?

**எழுத்தாளராக உங்கள் கனவு?**

திருவண்ணாமலையில் கிட்டத்தட்ட எழுநூறு வெளிநாட்டினர் வாழ்கிறார்கள். இவர்கள் வாழ்க்கை, திருவண்ணாமலைக்காரர்களின் வாழ்க்கையிலிருந்து விலகியே இருக்கும். இவர்களைப் பற்றி என் கதைகளில், கட்டுரைகளில் பதிவுசெய்திருக்கிறேன். நாவல் என்கிற பரப்பில் இதையெல்லாம் இப்போது பதிவுசெய்து வருகிறேன். திருவண்ணாமலை பின்னணியில் தமிழில் இல்லாத வகையில் புதுமையாக இந்த நாவல் இருக்கும்.

ஜீவா

# முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி

வட்டுக்கோட்டையில் முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி வாழ்ந்த இல்லத்தின் புனருத்தாரணமும் திருவுருவச்சிலைத் திறப்பு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன.

1920கள் 30கள் 40களில் தமிழுலகின் பேராளுமைகளுள் ஒருவராக வாழ்ந்து தனது முத்தமிழ்ப் படைப்பாளுமைப் புலமைத்துவம், கவித்துவ புலனெறிச் செழுமை, மும்மொழிச் சிறப்பாளுமை ஆகியவற்றின் மூலம் தாயகத்திலும் தமிழகத்திலும் தனக்கென்றோர் தனியிடத்தை அமைத்துக்கொண்டவர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை தந்த முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி.




இவர் தமது துணைவியார் தங்கரத்தினம் நல்லதம்பியுடனும் அவர்தம் பிள்ளைகளுடன் இல்வாழ்வு நடத்திய அவரது இல்லமானது அவரது இளைய புதல்வர் புலவர் நல்லதம்பி சிவநாதனால் புனரமைக்கப்பட்டு, அதனது புனருத்தாரண வைபவம் 'முருகனகம்', கண்ணகியம்மன் கோவிலடி, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையில் கடந்த வாரம் நடந்தேறியுள்ளது.

புலவர் நல்லதம்பி சிவநாதன், அவரது துணைவியார் பிள்ளைகளின் ஆதரவோடும் ஒத்துழைப்போடும் அவர்தம் பால்ய நண்பரும் இப்புனருத்தாரண வேலைகளையும் திருவுருவச்சிலை அமைப்பு வேலைகளையும் நேரடியாக மேற்பார்வைசெய்து நிர்வகித்தவருமான கலாபூஷணம் அழகரத்தினம் சர்வேஸ்வரனின் ஆர்வமிக்க உழைப்போடும் அமைக்கப்பட்ட முதுதமிழ்ப்புலவரினது மணிமண்டபமும் முதுதமிழ்ப்புலவரினதும் அவரது துணைவியாரினதும் திருவுருவச்சிலைகளும் பேராசிரியப் பெருந்தகைகளால் விளக்கேற்றல்கள் மாண்பேற்றல்களுடன் திறந்துவைக்கப்பட்டன.

கற்றோர், கல்விமான்கள், உற்றார் உறவினர்கள், ஊருறவுகள், கலைஞர்கள் எனப் பலரும் இந்நிகழ்வுகளில் பங்குகொண்டு சிறப்பளித்தனர்.

மங்கல விளக்கேற்றல், இறை வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து என ஆரம்பித்த இந்நிகழ்வில் இறைவாழ்த்தை முதுதமிழ்ப்புலவரின் கொள்ளுப்பேரன் நித்திலன் ரகுபாலனும் வரவேற்புரையை அவரது பூட்டி பூவிழி ரகுபாலனும் வழங்கி, புலவரின் வாழ்வியல் வரலாற்று நீட்சிக்கு வனப்பினை அளித்தனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தகைசார் பேராசிரியர் சி தில்லைநாதன் தம் துணைவியார் சகிதம் முதுதமிழ்ப்புலவரினதும் அவரது துணைவியாரதும் சிலைகளைத் திரைநீக்கம் செய்து திறந்துவைக்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மாலை அணிவித்து மாண்பேற்றம் செய்து இந்நிகழ்வை முறைப்படி சிறப்பித்து வைத்தனர்.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் தலைமையில் இல்லத்தின் முன்புறத்தில் அமைக்கப்பெற்ற 'முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி அரங்கில் வாழ்த்துரைகள், சிறப்புகள், உணர்வாரங்கள் என வரிசைப்படுத்தப்பட்ட நிகழ்வுகளுடன் முதுதமிழ்ப்புலவரின் வாழ்க்கை வரலாறு குறித்த பதிவுப் பரிமாறல்களுடன் இந்நிகழ்வு சிறப்புற நிகழ்ந்து நிறைவேறியது!

மேலும், ரவிச்சந்திரன் தமது தலைமையுரையில், முதுதமிழ்ப்புலவரின் ஊருக்கான முக்கியத்துவம் பற்றியும் வட்டுக்கோட்டையின் கலை கல்விச் சிறப்புகள் பற்றியும் இப்புனருத்தாரண வேலைகளையும் திருவுருவச்சிலைகளையும் பேரார்வத்தோடும் அர்ப்பணிப்போடும் செய்து நிறைவேற்றிய முதுதமிழ்ப்புலவரின் இளைய மகனார் நல்லதம்பி சிவநாதனது ஊர்த் தொடர்பு, கலை, கவிதைப் பங்களிப்புகள் பற்றியும் விரிவுபட விளக்கி விழாவின் பேச்சாளர்களை அறிமுகப்படுத்தி அவைக்கு அழைத்து, தமது கடமையைச் செவ்வனே ஆற்றி மகிழ்வூட்டினார்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## 4 ஆம் பக்கத் தொடர்ச்சி...





**பேரவையின் சாதனைகள்**

தேசிய நாடக விழாவுக்கு கொண்டு செல்லப்பட்ட நாடகங்கள், வாடிய ரோஜாவை தேடிய ராஜா, பணத்தால் வந்த வினை, பயணம் ஒன்று, இயேசுவின் வழியில் வாசு, எங்கே சுதந்திரம், தீர்வு எப்போது, வாழவிடு, பாதை மாறிய பயணம், மாற்றம் மற்றும் மலையக நாடக விழா புதிய சிந்தனை, முதல் பரிசு இதன் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட நாடக கலைஞர்களை உருவாக்கியதோடு பல விருதுகளையும் பெற்றமை,

பாடசாலை மாணவர்களுக்கிடையே ஓவியப் போட்டி, நடிப்பு, நடனம், பாடல், கவிதை, கட்டுரை, நாடகப்போட்டிகள் நடத்தியமை,

நூல் வெளியீடுகள், காமன் கூத்து உட்பட பாரம்பரிய மலையகம் சார்ந்த கூத்து வாத்திய கலைஞர்களை கௌரவப்படுத்தியமை உட்பட பல்வேறு சாதனைகளுடன் ஆலம் விருட்சம்போல் பரந்து விரிந்து கலைக்காக சேவை செய்து களைத்துவிடாது வெறும் உழைப்பாக அதனை நினைத்துவிடாது மேலும் பல்துறை கலைஞர்களை உருவாக்கக் கரம் நீட்டி காத்துகொண்டிருகின்றது மலையக நட்சத்திரக் கலைப்பேரவை.

வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.











நாவலப்பிட்டியில் கடந்தவாரம் இடம்பெற்ற கனிஷ்கா காயத்திரியின் பரத நாட்டிய அரங்கேற்றத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள்.






## முதுமொழிப் புலவர்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்த்துரைகளின் வரிசையில் முதலாவதாக இலங்கை வானொலியின் முன்னைய தயாரிப்பாளரும் பல்துறைக் கலைஞரும் சிறுகதை எழுத்தாளரும் அரங்காளரும் பாடகருமான கோவிலூர் செல்வராஜன், முதுதமிழ்ப்புலவரின் புலமைத்துவ ஆற்றல்கள் பற்றி குறிப்பிட்டும் அவருக்கும் சுவாமி விபுலாநந்த அடிகளாருக்கும் இடையில் இருந்த உறவுபற்றியும் அவர்கள் இருவரின் கடிதப் பரிமாற்றங்கள் பற்றியும் இருவரும் தமிழ்ப்பணியாற்ற உறுதி எடுத்துக் கொண்டது பற்றியும் சொல்லி இறுதியில், ''பாரதி என்றொரு தாமரை பூத்தது பாரத நாடெனும் வாவியிலே...'' என்ற பண்டிதர் மு.நல்லதம்பியின் பாடலுக்கு மெட்டமைத்துப் பாடி தமது வாழ்த்துரையை நிறைவுசெய்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையின் கலாநிதி க ரகுபரன், புலவர் நல்லதம்பி சிவநாதனை காப்பாளராகக்கொண்டு இலண்டனில் இயங்கிவரும் தமிழவையின் இணையவழி ஒன்றுகூடல்கள் வழியிலான தமது தொடர்பு பற்றியும் இத்தொடர்பின் வழியாக எழுந்த முதுதமிழ்ப் புலவரின் படைப்பாக்க நூற்திரட்டுக்கான எண்ணக்கரு பற்றியும் கூறினார்.

அத்தோடு இலங்கைத் தமிழியற் கழகத்தின் வெளியீடாக மிக விரைவில் வெளிவரவுள்ள 'முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி படைப்புகளும் பதிவுகளும்' நூல் குறித்த பல புதிய நல்ல செய்திகளைப் பற்றி குறிப்பிட்டு புலவரின் 'மணித்தாய் நாடும் மரதன் ஓட்டமும்' கவிதைப் படைப்புக்கான ஆய்வுத்தேடல் பற்றியும் அவரது அறிவுத்திறன் பற்றியும் சுவாமி விபுலானந்தர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோருக்கும் புலவருக்குமான அன்புறவு பற்றியும் வரவுள்ள நூலினில் காணப்படவுள்ள ஆதாரச் சான்றுகள் பற்றியும் கூறி அவையை மகிழ்ச்சிப்படுத்தினார்.

முதுதமிழ்ப்புலவரின் புலமைத்துவத்துக்கு அப்பால் அவரது அறிவுத்தளமே அவரது கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவிக்கான தகைமையை இவருக்குத் தேடித் தந்ததெனக் கலாநிதி ரகுபரன் குறிப்பிட்டமை இங்கே பதிவிடப்படவேண்டிய ஒன்றாகும்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் தமது வாழ்த்துரையில், முதுதமிழ்ப்புலவரின் ஆய்வு நோக்கிய மும்மொழிப் புலமைத்துவம் பற்றி குறிப்பிட்டு, ஆனந்த சமரக்கோன் சிங்களத்தில் யாத்த தேசிய கீதத்தின் உயிர்நாதத்தை முழுதாக உள்வாங்கி 'ஆழ்ந்திருக்கின்ற கவியுளம்' கண்டு எல்லோரும் இந்நாட்டின் பிள்ளைகள்.. நாட்டின் ஒற்றுமை.. என்பன பற்றிய தெளிவான பார்வையோடு ஒரு கவிஞனது அதே அலைவரிசையில் நின்று மொழிபெயர்த்த சிறப்புப்பற்றி வியந்துரைத்துத் தமது உரையை நிறைவு செய்தார்.

வாழ்த்துரைகளின் இறுதி உரையாக யா/பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலையின் அதிபர் தி. மோகனபாலன், புலவர் சிவநாதனின் பால்ய நண்பரும் இவரது ஏகப்பிரதிநிதியாக இயங்கி இவ்வில்லத்தினது புனருத்தாரண வேலைகளையும் சிலை நிறுவும் செயற்பாடுகளையும் செப்பனுறச் செய்து முடித்த கலாபூஷணம் வர்ணவேந்தன் அ.சர்வேஸ்வரன், புலவர் சிவநாதனால் அவரது தாயக இளமைக்காலத்தில் இயற்றி, கலைவாணி கலாலயத்தின் ஆரம்பப் பாடலாக வழங்கப்பட்ட பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இன்றும் பாடப்பட்டு வருகின்ற 'கலைவாழ்வு காண்போமடா' எனும் பாடல் பாடப்பட்டது.

இதனைத்த தொடர்ந்து மேலும் பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

# தமிழ்ப்பணி புரிந்து மனங்களை வென்ற தம்பிலுவில் ஜெகதீஸ்வரி நாதன்



## ஆளுமைகளின் அடையாளம்

கல்முனை பிரதேச கலை, இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு பற்றி ஆய்வுசெய்பவர்கள் தம்பிலுவில் ஜெகா என்ற புனைபெயரில் எழுதிய ஜெகதீஸ்வரி நாதனை குறிப்பிடத் தவறுவதில்லை.

மாணவப் பருவத்திலிருந்தே கலை, இலக்கிய ஈடுபாடுகொண்டிருந்த அவர், தமிழ் ஆசிரியையாகவும் இருந்து கலை, இலக்கியப் பணியை சிறப்பாக மேற்கொண்டவர். தமிழ்த் தினப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், மாகாண, பிரதேச மட்ட இலக்கிய விழாக்கள் எங்கு நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் ஜெகதீஸ்வரியைக் காண முடியும். தான் பயிற்சி கொடுத்த மாணவர்களோடு கலந்துகொண்டு வெற்றிவாகை சூடுபவராக அவர் இருப்பார் அல்லது கலை, இலக்கிய நிகழ்வுகளில் கலந்துகொள்பவராக, அல்லது நடுவராக இப்பிரதேச நிகழ்ச்சிகளில் அவரின் பிரசன்னம் இருக்கும்.




தமிழ் இலக்கியப் பணிகளில் ஐந்து தசாப்தங்களாக ஈடுபட்டுவரும் ஜெகதீஸவரியின் இலக்கியப் பிரவேசம் 1972இல் 12ஆவது வயதில் 'அன்னை' என்ற கவிதையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிறுவர் மலரில் எழுதியதன் மூலம் நிகழ்ந்தது.

தினகரன், வீரகேசரி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளிலும், மல்லிகை, செங்கதிர், பெண், குங்குமம், கதிரவன், கோகிலம், காற்று, இதய சங்கமம், நிறைமதி, நீங்களும் எழுதலாம் போன்ற சஞ்சிகைகளிலும் கவிதை, சிறுகதை, கட்டுரை, ஆய்வு என்று தொடர்ந்து எழுதியவர் ஜெகதீஸ்வரி. பாடசாலை மலர்கள், இலக்கிய விழா மலர்கள் என்பவற்றிலும் ஜெகதீஸ்வரியின் முக்கிய கட்டுரைகள், ஆய்வுகள் வெளிவந்தன.

பாரதியார் கவிதைகளில் பெண்களின் நிலை (கலைக் கோலம்), தொழில் புரியும் பெண்களின் சவால்கள் (பெண் சஞ்சிகை), திருக்கோவில் பிரதேச பெண் எழுத்தாளர்கள் (கலசம் சஞ்சிகை), கிழக்கிலங்கை சஞ்சிகைகளில் பெண் கவிஞர்களின் பங்களிப்பு (வீரகேசரி), கண்ணகை அம்மன் ஆலய வழிபாடு (கூடல்) என்பன அவர் எழுதிய கட்டுரைகள், ஆய்வுகளில் முக்கியத்துவம் பெற்றவை.

ஜெகதீஸ்வரி, குறிஞ்சி வாணன், முல்லை வீரக்குட்டி என்பவர்களோடு சேர்ந்து 'இன்னும் விடியவில்லை' என்ற ஒரு கவிதை நூலையும், தனது கவிதைகளின் தொகுப்பாக மட்டுமே அமைந்த 'விடை தேடி' என்ற ஒரு கவிதை நூலையும் இலக்கிய உலகுக்குத் தந்திருக்கின்றார்.

அவரின் கவிதைகள் ஆணாதிக்க எதிர்ப்பு, காதல், அரசியல், சிறுவர் துஷ்பிரயோகம், வன்னிப் பெண்களின் அவலம் என்பன பற்றி பேசுவதைத் திறனாய்வாளர்கள் சுட்டிக்காட்டுவர்.

"இந்நூலிலுள்ள சில கவிதைகள் சமூக மாற்றத்தின் குறியீடாக அமைந்துள்ளன. 'விடை தேடி' எனும் கவிதை, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் மன உணர்வைப் பேசுகின்றது. இதில் காணாமல்போன கணவரை எண்ணி ஏங்கும் பெண்ணின் துயரம் எமக்குள்ளும் எழுந்து எம்மையும் சிந்திக்கச் செய்கின்றது" என்று 'விடை தேடி' என்ற ஜெகதீஸ்வரியின் நூல் பற்றிய குறிப்பில் பேராசிரியர் எம்.ஏ.நுஹ்மான் குறிப்பிடுவதை இங்கு எடுத்துக்காட்டுவது ஜெகதீஸ்வரியின் கவிதைச் செல்நெறியைத் தெளிவுபடுத்துவதற்குத் துணை புரியும்.

தம்பிலுவில் ஜெகதீஸ்வரி தனது கலை, இலக்கியப் பணிகளுக்காக பல பரிசுகளையும், பட்டங்களையும்,விருதுகளையும் பெற்றுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவால் வழங்கப்பட்ட 'கலைக் கோகிலம்' பட்டம் (1993), திருக்கோவில் பிரதேச சாகித்திய விழாவில் கவிதைத் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக வழங்கப்பட்ட கௌரவிப்பும், சான்றிதழும்(1996), உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட திறனாக்கல் போட்டியில் வெற்றிபெற்றமைக்காக கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வண.பிரான்சிஸ் ஜோசப்பால் வழங்கப்பட்ட கௌரவிப்புச் சான்றிதழ் (2002), தேசிய கலை, இலக்கிய மகோற்சவத்தின் நிமித்தம் இலங்கை கலாசாரத் திணைக்களம் நடத்திய பாடல் ஆக்கப் போட்டியில் முதலாம் இடம் பெற்றமைக்காக வழங்கப்பட்ட பரிசும் சான்றிதழும் (2011), கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் 'விடை தேடி' என்ற நூல் சிறந்த நூலாகத் தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்பட்ட விருது (2016), தேசிய இலக்கிய விழாவில் பரிசு எனும் சிறுகதைக்கு கிடைத்த முதல் பரிசும், சான்றிதழும் (2020), இலங்கை கலாசாரத் திணைக்களம் வழங்கும் அரச உயர் கலை, இலக்கிய விருதான கலாபூஷணம் (2021) என்பவை அவற்றுள் சில.

ஜெகதீஸ்வரி, 'சிறுவர் மலர்', 'பூவும் பொட்டும்', 'வாலிப வட்டம்', 'ஒலிமஞ்சரி', 'இளைஞர் மன்றம்' போன்ற வானொலி நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்கேற்றவர். கமலம், முத்தாரம், செந்தாமரை கோகிலம் போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியராக இருந்து சஞ்சிகை வெளியீட்டுத் துறையிலும் கவனஞ்செலுத்தியவர்.

இன்றும் வானொலி, மேடைக் கவியரங்கு களில் பிரகாசிப்பவர். திருக்கோவில் பிரதேச மகேசாஞ்சலி நர்த்தனாலயத்தின் அங்கத்தவராகவும் அவரின் தமிழ்ப்பணி விரிந்தது அந்நர்த்தனாலயத்துக்கு.




தெம்மாங்கு மெட்டிலான பாடல்களையும், கும்மிப் பாடல்களையும் எழுதி வழங்குபவராகவும் வரலாற்றுப் பதிவுகளை நாட்டிய நாடகமாக்கித் தருபவராகவும் அவர் விளங்குகின்றார்.

அம்பாறை மாவட்டம் தம்பிலுவிலைச் சேர்ந்தவர் கலாபூஷணம் ஜெகதீஸ்வரி நாதன். தந்தை - சபாரத்தினம். தாய் - நாகமணி. கணவர் - கவிஞர் எஸ்.பீ.நாதன்.

மணற்காடு அ.த.க. பாடசாலை, தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம் என்பவற்றில் ஆரம்ப, இடைநிலைக் கல்வியைக் கற்ற அவர், பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணி பட்டதாரியயாவார்.

கலை, இலக்கிய உலகில் ஐந்து தசாப்தங்களாக இயங்கிவரும் அவர், ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் மாணவர்களின் கலை, இலக்கிய மேம்பாட்டுக்காக உழைத்து வருபவர். மாணவர்கள் மனங்களில் இலக்கிய முன்மாதிரியாகப் பதிவு பெற்றிருப்பவர்.

கலைக் கோகிலம் ஜெகதீஸ்வரி நாதன் இன்னும் பல்லாண்டு காலம் தேக நலத்தோடு வாழ்ந்து, கலை, இலக்கியப் பணி புரியவேண்டுமென்பதே எமது விருப்பமும் பிரார்த்தனையுமாகும்.

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7


கிக்
வாசிக்க
வாசிக்க...
மலர் : 02, இதழ் : 32 - 09.07.2023
பாடகி கோகோ லீ
தற்கொலை
இசை உலகம்
அதிர்ச்சி
ரசிகர்களை
கவரும்
அவ்னீத் கவுர்
56இல்
'பிகினே டே'
கொண்டாடிய
சல்மா
அவ்னீத் கவுர்

# ‘ஃபைண்டர்’ படத்தின் பெர்ஸ்ட் லுக் வெளியானது




ஆரபி புரொடக்ஷன் சார்பில் ரஜீவ் சுப்பிரமணியம் தயாரிக்கும், ‘ஃபைண்டர்’ [FINDER] படத்தின் பெர்ஸ்ட் லுக்கை மக்கள் செல்வன் விஜய் சேதுபதி வெளியிட்டார்.

உண்மைச் சம்பவத்தின் அடிப்படையில் உருவாகும் பரபரப்பான திரில்லர் திரைப்படம் ‘ஃபைண்டர்’. சிறை பின்னணியில் சார்லி நிற்க, ஒரு திரில்லர் திரைப் படத்துக்கான அத்தனை அம்சங் களும் நிறைந்ததாக அட்டகாசமாக உள்ளது பெர்ஸ்ட் லுக்.

அமெரிக்காவில் செய்யாத குற்றத்துக்காக நீண்டகாலம் சிறையில் இருப்பவர்களை கண்டுபிடித்து அவர்களை நிரபராதிகள் என நிரூபித்து அதற்கு அவர்களுக்கு அரசாங்கம் தரும் இழப்பீட்டுத் தொகையை பாதிக்கப்பட்டவருக்கு பெற்றுத்தரும் நிறுவனத்தை பற்றிய உண்மை கதையின் அடிப்படையில், சென்னை பின்னணியில் இப்படத்தின் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது.

பரபரப்பான திரில்லராக உருவாகும் இப்படத்தை, இயக்குநர் வினோத் ராஜேந்திரன் இயக்குவதோடு, இப்படத்தில் முக்கியமான வேடத்திலும் நடித்துள்ளார். நடிகர் சார்லி கதையின் திருப்புமுனை பாத்திரத்தில் நடிக்கிறார். இவர்களுடன் நிழல்கள் ரவி, செண்ட்ராயன், அபிலாஷ், கோபிநாத், சங்கர் நடிகை பிரானா ஆகியோர் இணைந்து நடிக்கின்றனர். இந்தப் படத்தின் மூன்று பாடல்களையும் வைரமுத்து எழுதியுள்ளார்.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இப்படத்தின் படப்பிடிப்பு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள இப்படத்தின் போஸ்ட் புரடக்ஷன் பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இப்படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீடு குறித்த மற்ற தகவல்கள் விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

தயாரிப்பு நிறுவனங்கள் – ஆரபி புரொடக்ஷன், வியன் வென்சர்ஸ்
தயாரிப்பாளர்கள் – கனடாவில் வசிக்கும் இலங்கைத் தமிழரான ரஜீவ் சுப்பிரமணியம் ரூ வினோத் ராஜேந்திரன்
இயக்கம் – வினோத் ராஜேந்திரன்
ஒளிப்பதிவு – பிரசாந்த் வெள்ளிங்கிரி
எடிட்டர் – தமிழ்குமரன்
கலை இயக்கம் – அஜய் சம்பந்தம்
இசை – சூர்ய பிரசாத்
மக்கள் தொடர்பு – சுல்தான் ராஜா

# ரசிகர்களை கவரும் அவ்னீத் கவுர்



ஹிந்தி திரையுலகில் இளம் நட்சத்திரமாக வலம் வரும் அவ்னீத் கவுர் அண்மைக்காலமாக அழகிய தோற்றத்துடனான புகைப்படங்களை வெளியிட்டு வருகிறார். நடனக் கலைஞராக விளங்கும் அவர், மொடலிங் துறையிலும் தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ளார்.

இவர் அடிக்கடி கவர்ச்சியான புகைப்படங்களை வெளியிடுவதுண்டு. அண்மையில் இவர் வெளியிட்டுள்ள புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் பகிர்ந்து வருகின்றனர்.



# ரஹ்மானுடன் இணையும் துருவ் விக்ரம்

கவின் மற்றும் அபர்ணா தாஸ் நடிப்பில் இயக்குனர் கணேஷ் கே. பாபு இயக்கியிருந்த திரைப்படம் ‘டாடா’. இதில் பாக்யராஜ், ஐஸ்வர்யா, விடிவி கணேஷ், பிரதீப் ஆண்டனி உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர்.

இப்படம் கடந்த பெப்ரவரி 10ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகி விமர்சன ரீதியாகவும் வருமான ரீதியாகவும் நல்ல வரவேற்பைப் பெற்றது.

இப்படத்தைத் தொடர்ந்து இயக்குநர் கணேஷ் கே. பாபு இயக்கவுள்ள படத்தில் ஆதித்யா வர்மா, மகான் படங்களில் நடித்த துருவ் விக்ரம் நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் இப்படத்தில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இணையவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. துருவ் விக்ரம், மாரி செல்வராஜ் இயக்கும் படத்தில் நடிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





**கிக் – ‘வார இதழ்’**
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 7.
தொலைபேசி : 011 588 6187
வட்ஸ்அப் : 076 139 3805
தொலைநகல் : 011 267 3442
g l lk mk    Kick - கிக்
g l lk m h    l lk nl    h g l lk m
கிக் வாசிக்க வாசிக்க...
தொகுப்பு: நிர்ஷன் இராமானுஜம்
வடிவமைப்பு : ஆர்.எஸ்.தர்ஷி

# பாடகி கோகோ லீ தற்கொலை
## இசை உலகம் அதிர்ச்சி

ஹொங்கொங்கைச் சேர்ந்த பாடகியும் பாடலாசிரியருமான கோகோ லீ (48) மிகப்பிரபலமாக தனது பயணத்தை தொடர்ந்து வந்த நிலையில் தற்கொலை செய்துகொண்டுள்ளமை இசை உலகத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அவர் பல ஆண்டுகள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்ததாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். லீயின் மூத்த சகோதரிகளான கரோல், நான்சி ஆகியோர் தங்களுடைய சமூக வலைத்தளங்களில் அண்மையில் ஒரு பதிவை இட்டிருந்தார்கள்.

லீயின் உடல்நிலை சமீபகாலமாக பாதிக்கப்பட்டு வருகிறது என அவர்கள் அதில் தெரிவித்திருந்தனர்.

கோகோ லீ மருத்துவ உதவியை நாடினாலும் மனச் சோர்வை எதிர்த்துப் போராட முடியாதிருக்கிறார். அவளுக்குள் இருக்கும் வித்தியாசமான குணம் அவரை பலவீனப்படுத்துகிறது என அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். இந்நிலையிலேயே அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

லீ, 1994 ஆம் ஆண்டு தனது 19 ஆவது வயதில் அமெரிக்காவில் தனது முதல் பாடல் தொகுதியை வெளியிட்டு பிரபலமடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# பாரிஸ் பெஷன் வீக் - 2023


காமிலா செபெல்லோ


செயின்ட் ஜின்


ஜோயி கிங்


ஹெய்டி க்ளும்



# 5இல் 'பிகினே டே' கொண்டாடிய சல்மா

மெக்சிகோவைச் சேர்ந்த மிகப் பிரபலமான நடிகையும் திரைப்படத் தயாரிப்பாளருமான சல்மா ஹயேக் 'பிகினி டே' கொண்டாடிய விதமும் அதற்கு அவர் அளித்துள்ள சுவாரஸ்யமான விளக்கமும் சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாக மாறியுள்ளது.

1966 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி பிறந்த சல்மா ஹயேக், கவர்ச்சியான புகைப்படங்களை வெளியிட்டு ரசிகர்களை மகிழ்விப்பதுண்டு.

பிகினி என்ற ஆடை 1946 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அந்த நாளில் பிகினி டே கொண்டாடப்படுகிறது.

சல்மா ஹயேக், பிகினி உடையில் தோன்றி அந்த நாளை கொண்டாடியுள்ளதுடன் கவர்ச்சியான புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளார். எனக்கு இன்று மட்டும் பிகினி டே கிடையாது. தினமும் எனக்கு பிகினி டே தான் என அவர் சுவாரஸ்யமான பதிவொன்றையும் இட்டுள்ளார்.

அவரது இன்ஸ்டா பக்கத்தில் இரண்டரை கோடி ரசிகர்கள் இணைந்திருக்கிறார்கள். அவர் பிகினி டே அன்று வெளியிட்டுள்ள புகைப்படங்கள் ரசிகர்களின் புருவத்தை உயர்த்தச் செய்திருக்கின்றன என்று சொல்லலாம்.

# “என்ன ஓர் அற்புதமான பயணம்”

## ‘தங்கலான்’ படப்பிடிப்பு நிறைவு குறித்து விக்ரம் நெகிழ்ச்சி



பா.ரஞ்சித் இயக்கத்தில் உருவாகி வரும் ‘தங்கலான்’ படப்பிடிப்பு இன்றுடன் நிறைவடைந்துள்ளது. இந்நிலையில், படத்தில் நடித்த அனுபவம் குறித்து நடிகர் விக்ரம் தனது ட்விட்டர் பக்கத்தில் நெகிழ்ச்சியுடன் பகிர்ந்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், “படப்பிடிப்பு நிறைவடைந்தது. என்ன ஓர் அற்புதமான பயணம். அற்புதமான மனிதர்களுடன் பணியாற்றினேன். ஒரு நடிகராக உற்சாகமான பல அனுபவங்களைப் பெற்றேன். முதல் புகைப்படத்துக்கும் கடைசி படத்துக்கும் இடையே வெறும் 118 வேலை நாட்கள்தான் இடைவெளி. ஒவ்வொரு நாளும் இந்த பெருங்கனவில் வாழ வைத்ததற்கு நன்றி பா.ரஞ்சித்” என பதிவிட்டுள்ளார்.

பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் ஹீரோவாக நடித்துள்ள படம் ‘தங்கலான்’. பசுபதி, பார்வதி, மாளவிகா மோகனன், ஹொலிவுட் நடிகர் டேனியல் கால்டஜிரோனோ உட்பட பலர் நடித்துள்ளனர். ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். கோலார் தங்க வயல் பின்னணியில் படம் உருவாகிறது. ஸ்டூடியோ கிரீன் தயாரிக்கும் இந்தப் படம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

நடிகர் விக்ரம் கடந்த மே மாதம் நடைபெற்ற படப்பிடிப்பின்போது எதிர்பாராதவிதமாக காயமடைந்தார். அவருக்கு விலா எலும்பில் முறிவு ஏற்பட்டது. அதற்காக சிகிச்சைபெற்று வந்த அவர் குணமடைந்தார். இதற்கிடையே அவர் லண்டன் சென்று திரும்பினார். இதையடுத்து கடந்த ஜூன் 15ஆம் திகதி முதல் ‘தங்கலான்’ படப்பிடிப்பு மீண்டும் தொடங்கியது. தற்போது மொத்த படத்தின் படப்பிடிப்பும் நிறைவடைந்துள்ளது. மொத்தம் 118 நாட்கள் படப்பிடிப்பு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் படம் அடுத்த ஆண்டு திரைக்கு வரவுள்ளது.

# 6 மாத ப்ரேக்! வெளிநாடு பறக்கிறார் சமந்தா

பானா காத்தாடி, நான் ஈ, நீதானே என் பொன்வசந்தம், அஞ்சான், கத்தி, 24, மெர்சல் உள்ளிட்ட பல தமிழ்ப் படங்களில் நடித்து பிரபலமடைந்தவர் சமந்தா. தெலுங்கு, ஹிந்தி மொழி படங்களிலும் நடித்துள்ளார்.

அல்லு அர்ஜூன் நடிப்பில் வெளியான புஷ்பா படத்தில் நடித்து பலரின் கவனத்தை ஈர்த்தார். சமீபத்தில் சமந்தா நடிப்பில் வெளியான யசோதா மற்றும் சாகுந்தலம் கலவையான விமர்சனங்களைப் பெற்றது. இவர் தற்போது விஜய் தேவரகொண்டாவுடன் குஷி படத்தில் நடித்து வருகிறார்.

சமந்தா, மயோசிட்டிஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டு சிகிச்சைபெற்று வந்தார். இந்நிலையில், சமந்தா நடிப்பதில் இருந்து 6 மாதம் ஓய்வு எடுக்கவுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் அவர் மயோசிட்டிஸ் நோய் பாதிப்புக்காக வெளிநாட்டில் சிகிச்சை பெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சில தினங்களுக்கு முன்பு சமந்தா, மயோசிட்டிஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டு ஒரு வருடமாவதாக உருக்கமாக பதிவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஜெயம் ரவி நடிக்கும் ‘ஜீனி’ படப்பிடிப்பு பூஜையுடன் தொடக்கம்




நடிகர் ஜெயம் ரவி தற்போது இறைவன், ஜெஆர்30 மற்றும் சைரன் உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார். இந்தப் படங்களைத் தொடர்ந்து ஜெயம் ரவி நடிக்கும் 32ஆவது திரைப்படம் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

‘ஜீனி’ என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தை அறிமுக இயக்குனர் புவனேஷ் அர்ஜூனன் இயக்கவுள்ளார். கீர்த்தி ஷெட்டி, கல்யாணி பிரியதர்ஷன், வாமிகா கெபி ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர். வேல்ஸ் இண்டர்நேஷனல் தயாரிப்பில் உருவாகவுள்ள இந்தப் படத்துக்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கிறார்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு தற்போது பூஜையுடன் தொடங்கியுள்ளது. மேலும் இந்தப் படத்தின் டைட்டில் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்தப் படம் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் வெளியாகவுள்ளது. படத்தின் பூஜை தொடர்பான புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.






# ஜானி மாஸ்டரின் 'ரன்னர்' முதல் தோற்றம் வெளியீடு

தனுஷின் 'மாரி 2' படத்தில் 'ரவுடி பேபி', 'பட்டாஸ்' படத்தில் 'ஜில் பிரோ', 'திருச்சிற்றம்பலம்' படத்தில் 'மேகம் கருக்காதா' உட்பட பல ஹிட் பாடல்களுக்கு நடனம் அமைத்தவர் ஜானி மாஸ்டர். தெலுங்கில் 'அலா வைகுந்தபுரம்லோ' படத்தில் இவர் நடனம் அமைத்த 'புட்ட பொம்மா' பாடல் சுப்பர் ஹிட்டானது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி படங்களுக்கு நடனம் அமைத்து வரும் இவர், 'யதா ராஜா ததா பிரஜா' படத்தின் மூலம் ஹீரோவாக இருப்பதாக கடந்த வருடம் அறிவிப்பு வெளியானது. அந்தப் படம் என்னவானது என்று தெரியவில்லை.

இந்நிலையில், அவர் ஹீரோவாக நடிக்கும் 'ரன்னர்' படத்தின் முதல் தோற்றம் வெளியிடப்பட்டுள்ளது. அறிமுக இயக்குநர் விஜய் சவுத்ரி இயக்கும் இந்தப் படம் பொலிஸ் கதையைக்கொண்டது. சில உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் உருவாகிறது. மணி சர்மா இசை அமைக்கும் இந்தப் படத்தை விஜய தமருகா ஆர்ட்ஸ் தயாரிக்கிறது.

# ஐஸ்வர்யா மேனனுக்கு ஜாக்பொட்



நான் சிரித்தால், தமிழ்படம் 2 ஆகிய தமிழ்ப் படங்களில் நடித்தவர் ஐஸ்வர்யா மேனன். தற்போது தெலுங்கில் அதிகம் கவனம் செலுத்துகிறார். சமீபத்தில் இவர் நடித்த ஸ்பை படம் வெளியானது. அடுத்த ஜக்பொட்டாக பவன் கல்யாண் பட வாய்ப்பு இவரைத் தேடி வந்துள்ளது.

சுஜித் இயக்கத்தில் பவன் கல்யாண் நடிப்பில் உருவாகி வரும் படம் ஓ.ஜி. பிரியங்கா மோகன், அர்ஜுன் தாஸ், ஸ்ரேயா ரெட்டி, இம்ரான் ஹாஸ்மி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். டிவிவி எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்திற்கு தமன் இசையமைக்கிறார். இதன் படப்பிடிப்பு மும்பை, ஐதராபாத் ஆகிய பகுதிகளில் நடைபெற்றுவந்த நிலையில் இதுவரை 50 சதவீத படப்பிடிப்பு நிறைவு பெற்றுள்ளது.

இந்நிலையில், இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க நடிகை ஐஸ்வர்யா மேனன் ஒப்பந்தமாகியுள்ளதாக கூறப்படுகிறது. ஸ்பை படத்தில் இவரது நடிப்பு ஓரளவுக்கு பேசப்பட்டதால் தற்போது பவன் கல்யாண் படத்தில் நடிக்கும் வாய்ப்பு இவருக்கு கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

# ஆபாசமாக நடிக்க ரூ.7 கோடி வாங்கிய நடிகை தமன்னா



நடிகை தமன்னா ஜி கர்தா, லஸ்ட் ஸ்டோரீஸ் 2 ஆகிய வெப் தொடர்களில் அளவுக்கு மீறி ஆபாச காட்சிகளில் நடித்து அதிர்ச்சி கொடுத்துள்ளார். படுக்கை அறை காட்சிகளில் மிகவும் நெருக்கம் காட்டி இருந்தார். முத்தக் காட்சிகளிலும் தாராளமாக நடித்து இருந்தார். சமூக வலைத்தளங்களில் கடந்த சில நாட்களாக தமன்னாவின் இந்த எல்லை மீறிய கவர்ச்சி புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களே நிரம்பி இருந்தன. இந்திய கலாசாரத்தை மீறி தமன்னா நடித்து இருக்கிறார் என்று விமர்சனங்கள் கிளம்பின. சினிமாவில் அடுத்தகட்டத்துக்கு செல்வதற்காகவே அப்படி நடித்தேன் என்று தமன்னா விளக்கமளித்து இருந்தார்.

இந்நிலையில், லஸ்ட் ஸ்டோரீஸ் 2 வெப் தொடரில் ஆபாசமாக நடிக்க தமன்னா ரூ.7 கோடி சம்பளம் வாங்கி இருப்பதாக தகவல் பரவி உள்ளது. அந்த தொடரில் தமன்னாவின் எல்லை மீறிய கவர்ச்சிக் காட்சிகள் சுமார் 30 நிமிடங்கள் உள்ளன. அதில் நடிக்க அவர் மறுத்துவிடக்கூடாது என்பதற்காகவே இவ்வளவு பெரிய தொகையை சம்பளமாக கொடுத்து உள்ளனர்.

வழக்கமாக ஒரு படத்தில் நடிக்க தமன்னா ரூ.5 கோடி சம்பளம் பெறுகிறார். தற்போது தமன்னா தமிழில் ஜெயிலர், தெலுங்கில் போலோ சங்கர் படங்கள் கைவசம் வைத்துள்ளார்.



# 96ஆவது ஒஸ்கர் விருது திகதி அறிவிப்பு

2ஆம் ஆண்டுக்கான 95ஆவது ஒஸ்கர் விருது விழா கொண்டாட்டத்தின் அலை ஓய்வதற்குள் 2024ஆம் ஆண்டு நடைபெறும் 96ஆவது ஒஸ்கர் விழாவுக்கான திகதியை ஒஸ்கர் எக்கடமி அறிவித்துள்ளது.

எக்கடமி விருதுகள் என்று அழைக்கப்படும் ஒஸ்கர் விருதுகள் விழா ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அந்தவகையில் இந்த ஆண்டுக்கான 95ஆவது ஒஸ்கர் விழா கடந்த மார்ச் 13ஆம் திகதி கோலகலமாக நடைபெற்று முடிந்தது.

இந்த விருது விழாவை திரைத்துறையினர் மற்றும் ரசிகர்கள் கொண்டாடித் தீர்த்திருந்தினர்.

இந்நிலையில், இந்தக் கொண்டாட்டத்தின் அலை ஓய்வதற்குள் 2024ஆம் ஆண்டு நடைபெறும் 96 ஆவது ஒஸ்கர் விழாவுக்கான திகதி அறிவித்துள்ளது ஒஸ்கர் அகாடமி. அந்த அறிவிப்பின்படி 96ஆவது ஒஸ்கர் விழா 2024ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# கௌரவம் – பொன் விழா ஆண்டில் இந்தப் படங்கள்

## ஸ்வீட் கிக்ஸ்டி

ச.சுந்தரதாஸ்

தமிழ்த் திரையுலகில் தன்னுடைய கௌரவம் எந்தளவுக்கு உறுதியாக இருக்கிறது என்பதை பறைசாற்றுவதுபோல் நடிகர் திலகம் நடித்து 1973இல் வெளிவந்த படம் 'கௌரவம்.'

படத்தின் நாயகன் தோல்வியையே விரும்பாத இறுமாப்புகொண்ட ஒரு வக்கீல். தன்னுடைய கௌரவத்தை தக்கவைத்துக்கொள்ள எதனையும் செய்யலாம், தனது வாதத் திறமையால் கொலைகாரனுக்கும் வாதாடி விடுதலை வாங்கித் தரலாம், இரவு பகல் என்றில்லாமல் எந்நேரமும் மது



அருந்தலாம். தன்னுடைய பணியாளர்களிடம் எகிறிப் பாயலாம் என்பது போன்ற பல குணாம்சங்களைக்கொண்ட ஒரு கதாபாத்திரத்தை ஹீரோவாக படைத்தது கதாசிரியரின் மாறுபட்ட சிந்தனையை வெளிப்படுத்தியது.

பாரிஸ்டர் ரஜனிகாந்த் என்ற கம்பீரமான பாத்திரம் சிவாஜி கணேசனுக்கு அப்படியே பொருந்துகிறது. அவருடைய மேக்அப்பும் அதற்கு துணை நிற்கிறது. பிறகென்ன, சிவாஜியா, ரஜனிகாந்தா என்று சொல்ல முடியாதவண்ணம் அப்படியே பாத்திரத்துடன் ஒன்றிவிடுகிறார். ஒவ்வொரு காட்சியிலும் அவர் காட்டும் முகபாவம் பல உணர்வை வெளிப்படுத்துகிறது. ஆனால், படம் முழுவதும் எல்லோரிடமும் காட்சிக்குக் காட்சி இரைந்து பேசி, அதட்டுவது ஒரு படித்த பாரிஸ்டருக்கு மாண்பு தருவதாக இல்லை. அதிலும் அடக்கமான தன் அப்பாவி மனைவி மீதே அடிக்கடி சீறிப்பாய்வது வக்கிரமாக உள்ளது.

ரஜனிகாந்தின் தம்பி மகன் கண்ணனாக வருபவரும் சிவாஜிதான். ஆனால், அமைதியான நடிப்பை வழங்குகிறார். இரண்டு சிவாஜிகளும் வார்த்தைகளால் மோதும்போது காட்டும் முகபாவம் சூப்பர். இருவருடன் இணைந்து நடிக்கும் பண்டரிபாய் ஈடு கொடுத்து காட்சிகளை மெருகூட்டுகிறார். இளம் வக்கீலாக வரும் சிவாஜிக்கு ஜோடி உஷாநந்தினி. வந்து போகிறார்.

படத்தில் நகைச்சுவைக்கு நாகேஷ், நீலு, வை.ஜி.மகேந்திரன், வி.கே. ராமசாமி ன்று நால்வர் அடங்கிய டிப்பார்ட்மெண்ட் ஒன்று தனியே இயங்குகிறது. சிரிக்க வைக்கும் இவர்கள் அவ்வப்போது செய்யும் வில்லத்தனமும் கவனத்துக்குரியது.

படத்தில் வில்லனாக வரும் சுந்தரராஜன் அலட்டலில்லாமல் நடிப்பைத் தருகிறார். சிறு சிறு வேடங்களில் நடித்துவந்த செந்தாமரைக்கு இதில் கௌரவமான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரோல். இவர்களுடன் ரமாபிரபா, ஐ.எஸ்.ஆர், ஜெயக்குமாரி, வீரராகவன், பூர்ணம்



விஸ்வநாதன் ஆகியோரும் நடித்தனர்.

காட்சிகளுக்கு கட்சிதமாக அமையும் வண்ணம் கண்ணதாசன் பாடல்களை தொடுத்திருந்தார். ரி.எம்.சௌந்தரராஜன் குரலில் ஒலித்த நீயும் நானுமா கண்ணா, பாலூட்டி வளர்த்த கிளி, மெழுகுவர்த்தி எரிகின்றது பாடல்கள் டச்சிங்காக அமைந்தன. இசை எம்.எஸ்.வி.தான்.

படத்துக்கு சிறப்பாக அமைந்தது வியட்நாம் வீடு சுந்தரம் எழுதிய செறிவான வசனங்கள். அதிலும் பாரிஸ்டர் பேசும் வசனங்கள் அருமை. பல காட்சிகளில் ஆங்கில வசனங்களும்




இடம்பெறுகின்றன. அவற்றை சிவாஜி உச்சரித்து பேசும் அழகே அழகு.

சிவாஜியின் 'வியட்நாம் வீடு', 'ஞான ஒளி' படங்களுக்கு கதை வசனம் எழுதி அவர் குட் புக்ஸில் இடம்பிடித்த வியட்நாம் வீடு சுந்தரத்துக்கு இந்தப் படத்தை இயக்கும் வாய்ப்பை வழங்கினார் சிவாஜி. சுந்தரம் தயங்கவே பிரபல ஒளிப்பதிவாளர் ஏ.வின்சென்ட் உதவி செய்வார் என்று கூறி உற்சாகப்படுத்தினார் சிவாஜி. சிவாஜியின் ஏராளமான படங்களுக்கு கதை வசனம் எழுதிய ஆரூர்தாஸ், பாலமுருகன் ஆகியோருக்கு கிடைக்காத அதிர்ஷ்டம் சுந்தரத்தை தேடி வர டைரக்டராக மிளிர்ந்தார். வின்சென்டின் அருமையான ஒளிப்பதிவு படத்துக்கு மெருகூட்டியது. அத்தோடு கலை இயக்குனர் கங்காவின் அரங்க அமைப்பும் கண்ணைக் கவர்ந்தது. சிவாஜியின் வெற்றி படம் என்ற கௌரவத்தை கௌரவம் பெற்றுக்கொண்டது.

r rtms d c r ns h nl

# நடிகை நிஹாரிகா விவாகரத்து



தெலுங்கு நடிகர் சிரஞ்சீவியின் தம்பி நாகபாபு. இவர் தமிழில் 'விழித்திரு' உட்பட சில படங்களில் நடித்துள்ளார். இவர் மகள் நிஹாரிகா. நடிகையான இவர், தமிழில், விஜய் சேதுபதி, கவுதம் கார்த்திக் நடித்த 'ஒரு நல்ல நாள் பார்த்து சொல்றேன்' படத்தில் நடித்திருந்தார். இவருக்கு 2020ஆம் வருடம் குண்டூர் ஐ.ஜி. மகன் சைதன்யாவுடன் திருமணம் நடந்தது. பிரம்மாண்டமாக நடந்த இந்தத் திருமணத்தில் சிரஞ்சீவி, ராம்சரண், அல்லு அர்ஜுன் உட்பட பல திரை பிரபலங்கள் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் மாதம், தன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டிருந்த திருமணப் புகைப்படங்கள் அனைத்தையும் திடீரென நீக்கினார் நிஹாரிகா. இதனால் கருத்துவேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதாக செய்திகள் பரவின. இந்நிலையில், ஹைதராபாத் அருகிலுள்ள குக்கட்பள்ளி குடும்ப நல நீதிமன்றத்தில் நிஹாரிகா விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

இதை உறுதிப்படுத்தியுள்ள அவர், "சைதன்யாவும் நானும் பரஸ்பரம் பிரிந்து செல்ல முடிவுசெய்துள்ளோம். ஆதரவளித்து உறுதுணையாக இருந்த குடும்பத்தினர், நண்பர்களுக்கு நன்றி" என்று தெரிவித்துள்ளார்.

# தோல்வி பற்றி கவலையில்லை – அனன்யா



பிரபல ஹிந்தி நடிகர் சங்கி பாண்டேவின் மகள் அனன்யா பாண்டே. நடிகையான இவர், 'லைகர்' படத்தில் விஜய் தேவரகொண்டாவுடன் நடித்திருந்தார். பான் இந்தியா படமாக உருவான, இந்தப் படம் தமிழிலும் வெளியானது. இந்தப் படமும் அதற்கு முன் அவர் நடித்த 'கெஹ்ரையான் படமும் தோல்வியை சந்தித்தன. இப்போது ஆயுஷ்மான் குரானாவுடன் 'ட்ரீம் கேர்ள் 2' என்ற ஹிந்திப் படத்தில் நடித்து வருகிறார்.

தனது படங்களின் தோல்வி பற்றி அவர் கூறும்போது, "அதுபற்றி வருத்தமில்லை. ஒவ்வொரு படங்களிலிருந்தும் பாடங்களைக் கற்றுக்கொள்கிறேன். ஏனென்றால் இது ஒரு பயணம். முடிவல்ல. தோல்வி பற்றி அதிகம் சிந்திக்காமல், கற்ற பாடத்தை அடுத்த படங்களில் எப்படி செயல்படுத்த முடியும் என்று மட்டுமே யோசிக்கிறேன்" என்றார்.

இவர், ஹிந்தி நடிகர் ஆதித்யா ராய் கபூரை காதலித்து வருவதாகக் கூறப்படுகிறது. இதுபற்றி கேட்டபோது, "நான் யாரைக் காதலிக்கிறேன் என்பதில் ரசிகர்கள் ஆர்வமாக இருப்பது நல்லதுதான். அவர்கள் யூகித்துக் கொண்டே இருக்கட்டும்" என்றார்.



# உணவு – உடலுறவு – உடல் நலம்

பாலுறவு ஆசையும், திறனும் குறைவாக இருக்கும் ஆண்களும் பெண்களும் அவற்றைத் தூண்டுவதற்காக பலவகையான வழிமுறையைக் கடைப்பிடிக்கின்றனர்.

அடிப்படையில் இவை பலன் தருகின்றனவா, முறையாகப் பாலுணர்வையும் திறனையும் அதிகப்படுத்த என்னென்ன வழிமுறைகள் இருக்கின்றன, மனநலனும் உடற்பயிற்சியும் எந்த அளவுக்குப் பங்கு வகிக்கின்றன என்பன உள்ளிட்ட கேள்விகள் எழுகின்றன.

இந்திய, கிரேக்க பழங்கால நாகரிகத்தில் பாலுணர்வைத் தூண்டுவதற்கு புளித்த திராட்சை ரசத்தைப் பயன்படுத்தி இருக்கின்றனர். இது பலன் தருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. சில மரப்பட்டைகள், வேர்கள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

தற்காலத்தில் பயன்படுத்தப்படும் பட்டை, லவங்கம் போன்றவையும் பாலுணர்வைத் தூண்டுவதாக சில ஆய்வுகள் கூறுகின்றன. ரோம நாகரிகத்தில் திமிலங்கத்தின் விந்து உற்பத்திசெய்யும் உறுப்பை எடுத்து பொடியாக்கி சாப்பிட்டதாக தகவல்கள் இருக்கின்றன. ஆனால், இதற்கான ஆய்வுகள் எதுவும் இல்லை.

உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் மனம் ஆரோக்கியமாக இருக்கும். மனம் ஆரோக்கியமாக இருந்தால்தான் உடல் ஆரோக்கியமாக இருக்கும். இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவை. மனமும் உடலும் ஆரோக்கியமாக இருந்தால்தான் பாலியல் உறவு மகிழ்ச்சியாக இருக்கும்.

அதனால் உடலுறவுக்கு நலமான உடல் அவசியம். இதற்கு உடற்பயிற்சி அவசியம். வேலைக்குச் செல்லும், வீட்டில் இருக்கும் நிறையப் பெண்கள் வேலைகளுக்கு இடையே எப்படி உடற்பயிற்சி செய்வதென கேட்கின்றனர்.

ஆனால் உடற்பயிற்சி செய்யும்போது உடலின் அனைத்துச் தசைகளும் ஆரோக்கியமாக இயங்கும்போது "என்டார்ஃபின்" என்ற நல்ல ஹோர்மோன் உற்பத்தியாகிறது. இது உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைக்க உதவுகிறது. உணர்வுகளைத் தூண்ட இது பயன்படுகிறது.

வீட்டு வேலைகளைச் செய்தாலும், உடல் ரீதியாக ஒரு நடனம், ஒரு ஏரோபிக் உடற்பயிற்சி போன்ற ஏதாவது ஒன்றை பெண்கள் செய்யவேண்டும். இரண்டாவது, மன அழுத்தத்தைக் கையாள பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும். மன அழுத்தம் இருக்கும்போது பாலுறவு தொடர்பான எண்ணமே வராது.

மன அழுத்தத்துக்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து அதைப் போக்க முயற்சிக்க வேண்டும். பொருளாதாரப் பிரச்சினை, குழந்தைகள் படிப்பு என எதுவாக இருந்தாலும் அவற்றுக்கு நிரந்தரத் தீர்வைக் கண்டுபிடித்து மனதை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

அதன் மூலமாக பாலுணர்வைத் தூண்ட முடியும். பின்னர் அதுவே பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் அமையும். எனவே, உடற்பயிற்சிக்கு நேரத்தை ஒதுக்குவது அவசியம்.

தேவையில்லாத மருந்துகளை எடுத்துக்கொள்ளவே கூடாது. ஆரோக்கியமான, இயற்கையான உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தக் காலத்தில் புதுமணத் தம்பதிகளுக்கு பாலும் பழமும் கொடுக்கப்பட்டது.

உடல் ரீதியாக எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அவற்றை உடனடியாகச் சரி செய்துகொள்ள வேண்டும். தேவைப்பட்டால் இரண்டாவது, மூன்றாவது தேனிலவுகூடச் செல்லலாம். இது பாலியல் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவும்.

# ஜிகினாவிடம் கேளுங்கள்!

**உங்கள் வாழ்வில் மிகவும் தாமதமாக தெரிந்துகொண்ட சில உண்மைகளைப் பகிர முடியுமா?**

**மாதவி - கண்டி**

தன்னம்பிக்கை இல்லை என்றால் வாழ்வில் வெற்றிபெறுவது கடினம்.

பிறரை நம்பியிருப்பது உன்மீது உனக்கே நம்பிக்கை இல்லை என்பதை காட்டும்.

யாரையும் அதிகமாக நேசிப்பதும், அதிகமாக நம்புவதும் ஏமாற்றத்தைத் தரும்.

முடிந்த வரை உன் பிரச்சினைகளை நீயே எதிர்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும்.

பயம் வாழ்க்கைக்குப் பெரிய தடை.

உன் பயம் உன்னை விட்டுப் போகும் வரை நீ மற்றவர்களை எதிர்பார்த்து இருக்கவேண்டி இருக்கும்.

உன் வாழ்க்கை உன் கையில். நீ வாழ்வில் வெற்றிபெறும் வரையில் யாரும் உன்னை திரும்பிக்கூட பார்க்க மாட்டார்கள், உன் பெற்றோர்களைத் தவிர.

இருப்பதை வைத்து வாழ கற்றுக்கொள்.

சந்தோஷமாக இருப்பதுதான் வாழ்க்கையின் மிகப்பெரிய விடயம்.

யாரிடமும் உன்னை ஒப்பிட்டுப் பார்த்து, உன்னை நீயே குறைத்துக் கொள்ளாதே.

உண்மையான உழைப்பு ஒருநாள் வெற்றிபெறும்.

**எப்போதும் மகிழ்ச்சியாக ஒருவரால் இருக்க முடியுமா ஜிகினா?**

**மகிலாஷினி - நீர்கொழும்பு**

கண்டிப்பாக முடியும். மூன்று பேரால் மட்டுமே முடியும்.

1. குழந்தை
2. (உண்மையான) ஞானி
3. மனநலம் குன்றியவர்.

மற்றவர்களால் எப்பொழுதும் முடியாது.

அப்படி இருந்தால் மூன்றாவது வரிசையில் நம்மை சேர்த்து விடுவார்கள்.

ஹி ஹி ...



**எந்த 10 விடயங்கள் ஒருவரைத் தோல்வியடையச் செய்யும். சொல்லுங்கள் பார்ப்போம் ?**

**ஸ்ரீகுமார் - ராஜகிரிய**

1. உடல் ஆரோக்கியத்தில் குறைவு.
2. மன ஆரோக்கியத்தில் மாற்றம்.
3. பணம் கையாளுவதில் நேர்மையின்மை.
4. சொன்ன சொல்லைக் காப்பாற்றாமை.
5. சக மனிதர்களை மதியாமை.
6. உழைப்பில் உற்சாகமின்மை.
7. தவறான சகவாசம்.
8. வேண்டாத பழக்க வழக்கங்கள்.
9. ஆடம்பரமான வாழ்க்கை.
10. செய்த தவறுகளிலிருந்து பாடம் படிக்காமல் தொடர்ந்து செய்வது.

**கணவனுக்கு மனைவி செய்யக்கூடாத துரோகங்கள் என்னென்ன?**

**குமார் - அப்புத்தளை**

கணவன் – மனைவிக்குள் என்ன பிரச்சினையாக இருந்தாலும், இருவருக்குள் பேசி சமாதானம் செய்து கொள்ள வேண்டும். பிரச்சினையை மூன்றாவது நபரிடம் கூறி கணவரின் நம்பிக்கையை சிதைக்கக்கூடாது.

தனது பிறந்த வீட்டில் உள்ளவர்களின் பேச்சைக் கேட்டு தனது கணவரை பற்றிய அவதூறு பரப்புவது நம்பிக்கைத் துரோகம்.

தனது மாமியார் வீட்டிலுள்ளவர்களை மரியாதை குறைவாக – மதிப்பு குறைவாக நடத்துவது பேசுவது மிகப் பெரிய தவறான செயல்களாகும்.

தனது கணவரைத் தவிர்த்து வேறு ஒருவருடன் தொடர்புகொள்வதும் செய்யக்கூடாத நம்பிக்கைத்துரோகம் தான்.

கணவருக்குத் துணையாக இல்லாமல், கணவரை பற்றிய குறைகளை மட்டுமே பேசிகொண்டு, கணவரின் உழைப்பில் வாழ்வதும் நம்பிக்கைத்துரோகம்தான்.

கணவரின் சொல்லை மதிக்காமல் இருப்பதும் துரோகம்தான்..

**யாருக்கெல்லாம் வாழ்க்கையில் நிம்மதி இருக்காது?**

**சுப்பிரமணியம் - வட்டவளை**

ஏழையின் வயிற்றில் அடித்து பணம் சம்பாதிப்பவர்.

அடுத்தவன் பொருளை (அவன் நல்லவனோ/கெட்டவனோ) அபகரித்தவர்.

பெண்பாவத்தை சம்பாதித்தவர்.

ஏழைகளுக்கு ஒரு வேளையேனும் அன்னம் இடாதோர்

ஏற்றி விட்ட ஏணியை (அது பெற்றார்/உறவினர்/நண்பர்கள் யாராயினும் சரி) தள்ளிவிட்டவர் (வேறு விதமாக சொன்னால்: செய்நன்றி

உங்கள் கேள்விகளை 65 0 8 7 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கலாம்.
'ஜிகினாவிடம் கேளுங்கள்'
வட்ஸ்அப் : 076 139 3805



சேலம் மாவட்டம் காசிபுரம் என்னும் தனித் தொகுதி எம்.எல்.ஏ. மாமன்னன் (வடிவேல்). அவர் மகன் அதிவீரன் (உதயநிதி) தற்காப்புக்கலை பயிற்சிப்பள்ளி நடத்துகிறார். மாமன்னன் சார்ந்த கட்சியின் மாவட்ட செயலாளர் ரத்னவேலு (ஃபஹத்ஃபாசில்), ஆதிக்க சாதி அதிகார உணர்வுடன் வலம் வருகிறார். அதிவீரனின் கல்லூரித் தோழி லீலா (கீர்த்தி சுரேஷ்), நண்பர்களுடன் இணைந்து அதிவீரன் இடத்தில் இலவசக் கல்வி வகுப்புகளை நடத்துகிறார். கோச்சிங் சென்டர் நடத்தும் ரத்னவேலுவின் அண்ணன் (சுனில் ரெட்டி), லீலாவின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட, இரு தரப்புக்குமான மோதல், வன்முறை வடிவம் எடுக்கிறது.

மாமன்னனையும் அதிவீரனையும் சமரசம் பேச அழைக்கிறார் ரத்னவேலு. அங்கே ரத்னவேலுவுக்கும் அதிவீரனுக்கும் வெடிக்கும் மோதல் உட்கட்சி பிரச்சினையாக மாறுகிறது. இதனால் ஆளும் கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் சேரும் ரத்னவேலு, தேர்தலில் மாமன்னனை வீழ்த்த முடிவெடுக்கிறார். அதை மீறி மாமன்னன் வென்றாரா? ரத்னவேலு - அதிவீரன் மோதல் என்ன ஆனது? என்பது மீதிக் கதை.

சமூக நீதியின் பெயரால் தொடங் கப்பட்ட அரசியல் கட்சிகளுக்குள் நிலவும் சாதி ஏற்றத்தாழ்வுகளையும் வாக்கு வங்கி அரசியல் சமரசங்களையும் தோலுரித்துக் காண்பித்திருக்கிறார் மாரி செல்வராஜ். ஒடுக்குமுறைக்கு உள்ளாவோரும் சிலநேரம் பதில் தாக்குதலில் இறங்கவேண்டியிருப்பதைப் பதிவு செய்திருந்தாலும் படத்தில் வன்முறை பெருமைப்படுத்தப்படவில்லை.

அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி நிதானமான அணுகுமுறையுடன் ஜனநாயக வழியில் பயணிப்பதே ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு வழிவகுக்கும் என்பதை அழுத்தமாகப் பதிவுசெய்திருப்பது பாராட்டுக்குரியது. அத்தோடு ஆதிக்க சமூகத்திலும் சமத்துவ சிந்தனையுடன் பலர் இருக்கிறார்கள் என்பதைப் பதிவுசெய்திருப்பதும் வரவேற்கத்தக்கது.

முதல் பாதியில், கோயில்குளத்தில் குளித்துக்கொண்டிருக்கும் சிறுவர்கள் கற்களால் அடித்துக் கொல்லப்படும் காட்சி பதைபதைப்பைத் தருகிறது. அதை எதிர்த்து மாமன்னன் வெகுண்டெழுவதும் அரசியல் கணக்குகளைக் காரணங்காட்டி, சொந்தக் கட்சிக்காரர்களால் அடக்கிவைக்கப்படுவதும் சமூக யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றன. ரத்னவேலு வீட்டில் நிகழும் இடைவேளைக் காட்சி ஒரு மாஸ் ஹீரோ படத்துக்கான உச்சங்களுடன் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த உணர்வெழுச்சித் தருணங்களை உள்ளடக்கியது.

ஆதிக்கவாதியாக வலம் வரும் சில அரசியல்வாதிகள் சுயநலத்துக்காகவும் அதிகாரத்துக்காகவும் பிறர் காலில் விழக்கூட தயங்காதவர் என்பதைச் சொல்லும் இரண்டாம் பாதிக் காட்சியும் முக்கியமானது. இறுதிக் காட்சியில் சட்டப்பேரவையில் மாமன்னன் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்னும் திருக்குறளைச் சொல்லும்போது நெகிழ்ச்சி.

இதுபோன்ற சில தருணங்கள் ரசிக்க வைத்தாலும் ஒட்டுமொத்த திரைக்கதை, பலவீனமாக உள்ளது. பல காட்சிகள் மெதுவாக நகர்கின்றன. தேர்தல் பிரசாரம் தொடர்பான காட்சிகள் பல திரைப்படங்களில் பார்த்து சலித்தவை. இதனால் பதற்றத்தைத் தர வேண்டிய ரத்னவேலு கதாபாத்திரம், ஒரு கட்டத்துக்கு மேல் பரிதாபத்துக்குரியதாகிவிடுகிறது.

அதிவீரன் பேசும் பல அரசியல் வசனங்கள் முக்கியமானவை என்றாலும் அவற்றை அனைத்துப் பார்வையாளர்களும் உள்வாங்கும் அளவுக்கு அதிவீரன் கதாபாத்திரத்தின் பின்னணி வலுவாக நிறுவப்படவில்லை. திருப்பி அடிக்கத் துடிக்கும் அதிவீரனுக்கும் பொறுமையைக் கடைப்பிடிக்கும் மாமன்னனுக்கும் இடையிலான முரண்களையும் அவற்றைத் தாண்டிய பிணைப்பையும் இன்னும் சிறப்பாகக் காட்சிப்படுத்தியிருக்கலாம்.

அப்பாவின் உரிமைக்காக ஆவேசம் கொள்ளும் மகனாக யதார்த்தமான நடிப்பை வழங்கியிருக்கிறார் உதயநிதி ஸ்டாலின். படத்தின் தலைப்புக்குரிய நாயகனான வடிவேலு நடிப்பில் முற்றிலும் வேறோரு பரிமாணத்தை சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். குறிப்பாக, அரசியல் சமரசத்துக்கு அடிபணிந்து தனியாகச் சென்று அழும் காட்சியில் பார்வையாளர்களை உறைந்துபோக வைக்கிறார். ஃபஹத் ஃபாசில் வழக்கம்போல் கதாபாத்திரமாகவே உருமாறியிருக்கிறார். லால், கீதா கைலாசம், கீர்த்தி சுரேஷ் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஏ.ஆர்.ரஹ்மானின் பின்னணி இசை காட்சிகளின் உணர்வுகளைக் கச்சிதமாகக் கடத்தினாலும் பாடல்கள் பெரிதாக ஈர்க்கவில்லை. தேனி ஈஸ்வரின் ஒளிப்பதிவு, கதையையும் கதைக் களத்தையும் உயிர்ப்புடன் பதிவு செய்திருக்கின்றன.

திரைக்கதையில் சில குறைகள் இருந்தாலும் ஜனநாயக வழியில் அர்ப்பணிப்புடன் போரிட்டால் சமூக ஏற்றத்தாழ்வுகளிலிருந்து விடுபட்டு மேம்பட முடியும் என்னும் நம்பிக்கையை விதைத்ததற்காக இந்த ‘மாமன்ன’னை வரவேற்கலாம்.

# விமர்சனம்

தண்டட்டி தேனி மாவட்டத்தில் கிடாரிப்பட்டி என்ற கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமத்தில் மூதாட்டியான ரோகிணி தன் குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார். ஒரு நாள் ரோகிணி காணாமல் போய்விடவே அவரை கண்டுபிடித்து தரும்படி பொலிஸாரிடம் புகார் அளிக்கப்படுகிறது.

பொலிஸான பசுபதி, மூதாட்டி ரோகிணியை தேடிக் கண்டுபிடிக்கிறார். ஆனால், உடல் நலப் பிரச்சினையால் அவர் இறந்து விடுகிறார். பின்னர் ரோகிணியின் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்ற. அப்போது பேராசை பிடித்த பிள்ளைகள் தாய் இறந்த கவலை கூட இல்லாமல் அவர் காதில் இருக்கும் தண்டட்டியை கைப்பற்ற நினைக்கிறார்கள். ஆனால், திடீரென்று அந்த தண்டட்டி காணாமல் போய்விடுகிறது.

இறுதியில் ரோகிணி எதற்காக வீட்டை விட்டு வெளியேறினார்? தண்டட்டி எப்படி காணாமல்போனது? பசுபதி தண்டட்டியை கண்டுபிடித்தாரா,




இல்லையா? என்பதே படத்தின் மீதிக் கதை.

பொலிஸ் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் பசுபதி வித்தியாசமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். கிராம மக்களிடம் மாட்டிக்கொண்டு அலைக்கழிக்கப்படும் காட்சிகள் சிரிப்பலையை ஏற்படுத்துகிறது. இவரின் கதாபாத்திரம் ரசிகர்கள் மத்தியில் பாராட்டைப் பெறுகிறது. முழுப்படத்தையும் தன் தோளில் தாங்கிச் செல்கிறார் பசுபதி.

மூதாட்டியாக நடித்துள்ள ரோகிணி தனது கதாபாத்திரத்துக்கு நியாயம் செய்துள்ளார். பிணமாக நடித்துள்ள காட்சிகள் கவனத்தை ஈர்க்கின்றன. அம்மு அபிராமி, விவேக் பிரசன்னா பூவிதா, தீபா சங்கர், ஜானகி, செம்மலர் அன்னம் ஆகியோர் தங்களது வேலையை சிறப்பாக செய்துள்ளனர்.

அறிமுக இயக்குனர் ராம் சங்கையா தண்டட்டி பின்னால் இருக்கும் கதையை நகைச்சுவையாக சொல்லியிருக்கிறார். வலுவான திரைக்கதை மூலம் அவரது உலகுக்கு நம்மையும் அழைத்துச்



செல்கிறார். யதார்த்தமான கிராமத்து கதையை மண் மணம் மாறாமல் இயக்கியுள்ளார்.

ஒருசில இடங்களில் கொமடி காட்சிகள் பெரியதாக எடுபடவில்லை. கே.எஸ்.சுந்தரமூர்த்தி இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம். கிராமத்து எழிலை தன் ஒளிப்பதிவு மூலம் மிகவும் அழகாக காட்சிப்படுத்தியுள்ளார் ஒளிப்பதிவாளர் மகேஷ் முத்துசாமி.

மொத்தத்தில் தண்டட்டி - மினுக்கிறது

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07